
தமிழ் இசை மகாநாடு

சென்னை



நிகழ்ச்சி மலர்

தமிழ் இசைச் சங்கம்

1—1—44

தமிழ் இசை மகாநாடு

சென்னை

★

நிகழ்ச்சி மலர்

★

தமிழ் இசைச் சங்கம்

1—1—44

கீதா பிரஸ், திருச்சி-2.

முகப்பு

சென்னைத் தமிழிசை மாநாடு சென்ற 23-12-43 வியாழன்று சிறப்பாக நடந்தேறியது. அந்நாள் தமிழர் சரித்திரத்திலேயே ஒரு முக்கிய நாளாகும். தமிழர் தலைவர்களும் அறிஞர்களும் தமிழிசையின் மாண்பு குறித்து விரிவாகப் பேசினர். தமிழர்களும் பதினயிரக்கணக்கில் வந்து மாநாட்டைச் சிறப்பித்தனர். தம் தாய்மொழியாம் தமிழில் பாடி தமிழிசையை வளர்க்க வேண்டுவது தமிழ்மக்களின் தலையாய கடமையாகும்.

இம்மலரில் மாநாட்டின் விரிவான நிகழ்ச்சிகளும், அறிஞர்களின் வாழ்த்துச் செய்திகளும், தமிழிசைபற்றி மாநாட்டிற்கு முன்னும் பின்னும் வெளிவந்த பத்திரிகைகளின் கருத்துக்களும், இசையரங்குகள் பற்றிய விமரிசனமும் வெளிவருகின்றன. 1-1-44 வரை நமக்குக் கிடைத்த பத்திரிகைகளின் இருவிதமான கருத்துக்களையும் முறையே இதில் வெளியிட்டுள்ளோம். நடுநிலையில் நின்று அவைகளைப் படித்து உண்மை காணுமாறு அன்பர்களை வேண்டிக் கொள்ளுகிறோம். மற்றவை பின்னர் வெளியிடப்பெறும்.

மாநாட்டுத் தலைவர், திறப்பாளர், வரவேற்புத் தலைவர் ஆகியோரின் உரைகள் முன்பே தனித்தனியாக வெளிவந்துள்ளன. எனினும் அன்பர்களின் வசதிகருதி அவைகளையும் இம்மலரின் சேர்த்துள்ளோம். படித்துப் பயன்பெறுக.

— தொகுத்தோன்

உள்ளுறை

RAJAH
SIR ANNAMALAI CHETTIAR.
OF CHETTINAD.

THE PALACE
CHETTINAD.

25 · 3 · 1944

உ

சிவமயம்

பெருமானைப் பெரியோர்க்
[illegible]
[illegible]
[illegible] யான் வணங்
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
என் வாழ்க்கையின்
கொள்கை.

[illegible]



சங்கம் நிறுவிய துங்கர்
செட்டிநாட்டு ராஜா டாக்டர் சர்
மு. அண்ணமலைச் செட்டியார் அவர்கள்



அண்ணாமலைப் பல்கலைக்கழக இணைவேந்தர்
செட்டிநாட்டரசர், பத்மபூஷன்,
டாக்டர் ராஜா சர். மு. அ. முத்தையா செட்டியார் அவர்கள்.

தமிழ் இசை மகாநாடு, சென்னை

வரவேற்பு உரை

இராவ்பகதூர் ப. சம்பந்த முதலியார்

இம்மகாநாட்டுத் தலைவர் திருவாளர் சிதம்பரநாத முதலியார் அவர்கட்கும், டாக்டர் ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கட்கும், இங்கு வந்திருக்கும் மற்றுமுள்ள தமிழிசை அபிமானிகளான சகோதர சகோதரிகட்கும் என் மனமார்ந்த வந்தனம். சொற்பொழிவாளர் ஒவ்வொருவருக்கும் இந்த மகாநாட்டில் பேசுவதற்குப் பத்து நிமிஷங்களே கொடுத்திருப்பதால் நானும் என் கருத்துக்களைப் பத்து நிமிஷத்திற்குள் சுருக்கமாக சொல்லிவிடுகிறேன்.

ஐம்பது வருடங்களுக்குமுன் தமிழிசையானது எந்த நிலையிலிருந்தது? தற்காலம் எந்த நிலைமையிலிருக்கிறது? என்கிற விஷயத்தைப்பற்றித் தமிழிசை அபிமானிகள் சிறிது நேரம் ஆராய்ந்து பார்த்த அளவிலேயே, தற்காலம் அதற்கு நற்காலம் வாய்த்திருக்கிறது என்று கூறிவிடுவார்கள். அதற்கு முக்கிய காரணம், நமது தமிழிசைச் சங்கத் தலைவராகிய ராஜா. சர். அண்ணாமலைச் செட்டியாரவர்கள் சர். ஆர் கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் முதலியோருடைய தன்முயற்சியே என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. ஆகவே எனது முதற் கடமையாக அவர்களுக்கு எல்லாம் என் மனமுவந்த வந்தனத்தைச் செலுத்திவிட்டு, செட்டிநாட்டரசர் அவர்களை இம்மகா நாட்டுத் திறப்பு விழாவை ஆரம்பிக்கும்படி வணக்கத்துடன் கேட்டுக்கொள்வதற்கு முன்பாக, தமிழிசையானது மேலும் மேலும் வளர்ந்து ஓங்குவதற்கு என்ன மார்க்கங்கள் இருக்கின்றன என்பதைப் பற்றி என்னுடைய அபிப்பிராயத்தைச் சிறிது வெளியிட இச்சபையின் அனுமதியைக் கேட்டுக்கொள்கிறேன்.

தற்காலத்தில் தமிழிசையானது நான்கு ஸ்தானங்களில் பரவி இருக்கிறது: (1) தமிழிசைக் கச்சேரி (2) இன்னிசைக் கருவி-களுடன் தமிழ்ப் பாகவதர்கள் செய்யும் தமிழ்க்கதை (3) கோயில்-களில் தேவாரம் முதலியன பாராயணம் செய்தல் (4) தமிழ் நாடக மேடை, பேசும் படக்காட்சி, வானொலி என்பனவாகும்.

இவற்றுள் முதற்பகுதியை எடுத்துக்கொள்வோம் தமிழ் நாட்டில் தமிழ்க் கச்சேரிகளில் தமிழிசையானது மிகவும் விருத்தி யடைந்திருக்கிறது என்பதற்கு ஒரு சிறிதும் ஐயமில்லை நான் சிறுவனாயிருந்த காலையில் ஏதாவதொரு சங்கீதக் கச்சேரிக்குச் சென்றால் அங்கு பாடப்படும் எல்லாப் பாட்டுகளும் தெலுங்கு மயமாகவேயிருக்கும். அச்சமயத்தில் ஏதாவதொரு தமிழ்ப் பாட்டையாவது கேட்கும் சந்தோஷம் நமக்குக் கிட்டுமா என்று ஆவலுடன் காத்துக்கொண்டிருப்பேன். அக்காலம் மாறி இன்று தமிழ்நாட்டில் தமிழர்கள் வீட்டில் நடக்கும் கச்சேரிகளில் பெரும் பாலும் தமிழ்ப்பாடல்களே பாடப்படுவது மிகவும் மெச்சத்தக்க தாகும். ஆகவே இதைப்பற்றி நான் அதிகமாக விவரிக்க வேண்டியதில்லை.

இரண்டாவது, பாகவதர்கள் தமிழில் கதை செய்யும்போது அதில் ஒருகுறை இருப்பதாக என் மனதில் தோற்றுகிறது. அதாவது, கதை செய்வது தமிழ்ப் பாஷையிலாகும்; அங்ஙனமாக அதனிடையில் வேறு பாஷைகளிலுள்ள பாட்டுக்களையும் சுலோகங்களையும் புகுத்துவது தவறு என்பது என்னுடைய அபிப்பிராயம் ஆகும். உதாரணமாகப் பாகவதரொருவர் பிரகலாத சரிதையைத் தமிழில் செய்கிறார்; முதலிலிருந்து தமிழிலேயே பேசிக்கொண்டுவந்து பிரகலாதன் தன் தந்தையுடன் தர்க்கம் செய்யும் சமயத்தில், அந்நிய பாஷையிலிருந்து ஒன்றல்ல இரண்டல்ல மூன்று நான்கு சிசபத்தியம் கந்தபத்தியம் முதலியவைகளைப் பாடுவதை நான் முன்பும் கேட்டிருக்கிறேன், இப்போதும் கேட்கிறேன். இது தவறு என்று கூறுவதற்காக அந்தப் பாகவதர்கள் என்னை மன்னிப்பார்களாக!

தமிழ்மொழியில் அந்தக் கருத்துக்கள் முற்றும் அடங்கிய செய்யுட்கள் இல்லாமற் போயினவா? அவ்வாறே இல்லாமற்

போயினும் தமிழ் மொழியில் புதிய பாட்டுக்களைக் கட்டும்படியான திறமைவாய்ந்த கவிஞர்களும் இல்லாமற் போயினரா ? இது தமிழ்த்தாய்க்கு ஒரு பெருங் குறையாகும். ஆகவே இதைத் திருத்திக் கொள்ளும்படியாக நான் அப்பாகவதர்களை மிகவும் வணக்கமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவதாகக் குறிக்கப்பட்டது, கோயில்களில் தேவாரம் திருவாசகம் திருப்புகழ் திருவாய்மொழி முதலிய பாராயணம் செய்தல். இது சில முக்கியமான பெரிய கோயில்களில் மட்டும் நடந்துவருகிறது. என்னுடைய வேண்டுகோள் என்னவெனில் எல்லாச் சிவ விஷ்ணு ஆலயங்களிலும் மேற்கூறிய தமிழிசை நடக்கவேண்டும் என்பதாகும். விஷ்ணு கோயில்களில் சாதாரண மாக வேத பாராயணம் பின்னணியில் இருந்தால், பிரபந்த பாராயணமே முன்னணியில் வைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் எல்லாச் சிவாலயங்களிலும் திருவிழா நடக்கும்போது தேவாரத் தமிழிசையானது சாமவேத பாராயணத்திற்குப் பின்னணியாக வாவது (இப்போதைக்கு) வைக்கப்படவேண்டும் என்பது என்னுடைய மற்றொரு வேண்டுகோளாகும். அன்றியும் தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு கோயில்களிலும் தமிழிசைத் தோத்திரப் பாடல்களைச் சிறுவர்கட்கும் சிறுமியர்கட்கும் கற்பிக்க ஏற்பாடு செய்யவேண்டும். இதைக் குறித்துத்தென்னாட்டிலுள்ள மடாதி பதிகள் யாவரும் சிறிது ஊக்கம் எடுத்துக்கொள்ளும்படித் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

நான்காவது, நாடகங்களில் வரும் தமிழிசையைப் பற்றியது. இதில் நான் தமிழ் நாடகத்தைப்பற்றிப் பேசவில்லை. அந்நாடகங் களில் உபயோகப்படும் தமிழிசையைப் பற்றியே என்னுடைய கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். இதற்கு நான் நேரில் கண்ட இரண்டொரு உதாரணங்களைக் கூற விரும்புகின்றேன். அஃதாவது :—

நாடகமேடையில் தமிழ் நாடகமாகிய 'வள்ளித்திருமணம்' நடக்கின்றது. அந்நாடகத்தில் வரும் எல்லா வசனங்களும் பாட்டுகளும் தமிழ்மொழியிலேயே இருக்கவேண்டியிருக்க, இடையிடையே அன்னியமொழிப் பாட்டுகள் வருகின்றன. சுப்பிரமணியராக நடிப்போன் 'ஜெய ஜெய கோகுலபாலா' என்னும் பாடலை ஏன் பாடவேண்டும்? அவன் அந்த பாட்டைப்

பாடுவது அசந்தர்ப்பம் என்னுங் குற்றமாகும். அக்குற்றம் ஒருபுறமிருக்கட்டும். அந்த இடத்தில் பாட்டைப் பாடவேண்டு மென்றிருந்தால் வேறு தமிழ்ப்பாட்டு இல்லாமற் போயிற்ரு? நிற்க, மற்ருேருதாரணமாவது :—மேடையில் அரிச்சந்திரன் கதை நடக்கிறது — மயானகாண்டம் — சந்திரமதி தன் மடிந்துபோன மகனைத் தேடிக்கொண்டுவருகிருள். அச்சந்தர்ப்பத்தில் மேடையில் நுழையும்போது 'ஹைமௌலா குத்ரதே' என்னும் பிறமொழிப் பாடலைப் பாடிக்கொண்டு வருவதை நான் கேட்டிருக்கிறேன். இப் பிறமொழிப் பாடலை ஏன் பாடவேண்டும்? இப் பாட்டின் பொருள் யாருக்கேனும் தெரியுமா? (இவ்வாறு கேட்பதற்கு என்னை மன்னிக்கவும்) இதைவிட ஆபாசம் என்ன இருக்கிறது? இத்தகைய ஆபாசங்கள் நாடகமேடையில் மட்டுமல்ல; பேசும் படக் காட்சிகளிலும் தற்காலம் இருக்கின்றன. தமிழிசையானது வளர்ந்தோங்க வேண்டுமென்ருல் தமிழ் நாடகங்களிலும், திரைப்படங்களிலும் தமிழ்ப் பாட்டுக்களைத் தவிர பிறமொழிப் பாடல்களுக்கு இடங்கொடுக்கவே கூடாது என்பது எனது உறுதியான அபிப்பிராயமாகும்.

இன்ஞெரு விஷயத்தைப்பற்றி என் அபிப்பிராயத்தை இம் மகாநாட்டிற்குத் தெரிவிக்கவேண்டியதே, தமிழனுகப் பிறந்த என் கடமையாகும். சென்னை சர்வகலாசாலை சங்கீதப் பரீட்சையின் விவரங்களைக் குறிக்கும்போது ஒவ்வொரு மாணவனும் தெலுங்கு படிக்கத் தெரியவேண்டுமென்று குறிப்பிட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அதன் அர்த்தம் எனக்குத் தெரியவில்லை. தெலுங்கு பாட்டுகள் பாடும்போது அவைகளின் அர்த்தத்தை அறியும்பொருட்டு ஒவ்வொரு மாணவனும் தெலுங்கு தெரிந்திருக்கவேண்டியது அவசியம் என்றிருந்தால் அதன்படியே தமிழ்ப் பாடல்களைப் பாடும்பொழுது அவற்றின் அர்த்தத்தை அறிந்து பாடவேண்டியது அவசியமல்லவா? அதற்காக மற்ற பாஷை பேசும் மாணவர்கள், தமிழைப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டுமென்று குறிப்பிடவேண்டாமா? இவ்விஷயம் இம்மகாநாடு ஆராயவேண்டியதாகும்.

இம் மகாநாட்டில் தமிழிசையைப்பற்றிய பல அரிய பெரிய விஷயங்களைக் குறித்து அநேக பிரமுகர்கள் பேசப்போகிருர்களாகையால், கடைசியாக இங்கு ஒரு விஷயத்தை மாத்திரம்

எடுத்துக்கூறி இத்துடன் என் வரவேற்புரையை முடித்துக்கொள்ள விரும்புகின்றேன். அதாவது தமிழ்ப் பாடல்களை யார், எந்த சந்தர்ப்பத்தில் பாடும்போதும் அர்த்தத்தை அறிந்து அதற்கேற்றபடி பதங்களை விவரமாயும் பகுத்தும் பாடவேண்டியது தமிழிசை வளர விரும்புவோர்களுடைய கடமையாகும் என்பதாம். பெரியோர்களே ! தமிழ் இசை அபிமானிகளே !

எங்கள் அழைப்பிற்கிணங்கி இம்மாநாட்டில் வந்து கூடியுள்ள உங்கள் அனைவரையும் வரவேற்புக் கழகத்தின் சார்பில் அன்பு கலந்த சொற்களால் மகிழ்ச்சியோடு வரவேற்பதோடு மகாநாட்டில் எங்கள் ஏற்பாடுகளில் ஏதேனும் குற்றம் குறை இருக்குமாயின் மன்னிக்குமாறு கேட்டுக்கொண்டு, தலைவர் டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களை இம்மாநாட்டைத் திறந்து வைக்குமாறு வேண்டுகிறேன்.

———

திறப்பு உரை

இராஜா சர். அண்ணுமலைச் செட்டியார்

அன்பர்களே,

தமிழிசைச் சங்கத்தின் முதல் மகாநாட்டை இன்று நடத்துகிறோம். அதைத் திறந்துவைக்கும் பெருமையை எனக்களித்த இசைச் சங்கத்தாருக்கு நன்றி செலுத்துகிறேன். இம் மகாநாட்டை மகிழ்ச்சியுடன் திறந்துவைத்து, இந்த வைபவத்தில் சந்தோஷத்துடன் கலந்து கொள்ளுகிறேன்.

தமிழர் இசை யரங்கில் தமிழ்ப் பாடல்கள் முழங்கவேண்டும். தமிழிசையை வளர்த்து, உயர்ந்த நிலையில் வைக்கவேண்டும். சங்கத்தின் நோக்கங்களில் இது ஒரு முக்கிய அம்சமாகும். இச் சங்கம் சென்னையைத் தலைமையாகக் கொண்டு, முறையாகத் தொண்டு செய்து, நமது கலையை வளர்க்கும். தமிழ் உணர்ச்சி யுள்ள எல்லாத் தமிழரும் இதன் கலைத் தொண்டில் பங்கு கொள்ளுவது கடமையும் உரிமையுமாகும். தமிழகத்தில் தமிழ் முழக்கம் செய்வதைத் தடை செய்யும் தமிழன் இருக்கமுடியாது.

தமிழிசை புதிதல்ல. தமிழிசை இயக்கம் படையெடுப்புமல்ல, அபசாரமுமாகாது. தமிழ் இந்நாட்டிற்குரிய மொழி. தமிழிசை இந்நாட்டிற்குரிய இசைச் செல்வம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்தே தமிழிசை செழித்து வந்தது. தமிழர் இசைச் செல்வமே இந்திய சங்கீதத்திற்குத் தாயூற்றாக இருந்ததென்று தக்க புலவர் ஆராய்ந்து சொல்லுகின்றனர். தமிழிசை வழிவழியாகப் பெருகி வந்தது. பிறமொழிப் பாடல்கள் மிகச் சமீபத்திலேதான் தோன்றின. பிறமொழி பாடல்களில் மோகங்கொண்ட சிலர் தடைச்சுவர் எழுப்பினார்கள். இயற்கைக்கு விரோதமான இத்தடை எத்தனை நாள் நிற்கமுடியும்? தாயிடமிருந்து மக்களை எத்தனை நாள் பிரித்துவைக்க முடியும்? தமிழர் உணர்ச்சி பெற்றெழுந்தனர். தாங்கள் இழந்த செல்வத்தை மீட்டனர். காலச்சுழலில் மறைந்துபோன கலைக்கோயிலைக் கண்டுபிடித்தனர்.

தமிழிசை இயக்கம் பிரகாசித்து விளங்குகிறது. நாடெங்கும் தமிழிசைச் சங்கங்கள் ஸ்தாபிக்கப் பெற்றிருக்கின்றன. தமிழிசை மகாநாடுகள் பல இடங்களில் கூடி, 'இனித் தமிழிசையையே போற்றுவோம்' என்று உறுதி செய்கின்றன. இம் மகாநாடுகள் தமிழர் உள்ளத்தில் தோன்றிய தமிழிசை ஆர்வத்தைச் சுடரோங்கத் தூண்டுகின்றன.

தமிழிசை இயக்கம் தமிழின் மறுமலர்ச்சிக்குப் புதிய வேகத்தைத் தந்தது இசை மலர்ச்சியே மறுமலர்ச்சி. இன்று தமிழரின் செவிகள் தமிழமுதம் பருகி மகிழ்கின்றன. மறைந்து போன பழம் பாடல்கள் இந்த இயக்கத்தால் புத்துயிர்பெற்று முழங்குகின்றன. புதிய பாடல்கள் எழுந்து இன்பம் தருகின்றன. கவிவாணரும் இசைவாணரும் ஆர்வமுடன் முன் வந்து தமிழிசையை வளர்க்கிறுர்கள். இசையரங்கிற்குக் கூட்டங் கூட்டமாகத் தமிழர்கள் வருகின்ருர்கள். தமிழிசை வேறெதற்கும் இளைத்ததல்ல என்பதை இசைவாணர்கள் விளக்கிவிட்டார்கள். அரிய பெரிய ஆவேசக் கவிஞர்கள் தமிழ்ப் பாடல்கள் பாடியிருக் கிருர்கள். கண்ணிருப்பவர் தமிழிசைக்குள்ள பொதுஜன ஆதரவைக் காணலாம். காதிருப்பவர் எத்திசையிலும் தமிழிசை கேட்டு இன்புறலாம். அதிவிரைவில் தமிழிசைக்கலை உச்சநிலையில் ஓங்கி விளங்கப்போகிறது.

நமது தமிழ்மொழிக்கு நலம்தரும் இந்த இயக்கத்திற்கும் எதிர்ப்பும் இடர்களும் முளைத்தன. ஆனல், தமிழிசை வேகத்தில் அந்த இடர்கள் தகர்ந்துபோயின. எனினும், இன்னும் விதண்டா வாதங்களும் பிடிவாதங்களும் சிற்சில இடங்களில் காண்கின்றன. தமிழிசை எதிர்ப்பாளர் விநோதமான குறுக்கு வாதங்களைக் கிளப்பிக் கூச்சலிட்டனர். பத்தி பத்தியாகப் பத்திரிகைகளை நிரப்பினர்.

"தமிழ் இசைக்குத் தகுந்ததல்ல. தெலுங்கு வடமொழி களிலுள்ள நயம் தமிழுக்கு வராது. இசைக்கு மொழி வேறு பாடில்லை. அது நாதவித்தை. அதில் பாஷைப் பிரச்னையைப் புகுத்தக்கூடாது தமிழில் பாடினல் கலைநயம் கெடும். சங்கீதத்தின் மாற்று குறையும். மதிப்பு கெடும். பாட்டு அருளால் வரும். பொருளால் வராது. ஏதோ சிலர் பணத்தைக் கொட்டி இசையைத் தமிழாக்கப் பார்க்கிருர்கள். அது கர்நாடக சங்கீதத்தையே காலைவாரி அடித்துவிடும். தமிழில் உயர்ந்த பாடல்கள் இல்லை."

இவையே எதிர்ப்பாளர்கள் கிளப்பிய குறுக்குவாதங்கள். இவ்வாதங்கள் இப்போது மறைந்து வருகின்றன. இன்று தமிழில் ஏராளமான பாடல்கள் வெளிவந்து முழங்குகின்றன. சங்கீதத்திற்கு வேண்டிய நயங்களெல்லாம் தமிழ்ப்பாடல்களில் இருப்பதை இன்று கண்டும் கேட்டும் ஆனந்திக்கிறோம். மிகச் சிறந்த தெலுங்குக் கீர்த்தனங்களைப் போலவே தமிழில் பல கீர்த்தனங்கள் வழங்குகின்றன. ஆயுளெல்லாம் பாடிக்கொண்டிருக்கலாம். தமிழிசை அமுதவெள்ளம் என்பதை இன்று நம் உள்ளம் உணர்ந்து சொல்லுகிறது. இக்காலத்துப் பிரபல வித்வான்களும் இதையே சொல்லுகிறார்கள். எதிர்ப்பாளரும் இதை உணர்ந்துதான் வருகின்றனர்.

ததும்பிய உணர்ச்சியின் பயனே சங்கீதம். உணர்ச்சி பெருக பாடல்கள் பிறக்கும். இதை ஸர். எஸ் இராதாகிருஷ்ணன் அவர்கள் நேற்று மியூஸிக் அகாடமியில் வெகு அழகாக எடுத்துரைத்தார்கள். முதிர்ந்த அனுபவமும் ஆழ்ந்த தியானமும் உண்டானால் உயர்ந்த இசை பிறக்கும். இல்லையேல் அழகான சப்த ஜாலங்களும் சம்பிரதாய முறையில் மெட்டுகளும்தான் மிஞ்சும் என்று சொன்னார்கள். உணர்ச்சியின் பயனாகவே வால்மீகி முனிவரிடமிருந்து சுலோகம் வெளிவர, ராமாயணமும் தோன்றிற்று என்று எடுத்துக்காட்டினார்கள். இதுவே திரு டி. வி சுப்பராவ் அவர்கள் சங்கீதத்தில் மொழி முக்கியமில்லை. சப்தமே முக்கியமானது என்று அகாடமியில் சொன்னதற்கு சரியான கண்டனம். நமக்கு வேண்டியது கேவலம் சப்த ஜாலமல்ல. சமத்காரமான மெட்டுகளல்ல. உணர்ச்சி ததும்பும் பாடல்கள்தான் நாம் விரும்புகிறோம். சுப்பராவ் அவர்களும் கட்சி வேகத்தால் சிறிது மயக்கம் அடைந்து, கோணலான ஒரு அளவுகோலால் சங்கீதத்தை அளந்ததின் பயனாக அழகிற்கு அனுகுணமான விஷயம் அவர் கண்ணிற்கு அவலட்சணமாகப் படுகிறது. இவ்விதமான வாதங்கள் வெகுவாக மறைந்து வருகின்றன.

ஆனால், சிலரிடம் உள்ள பிடிவாதம் இன்னொரு குறுக்குச்சால் ஓட்டியது தமிழிசை இயக்கம் ஒரு ஜாதி இயக்கம், அரசியல் சதுரங்கம் என்ற வாதத்தைக் கிளப்பியது. அன்பர்களே, தமிழிசை இயக்கம் தூயகலை இயக்கமே. அதில் அரசியல் கலப்பே இல்லை. ஜாதிப் பித்தமுமில்லை. சம்ஸ்கிருதத்தையோ, தெலுங்கையோ நாம் வெறுக்கவில்லை. மற்றமொழியாளர் தமது தாய் மொழிப் பாட்டையோ போற்றுவதுபோலத் தமிழர் தமிழ்ப்

பாடல்களைப் போற்றவேண்டுமென்கிறேம். தமிழிசை இயக்கம் அரசியல் சூட்சியல்ல வென்பதை அழுத்தமாகச் சொல்லுகிறேன்: இவ்வியக்கம் ஜாதிப் பிரிவினையை வளர்ப்பதல்ல அதற்கு மாருக இவ்வியக்கம் ஜாதிமத கட்சி பேதமில்லாமல் யாரையும் பண்புடன் பழகச்செய்யும் ஒற்றுமை இயக்கமேயாகும். தமிழிசையில் எவ்விதமான வேறுபாடுமில்லாமல் தமிழர் உள்ளமெல்லாம் ஒன்று பட்டிருக்கிறது. இந்தக் கலையொற்றுமை நாட்டின் ஒற்றுமைக்கு அரிய துணையாகுமென்பதை வற்புறுத்துகிறேன்.

சங்கீதத்தை அதன் உயர்ந்த பதவியிலிருந்து கீழே இறக்கி அரசியல் வாதங்களுக்கோ வேறு எவ்விதமான கட்சிகளுக்கோ உபயோகப்படுத்திஞல் அது கேவலம் பிரசாரத்தன்மையுள்ளது; குறுகியதும் சாரமற்றதும் கபடமானதுமான காரியமாகும் என்று நேற்று மியூஸிக் அகாடமியில் ஸர். எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் சொன்னுர்கள். அதாவது,

> " When it is prostituted to serve ephemeral and irrelevent ends, it is not music, it is propaganda, narrow, arid and hypocritical "

இது மிகவும் நியாயமானதேயாகும். தமிழிசைச் சங்கத்தார் சம்பந்தப்பட்ட மட்டில் இவ்வித எண்ணங்கள் அவர்களுக்கு கொஞ்சமேனும் கிடையாது. யாராயிருந்தாலும் சரி அரசியல் துறையிலுள்ள ஒரு கட்சியார் மற்றொரு கட்சியாரைக் கண்டிக்க, சங்கீதத்தை ஒரு கருவியாக உபயோகிப்பார்களேயாஞல் அவர் களுக்கு ஸர் இராதாகிருஷ்ணன் அவர்கள் பிரயோகித்த பதங்கள் முற்றிலும் பொருந்தும்.

தமிழிசை இயக்கத்தால் பண்டைக்காலந்தொட்டு வழங்கிய பழம்பாடல்களெல்லாம் இன்று உயிர்பெற்றெழுந்து முழங்கு கின்றன. ஏராளமான புதிய பாடல்கள் தமிழிசையின் பெருமையை விளக்கி ஒலிக்கின்றன. நமது தமிழிசை இன்னும் நயம் பெற்று, உலகம் வியக்க முன்னேறும் அறிகுறிகள் காண்கின்றன.

காலத்தை விஞக்கும் எதிர்ப்புவாதங்கள் பயனற்றுப் போயின. தமிழிசையை ஆந்திரர் எதிர்க்கவில்லை. அவர்கள் தமிழிசையைத் தமிழருக்கே விட்டுவிட்டுத் தமது பாட்டைப் பார்க்கின்றனர். தமிழிசையைத் தமிழரில் சிற்சிலரே எதிர்த்துப்

போராடுகின்றனர். இதுதான் வருந்தத்தக்கது. இப்படி எதிர்ப்பவர் உள்ளத்தில், "நமது வித்வான்கள் பழகிய தெலுங்கிசை விணுகுமே, அவர்களுக்கு ஆதரவு குறையுமே" என்ற பயமும் சந்தேகமும் குடிகொண்டிருக்கின்றன. அவர்கள் மனதிலுள்ள வித்வான்கள் தமது அறிவையும் முயற்சியையும் தமிழிசை வளர்ச்சியில் செலுத்தட்டும். அவ்விதம் செய்வார்களானுல், இப்பொழுதுள்ள அச்சமும் சந்தேகமும் நீங்கிவிடும். தமிழ் அவர்களுடைய தாய்மொழி. பிறமொழியைவிடத் தாய்மொழியில் அவர்கள் எளிதாகத் தங்கள் புலமையைக் காட்டலாம். அப்போது தமிழர் அவர்களை வரவேற்று, மகிழ்வுடன் ஆதரிப்பார்கள். கலையும் செழிக்கும்.

மற்ருேர் இடர் சில பத்திரிகைகளால் வந்தது. அவை தமிழிசை எதிர்ப்பாளருக்கே இடமளித்தன. தமிழிசையாளர் பேச்சை ஆதரிப்பதில்லை வெளியிடுவதில்லை; வெளியிட்டாலும் இங்குமங்கும் விலக்கி, செய்திகளைத் தங்கள் இஷ்டப்படி வெளியிடுகின்றன. இது நியாயமல்ல இதுபோன்ற காரியங்கள் விசனிக்கத் தக்கவை. பத்திரிகைகள், எல்லாவற்றையும் சமமாகக் கருத வேண்டுமென வேண்டுகிறேன்.

மற்ருெருபுறம், சங்கீதம் அரண்மனையிலிருந்து பொதுமக்கள் ஆதிக்கத்திற்கு வந்துவிட்டதென்ற பேச்சைக் கேட்கிறோம். "சங்கீதம் சிலருடைய தனி உரிமையாக இருந்தது. இப்போது பொது உரிமையாகிவிட்டது. எல்லோரும் பாடக் கிளம்புகிறார்கள். எல்லாச் செவிகளும் பாட்டைக் கேட்கின்றன. பாட்டிற்குக் கூட்டம் பெருத்துவிட்டது. பாடகரும் பெருகிவிட்டார்கள்" என்று சிலர் சொல்லுகின்றனர். இசை எவர் மிராசுமல்ல தமிழிசை தமிழரின் பொதுச்செல்வம். அதைப் பயிலவும் பாடவும் வல்லவருக்கெல்லாம் அது பொதுவாகும். இவ்வியக்கத்தில் பங்கு கொண்டு, 'இன்னது பிழை' என்று திருத்தி, இசைப் பண்பை உயர்த்தப் பாடுபடும் புலவர்களைத் தமிழ்மக்கள் மகிழ்வுடன் போற்றுவார்கள். இசைக் கலையால் நமது நாடு முழுதும் ஒன்றுபட இடமுண்டு. தமிழர் அனைவரும், கலைக் கோயிலில் அன்புமயமாக விளங்கும் நாளே தமிழர் நன்னுள். அந்நாளை நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். தமிழ்க் கலை அந்நாளை நோக்கியே பவனி செல்கிறது. அப் பவனியில் சமரசப்பான்மையுடன் எல்லாத் தமிழரும் சேர்ந்து உதவவேண்டும். எல்லா இசைவாணரும் தமிழிசையை ஆதரித்து அப் பவனிக்கு ஊக்கமளிக்கவேண்டும்.

இவ்வாறு கலைப் பவனியில் நாம் மன ஒற்றுமையுடன் சென்றால், வெறுப்பும் வேறுபாடும் ஒழிந்து, நமது சமுதாய வாழ்வு, அமைதியும் இன்பமும் அடையுமென்பது நிச்சயம்.

அன்பர்களே, தமிழிசைச் சங்கத்தின் நோக்கம் இன்ன தென்பதைத் தெளிவாகச் சொல்லி என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

> தமிழ்நாட்டில் நடக்கும் இசையரங்குகளில் தமிழ்ப் பாடல்களே முதன்மை பெறவேண்டும். கச்சேரியின் ஆரம்பமும் மங்களமும் தமிழ்ப் பாட்டுகளாக இருக்க வேண்டும். கச்சேரியின் பெரும் பகுதி தமிழ் பாடலாக இருக்க வேண்டும். இடையிடையே இதர மொழிப் பாடல்களையும் பாடலாம். அதற்குத் தடையில்லை. பிறமொழிப் பாடல்களை நாம் வெறுக்கவில்லை. தமிழ்நாட்டில் நடக்கும் கச்சேரியைக் கேட்கும் தமிழருள்ளம், ' இன்று தமிழிசையரங்கு நடந்தது ; நம் உள்ளம் தமிழிசையால் பூரித்தது '' என்று உணர வேண்டும். தமிழ் நாட்டில் நடக்கும் பாட்டுக் கச்சேரிகள் தமிழருக்கு இன்பமளிக்கவேண்டும் இதுதான் நமது நோக்கம்.

இம்மகாநாட்டின் இசை நிகழ்ச்சியில் எல்லா வகுப்பு வித்வான்களும் காண்கின்றனர். பிறமொழிப் பாடல்களும் காண்கின்றன. ஜாதி வேற்றுமையோ, பாஷை வேற்றுமையோ இங்கில்லை. தமிழர் எல்லோரும் சமமானவர்களே. இந்த உணர்ச்சியுடன் நாம் ஒன்றுகூடிக் கலையை வளர்த்தால் மன வேறுபாடும் இனவேறுபாடும் ஒழியும். ஆகையால் அன்பர்களே, தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்து, தமிழ்பேசும் மக்களாகிய நாமெல்லோரும், ஒரே மனதுடன் நம் தாய்மொழியாகிய தமிழில் இசைக்கலையை ஆதரித்துப் போற்றுவோமாக.

தலைமை உரை

திரு. டி.கே. சிதம்பரநாத முதலியார்

உலகத்தில் எங்குமில்லாத காட்சி ஒன்றைத் தமிழ் நாட்டில் பார்க்கிறோம். போன போன இடங்களில் எல்லாம் கோயில்களும் கோபுரங்களும் எழுந்து நிற்கின்றன.

கோயில்களும் கோபுரங்களும்

மௌனமாகவா அவை நிற்கின்றன? அல்ல. காலை, நண்பகல், மாலை மூன்று காலங்களிலும் இதயத்தைத் தொடுவதான சங்கீதம் நாதஸ்வரத்தின் வழியாக வந்து கொண்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான வருஷங்களாகவே வந்து கொண்டிருக்கிறது.

நாதஸ்வரத்தின் வாயிலாக வரும் இந்த தெய்வீக சங்கீதத்துக்கு மூலம் எங்கே? தமிழ்க் கவிஞரது இதயத்திலும் நாவிலும்தான்.

நாதஸ்வரமும் தமிழும்

இதயத்தில் உண்டான உணர்ச்சிகளையும் பக்தி ஈடுபாடுகளையும் தமிழ்க் கவிகளாக இசையில் வைத்துப் பாடினார்கள். அந்தப் பாடல்கள் கோயில்கள் சந்நிதியை நிறைத்தன; சேவித்து நின்ற பக்தர்களது இதயத்தையும் நிறைத்தன. வழிபாடு முடிந்து வீடுபோன பிறகும் இதயத்தில் ஒலித்துக்கொண்டேயிருந்தன அந்தப் பாடல்கள். பாடல்களின் உருவம் மறைய நேரும்போது நாதசுரம் வந்து உருவங்களை நினைவூட்டித் துலாம்பரமாக்கின.

சங்கீதமும் சாகித்யமும் ஒரு அருமையான முறையில் தெளிவுபட்டு வந்திருக்கின்றன. சங்கீதத்தை நாதசுரம் தெளிவு-படுத்தியது. சாகித்தியத்தைக் கோயில் சன்னிதியில் எழும் பாடல் தெளிவுபடுத்தியது. காவடியாட்டங்களில் வாய்ப்பாட்டும் நாதசுரமும் மாறிமாறி வந்து ஒன்றை ஒன்று தெளிவுபடுத்தி இன்பமூட்டுவதை இன்றைக்கும் பார்க்கிறோம்.

இந்த விதமாக வாய்ப்பாட்டும் வாத்தியமும் சேர்ந்து நம்மவரது சங்கீத ஞானத்தை அபூர்வமான முறையில் வளர்த்து வந்திருக்கின்றன,

* * *

இப்படி வளர்ந்து வந்த—நெடுநாளாக வளர்ந்து வந்த—இசைச் செல்வம் நம்முடைய பூர்வ புண்ணியத்தால் நம் கைக்கே வந்திருக்கிறது. இந்தச் செல்வத்தின் உயர்வும் பண்பாடும் எத்தன்மையது என்று அறிந்து கொள்ளுவதற்குக் கொஞ்சம் கூர்ந்து யோசிக்க வேண்டும்.

இன்றைய சங்கீதம் பூர்வமானதே

பூர்வ சரித்திரத்தைக் கொஞ்சம் எட்டிப் பார்க்க வேண்டும். அப்போதுதான் நம்முடைய கடமை இன்னது என்று தெரியவரும். பூர்வமாக வந்த செல்வத்தை நாம் போற்றிப் பாதுகாக்க வேண்டாமா?

சங்கீத உலகில் புதிய காரியங்களை அவ்வளவாகச் செய்துவிட முடியாது. பூர்வத்தை வைத்துத்தான் கலைவளம் எல்லாம். ஆர்டர் கொடுத்துச் செய்கிற மேஜை நாற்காலி அல்ல கலை. எவ்வளவுக் கெவ்வளவு நமக்குரித்தான பூர்வ கலையைப் பாதுகாக்கிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு செல்வம் படைத்தவர்கள் நாம்.

புதிய காரியம் முடியாது

உண்மையான கலையை உணருவதற்கே நீண்ட காலம் ஆகிறது. அதைக் கற்றுப் பிறருக்கு ஓதுவதற்கோ அதைவிட நீண்ட காலம் வேண்டும். அப்படியானால் அந்தக் கலையைச் சிருஷ்டிப்பதற்கு எத்தனை நீண்ட காலம் வேண்டுமென்று எடுத்துச் சொல்லவா வேண்டும்? நூற்றுக்கணக்கான ஆண்டுகள் போதாது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளே வேண்டுமென்றால் மிகை அல்ல.

கலை வளர நீண்ட காலம்

நம்முடைய சங்கீதம் அதாவது தமிழ் நாட்டை இப்போதே வளஞ் செய்துவருகிற சங்கீதம் ஆயிரக் கணக்கான வருஷங்களாக வளர்ந்தேறி வந்த அரிய வஸ்து.

எத்தனையோ பண்கள் அதாவது ராகங்கள் நம்முடைய இசையை வளம் படுத்துகின்றன. தமிழ் நாட்டிலுள்ள பண்களின் தெளிவையும் வேறுபாடுகளையுங் கண்டு அதிசயிக்காதவர் கிடையாது வட இந்தியாவிலிருந்துவந்த பூர்வமக்களும் அதிசயித்தவர்களாய்த் தங்கள் நாட்டிற்கே அவைகளைக் கொண்டு போயிருக்கிறார்கள். பெயர்களை எப்படி எப்படியோ கொடுத்துக் கொண்டார்கள்.

பண்கள் வடநாடு சென்றன

மேல்நாட்டார் ஏதோ இரண்டு பண்களைக் கண்டு பிடித்து, முப்பது வருஷமாக அனுபவித்து வருவது பற்றி எவ்வளவோ எக்களிப்புடன் பேசுகிறார்கள். அப்படியானால் நம்முடைய பண்களின் தொகையையும் பூர்வமாக ஏற்பட்டுள்ள நயங்களையும் கண்டார்களானால் அவர்களுடைய அதிசயத்தை எப்படிச் சொல்ல வேண்டியிருக்கும்!

மேல் நாட்டாரது இரண்டு பண்கள்

நமது இசைச் செல்வம், இவ்வளவு வளமாயும், பண்பட்டதாயும் இருப்பது வெளிப்படை. அதிசயிக்க வேண்டிய விஷயம். ஆனாலும் அதிசயத்திலும் அதிசயம் என்னவென்றால் அந்தச் செல்வத்தை நம்முடைய முன்னோர்கள் பாதுகாத்து வந்த முறைதான்.

இசைக்குப் பாதுகாப்பு

சங்கீதமானது கண்ணுக்குத் தெரியாத பொருள் ஆயிற்றே, காற்றோடு காற்றாய்க் கரைந்துபோகிற பொருள் ஆயிற்றே என்று கருதிக் கருங்கல்ப்பணிக்குள் பொதிந்து வைத்தார்கள் போலும்! தமிழ் நாடெங்கும் சிறிய கோயில்களையும், பெரிய கோயில்களையும் எழுப்பி, அக்கோயில்களில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளின் திருவடிகளில் வைத்தல்லவா சங்கீதக் கலையைப் பாதுகாத்து வந்திருக்கிறார்கள்!

நடனகலையும் கவிதையும் ஒன்றோடு ஒன்று இணங்கி தெய்வ வழிபாட்டுக்குரிய மார்க்கமாய் இருந்து வந்திருக்கின்றன. நமது சங்கீதத்தின் சாராம்சமான ராகங்கள், நடனத்தோடும்கவிதையோடும் ஒன்றாய்க் கலந்து, அவைகளின் உணர்ச்சி பாவங்களைப் பிழிந்து தங்களிடம் நிறைத்து வைத்துக் கொண்டன. நமக்குத் தெரியாமலே உணர்ச்சி

நடனமும் கவிதையும் பாவத்தைத் தந்தன

பாவங்கள் ராகங்களில் ஊறிக் கிடக்கின்றன. அக்காரணத்தினுலேயே ராகங்கள் தனியாகவே நம்மை வசப்படுத்துகின்றன. ராகங்களை அதாவது தனி இசையைத் தமிழ் நாட்டில் நாம் அனுபவிப்பது போல உலகில் வேறு யாரும் அனுபவிப்பதில்லை இதில் இருந்து பாஷை வேண்டாம், சாகித்நியம் வேண்டாம் என்று சொல்லி விடலாமா? ராகங்களின் விந்நியாச நயங்கள் எல்லாம் சாகித்தியத்திலுள்ள உணர்ச்சியின் விந்நியாசங்கள் தான் என்று அறிந்து கொண்டோமானுல், சங்கீதத்தில் ராக விஸ்தாரத்துக்குள்ள இடம் இன்னது தான் இவ்வளவு தான் என்ற தாரதம்மியம் தெரிந்து விடும். தெரியாமல் போனுல், தனி ராகமாக நாலு மணிக்கச்சேரி என்று விளம்பரம் பண்ணிப் பார்க்க வேண்டும், தெரிந்து விடும்.

சபை ஒரே தந்துவம்

எல்லாக் கலைகளையும் போல சங்கீதக் கலையும் சமுதாய உணர்ச்சியிலிருந்தே எழுவது. சமுதாயத்தின் உணர்ச்சி, கலைஞனது இதயத்தில் உருவெடுக்கிறது. அந்த உருவமும் சமுதாயத்தின் இதயத்தை நோக்கியே நிற்கிறது.

மூர்த்தி வழி பாட்டில் நாம் ஈடுபட்டவர்கள். நடராஜர் என்ருல், முருகப்பெருமான் என்ருல் அந்த மூர்த்திகள் மனக்கண் முன் எழுந்து பக்திபரவசத்தை அளிக்கின்றன. பக்தி பரவசத்தைக் கலைஞர் ஒருவர் உணர்ந்து அனுபவிக்கும்போது வார்த்தையாகவும் தாளமாகவும் ராகமாகவும் சேர்ந்து உருவெடுக்கிறது அது. 'காலைத்தூக்கி நின்ருடும்' என்ற எதுகுல காம்போதிப் பதம் பக்தி பரவசம் எடுத்த உருவந்தான். அதைப்பாடியவர் நம்மவர் இதயத்தை நோக்கியே பாடினுர். விஷயம், வார்த்தை, ராகம் எல்லாம் நமக்குப் பழக்கமானவை: அது காரணமாக நம்மை நோக்கிப் பாடுகிருர் என்று சொல்லுகிருேம்.

தெலுங்கு சாகித்தியம் செய்த பக்தர்கள், தெலுங்கோ பாடலின் விஷயமோ, அதிலுள்ள உணர்ச்சியோ, தெரிய முடியாத கூட்டத்தைப் பார்த்துப் பாடினுர்கள் என்று சொல்ல முடியுமா? முடியாது. பாடியபோது தெலுங்கு பாஷையில் நன்ருய்த் தோய்ந்தவர்களாயும் விஷயத்தில் ஈடுபட்டவர்களாயும் உள்ள கூட்டத்தை நோக்கியே பாடினுர்கள் அவர்கள்.

சபை என்ருல் பாடுகிறவர் வேறு, கேட்பவர்கள் வேறு என்று அமைந்திருந்தால் அதை சபை என்று சொல்லலாமா?

பாடகரும் கேட்பவரும் ஒரே இதயப் பாங்கு படைத்தவர்களாய், ஒரே உணர்ச்சியில் மிதக்கவேண்டும். அப்போதுதான் உண்மையான சபை ஏற்படுகிறது. நடராஜப் பெருமானது நடனம் என்றால் சகல ஜீவராசிகளும் பஞ்ச பூதங்களுமே ஒன்றாக உணர்ச்சியில் கலந்து ஆடுகின்றன என்றார்கள் நம்மவர்கள். கண்ணனது குழலோசையோடு அண்ட பிண்ட சராசரங்கள் எல்லாம் கரைந்து சுழலுகின்றன என்றார்கள்.

இவ்விதம் கலைஞரும் சபையோரும் உணர்ச்சியில் ஒன்றுபடுகிற தெய்வீக லக்ஷியத்தை ஒரு சங்கீத சபை எவ்வளவுக்கு அடைகிறதோ அவ்வளவுக்குத்தான் வெற்றியடைகிறது அது.

சங்கீதம் இன்றியமையாதது

இந்த உண்மைகள் ஞாபகத்தில் இருந்தால் சங்கீதம் எவ்வளவு சக்தி வாய்ந்தது, சமுதாயத்துக்கு எவ்வளவு இன்றியமையாதது என்பது எளிதில் விளங்கும். ஞாபகத்தில் இல்லாத வரையில் வீட்டுக்கு வந்ததும் களைந்து எறியும் உத்தியோக உடைதான் சங்கீதம் என்று தோன்றிவிடும்.

நம்முடைய சாகித்தியத்தின் வளம்

நம்முடைய சமுதாயம் சங்கீதத்தின் ஒவ்வொரு அம்சத்தோடும் ஒட்டியனுபவித்துவந்த காரணமாக சங்கீதமும் சாகித்தியமும் விரிவாக வளர்ந்தன; சாகித்தியங்கள் பல்லாயிரக் கணக்காக நம்மிடை உலாவி வந்தன. இன்றைக்கும் அவைகள் இருக்கத்தான் செய்கின்றன. சாதாரணமான ஒரு தமிழ்ப் புஸ்தகக் கடைக்குப் போய்ப் பார்ப்போமானால் கீர்த்தனங்களாகவும் பதங்களாகவும், புஸ்தகங்கள் எத்தனை எத்தனையோ இருக்கின்றன. அந்தப் புஸ்தகங்களைக் கையால் தொடாததினாலும் பாடல்களைப் பாடாததினாலுமே அவைகள் நம் கண்ணுக்குத் தென்படாமல் போய்விட்டன. தமிழிலே சாகித்தியங்கள் இல்லை என்று நம்மவர்களே சொல்லத் தலைப்பட்டார்கள்.

இதைக் குறித்து மகா மகோபாத்யாய சாமிநாத ஐயரவர்கள் "தமிழில் கீர்த்தனங்களே இல்லை என்று கூறவும் அவர்கள் அஞ்சவில்லை" என்று மிக்க வருத்தத்துடன் சொல்லியிருக்கிறார்கள்.

இதெல்லாம் காரணமாக உணர்ச்சியுள்ள தமிழ்ப் பாடலைக் கேட்பதே அரிதாய்ப் போய்விட்டது. ஏன், உணர்ச்சியற்றுப் பாடுவதே கச்சேரி என்றும் ஏற்பட்டுவிட்டது. தமிழோடாவது உணர்ச்சியோடாவது பாடினல் 'மட்ட ரகம்' என்று பேசும் நிலைக்கே வந்துவிட்டது. இந்தவிதமாக ஒருவர் சொல்லிப் பத்துப் பேர் சொல்லி, நூறு பேர் ஆயிரம் பேர் என்றெல்லாம் சொல்லி வந்தால், நம்முடைய சங்கீதத்துக்கு விமோசனமே கிடையாதோ என்று கையை நெரிக்குப்படியான நிலைமை வந்து விட்டது.

சரித்திரத்தில் அரிய சம்பவம்

இந்த நிலையில் சுமார் பத்து வருஷங்களுக்கு முன்பு நம் முடைய சங்கீதத்தில் ஆர்வங் கொண்ட சிலர், தமிழில் பாடுவது என்று ஏற்பட்டா லொழிய புராதனமான பண்பாடு கொண்ட சங்கீதம் உயிரற்று வறண்டு போய்விடும் என்பதாகக் கருதி நமது கச்சேரிகளில் தமிழ்ப் பாட்டு பாட வேண்டுமென்று சொல்ல ஆரம்பித்தார்கள். இதனல் தமி ழிசை உணர்ச்சி ஒரளவு பரவி வந்தது. ஆனலும் பிரமாத வெற்றியடைந்ததாகச் சொல்வதற்கு இல்லை.

தமிழிசை இயக்கம் இப்படி நின்ற நிலையில் தமிழ்நாட்டுச் சரித்திரத்தில் ஒரு அரிய சம்பவம் நேர்ந்தது.

தமிழிசைக்கு ரூ. 10,000

மூன்று வருஷத்துக்கு முன்பு (16-11-40) கனம் செட்டி நாட்டரசர் ஸர். அண்ணமலைச் செட்டியாரவர்கள் தமிழிசைக் கென்று அண்ணமலைப் பல்கலைக் கழகக் துக்கு பதினயிரம் ரூபாய் நன்கொடை அளித்தார்கள். இந்த நன்கொடையைப் பட்டம் அளிப்பு விழாவில் வெளியிட்ட போது மண்டபத்திலிருந்த சபையோர்கள் ஆரவாரித்த ஆர வாரிப்பை யாரும் மறக்க முடியாது. ஒரு புதிய யுகத்தையே அந்தத் திருநாள் ஆரம்பித்துவிட்டது. அன்றுமுதல் நாடெங்கும் தமிழிசை யுணர்ச்சி நாளுக்கு நாள் அதிகமாகப் பரவி வந்திருக்கிறது. எங்கே பார்த்தாலும் தமிழ்ப்பாட்டே வேண்டுமென்று சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். தமிழ் நாட்டில் நடக்கும் சங்கீதக் கச்சேரிகளில் இப்போது பெரும்பாலும் தமிழ்ப்பாட்டாகவே பாடிவருகிருர்கள். சங்கீதத்தை உணர்ச்சியுடன் கேட்கவேண்டும் அனுபவிக்க வேண்டும் என்ற மனப்பான்மை ஜனங்களுக்குள் ஏற்பட்டுவிட்டது.

தமிழிசை இயக்கம் இவ்விதம் ஒருபக்கத்தில் பரவி வருகையில் அதைப்பலமாக எதிர்க்கவும் ஒரு சிலர் தொடங்கினார்கள். அனாவசியமான எதிர்ப்புத்தான். தமிழ்ப் பாட்டுப்பாடவேண்டும் என்பது பாஷைத் துவேஷமென்று சொன்னார்கள். இதில் பாஷைத் துவேஷமென்பது ஏது? நம்மைப் போலத்தானே மற்றவர்களும்? தெலுங்கர்களுக்கு உவந்தது தெலுங்குப் பாடலே. தமிழ்ப் பாடலை அவர்கள் கேட்க விரும்பவில்லை என்றால் தமிழ்ப் பாஷையில் அவர்களுக்கு துவேஷம் உண்டென்றாகுமா? அப்படியே கன்னடர்களுக்கும் வங்காளிகளுக்கும் காசிப் பக்கத்திலுள்ளவர்களுக்கும் தமிழ்ப் பாஷையிலுள்ள சங்கீதம் விளங்காதுதான். அது காரணமாக தமிழிடத்தில் துவேஷம் உண்டென்று அவர்கள்மேல் புகார் சொல்லலாமா? கூடாது. உலகம் இந்த நிலையிலிருக்கத் தமிழர்கள் தமிழ்ப் பாடல்தான் தங்களுக்கு விளங்குவது உவந்தது என்று சொல்லும்போது துவேஷத்தை ஏன் கற்பிக்க வேண்டும்? அவசியமே இல்லை.

இதர பாஷைகளில் துவேஷம் உண்டா?

தமிழ் நாட்டில் நமக்கிடையே தெலுங்கு தெரிந்தவர்கள் இருக்கிறார்கள், கன்னடம் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள் ஹிந்துஸ்தானி பாஷையும் ஹிந்துஸ்தானி சங்கீதமுமே தெரிந்தவர்களும் இருக்கிறார்கள்: நூற்றுக்கு ஒருவர் இருவர் என்று இருக்கலாம். அவர்கள் அந்த அந்த பாஷையில் உள்ள சங்கீதத்தை அனுபவிப்பது இயல்புதான்; எவ்வளவு வேண்டுமானாலும் அனுபவிக்கலாம். ஆனால் தமிழ் பாஷை மாத்திரமே தெரிந்தவர்கள் "எங்களால் தமிழ் மூலமாகத்தான் சங்கீதத்தை அநுபவிக்க முடியும். எங்களுக்குத் தமிழ்ப் பாட்டுத்தான் வேண்டும்" என்று சொன்னால் அதை மேலே கூறியவர்கள் ஏன் ஆட்சேபிக்க வேண்டும்? ஆட்சேபிப்பதோடு, "மற்ற பாஷைகளின்மேல் துவேஷம்" என்பதாக ஏன் சொல்லவேண்டும்? இப்படியெல்லாம், இல்லாத துவேஷத்தைக் கற்பித்துத் தமிழிசை இயக்கத்தைக் குறைகூறவேண்டாம் என்று சங்கீத அபிமானிகளை ரொம்பவும் கேட்டுக்கொள்கிறேன்.

பாடகர்களுக்குத் தைரியம் ஏற்பட்டது

ஆரம்பத்தில் சில பாடகர்களுக்கு உண்மையிலேயே அதைரியம் ஏற்பட்டது. எப்படி நாலுமணி நேரக் கச்சேரியைத் தமிழ்ப் பாடலைக் கொண்டே சமாளிப்பது என்று பயந்தார்கள். அனேகமாய் இதர பாஷை யிலேயே பாடிவந்த காரணத்தால் தமிழ்ப் பாடல்களைக் கற்க அவசியமில்லாமல் போய்விட்டது அவர்களுக்கு. வருந்தத்தக்க காரியந்தான் அது. ஆனாலும் கேட்பவர்களுக்குத் தமிழ்ப் பாடல்களே உவந்ததாய் இருக்கின்றன என்று தெரியவரவும் அவைகளைப் பாடகர்கள் கற்கவும் பாடவும் ஆரம்பித்துவிட்டார்கள்.

இப்போது முதலணியிலுள்ள சில பாடகர்கள் தமிழிலேயே முக்கியமாகப் பாடுகிறார்கள். அவர்களைக் கேட்டு அனுபவிக்கும் சபையோரின் தொகையை நூறு ஐந்நூறு என்றல்ல, ஐயாயிரம் பதினாயிரம் என்று கணக்கிடவேண்டியிருக்கிறது. இது நாம் கண்கூடாகக் காண்கிற காரியம்.

சபையோரின் உணர்ச்சி சங்கீதத்தைப் பண்படுத்துகிறது

இன்னொரு விஷயம்: சபையோடு ஐக்கியப்பட்டுப் பாடுகிற காரணத்தால் பாடுகிறவர்களுக்கும் என்றுமில்லாத புதியதொரு மன எழுச்சி யுண்டாகி விடுகிறது. அந்த மன எழுச்சி காரணமாகப் பாடுகிற சங்கீதத்தில் மெருகு, உணர்ச்சி, பண்பாடு எல்லாம் தாமாக ஏறிவிடுகின்றன. அத்தகைய பாடல், கேட்பவரது உள்ளத்தை உருக்குகிறது. அப்படிப் பண்பட்ட சங்கீதத்தில் மேலும் மேலும் அவர்களுக்கு ஆசை அதிகரிக்கிறது. இதுவும் இன்றைக்குக் காண்கிற காரியம்.

* * *

இனி நாம் செய்யவேண்டுவது என்ன ?

தமிழில் இருக்க வேண்டும்; உயர்ந்ததாயும் இருக்கவேண்டும்

தமிழிசை வேண்டுமென்று சொல்லும்போது ஏதோ பாஷை மட்டும் தமிழில் இருந்தால் போதும் என்பதல்ல. பூர்வமான தமிழ்நாட்டு இசைப் பண்போடு கூடி, உயர்ந்த உணர்ச்சி பாவங்களோடு கலந்ததாக சங்கீதம் இருக்கவேண்டும் என்பதே நமது கொள்கை. பொதுவாக தற்போதைய சங்கீதத்தில் மேலே சொன்ன லக்ஷணம் அபூர்வமாகத்தான் இருக்கிறது. வட இந்தியாவிலுள்ள சங்கீத நிபுணர்கள் நம்முடைய சங்கீதம் உயர்ந்த பண்பாடுடையது என்று சொல்லுவார்கள். ஆனால் பாடகர்கள் அநேகமாக

பாவமில்லாமலே பாடுகிறார்கள் என்றும் குறை கூறுகிறார்கள். இந்தக் குறையெல்லாம் நிவர்த்தியாகும் பொருட்டு சங்கீதத்தின் உயர்ந்த லக்ஷியத்தையும் சாகித்தியத்தின் உயர்ந்த லக்ஷியத்தையும் கண்முன்னால் வைத்துக்கொண்டே மாணவர்களுக்குச் சங்கீதம் கற்பிக்கவேண்டும். முதலில் ஏதோ கஷ்டமாகத் தோன்றும் கொஞ்சம் விடா முயற்சியோடு இந்தத் துறையில் வேலை செய்வோமானால் வெகு சிக்கிரத்தில் தமிழ்நாடு எங்கும் அதி அற்புதமான பாவ சங்கீதம் ஒலிக்கக் கேட்கலாம். அந்தச் சங்கீதம் தமிழ் மக்கள் எல்லோருடைய இதயத்தையுமே அள்ளும்படியாக இருக்கும்.

தமிழிசையும் எதிர்காலமும்

கோயில்களிலும் சங்கீத சபைகளிலும் வீடுகள்தோறுமே உணர்ச்சி பாவம் நிறைந்து இதயத்தைப் பற்றும்படியான சங்கீதம் முழங்கப் பார்க்கலாம். நம்முடைய சங்கீதம் வெகு புராதனமான சங்கீதம்; ஆயிரக் கணக்கான வருஷங்களாகப் பழுத்த சங்கீதம்; தமிழ் மக்களுக்கு — ஆடவர் பெண்டிர் குழந்தைகள் எல்லாருக்குமே அமுதத்தை யூட்டிய சங்கீதம். கோயில்களில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளுக்கு அர்ப்பணமான சங்கீதம். இந்தச் சங்கீதத்துக்குப் புத்துயிர் உண்டாகப் போகிறது.

தமிழ்நாட்டுக் கோயில்களும் கோபுரங்களும் உலகப் பரப்பில் எப்படி ஒப்பற்ற விதமாய்த் தலைநிமிர்ந்து நிற்கின்றனவோ அப்படியே தமிழ்நாட்டு சங்கீதம் தலை நிமிர்ந்து நிற்கப்போகிறது. நாம் பார்க்கப்போகிறோம். உலகம் பாராட்டப் போகிறது.

தமிழும் இசையும் திருக்கோயில்களும் ஒரே தத்துவமாய் நின்று நெடுகிலும் நம் இதயத்தை அபூர்வமான முறையில் பண்படுத்தி வந்திருக்கின்றன. எல்லாம் மூவேந்தரும் இருபத்தொரு வள்ளல்களும் ஆதரித்த காரியமே. அந்த வேந்தர்களும் வள்ளல்களும் மறுபடி உருவெடுத்துத் தமிழிசையை வளர்க்க இப்போது முன் வந்திருக்கிறார்கள்போலும். எல்லாம் நம்முடைய பூர்வபுண்ணியந்தான்.

இத்தகைய அரியதொண்டில் ஈடுபட்டு நிற்கும் இந்தத் தமிழிசை மகாநாட்டில் இவ்விதம் கலந்துகொள்ளும்படி என்னைப் பணித்த அன்பர்களின் அருமையை என்றுமே நான் மறக்க இயலாது. அந்தப் பெருந்தகையாளருக்கு என் மனமார்ந்த நன்றி.

மாநாட்டு வாழ்த்துச் செய்திகள்

இசைத்தமிழ் முழக்கம் எழுப்பிய வள்ளல்

அண்ணா மலைப்பெயர் அரசன் வாழியர்!

இசைத் தமிழ் இயக்கம், என்று தமிழ்நாட்டிற் குறைபாடுற்றதோ அன்றே வீரத்தை இழந்தோம்; முடியுடை அரசர்களை இழந்தோம்; முப்பிரிவாயிலங்கிய மொழிவளத்தையும் மறந்தோம்.

இன்று தமிழ் நாட்டின் மன்னராகத் திகழும் இராஜா சர். அவர்களது முயற்சியால் நந்தமிழிசை மறுமலர்ச்சி எய்தி வருகின்றது. எதிர்ப்பு அலைகள் ஆங்காங்கு வீசினும் தமிழிசைக் கப்பலை இராஜா சர் அவர்கள் தளர்வின்றிச் செலுத்திச் செல்லுகின்றனர். இனித் தமிழிசைக்கப்பல் இன்பக்கரையை நணுகி எல்லோர்க்கும் இசையமுதை வரையாது வழங்கப் போகின்றது. இங்ஙனம் அஞ்சாது செயலாற்றும் அரசர் வாழ்வாராக!

இன்று தமிழிசை இயக்கத்தைக் காய்வோர், நாளை இவ்வியக்கத்தின் பயனை நுகரத் தமிழிசை அன்பர்களாக மாறப்போகின்றனர்.

எம் கரந்தைத் தமிழ்ச் சங்கச் சார்பில் தஞ்சை மாவட்ட இசைத் தமிழ்க்கழகம் ஒன்றை நிறுவி ஒழுங்குறச் செயல் நிகழ்த்தி அரசரவர்கட்கு ஆதரவு தருவதென முடிவு செய்துள்ளோம். ஏனைய மாவட்டங்களிலும் இங்ஙனம் கழகங்கண்டு செயலாற்றி இசைத் தமிழ் இயக்க மறுமலர்ச்சிக்கும், தமிழுணர்ச்சிக்கும் ஆதரவு தரும்படி ஏனைய மாவட்ட அன்பர்களையும் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

இராவ்சாகிப் ஐ. குமாரசாமிப் பிள்ளை

கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவர், தஞ்சை.

தமிழ்நாட்டிற்குத் தமிழிசையே சிறப்புரிமையுடையது. தமிழர் சோர்வினுல் இதுகாறும் வேற்று மொழியாகிய களை படர்ந்து, தமிழ் மொழிப் பயிரை வளர வொட்டாது தீங்கு விளைத்தது. இப்போது செட்டிநாட்டரசர் அவர்களின் ஆதரவினுல் அக்களைகள் களையப்பட்டுத் தமிழிசைப் பயிர் செழித்து வருதல் கண்டு தமிழ் நாடு பெரிதும் உவகை பூக்கின்றது. தமிழ் நாடு முழுதும் தமிழிசை வளர்ச்சியடைய வேண்டும்.

மகாமகோபாத்தியாய
பண்டிதமணி. மு. கதிரேசஞ் செட்டியார்
அண்ணுமலைப் பல்கலைக்கழகம்

சென்னைத் தமிழிசை மாநாடு பொலிக, பொலிக! மகாநாட்டுத் தலைவர் ரசிகமணி திரு. டி. கே. சிதம்பரநாத முதலியாருக்கும் நமது தமிழிசைத் தலைவர் பெருமான் வள்ளலரசர் அண்ணுமலை செட்டியாருக்கும் அன்பு, அன்பு. தமிழிசை மாநாட்டிற் பங்குகொண்டு தொண்டாற்றும் தமிழன்பருக்கெல்லாம் அன்பு, அன்பு. தமிழிசையின் வெற்றி தமிழன்னையின் வெற்றியாகும். மோனத்தனிமையால் உடல் மாநாட்டிற்கு வரமுடிந்திலது. உள்ளம் அங்கேதான் இருக்கிறது. தமிழிசைக்கு இன்றுடன் 700 இசைப்பாடல்கள் இயற்றி முடிந்தன என்பதை மாநாட்டிற்கு அறிவிக்கிறேன்.

யோகி சுத்தானந்த பாரதியார்
புதுவை

ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழரது யாழ்க்கருவி வடநாட்டிலும் வழக்கத்திலிருந்ததாகத் தெரிகிறது. எந்த நாடு நாகரிகத்தில் சிறந்திருக்கின்றதோ அந்த நாட்டில்தான் இசைக் கலை செழித்து வளரும் என்பதும், இசைவளம் பெற்ற நாடு எதுவோ அதுவே நாகரிகத்தில் முதன்மைபெற்றதென்பதும் அறிஞர் கண்ட உண்மை.

இசை என்பது வெறும் சுர வரிசை அன்று. சுர வரிசை தமிழில் நிறம் என்று சொல்லப்படுகிறது ஆனல் எண்வகைச் சுவையுடைய பாடல்களுடன் அந்நிறம் பொருந்தி இசைக்கப் படுவதால்தான் அக்கலை இசை என்று பெயர் பெற்றது.

பதுமைகளிலோ வேறு திரைகளிலோ பூசப்படாது தனித்துள்ள நிறங்களின் மேன்மை விளக்கமடையாததுபோல இயற் பாடல்களொடு இசைக்கப்படாது தனித்துச் சொல்லும் சுர வரிசைகள் மட்டும் முழு இனிமை தரமாட்டா என்பது பண்டையோர்கொள்கை. இதிலிருந்து பண்ணுக்குப்பாடல் இன்றியமையாததென்று விளங்குகிறதல்லவா? ஆகையால் தமிழ்நாடானது தமிழ்ச் சாகியத்தியங்களின் மூலம் தமிழிசையை வளர்க்கப் பல வகையாலும் முயலும் என்று நம்புகிறேன்.

சங்கீத கலாநிதி க. பொன்னையாப் பிள்ளை
இசைப்பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

தமிழிசை வளர்ச்சியால் தமிழின்—தமிழ்நாட்டின் இசை (புகழ்) மேம்படுதல் ஒருதலையென உணர்ந்து அதனைப் போற்றி வளர்க்க முனைந்திருக்கும் பெருமக்களின் அருஞ்செயல் எக்காலத்தும் யாவராலும் பாராட்டற்குரியதாயிருக்கும்.

தமிழிசை மகாநாடு வெற்றியுடன் நடைபெறவும், தமிழிசை முழக்கம் பெருகவும் 'ஏழிசையாய் இசைப்பயனாய்' இருக்கும் இறைவன் திருவருளைச் சிந்திக்கின்றேன்.

பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார்
தலைவர், கரந்தைப்புலவர் கல்லூரி, தஞ்சை

தமிழ் நாட்டில் ஒரு புத்துணர்ச்சி எங்கும் எழுந்து விளங்குகிறது. புதிய உரை நடை, புதிய பாடல்கள் தோன்றியுள்ளன. தமிழர்கள் தம்முடைய கலைகளை முத்தமிழ் என மூன்று துறையிலும் வளர்த்து வந்தவர்கள். இயல், இசை, கூத்து என்ற அந்தப் பழைய முறையிலே இன்றைய தமிழ்க்கலையும் வளர்வது இயல்பே. தமிழிலேயே பேசவேண்டும் என்ற இயக்கம் வெற்றிபெற்றுள்ளது. இதனால் ஆங்கிலத்தை யாரேனும் வெறுக்கின்றனரா? தமிழிலேயே பாடவேண்டுமென்றால், பிறமொழிப் பாடல்களை வெறுப்பது அழிப்பது என்று எவ்வாறு கூறமுடியும்? ''தமிழ்ப் பாடலை வெறுக்கவேண்டாம். தமிழ்ப் பாடலை இழித்துரைக்க வேண்டாம்'' என்றே தமிழிசை இயக்கம் முழங்குகிறது. உலகத்திலே உடலைவிட்டு உயிர் வாழக் காணமுடியுமா? தமிழர் புதிய இசைப்பாடல்களைப் பாடவேண்டாவா? பழைய இசைப்

பாடல்களை அழிந்தொழியவிடாமல் காப்பாற்றவேண்டாவா? இத் தொண்டுகளைச் செய்யவே தமிழிசை இயக்கம் தோன்றியுள்ளது. இதனை வளர்க்கத் தமிழிசைச் சங்கத்தைத் தோற்றிய செட்டிநாட்டரசர்க்குத் தமிழ்நாடு பெரிதும் கடமைப்பட்டுள்ளது. தமிழிசை வாழ்க!

வித்வான் தெ. பொ. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை, M.A., B.L., M.O.L.
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை

தமிழரது நற்காலத்தில் தமிழிசையியக்கம் தோன்றிற்று. தமிழிசை மகாநாடு, எல்லாம்வல்ல இறைவனருளால் மிகச் சிறப்பாகவே நடைபெறுமென நம்புகிறேன்.

சி. பன்னிருகைப்பெருமாள் முதலியார், M.A., B.L.
திருவாங்கூர் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்

தமிழிசை மாநாடும், இசையரங்கும் இனிது நிறைவெய்த வேண்டுமெனப் பெரிதும் ஆசைப்படுகிறேன்.

கி ஆ. பெ. விசுவநாதம்
திருச்சிராப்பள்ளி

முத்தமிழ் முழக்கத்துடன் பொலிவு பெற்ற நம்முடைய தமிழ் நாட்டில் தமிழிசையின் ஒலி மேலோங்கி இன்பவெள்ளத்தை நமக்கு அளிக்க நாம் பெருமுயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். தமிழ் இனிமை பொருந்தியமொழி என்றவிஷயம் அதைக்கேட்டவர்கள் யாவரும் ஒப்புக்கொள்வார்கள். ''பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப்பசுங்கொண்டலே'' என்பது தெய்வீகவாக்கு. தங்கள் முயற்சி பயனடைய, திருவருளைச் சிந்திக்கின்றேன்.

திவான்பகதூர் கே எஸ். இராமசாமி சாஸ்திரியார்
சென்னை

தமிழிசை மகாநாடு நடத்துவது அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேம். மகாநாடு எல்லாவகையாலும் சிறப்புற வேண்டுமென்றும், நடத்துவோரும் உதவிசெய்வோரும் எல்லா நலங்களையும் அடையவேண்டுமென்றும் முழுமுதலிறைவன் திருவருளைச் சிந்திக்கின்றேம்.

சபாபதிச்சுவாமி
ஸ்ரீ மௌனசுவாமிகள் மடம், சிதம்பரம்

மகாநாடும், இன்னிசைகளும் சீரும் சிறப்பும் பொருந்த நடைபெறல் வேண்டுமென எல்லாம்வல்ல தமிழ்ப்பெருமானுகிய முருகப்பிரான் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

எம். ஆர் சண்முகம்
உதகமண்டலம்

தங்கள் தலைமையில், கனம். ராஜா. சர். அண்ணுமலைச் செட்டியாரவர்களும், சர். ஆர். கே. சண்முகம் அவர்களும் பங்கெடுத்துக்கொள்ளும் மகாநாடு மிகவும் வெற்றிகரமாய் முடியும் என்பதில் சந்தேகமில்லை.

இராவ்பகதூர் நெ. ரா. சாமியப்ப முதலியார்
நெடும்பலம்

தமிழ்க்கவி டி.கே. சிதம்பரநாத முதலியாரவர்கள் தலைமையில் தமிழிசை மகாநாடு மிகச்சிறப்பாக நடைபெறுமாறு எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்ருேம்.

மெ. சொ. மெய்யப்ப செட்டியார்
காரியதரிசி,
செட்டியார்கள் நல உரிமைச் சங்கம், காரைக்குடி

அண்ணுமலையின் அருளால் நம் தமிழிசை மேன்மேலும் அபிவிருத்தியாகி, வரப்போகும் இளம் வித்வான்களையும் அதில் சேர்த்து, எப்பொழுதும் எங்கும் நடக்கும் கச்சேரிகளில் தமிழிசையாகவே பொழியவேண்டும் என்பது சிறுவனின் விருப்பம்.

பி. எஸ். வேதாசலம் செட்டியார்
சென்னை

தமிழிசை பரவுவதற்குத் தாங்கள் எடுத்துக்கொண்ட பெருந் தொண்டைப் பாராட்டி நாங்கள் மனமிக மகிழ்கின்ருேம்.

நகர இளைஞர் கழகத்தார்
சூளை, சென்னை

'இனிய தமிழில்பாடி இசைக்கலையை வளர்ப்போம்' என்று தங்கள் அழைப்பிதழில் கண்டுள்ளது போல இம்மகாநாட்டில் கலந்துகொள்ளும் இசைவாணர்கள் யாவரும் தனித்தமிழிலே பாடுவார்கள் என்று நம்புவதோடு இனிமேலாகிலும் எங்கும் தமிழிலேயே பாடுவார்களென்றும் எதிர்பார்க்கிறேன்.

கே. ஜகதீச செட்டியார்
குகை, சேலம்

தமிழிலும் இசைப்பகுதிகள் உளவா என்று மதர்த்துக் கேட்கும் தான்தோன்றித் தம்பிரான்கள் பலர் வாழ்ந்து, தமிழ் மொழிக்கு ஊறுபாடு செய்யும் நெருக்கடியான இந்நாளில் இத் தமிழிசை மகாநாடு தமிழுலகிற்கு அச்சாணியாக இருக்குமென்றே யான் நினைக்கின்றேன்.

வித்துவான். ப. சேதுராவ்
ரிஷிவாலி

எந்நாளும் வளர் பிறைபோல் இம்மாநாடு, இச்சென்னைமா நகரில் ஆண்டுதோறும் இனிது நடக்கவும், நமது தாய்மொழியாம் தமிழ் இசைவாயிலாகவும் ஓங்கிவளரவும், திருச்சிற்றம்பலம் உடையான் திருவருள் பாலிக்க வேண்டுமென்றிறைஞ்சி வேண்டு கின்றேன்.

பாபநாசம் சிவன்
சென்னை

தமிழ்மொழிக்காகவும் தமிழ் இசைக்காகவும் தொண்டு செய்வதை நாங்கள் போற்றி வாழ்த்துகின்றோம். மைசூர், கோலார், பெங்ளூர், பம்பாய், சிலோன், கொழும்பு, புனா முதலிய நகரங்களிலும் தமிழிசை மாநாடு கூட்டி நமது தமிழிசையைப் பரவச்செய்ய வேண்டும்.

தமிழ்யோகி
பொன்னேரி

தொன்றுமுதிர் செந்தமிழின் தூய இசைக்கலையை
இன்றுமுள தாச்செய்த எம்மண்ணல் — என்றென்றும்
மன்றுள் நடம்புரியும் மாதிறைவி பாகனைப்போல்
நின்று சிறக்க நெடிது.

பண்டித. வித்வான் மி. பொன். இராமநாதஞ் செட்டியார்
சென்னை

சென்ற ஈராண்டுகளில் தமிழிசை இயக்கம் உன்னத நிலை அடைந்துவிட்டது. வசைமொழிவோர் வாயடங்கி வாளா விருக்கும் நிலை எய்துகின்றது. எங்கும் தமிழிசை மழைபொழிந்து செழிக்கின்றது. வாழ்க தமிழிசை !

புத்தனேரி. ரா. சுப்பிரமணியன்
மேட்டூர் அணை

மகாநாடு சிறப்புற நடந்தேற எல்லாம் வல்ல ஆனந்தக் கூத்தரை மனமொழிகளால் துதிக்கின்றோம்.

கா. அண்ணாமலை
செயலாளர்
இளைஞர் சங்கம், கானாடுகாத்தான்

தமிழிசையைத் தகர்க்கச் சிலர் கங்கணம் கட்டிக்கொண்டு இடையூறுகள் இழைத்துவரும் இந்நாளில், தமிழிசையைத் தரணி முழுதும் பரப்பத் தமிழிசை மகாநாடு சென்னையில் நடப்பதுகண்டு அளவிலா மகிழ்ச்சியடைகின்றோம்.

தமிழ்மாணவர் கழகத்தார்
குளித்தலை

நம் தமிழிசைச் சங்கத்தின் ஆதரவில் ஆரம்பமாகும் தமிழிசை மகாநாடு வெற்றிகரமாக நடைபெறவேண்டுமென்று கலைவாணியைப் பிரார்த்திக்கிறோம்.

கா. அரு. கா. காடப்ப செட்டியார்
காரியதரிசி
இசையரங்கம், ஆத்தங்குடி

மாறுபட்ட கொள்கையுடையோரும் மாண்புடையராய்த் தமிழிசையை இனி பாடியும் கேட்டும் வருவர் என்பது உறுதி.

தி. பொ. நாராயணசாமி பாரதி
சன்மார்க்கசபை,
மேலைச்சிவபுரி

மகாநாடு இனிது நடைபெறுவதற்கு என்னுடைய மன மார்ந்த ஆசியை இதன் மூலம் தெரிவித்துக்கொள்வதுடன், அம் மகாநாடு சிறப்புடன் வெற்றிகரமாய் நிறைவேற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

டி. எஸ். கிருஷ்ணசுவாமி ஐயர்
மானேஜர்
இளையாத்தங்குடி தேவஸ்தானம்

ஓரே முடிவை, தமிழ் மக்கள் என்று உண்மையாய்த் தம்மைச் சொல்லிக்கொள்பவர் கைக்கொண்டால் சாலும்; இனிய நந்தமிழ் மொழிப் பாட்டையன்றி--தமிழ் இசையையன்றிப் பிற எம்மொழிப் பாட்டையும் கேளோம்; பாடோம்; பயிலோம் என்னும் உறுதியே அம்முடிவு; இம் முடிவை மக்கள்—குறிப்பாகத் தமிழ்மக்கள் இன்றிருந்து மேற்கொள்ளுமாறு, இம் மாநாடும் சென்னைமாநிலத் தமிழிசைக் கழக அமைப்பாளர்களும் வாய்ப்பும் வழிகளும் கோலவேண்டுமென்று, தங்கள் வாயிலாகச் சாலப் பணிவன்பு நன்றியுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கு. மு. அண்ணல் தங்கோ,
வேலூர்

தமிழர்கள் தமிழ் சாகித்தியத்தைத்தான் பொருள் தெரிந்து இதயபூர்மாக அநுபவிக்க முடியும் என்பதில் இரண்டுபட்ட அபிப்பிராயம் இருக்க முடியாது. தமிழ் நாட்டிலே வளர்ந்து வந்துள்ள நம்முடைய புராதனச் செல்வமான தமிழர் இசை, தமிழ் சாகித்ய வளர்ச்சியின் மூலம் வளம்பெறும் என்பதில் தடையில்லை. அந்த வளத்தை விரைவிலேபெற இசை மகாநாட்டின் மூலமாகத் தாங்கள் முயல்கிறீர்கள். சிறந்த, அருமையான முயற்சியாகிய இது கைகூடவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

அ. சீனிவாசராகவன்,
இந்து கல்லூரி, திருநெல்வேலி

இசையும் இசையின் பயனும் நின்றுள்ள இறைவனருளால் ''தமிழிசை மகாநாடு'' சிறப்புடன் விளங்கி வெற்றிபெற அவனையே மனமொழி மெய்களால் வழுத்துகிறேன்.

வித்துவான் சி. சாம்பசிவம்
திருவல்லிக்கேணி, சென்னை

தமிழிசை மகாநாடு எல்லாம்வல்ல இறைவன் திருவருளால் மங்களகரமாக நடந்தேறுமாறு பிரார்த்திக்கிறேம்.

எஸ். நடராஜ நாடார் (District Munsif)
ந. புஷ்பம்மாள்
திருமங்கலம்

விழா வெற்றிகரமாய் நடைபெற இறைவன் அருள்புரிவாராக!

விவேகானந்தர் கல்விக் கழகம்
ஆவினிப்பட்டி

கடவுளருளால் எல்லாம் இனிது நடைபெற்றுத் தமிழிசை தழைக்க விரும்புகிறேன்.

டி. எஸ். சுவாமிநாதன்
மன்னுர்குடி

தமிழிசை மகாநாடு வெற்றிபெற நடக்கட்டும். இன்னும் ஒரு கட்டுப்பாடுவேண்டும். தெலுங்குப்பாட்டே கூடாது என்பது தான் அது. ஒரு பாட்டுத் தெலுங்கு இருக்கட்டும் என்பவர்கள் கூட நம்முடைய இயக்கத்தின் எதிரிகள்தாம்

முருகு சுப்பிரமணியன்
முத்தமிழ் நிலையம், சென்னை

தமிழிசை வளர்ச்சிக்கு இம்மகாநாடு செவ்வனே தொண்டாற்றுமென நம்புகிறேன். தலைவர்களின் பரந்தநோக்கமே இந்த நம்பிக்கைக்கு ஆதாரமாகையால், கலைத்துறையில் கட்சிப் பிரதி கட்சிகட்கு இடமேயில்லையென்பது கலைப்பிரியர்களுக்கு எளிதில் புலனுகும். மகாநாடு சிறப்புற நடக்க வேண்டுமென்பது எனது மனமார்ந்த ஆவல் அங்ஙனமே இறைவன் அருள்வானுக!

ஆர். வேங்கடாச்சாரியார்
ஜகந்நாத பக்தசபை,
எழும்பூர், சென்னை

மகாநாடு சிறப்பாய் நடந்து, நமது சங்கமும் பொதுமக்களுக்கு நீடூழிகாலம் நல்ல சேவை புரியுமாறு விரும்பும்,

எஸ். எஸ். என். லக்ஷ்மணன் செட்டியார்
பசுமலை

தமிழிசைதான் தென்னிந்தியாவின் இசை. அது சூரியனைப் போன்றது. அதை மறைக்க எந்த மேகங்களாலும் இயலாது. தமிழிசையின் இயற்கைப்பிரகாசத்தையும், தனிச் சிறப்பையும் பண்டிதர்களைவிடப் பாமரர்களே நன்முய் உணர்ந்து அநுபவிக்கின்றனர்.

தமிழ் இசையின் விடியற்காலம் வருகின்றது. சூரியன் உதயமாகப் போகின்முன். தமிழிசையின் பிரகாசம் தமிழ்ப் பாஷையின் மூலமே பூரணமாய் வெளிப்பட வேண்டும்.

மற்ற இசைகளுக்கும், மற்ற பாஷைகளுக்கும் இடங்கொடுக்கும் பாவம் தமிழிசைக்கு உண்டு. அதனுலேயே தமிழிசை கேடுற்றது பயிரைக் கெடுக்கவந்த களைகளைப் பிடுங்கி எறிய வேண்டுமா ? அவைகளோடு உறவு கொண்டாடவேண்டுமா?

பிடில் சீநிவாசய்யர்
அமராவதிப்புதூர்

தமிழிசை மகாநாடு எவ்வகையானும் வெற்றி பெறவேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

எஸ். இராமலிங்கசாமி, பி.ஏ., பி எல்.
தஞ்சை

தமிழிசை மகாநாடு வெற்றியுடன் நடைபெறுமாறு வாழ்த்துகின்றேன். தமிழ்மொழி சமயம், சங்கீதம், நடனம், நாடகம் ஆகிய கலைகளையுடையது. தமிழிசை மகாநாடு மேற்குறித்த கலைகள் வளர்வதற்குரிய வழிகளைக் கண்டு, பெரும்பயன்விளைவிக்கக் கூடும் என்பதில் ஒருவித ஐயமுமில்லை.

எப். ஜி. நடேச அய்யர்
திருச்சி

சென்னையில் நடைபெறும் முதலாவது தமிழிசை மாநாட்டிற்கு எமது மனப்பூர்வமான வாழ்த்து அளிக்கின்ருேம். மாநாடு வெற்றியுடன் நடைபெறுக ! எங்கள் சபா தமிழிசை மாநாட்டின் நோக்கங்களை முழுமனதோடு ஆதரிக்கின்றது.

செயலாளர்
ரஸிக ரஞ்சன சபா, கிருஷ்ண கான சபா
திருச்சி

தமிழ்ப்பாட்டுகளை நான் உள்ளன்போடு விரும்புகின்றவன். தமிழ் இசை இயக்கத்தை உள்ளன்போடு ஆதரிகின்றேன். மாநாடு வெற்றியுடன் நடைபெறுக வென்று வாழ்த்துகின்றேன்.

இ. கனகசபை செட்டியார்
நகரசபைத் தலைவர், மாயவரம்

தமிழிசைச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் இசை மாநாடு வெற்றி பெறுக! மாநாடு செவ்வனே நடைபெறுமாறு உழைப்பவர்களுக்கு என்வாழ்த்து உரியதாகுக!

ஜி. ஹரிகிருஷ்ணப் பிள்ளை, எம்.பிஇ., எம்.ஆர்.ஏ,எஸ்,
எப்.ஆர்.எஸ்.ஏ

நிர்வாகத் தலைவர்
பம்பாய் பார்சி நாடகக் கம்பெனி
வித்தியா ரஞ்சிதபூஷணி நாடக சபா
ஸ்ரீ கிருஷ்ண ஹிந்து நாடகக் கம்பெனி

இரங்கூன்

மாநாடு வெற்றியுடன் நடைபெறுக! இசையரங்குகள் தினந்தோறும் சிறப்புடன் நிகழுமாக!

சி. கிருஷ்ணமூர்த்தி முதலியார்
சீர்காழி

இன்கலைகள் அணிசெய்து ஆட்சி பெற்றுள்ள உன்னத நிலையங்களில் தமிழுக்குரிய இடம் பெறுமாறு செய்யும் தங்கள் முயற்சி வெற்றிபெறுக!

எஸ். கே. சடகோப முதலியார், எம்.எல்.சி.,
மிட்டாதார், சேலம்

தமிழ் இசை மாநாடும் அதன் பிறகு நடைபெறும் இசையரங்குகள் அனைத்தும் சிறப்புடன் நடைபெறுமாறு வாழ்த்துகின்றேன். தமிழ்ப்பாடல்கள் தமிழ்ப்பண்களில் பாடுமாறு நாடெங்கும் பிரசாரம் செய்வதற்கு வேண்டிய வழிகளையும் சாதனங்களையும் காண்பீர்களென உறுதியாய்

நம்புகின்றேன். அகில இந்திய வானொலி நிலையம் நமக்குத் துணைசெய்யுமாறு அரசாங்கக் கட்டளை பிறப்பிக்கச் செய்தல் வேண்டும். தமிழ்நாட்டு வானொலி நிலையத்தில் 95 சதவிகிதம் தமிழ் இசைவாணர்கள் இடம் பெறுதற்கும் அரசாங்கக் கட்டளை பிறப்பிக்கவேண்டும்.

டி. ஆர் சுந்தரம், பி.ஏ., பி.எல்.,
திருப்பூர்

சென்னையில் முதன் முறை இத்தகைய மாநாடு நடைபெறச் செய்வதைக் குறித்துத் தமிழ்நாட்டார் பெருமிதமும் உளமகிழ்ச்சியும் அடைகின்றனர். இம்மாநாடு தமிழிசையை வளர்ப்பதோடு தமிழர்களை அவ்விசையில் பெரிதும் பற்றுள்ளங் கொண்டு அதைப் போற்றிவளர்த்து நாடெங்கும் பரவச் செய்யுமாறு தூண்டுமென்பது எனது முழு நம்பிக்கை இம்மாநாட்டைக் கூட்டித் தமிழ் இசைச் சங்கத்தை வளர்ப்பவர்களுக்குத் தமிழர்கள் உண்மையில் பெரிதும் கடப்பாடுடையவர்களாவர்.

சென்னைத் தமிழ் இசைச் சங்கத்தின் கிளைச்சங்கங்கள் தமிழ் ஜில்லாக்கள் எல்லாவற்றிலும் நிறுவுதற்கும் அவைகள் மூலமாக சங்க நோக்கங்களும் நிகழ்ச்சிகளும் நிறைவுற்றுப் பரவுதற்கும் வேண்டிய முயற்சிகளைப்பற்றி மாநாடு சிந்திக்குமென்று எதிர் பார்க்கின்றேன்.

பி அரங்கநாத முதலியார், பி.ஏ., பி.எல்.,
பப்ளிக் பிராக்ஸிக்யூட்டர், வேலூர்

மாநாட்டிற்கு வெற்றியும் புகழும் உண்டாவதாக! செட்டி நாட்டு ராஜா அவர்கள் ஆதரவிலும் திரு. டி. கே. சி. அவர்கள் தலைமையிலும் நடைபெறும் தமிழிசை மாநாடு வெற்றி பெற வாழ்த்துகின்றேன். திங்கள் தோறும் வெளிவருமாறு ஒரு தமிழிசை வெளியீட்டைத் தொடங்குதல் நலமென்று கருதுகின்றேன்.

எம். அருணசல முதலியார்
டைம் சூபரின்டென்டெண்ட், தென்னிந்தியரயில்வே,
பொன்மலை

தமிழ் இசை மகாநாடு வெற்றிகரமான பயன் விளைக்க வேண்டுமென்று யாம் உள்ளன்போடு வாழ்த்துகின்றோம். புகழ் மிக்க இசைவல்லுநர்களால் நடைபெறவிருக்கும் மிகச் சிறந்த இசையரங்கு நிகழ்ச்சிக் குறிப்பைக் கண்டு சாலவும் மகிழ்வெய்து-கின்றோம். நீங்கள் மேற்கொண்ட புனிதமான நோக்கத்தை முன்னிட்டு ஊக்கத்துடன் நாட்டுக்கு அரும்பணியாற்ற முன் வந்து மாநாட்டைக் கூட்டுபவர்களின் நன்முயற்சியைப் பெரிதும் பாராட்டுகின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ மஹாசந்நிதானம், திருவாவடு துறை ஆதினம்

மாநாடு எவ்வகையானும் வெற்றியோடு நடைபெற வாழ்த்துகின்றேன்.

இசைத் தமிழ்ச் செல்வர் தி. இலக்குமண பிள்ளை பி. ஏ.,
திருவனந்தபுரம்

தமிழிசை மாநாடு வெற்றியுறுவதாக!

நீலாவதி இராமசுப்பிரமணியம்
காரைக்குடி

தமிழிசை மாநாடு பல்வகையானும் வெற்றியோடு நடை பெறுமாறு சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் ஆசி கூறுகின்றது.

இ. மு. சுப்பிரமணிய பிள்ளை
செயலாளர், சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம்,
திருநெல்வேலி

மாநாடு வெற்றியுற விரும்புகின்றேன்.

பி. ஆர். தேவர், திருச்சி

மாநாட்டு நிகழ்ச்சிகள் எவ்வகையிலும் வெற்றியுற விரும்புகின்றேன்.

ஏ. கிருஷ்ணசாமி வாண்டையார், தஞ்சை

தமிழிசை மாநாடு சிறப்பொடு நடைபெற உள்ளன்போடு வாழ்த்துகின்றேன்.

வி. எஸ். விசுவநாதம், வாணியம்பாடி

மாநாடு வெற்றிபெறக் கடவுளை வழுத்துகின்றேன்.

டாக்டர் அண்ணாமலை, தென்காசி

தமிழிசை 1944-ஆம் ஆண்டுக்கு முன்னரே வெற்றி பெற்றது. மாநாடு சிறப்புறவும், ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் நீடு வாழவும் இறைவனை வாழ்த்துகின்றேன்.

நாதசுரச்சக்கரவர்த்தி டி என் இராஜரத்தினம்,
திருவாவடுதுறை

தமிழிசை ஆதரவாளருள் யானும் ஒருவன். மாநாடு சிறப்புற நடைபெறுவதாக!

டி. எஸ். அருணாசலம் பிள்ளை, பி.ஏ., எல்.டி.,
திருவாரூர்.

———



இனிய தமிழில் பாடி இசைக்கலையை வளர்ப்போம்

தமிழ் இசை மகாநாடு

சென்னை

தமிழிசைச் சங்கத்தின் சார்பில் சென்ற 23—12—43 வியாழனன்று தமிழிசை மகாநாடு, சென்னை அரண்மனைக்காரத் தெருவிலுள்ள செயின்ட் மேரிஸ் ஹாலில் நடைபெற்றது. மகாநாட்டிற்குத் தமிழ் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் ஆடவரும் பெண்டிருமாக ஆயிரக்கணக்கில் பெருமக்கள் வந்திருந்தனர். தமிழ் நாட்டின் பல கட்சி அரசியல் தலைவர்கள், அறிஞர்கள், செல்வர்கள், இசைவாணர்கள், ஆசிரியர்கள், தொண்டர்கள் ஆகிய எல்லோரையும் ஒருசேர இம்மகாநாட்டில் கண்டு மகிழ முடிந்தது. தமிழிசை வளர்ச்சி என்ற ஒன்றுபற்றி எல்லோரும் தங்களிடையே உள்ள வேற்றுமைகளை மறந்து உளங்கலந்து வந்து குழுமியிருந்தனர்.

மகாநாடு மாலை 4-30 மணிக்குத் தொடங்கப்பட்டதென்றால் 2-மணியிலிருந்தே பலரும் ஆயிரக்கணக்கில் மாநாட்டு மண்டபத்தில் வந்து நிறைந்தவண்ணமிருந்தனர் மண்டபத்தின் வெளியேயும், உள்ளேயும் அழகாக அலங்கரிக்கப் பெற்றிருந்தது. 'இனிய தமிழில் பாடி இசைக்கலையை வளர்ப்போம்' 'செந்தமிழ் இசையே செவிநுகர் இசையாம்' என்பனபோன்ற சிறந்த எழுத்துக்கள் பொறிக்கப்பெற்ற அட்டைகள் மண்டபத்தினுள்ளே

எங்கும் காணப்பட்டன. தலைவர்கள் அமர்வதற்கென்று மேடை அழகாக ஒப்பனை செய்யப்பட்டிருந்தது. மேடைக்குப் பின்னே பாட்டுக்கு உருகும் பைந்தமிழ்க் கூத்தனின் உருவம் பார்ப்போர் கண்களைப் பறித்தன. அதாவது தில்லைக் கூத்தனின் ஆனந்த நடன உருவம் பின்புறமுள்ள திரையில் தீட்டப்பெற்றிருந்தது. மேடையின் முன்பு இருபக்கங்களிலும் மங்களகரமான பெரிய குத்துவிளக்குகள் சுடர்விட்டு நின்றன. மண்டபத்தின் உள்ளேயும் வெளியேயும் ஒலிபெருக்கிகள் வைக்கப்பெற்றிருந்தன. மண்டபத்திற்குள் இடம் போதாமல் திரளான மக்கள் பதினாயிரக் கணக்கில் வெளியே நின்றுகொண்டிருந்தனர்.

மாலை 4-மணிக்கு மகாநாட்டுத் தலைவர் திருவாளர் டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் மண்டபத்தின் வாயிலை அணுக, இராஜா சர். அண்ணாமலைச் செட்டியார், சர். ஆர். கே. சண்முகம் செட்டியார், திவான்பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார், இராவ்பகதூர் பி. சம்பந்த முதலியார் உள்ளிட்ட பல தலைவர்கள் எதிர்கொண்டு அவரை வரவேற்றுச் சுமக்க முடியாத பெரிய மலர் மாலையைச் சூட்டி, மக்களின் பேராரவாரத்திடையே உள்ளே அழைத்து வந்தனர்.

மகாநாடு சரியாக மாலை 4-30 மணிக்குத் தொடங்கப் பெற்றது. எல்லோரும் எழுந்து நிற்க, இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள், 'குனித்த புருவமும்' என்ற தேவாரப் பாடலைச் சிந்தை குளிரப் பாடிக் கடவுளை வணங்கினார். வரவேற்பு வாழ்த்து ஒன்றும் பாடினார். பின்னர், திருமதிகள் எம். எஸ். தேவசேனா சகோதரிகள் தமிழிசை வாழ்த்துப் பாடினர். திருவனந்தபுரம் டாக்டர் சுப்பிரமணியஐயரின் செல்வி கமலாம்பாள் ஒரு தமிழ்ப்பாடல் பாடினார்.

வரவேற்புக் கழகத்தலைவர் இராவ்பகதூர் ப. சம்பந்த முதலியார் வந்திருந்த அனைவரையும் வரவேற்றுத் தம் வரவேற்புரையை நிகழ்த்தி இராஜா சர் அவர்களை மாநாட்டைத் திறந்து வைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

செட்டிநாட்டரசர் இராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் சிறந்ததோர் சொற்பொழிவு ஆற்றி மகாநாட்டைத் திறந்து வைத்தார்.

மகாநாட்டுத் தலைவர், திறப்பாளர், வரவேற்புத் தலைவர் ஆகியோரின் பேச்சுக்கள் முன்னரே தனியே வெளிவந்துள்ளன.

மாநாட்டுத் தலைவர் திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் தலைமையேற்று நீண்ட கைதட்டலுக்கிடையே 'ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்களுக்கும், சர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களுக்கும், மற்றும் இந்தத் தமிழ் இசைக்காக வள்ளலாக வழங்கியிருக்கும் பலருக்கும், கலையில் ஈடுபட்டு இங்குக் கூடியிருக்கும் ஆயிரக்கணக்கான அன்பர்களுக்கும், இத்தனையும் கூட்டிவைத்த இந்த வரவேற்புக் கழகத்தலைவர் அவர்களுக்கும் என் வணக்கம்.

உலகத்தில் எத்தனையோ தேசங்களை நம்மில் பார்த்து வந்தவர்கள், வடநாட்டிலுள்ள பல பிரதேசங்களையும் போய்ப் பார்த்து வந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள தேசங்கள் மாத்திரமில்லை. ஐரோப்பா, ஆசியா முதலிய தேசங்களுக்கும் போய் அங்கு உள்ள விசித்திரமான காட்சிகளைப் பார்த்து வந்தவர்களும் பலர். அவர்களுடைய அனுபவம், மேலும் ஐரோப்பியர்கள் இங்கு வந்தவர்கள்-நம்முடைய நமிழ் நாட்டைப் பற்றி சொல்லியவைகள், எல்லாவற்றையும் ஞாபகம் வைத்துக் கொண்டு ஒரு விஷயத்தைப் பார்ப்போம். உலகத்தில் எங்குமில்லாத காட்சி ஒன்றைத் தமிழ் நாட்டில் பார்க்கிறோம்' என்று குறிப்பிட்டுத் தம் தலைமை உரையை நிகழ்த்தினார்.

தமிழிசைச்சங்க கௌரவ காரியதரிசி இராவ்சாகிப் டி. எஸ். கச்சாபிகேச முதலியார், மாநாட்டிற்கு வந்திருந்த வாழ்த்துச் செய்திகளை வாசித்தார்.

பின்னர் தமிழிசையின் பெருமை குறித்துப் பல தலைவர்களும் அறிஞர்களும் பேசினர்.

சர். ஆர். கே சண்முகம் செட்டியார்

பெரியோர்களே, சகோதரிகளே, நண்பர்களே !

தலைவர் அவர்கள், நான் தமிழ்நாட்டை விட்டு வெளியே போய் நாடோடி அனுபவம் பெற்றிருக்கிறபடியினாலே நான் பேசுவது மிகவும் பொருத்தமென்று சொன்னார்கள். என்னுடைய அந்த நாடோடி அனுபவத்திலிருந்தே ஆரம்பிக்கலாமென்று நினைத்திருக்கிறேன். போன வருஷம் நான் அமெரிக்கா தேசத்திலிருந்தபோது, நான் இங்கிருந்து புறப்படுவதற்கு முன்னமேயே

பட்டணத்திலிருந்து தினசரிப் பத்திரிகைகளெல்லாம் எனக்கு அனுப்பவேண்டுமென்று ஏற்பாடு செய்துகொண்டு போயிருந்தேன். அதே பிரகாரம் எனக்கு 10 நாள், 15 நாளுக்கு ஒருதரம் தினசரிப் பத்திரிகைக் கட்டுகள் வருவது வழக்கம். ஒருநாள் இந்த விதமாகத் தபால் மூலமாகப் பத்திரிகைக்கட்டு வரும்போது என்னுடைய அறையிலேயே அமெரிக்கா தேசத்து சிநேகிதர் ஒருவர் உட்கார்ந்து கொண்டிருந்தார். நான் என்னவோ வேலையைக் கவனித்துக்கொண்டிருந்ததால் இந்தப் பத்திரிகைக் கட்டைப்பிரித்துப் படிக்க ஆரம்பித்தார். கொஞ்ச நேரம் பார்த்து விட்டு "என்ன உங்கள் ஊரில் ஒரு புதிய சண்டை ஆரம்பித்திருக்கிறது போலிருக்கிறதே" என்று சொன்னார். என்ன விசேஷமென்று கேட்டபோது, சென்னப்பட்டணம் தினசரி ஒன்றைக் காட்டினார். அதில் இந்தத் தமிழிசை விஷயமாகச் சச்சரவுகள் நடந்துகொண்டிருப்பதைப் பற்றியும், கூட்டங்கள் நடந்து கொண்டு வருவதைப்பற்றியும் விவரமாய் எழுதியிருந்தது. நான் 'வாஸ்தவம்தான்; ஒரு கலவரம் ஏற்பட்டிருக்கிறது'' என்று சொன்னேன். "ஏன்? இந்த விதமாகக் கலவரம் வரக் காரணம் என்ன" வென்று கேட்டார். நான் சொன்னேன்: "இப்பொழுது தமிழில்தான் பாட்டுக்கள் பாடவேண்டுமென்று கேட்கிறோம். அதற்குச் சில கூட்டத்தாரும், பாகவதர்களும் ஆட்சேபணை செய்கிறார்கள். அதனால்தான் இந்தக் கலவரம் ஏற்பட்டது" என்று சொன்னேன். உடனே அந்த மனிதர் "இப்படி ஏன் தமிழில் பாடவேண்டுமென்று கேட்கவேண்டும்" என்றார். எனக்குத் தூக்கி வாரிப்போட்ட மாதிரி ஆகிவிட்டது என்னடா இந்த மனிதர் ஆந்திரதேசத்திலிருந்து வந்தவரா என்று சந்தேகம் உண்டாகிவிட்டது! (கைதட்டல்) "ஏன், தமிழில்தானே நான் பாடவேண்டுமென்று கேட்கிறேன். அதில் என்ன தப்பிதம்?" என்று கேட்டேன். "ஏன், உங்கள் தாய்ப் பாஷையில் சங்கீதம் இல்லையா? தமிழில் பாடவேண்டுமென்று ஏன் கேட்கிறீர்கள்?" என்று கேட்டார். (கைதட்டல்) அப்பொழுது எனக்கு அர்த்தமாகிவிட்டது அதாவது நம் தாய் பாஷையில் இப்பொழுது சங்கீதம் நடக்கிறது என்றும், அதுவல்லாமல் வேறொரு பாஷையில் நாம் இப்பொழுது கேட்கிறோம் என்றும் அவர் அர்த்தம் செய்து கொண்டு கேட்டார்.

அதற்கு "இல்லை, எங்கள் தாய் பாஷை தமிழ்தான். தமிழ் நாட்டில் தமிழில் பாடவேண்டுமென்று கேட்கிறோம்" என்று சொன்னேன். "அப்படியா சமாச்சாரம்! இந்தியாவைப்பற்றி—

மேல்நாட்டினருக்கு, இங்கிலீஷ்காரர்கள், அமெரிக்கா தேசத்தார்கள் இவர்களுக்கு—சமாசாரங்களைப் படிக்கப் படிக்க சந்தேகம் ஏற்படும் என்பது தெரிகிறது. உங்கள் விஷயங்களை அர்த்தம் செய்துகொள்ள முடியவே இல்லை. ஒரு தேசத்தில் சங்கீதம் எப்படி இருக்கவேண்டுமென்கிற நிலமையில் மக்கள் இருக்கவேண்டுமானால் அவர்கள் தேசத்தின் நிலைமை என்ன என்பது விசித்திரமாகத்தானிருக்கிறது!'' என்றார். இம்மாதிரி நாங்கள் பேசிக்கொண்டிருக்கும்போது சைனு தேசத்து எழுத்தாளர் ஒருவரும் இருந்தார். நீங்கள் அவர் பெயரைக்கூட அறிந்திருக்கலாம். லின்யுடாங் என்பது அவர் பெயர். அவர் ஒரு பெரிய ஞானி பெரிய எழுத்தாளர். உடனே இது விஷயமாக ஒரு தர்க்கம் ஏற்பட்டது. அப்பொழுது அவர் சொன்னார். ''இரண்டு முக்கியமான விஷயங்கள் மனிதன் வாழ்க்கைக்கு வேண்டியன. இந்த இரண்டு விஷயங்களிலும் எந்த ஊரைச் சுற்றினாலும், நாடோடித்தனம் செய்தாலும்கூட அவனவன் தேசத்தின் விஷயங்கள்தான் அவனுக்கு ருசியைக் கொடுக்கும்'' என்றார். அவை என்னவென்றால் ஒன்று சாப்பாடு, மற்றொன்று சங்கீதம். ''நான் சைனுவிலிருந்து வந்து அதிக நாளாயிற்று அமெரிக்கா தேசத்துச் சாப்பாட்டை சாப்பிட்டுச் சாப்பிட்டுப்பழகிவிட்டது வாஸ்தவம்தான். இருந்தாலும் சைனு தேசத்துச் சாப்பாட்டை, எவனாவது ஒரு புண்ணியவான் ஒரு நாள் போட்டால் அன்றுதான் எனக்கு ஆத்ம திருப்தி ஏற்படுகிறது'' என்றார் அந்த சைனு தேச நண்பர். அதேமாதிரித்தான் சங்கீதமும். ஏதோ ஒரு நாள் நான் கன்னிமாரா ஹோட்டலில் 'டின்னர்' சாப்பிடுகிறமாதிரி, வேறு பாஷையில் இரண்டு பாட்டுகள் ஏதோ ஒரு சமயம் கேட்டால் நன்றாய்த்தானிருக்கும். எப்பொழுதும் வேறு பாஷையில் கேட்டுக்கொண்டேயிருந்தால் அதனால் ஆத்ம திருப்தி யுண்டாகாது. இது எனக்கு மிகவும் உண்மையாகப் பட்டது. ஏறக்குறைய 9 மாதம் அமெரிக்கா போய் அந்த தேசத்துச் சாப்பாடுதான் எப்பொழுதும். நம் சாப்பாடு இல்லையே என்று எனக்கு அதிகமாக வியாகூலம். அவர், தம் சைனு தேசத்துச் சாப்பாட்டைப்பற்றி சொன்னவுடன் எனக்கு நம் தேசத்து இட்லி சாம்பார் ஞாபகம் வந்தது. (கைதட்டல்) அமெரிக்கா தேசத்திலிருக்கும் சாப்பாடு, இட்லி சாம்பாரை விட விலை ஜாஸ்தியானது; விசேஷமானதுதான். இருந்தாலும் இரண்டு நாள் நன்றாயிருந்ததே தவிர, நம் இட்லி சாம்பார் மேலே தான் எனக்கு ஞாபகம். இந்த தத்துவம் கொஞ்சம் தெரிந்தால்

தமிழ்நாட்டிலே தமிழ் இசை இயக்கம் என்பது ஏன் வந்தது என்கிற கேள்வி கேட்க இடமே இருந்திராது.

நானும் இந்தத் தமிழிசை இயக்கம் ஆரம்பித்தது முதல் யோசித்துப் பார்த்தேன். உலகத்தில் எந்த தேசத்தை நாம் உதாரணமாக எடுத்துக்கொண்டாலும், இந்தத் தமிழ் நாட்டைத் தவிர மற்ற எந்த நாட்டிலாவது சங்கீதம் அந்த தேசத்தின் தாய் பாஷையிலில்லாமல் வேறு பாஷையிலிருக்கிறதா என்று கவனித்துப் பார்த்தால் கிடையவே கிடையாது. இந்த விசித்திரம் தமிழ் நாட்டில்தான் இருக்கிறது. எனக்குத் தெரிந்த வரையில் இந்தியாவில் மற்ற மாகாணத்திலாவது, மற்ற தேசங்கள் எதிலாவது இந்த மாதிரி ஆபத்து தாய்மொழிக்கு வந்தது கிடையாது. தமிழ் மொழியின் நிலைமை எப்படி யிருக்கிறதென்று கேளுங்கள் : வயிற்றுப் பிழைப்புக்கு, அதாவது உத்தியோகம் பார்க்க வேண்டுமானால், இங்கிலீஷ் படிக்கவேண்டும். கலியாணம், கருமாந்திரம் முதலியவைகள் செய்வதானால் சம்ஸ்கிருதத்தில் செய்யவேண்டும். (கைதட்டல்) தேசாபிமானி என்கிற பெயரெடுக்க வேண்டுமானால் ஹிந்தி படிக்கவேண்டும். (கைதட்டல்) சங்கீதம்பாட, தெலுங்கு படிக்கவேண்டும். சாதாரணமாகப் பேசும்போது ''நேற்று உங்களை 'மீட்' பண்ணும்போது ஒரு 'மேட்டர்' (Matter) சொல்லுவதற்கு 'கம்ப்ளீட்' (complete) ஆய் மறந்துபோய் விட்டேன் சார்'' என்று இந்தமாதிரி மணிப்பிரவாளமாகப் பேசவேண்டும். இப்படி யிருந்தால் தமிழுக்கு நாம் கொடுத்திருக்கும் ஸ்தானம்தெரியவரும்!

இராஜா சர். அண்ணாமலை செட்டியாரவர்களும், தலைவர் சிதம்பரநாத முதலியாரவர்களும், சம்பந்த முதலியாரவர்களும் தமிழிசையின் விசேஷத்தைப்பற்றியும், தமிழில் பெரிய கீர்த்தனங்கள் இருக்கின்றன, இசை இருக்கிறது என்றும் சொன்னார்கள். இருக்கிறதோ இல்லையோ அதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. அதைப்பற்றிக் கவலையுமில்லை தமிழில் என்ன இசை இருக்கிறதோ அந்த இசை எனக்குப் போதும். சில பெரியவர்கள் ஏதாவது பிரசங்கம் செய்யும்போது-நம்நாட்டுச் சங்கீதத்தைப் பற்றி சொல்லும்போது தமிழிசை, தெலுங்கு இசை, கர்னாடக சங்கீதம், பீதோவன் இவைகளைப்பற்றிச் சொன்னால், பீதோவன் நன்றாயிருக்குமென்று நாம் பீதோவனை எடுத்துக்கொள்வதா ? என்னுடைய தமிழில் ஒரு பாட்டைக் கேட்கும்போது என்ன ஆத்மதிருப்தி உண்டாகிறதோ, அந்த திருப்தி எனக்கு வேறு எந்த பாஷையில் பாட்டு கேட்டாலும் உண்டாகாது. ஆகையினால்

தமிழிசை 2,000 வருஷத்திற்கு முன்பிருந்தே இருக்கிறதோ இல்லையோ, விசேஷமோ என்னவோ, தமிழனுகப் பிறந்த எனக்கு தமிழிசைதான் வேண்டியிருக்கிறது. அதைப்பற்றி நான் யாரிடமும் மன்னிப்புக் கேட்கவேண்டிய அவசியமுமில்லை. கேட்பதாய் உத்தேசமுமில்லை. சாதாரணமாய் மனிதர்களுக்கு இயற்கையாக உண்டாகும் உணர்ச்சியின் காரணமாகத் தமிழிசை இயக்கம் உண்டாயிற்று. அது உண்டானவுடனே பெரிய கலாட்டா — எதிர்ப்பு—புதிது புதிதான வியாக்யானம் எல்லாம் எழுந்தன. 'சங்கீதத்திற்குச் சாகித்தியம் போதும், பாஷை வேண்டாம்; தமிழிசை இயக்கம் அரசியல் சூழ்ச்சி.' இந்தமாதிரி எல்லாம் கேள்விப்படுகிறோம். அரசியலில் சூழ்ச்சி என்னவோ இருக்கிறது. ஆனால் அது தமிழிசை இயக்கத்திலிருக்கிறதா? அல்லது அதை எதிர்ப்பவர்களிடத்திலிருக்கிறதா? என்றுதான் தெரியவேண்டும்.

இந்த 16 வருஷமாகச் சென்னையில் மியூசிக் அகாடமியென்று ஒரு பெரிய சபை நடந்து வருகிறது. நேற்று அவர்கள் சர் எஸ் இராதாகிருஷ்ணன் அவர்களுக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் படித்துக் கொடுத்தார்கள். அந்த வரவேற்புப் பத்திரத்தில் சொல்லியிருக்கும் விஷயம் அந்த அகாடமியின் அபிப்பிராயம். அவர்கள் என்ன சொன்னார்களென்றால், 16 வருஷமாக சங்கீதத்திற்கு உழைத்து நம் நாட்டின் மக்களிடத்திலே அவர்களுடைய ரசிக்கும் சக்தியை அதிகப்படுத்தி யிருக்கிறார்களாம்! அவர்கள் விசேஷமாய் ஒன்றும் மற்றவர்களுக்கு ரசிக்கும் சக்தியை அதிகப்படுத்தி யிருப்பதாகத் தெரியவில்லை. முதன் முதலில், புதிது புதிதாகச் சங்கீத சபைகள் எல்லாம் தோன்றியிருக்கின்றன அல்லவா, அவைகளை யெல்லாம் வரவேற்கிறோமென்று சொன்னார்கள். எதிர்ப்போமென்று சொல்லவில்லை. பின்பு இந்த விதமாகப் புதிதாகச் சில இயக்கங்கள் தோன்றும்போது சில அவலட்சணமான மனிதர்கள் எதிராக வருவது வழக்கம்தான். ஊக்கத்துடன் இவர்கள் தப்புப் பாதையில் போகிறார்களே, அவர்களுடைய மனம் திரும்பி நல்ல வழிக்கு அவர்களும் வருவார்கள் என்று நம்புகிறோம் என்று அதில் சொல்லியிருக்கிறார்கள் நாம் நல்ல வழியில் திரும்பவேண்டுமா அல்லது நாம் அவர்களைத் திருப்பவேண்டுமா என்பதற்குச் சரியான பதில் அங்கு சர் இராதாகிருஷ்ணன் அவர்களே சொல்லிவிட்டார்கள். என்னைப் பொறுத்தமட்டில் இசைத்தத்துவம் சம்பந்தமாக நான் சர். இராதாகிருஷ்ணன் மியூசிக் அகாடமியில் சொல்லியிருக்கிற ஒவ்வொரு வார்த்தையையும் அங்கீகரிக்கிறேன். (கைதட்டல்)

மிகவும் அழகாய்ச் சொல்லியிருக்கிறார். ஒரு பெரிய கலை என்று அதற்குப் பெயர் வரவேண்டுமென்றால், அதற்கு என்ன குணமிருக்க வேண்டுமென்று சொல்லும்போது அந்தக் கலையைச் சங்கீதமென்று வைத்துக் கொள்ளுங்கள்—பாடுகிறவர்களுக்கு சாமர்த்தியம் மட்டு மிருந்தால் போதாது; கேட்கிறவன் அந்த சங்கீதத்தின் கலையைப் பற்றித் தெரியாத மனிதனுயிருந்தாலும் அதை அனுபவிக்கும்படி செய்யவேண்டுமென்பதுதான் சங்கீதம் பாடுபவருடைய கடமை யென்று சொன்னார்.

அனுபவிப்பவருக்குச் சங்கீதம் தெரியாது, ராகமும் தெரியாது, தாளமும் தெரியாது. பாட்டை அனுபவிக்க வேண்டுமென்றால் அந்தப் பாட்டின் அர்த்தம் தெரியாமல் எப்படி அனுபவிப்பது? சர். இராதாகிருஷ்ணன் மியூசிக் அகாடமியில் என்ன தத்துவங் களைச் சொன்னாரோ அதை ஒப்புக்கொள்ளுகிறேன். தமிழிசை அரசியல் சூழ்ச்சி என்று சொல்லுகிறார்கள். நம் இராஜா அவர்கள் எங்களிடத்தில் அரசியல் சூழ்ச்சி இல்லையென்று சொன்னார். இன்னும் 50 தரம் சொன்னாலும் அதை ஒருவரும் கேட்கப் போவதில்லை. ஆனால் எனக்கு ஒரு சந்தேகம் நமக்கும் தெரியாமலேயே சூழ்ச்சி செய்து விட்டோமோ என்று ஒரு சந்தேகம்! ஆனால் இன்று இங்கு வந்து இந்த சபையைப் பார்த்த போது பரவாயில்லை, நம் சூழ்ச்சி நல்ல சூழ்ச்சிதான் என்று தோன்றியது. ஏனென்றால் நாங்கள் இந்த சங்கீதத்தின் மூலமாக ஒரு அரசியல் சூழ்ச்சியை, தெரிந்தோ தெரியாமலோ கைக் கொண்டதன் காரணமாக ஒரே மேடையில் திரு. இராஜ கோபலாசாரியரும் நானும் உட்கார நேர்ந்ததே! இந்த விதமான அரசியல் சூழ்ச்சி இன்னும் அதிகமாக வந்தால் நம் நாட்டுக்கு நல்லதென்று சொல்லி முடித்துக்கொள்ளுகிறேன்.

(பலத்த கைதட்டல்)

அடுத்து, டைகர் எஸ். வரதாச்சாரியார் அவர்களின் பேச்சை வித்வான் அன்பு கணபதி வாசித்தார். அது பின்வருமாறு:—

திருவேங்கட மலைக்குத் தெற்கேயும், கன்னியா குமரிக்கு வடக்கேயும் பரவியுள்ள நம் செந்தமிழ் நாட்டிலே இசை தொன்றுதொட்டு வியாபித்திருந்தது என்று சொன்னால் மிகை- யாகாது. மிகப் பழைய நூல்களான குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, சிலப்பதிகாரம் முதலியவைகளில் இசையின் மேன்மைகளைப்பற்றி மிகவும் விரிவாகச் சொல்லியிருக்கிறார்கள்,

சிலப்பதிகாரத்திலே இசையைப் பற்றிச் சில நூல்கள் இருப்பதாகவும், அவற்றின் பெயரும் சொல்லியிருக்கிறார்கள். இதிலிருந்து இசையானது சிலப்பதிகாரத்திற்கு முன்பே வியாபித்திருந்ததென்பது நன்கு புலப்படுகின்றது.

இத்தமிழிசையானது நடுவில் கொஞ்ச நாட்களாக யாராலும் கையாளப்படாமலிருந்தது. 7-ஆவது நூற்றாண்டில் திருநீலகண்டருக்குப் பிறகுதான் மறுபடியும் முன்னணிக்கு வந்தது. அவருக்குப் பிறகு தேவாரங்களும் திருவாசகமும் நால்வர் இயற்றினர். ஆழ்வாராதியர்கள் பிரபந்தங்கள் இயற்றினர். 12 வது நூற்றாண்டு வரையும் அதற்குப்பின் பல வருஷங்களும் தமிழ் இசை முன்னேற்றம் அடைந்திருந்ததாகத் தெரிகிறது. பிறகு சில ஆண்டுகள் தமிழிசை மிகவும் குறைபாட்டுக்குட்பட்டதாகத் தெரிகிறது. சமீப காலத்தில் கர்நாடகம் என்னும் சங்கீதம் நம் தேசத்தில் அதி தீவிரமாகப் பரவலுற்றது. அக்காலத்திலேயும் நம் தாய் பாஷையான தமிழில் சொற்சுவை, இசைச்சுவை, பொருட்சுவை முதலியவை ததும்பப் பலவகையான கீர்த்தனங்களும், நாடகங்களும், குறவஞ்சி முதலியவைகளும் இயற்றப்பட்டு இசைவாணர்களாலும், எல்லோராலும் பாடப்பட்டு வந்தன. அச்சமயத்தில் அருணாசலக் கவிராயர், கனம் கிருஷ்ணையர், கவி குஞ்சர பாரதிகள், முத்துத் தாண்டவர், கோபாலகிருஷ்ண பாரதிகள் போன்ற பெரியோர்கள் இசைப்பாக்கள் இயற்றி ஜனங்களைப் பரவசமடையச் செய்தனர். 20 மைல்களுக்கப்பாலிருந்தும் இவர்கள் பாட்டைக் கேட்க ஜனங்கள் வருவரென்று கூறுவர்.

அதன் பிறகு 20 வயது நூற்றாண்டிலே செந்தமிழே சிறந்த தெய்வமெனவும், பாரததேசத் தொண்டே பிறப்புரிமையெனக் கொண்டும், ஸ்ரீ சுப்பிரமணிய பாரதிகள் இனிய தமிழிலே இசைப் பாக்கள் இயற்றினார். அதன் மூலம் தமிழ்நாட்டு மக்களிடத்து ஒரு தேசப்பற்றும் பாஷைப்பற்றும் ஏற்பட்டன. இதை வற்புறுத்தியே அவரும் 'வாழ்க செந்தமிழ், வாழ்க நற்றமிழர், வாழ்க பாரத சமுதாயம்' என்று பாடினார்.

இத்தமிழிசைக்காகத் தொண்டாற்றியவர்களான இசைப் புலவர்கள் இசைப்பாக்களை மேன்மையாகத் தொகுத்து அதற்கிணங்க சுரதாளக் குறிப்பமைத்து, பாலிகா பாலர்கள், உபாத்தியாயர்கள் முதலியவர்கள் நன்றாக எளிதில் சுயமாகவே

படித்து, அதன் மூலம் இசையில் ஆரம்பப் படிப்புப் படித்தவர்களுக்கும் உபயோகப்படுமாறு அச்சிடப்பெற்று 4 தொகுதிகள் வரை இப்போது தமிழ் உலகத்திற்கு சந்தோஷத்தை உண்டாக்குமாறு பிரசுரிக்கப்பெற்றிருக்கின்றன. இன்னும் இவை போன்ற அனேக தொகுதிகளுக்குப் பொருள் சேகரிக்கப்பெற்று, அச்சில் இருக்கின்றன அவைகளும் விரைவில் வெளிவருமென்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தமிழ்த் தொண்டின் காரணமாக இதுகாறும் அதிகமாகப் பொது ஜனங்களுக்கு உணர்ச்சியளிக்கும் வகையில், தமிழ் இசையே வேண்டுமென்ற இலட்சக்கணக்கான ஜனங்களுக்கு நல்விருந்தெனப் போற்றத் தகுந்த நிலையில், தமிழ் இசை உருப்படிகள் இல்லாதிருந்தமையால், அத்தகைய வகைகளுக்கும், நல்ல தேர்ச்சியும், முதுமையும், ஞானமுமுள்ள தெரிந்தெடுத்த சில இசை வித்வான்கள் மூலம் இயற்றப்பெற்று நன்கு பரிசோதிக்கப்பெற்று வெளிவந்துகொண்டிருக்கின்றன. நாளது வரையில் நம் தமிழ் பாஷையில் வேண்டிய அளவு பாடல்கள் இருந்திருக்கவில்லை யென்பதல்ல இதன் பொருள். இருந்திருக்க லாம். ஆனல் மறைந்தோ அல்லது அதிகம் கையாளப்படாமலோ இருந்திருக்கவேணும் என்று அபிப்பிராயப்படலாமே யொழிய வேறொன்றும் இங்கு கூறுவதற்கில்லை.

இப்பெருந்தொண்டின் அவசியமாகப் பல்லாயிரக் கணக்கான தமிழர்களின் பரந்த வேண்டுகோளிற் கேற்ப இவ்வளவு சீக்கிரத்தில் இம்மகா உத்தமமான முத்தமிழுக்கு மிக்க ஆர்வத் துடன் பெருங்கொடை யளித்து, அவ்வப்போது வேண்டிவந்த அத்யாவசியங்களுக் கெல்லாம் மாதந்தோறும் பன்முறையாகப் பல இடங்களிலிருந்தும் இயல் இசைப் புலவர்களை வரவழைத்து, இதன் மேம்பாட்டுக்குரிய எல்லாத் துறைகளையும் மிக்க ஒழுங்-காகவும், இன்னும் மேன்மேலும் வளர்ச்சிக்குரிய பலவகைப்பட்ட சாதனங்களையும் ஒருங்கு கூட்டி, நம் தமிழ் இசை உலகத்திற்குப் பேருபகாரம் செய்த நமது இராஜா செட்டிநாட்டரசர் சர் அண்ணமலை செட்டியார் அவர்களுக்குத் தமிழ்நாட்டு மக்கள் எந்நாளும் கடமைப்பட்டவர்களாக இருப்பதுமன்றி அவருடன் அப்பெருங்குடியில் யாவரும் ஆயுளாரோக்கியம் ஐசுவரியத்துடன் இறைவன் கிருபையால் வாழ்ந்திருப்பார்களென ஆசி கூறுவார்களாக!

திரு. சி. ராஜகோபாலாச்சாரியார்

அக்கிராசனரவர்களே, சபையோர்களே !

இந்தக் கூட்டம் தமிழிசை மகாநாட்டைப்பற்றிய வெறும் பேச்சு. நாளை முதல் இசை நடக்கும். இன்று பேச்சு மாத்திரம். நான் சிறுவனுயிருந்த காலத்தில் இவ்வளவு பெரிய ஒரு ஹாலாவது வேறு மண்டபமாவது கிடையாது. பெரிய கச்சேரிகளென்றுல் சின்ன இடங்களில் மிக நெருக்கமாகச் சிலர் உட்கார்ந்து கேட்பார்கள். அநேகமாக அப்பொழுது ரொம்பப் பணவசூல் கிடையாது. மிகக் குறைச்சலாகத்தானிருக்கும். இந்தக் காலத்தில் என்ன ஏற்பட்டதென்றுல் பெரிய பெரிய மண்டபங்கள், உலகத்தையே வரவழைக்க வேண்டியது, பணம் கொடுத்து, எல்லாரும் ஆசைப்பட்டவர்கள் எல்லோரும் வரலாம் என்று செய்து, இசையை உலகமே கேட்கும்படிக் கச்சேரிகள் நடத்த ஆரம்பித்தார்கள்.

வந்து கேட்கிறவர்கள் எதற்காக வருகிறுர்கள்? ஏதாவது கடமையைச் செலுத்த வரவில்லை. சந்தோஷத்திற்காக வருகிறுர்கள். அல்லது பலன்பெற வருகிறுர்கள். அதை நாம் கவனிக்க வேண்டும். அதை நாம் கவனித்தோமானுல் இந்த இசை இயக்கத்தைப்பற்றி இருக்கிற அபிப்பிராய பேதங்கள் அநேகமாகப் போகுமென்று நான் நினைக்கிறேன். இந்த இசை இயக்கத்தைப்பற்றி வித்தியாச அபிப்பிராயம் இருப்பதற்குக் காரணம், தாங்கள் முன்னுலேயே மனத்தில் வைத்துள்ள அபிப்பிராயத்தை அப்படியே பத்திரமாக வைத்துக்கொண்டு ஆக்ஷேபிப்பதாக நான் எண்ணுகிறேன். இந்த இயக்கத்தின் நோக்கம் என்ன என்பதைப்பற்றி இராஜா சர் அண்ணுமலை செட்டியாரவர்கள் அவருடைய பிரசங்கத்தின் மத்தியில் சொன்னுர். அதை நீங்களெல்லோரும் கேட்டீர்கள். அதை யாரும்—தமிழர் யாரும்—ஆக்ஷேபிக்க முடியாதென்பது என்னுடைய அபிப்பிராயம். இந்த இசை என்பது என்ன என்றும், இயக்கம் என்பது என்ன என்றும், நாம் அறிந்தோமானுல் வித்தியாசங்கள் போய்விடுமென்பது என் பூரண நம்பிக்கை.

சங்கீதம் என்றுல் சப்தங்களை—கேட்க இனிமையான சப்தங்களை—திரட்டி இணைத்து அதை எல்லோரும் கேட்கும்படிச் செய்வது. இதற்கு இசை, சங்கீதம், Music என்று பெயர். இதற்கு வாத்யம் போதும், இதற்கு வீணைபோதும், இதற்கு புல்லாங்

குழல் போதும், இதற்கு பிடில் போதும் என்று சொல்ல வேண்டியதே இல்லை. ஹார்மோனியத்தைப்பற்றி பேச்சே வேண்டியதில்லை. மனித ஸ்வரூபமே இல்லாமல்—மனிதக்குரலே இல்லாமல்—சங்கீதம் உண்டு என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் மனிதனுடைய குரலை அதில் சேர்த்தும் சங்கீதம் செய்ய லாம். மனிதன் குரல் சங்கீதத்தில் பிரதானமாகச் சேர்ந்த வுடனே மனிதனுக்கு காக்கை, குருவி போல் பேச்சில்லாமல் சுவரம் மாத்திரம் நீண்ட நேரம் செய்ய முடியாது. ஆகை யினால் பேச்சும், சொல்லும், மொழியும் கலந்து போகிறது. அதில் மனிதன் குரல் ஒரு சங்கீதத்தை உண்டாக்கி ஜனங்களுக்கு திருப்தியோ, சந்தோஷமோ உண்டாக வேண்டுமானால் அதில் மனிதன் பேசும் மொழியும் சேர்ந்து போகிறது. சங்கீதம் வேறு, மொழி வேறு என்பது நிச்சயம். பாத்திரம் வேறு, ஜலம் வேறு என்பது நிச்சயம். ஆனால் நான் ஒரு டம்ளர் பால் சாப்பிடு கிறேன் என்றால் பாலையும் டம்ளரையும் சேர்த்துச் சாப்பிடுவ தில்லை. பால் மட்டும்தான் சாப்பிடுகிறேன். டம்ளரில் வைத்துத் தான் சாப்பிடுகிறேன். டம்ளர் இல்லாமலும் சாப்பிடலாம். அதாவது கன்றுக்குட்டி முதலியவைகள் டம்ளர் இல்லாமலும் குடிக்கும். டம்ளரில் போட்டு காப்பியோ, பாலோ சாப்பிடுவதும் உண்டு. எப்படிச் சாப்பிட்டாலும் உண்மையில் குடிப்பது பால்தான். சங்கீதம்தான் கேட்கிறேன். (கைதட்டல்) மனிதன் மொழிகளுடன் சேர்த்துக் கேட்கும்போது ஒரு தனி சந்தோஷம் உண்டாகிறது. அந்த மனிதன் குரல் சேர்ந்தவுடன் என்ன சொல்லுகிறார் என்றும் கூடவே மனம் கேட்கிறது. சங்கீதம் மனதில் ஏறுவதுடன், என்ன சொல்லுகிறார் என்பதும் கூட ஏறுகிறது. ஏதோ எனக்கு விளங்கவில்லை யென்றும் கேட்டுக் கொண்டே இருக்கலாம்; அல்லது விளங்கியும் கேட்டுக்கொண் டிருக்கலாம். சங்கீதம் வேறு, பாஷை வேறு என்பது நிச்சய மாயிருந்த போதிலும் மனித சாரீரத்தில் வரும்போது பேச்சும் அந்த சங்கீதமும் ஒன்றியிருக்க வேண்டுமென்பது பழைய முறை. நியாயமான முறை. சங்கீதம் சோகரசமாயிருந்து, ராகமும் சோக ரசமாயிருந்து பேச்சு ஏதோ வேறு விஷயமாயிருந்தால்— அரிசி இவ்வளவு விலை, பருப்பு இவ்வளவு விலை என்று தோடி ராகத்தில் பாடினால்—நன்றாயிராது. பேச்சு என்று ஏற்பட்டவுடன் ராகமும் பேச்சும் ஒன்றுக்கொன்று சம்பந்தமிருக்க வேண்டும். எப்படி உடம்பும், ஆத்மாவும் ஒன்றாகிறதோ அப்படியே இரண்டும் ஒன்றாகப்போய், கேட்கும்போது பிரம்மானந்தம் உண்டாகிறது என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட இன்பம் வேண்டுமா?

வேண்டாமா? மொழியைப்பற்றி கவனமே வேண்டுமா? வேண்டாமா? என்கிற வாதம், பிரமாதமாக இந்த இசை இயக்கத்தில் அடிபடுகிறது. மொழிபற்றி வித்தியாசம் ஏற்பட்ட படியால், மொழியே வேண்டாம் என்கிற வாதம் போட்டால், நம் கக்ஷி பலமாகப் போய் விடுகிறது என்கிற உத்தேசத்தின்மேல் சங்கீதத்திற்கு மொழியே வேண்டாம், என்று சிலர் சொல்லு கிறார்கள். இது எப்படியிருக்கிறதென்றால் தென்கலை வேண்டுமா, வடகலை வேண்டுமா என்று கேட்டால் ஹிந்துமதமே வேண்டாம். சிவன் கோவில் வேண்டுமா, விஷ்ணு கோவில் வேண்டுமா என்று கேட்டால் கோவிலே வேண்டாம், என்று இப்படிச் சொல்லிக் குறுக்கடியாக வாதம் செய்து முடித்து விடலாம் என்பதற்காக முடித்து விடுகிறார்கள். அதற்கு ஆதரவாய் சங்கீதம் வேறு பாஷை வேறு என்ற உண்மையான தத்துவமிருந்தாலும், மனிதக் குரலில் கேட்கும்போது, அந்தக் குரலில் மொழிகள் வரும்போது, அந்த மொழிகள் அர்த்தமில்லாமல் வேறு ஏதோ சப்தமாக-முரசின் சப்தமாய்-தம்பட்டையின் சப்தமாயிருப்பதற்குப் பதில் சங்கீதத்தின் ரசத்திற்கு இணைந்ததாக நமக்கும் விளங்கும் மொழியாக இருந்தால்-இசையாக இருந்தால் சந்தோஷமாக இருக்கும் என்பதுதான் நம் தமிழிசை இயக்கத்தின் நோக்கம். (கை தட்டல்) கர்னாடக சங்கீதத்தைத் தகர்த்தெறிவதற்காக வாவது, கர்னாடக சங்கீதத்தைக் கெடுப்பதற்காகவாவது இந்த இயக்கம் என்று சொன்னால் அது எனக்குத் தெரிந்த மட்டில் சுத்த தவறு. அப்படி இல்லவே இல்லை.

ஆமாம், நமக்கு, இந்த தேசத்திற்கு, எல்லாவித நன்மையும் வேண்டும் என்றால், ''எனக்கு ஆட்சேபணையில்லை'' என்றால் போதாது. நன்மை வேண்டுமென்றால் அதற்காகப் பாடுபட வேண்டும். அதற்கு ஒரு திட்டம் வேண்டும். ஒரு சீர்திருத்தம் செய்ய வேண்டுமானால், எந்த விஷயமாக எந்த நோக்கில் சீர்திருத்தம் செய்ய வேண்டுமோ, அதை முன்னணியில் வைத்து அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து நடத்தினால்தான் முடியுமே தவிர ஏனோ தானோ என்று, எனக்கும் ஆட்சேபணையில்லை என்றால் சீர்திருத்தம் ஏற்படாது.

தேசத்தில் நம் பாஷை, சர் ஷண்முகம் செட்டியாரவர்கள் சொன்னபடி உலகத்திலேயே சந்தி சிரிக்கும்படியான நிலைமையி லிருக்கிறது.

கொஞ்சநாள் முன்பு ஒரு சபையில் சொன்னார்கள். எதிர்க் கக்ஷியில் இருக்கிற பெரியவர்கள், இரண்டு மூன்று பேர் பேசினார்கள். ஒருவர் சொன்னார், தீக்ஷிதர் திருவிழா அன்று சங்கீத வித்வான்களுக்கு ஒரு உரிமை உண்டு. என்ன உரிமை-யென்றால் சங்கீதத்தை கேட்கிறவர்கள், சாகித்தியம் இருக்கிறதே-பேச்சில் உள்ள சாகித்தியம், அதன் பொருளை மேல்வாரியாக வாவது அறிந்துகொண்டு கேட்டால்தான் உண்மையான ஆனந்தம் உண்டாகும் என்று சொன்னார். நியாயம். அதே உரிமைதான் இப்பொழுது நாமும் கேட்கிறது. ஆனால் இசையை, கீழே இருந்து கேட்பவர்கள் உரிமை என்ன? சங்கீதம் பாடுகிறவர் பாடும் சாகித்தியம், நாம் மேல்வாரியாகவாவது அர்த்தம் செய்து கொள்ளும்படியான பாஷையில் இருக்க வேண்டுமென்பதுதான். வித்தியாசம் ஒன்றும் கிடையாது. இன்னொருவர் சொன்னார். அவர் பெயரையும் சொல்லலாம். சர் சி. பி. இராமசுவாமி ஐயர். அவர் சொன்னார். சங்கீதத்தில் பொருளும் பதமும் இல்லாமல் கேட்டுக்கொண்டிருந்தால் அதற்கு "tingling of symbols" என்று சொன்னார். பொருளற்ற இசை, ஏதோமாதிரி ஆனந்தமே தவிர வேறு பிரயோஜனமில்லையென்று சொன்னார். இதேதான் இந்த இயக்கத்தின் மூலாதாரம்.

நம் நாட்டிலே பாட்டு என்றால் இரண்டு விஷயத்திற்கு உபயோகிக்கப்படுகிறது. ஒன்று கடவுள் பக்தி. இன்னொன்று பெண்பக்தி - காதல். காதலுக்கும், தெய்வபக்திக்கும், இரண்டுக்கும் வேண்டும் பாட்டு. நம் தேசத்தில் பண்ணுனது இப்படி நடை பெற்று வருகிறது. சங்கீதத்திற்கு உயிர் இருக்கிறதே அது இந்த பக்தியிலும், காதலிலும்தான் இருக்கிறது. இந்த தேசத்தில் என்ன ஆகிறது மனிதனுக்கு பாஷையே இல்லாமலிருந்தாலும் பாஷை உண்டாகிறது. மனிதனுக்கு நாதமே இல்லாமலிருந் தாலும் சங்கீதம் உண்டாகிறது. அப்படித்தான் தியாகையர் கீர்த்தனங்கள் பாடினார் தமிழ்நாட்டிலிருந்து. அவர் தமிழ் நாட்டிலிருந்தாலும் தோன்றி அப்படியே பக்தி பெருகியதும் மொழியும், பாட்டும், சங்கீதமும் ஒன்று சேர்ந்து ஒருவரே சங்கீதமும், சாகித்யமும் செய்தார். தானாகவே உண்டாயிற்று அந்த சங்கீதம். 4, 5 பேர் சேர்ந்து கொல்லத்து மேஸ்திரி, வீடு கட்டுவதுபோல், நீ செங்கல் கொண்டுவா, நீ சுண்ணாம்பு கொண்டுவா, ஓடு ரயிலில் வருகிறது. நான் எல்லாம் சேர்த்து வீடு கட்டுகிறேன் என்று சொல்வதுபோல் இல்லை. ஆனால்

தியாகய்யர் செய்த கீர்த்தனங்கள் அப்படியே அவர் ஆனந்தத்திலிருந்து உண்டாயின. அப்படி உண்டாகும்படியான நிலைமையில் நாமில்லை என்று நினைத்துக்கொள்ளக்கூடாது. தியாகையருக்கு முந்தி சங்கிதமே இல்லையா? உலகத்தில் எவ்வளவோ பல்லாயிர வருஷம் கழிந்த பிற்பாடும் இருக்கும். புதிதாக உண்டாக்கக் கூடியவர்கள் வருவார்கள்; அதற்கு நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கவேண்டும் அதுவரையில் வேறு ஒன்றும் வேண்டாமென்று சொல்லக்கூடாது. தியாகையர் தமிழில் பாடுவதற்குப் பதில் தெலுங்கில் பாடினுர். அது ஒன்றே போதும் இந்த இயக்கத்திற்கு ஆதரவு. தமிழ்நாட்டிலேயே பிறந்து தமிழ் நாட்டிலேயே வளர்ந்து தமிழ் தேசத்திலேயே அவர் புகழ் பெற்றவர். தெலுங்கரில்லை அவர்; வடக்கிலிருந்து வந்தவரில்லை, அவர் இந்த தேசத்தில் பாட்டு செய்தார். மொழியும், சங்கீதமும் கூட சேர்ந்து வந்தது, அவர் ஹிருதயத்திலிருந்து. வேறு ருசிக்குப் பாடியதில்லை. கடவுளுக்குப் பாடியதிது. அந்தக் கடவுளுக்கு எல்லா பாஷையும் தெரியும். அவரையாரும் வற்புறுத்தவில்லை. இதில் பாடு, அதில் பாடு என்று சொல்லவில்லை ஏன் தெலுங்கில் பாடினுர். தெலுங்கு நல்லதென்று அதில் அவர் பாடவில்லை. தெலுங்கு தாய் பாஷையானதால் அவர் அதில் பாடினுர். நாமும் நம் தாய் பாஷையில் பாடினுல்தான் நம் ஆத்மாவுக்கும் திருப்தி கிடைக்கும், கடவுளுக்கும் காது கேட்கும். (கைதட்டல்)

யாராவது ஒருவர் இப்பொழுது காதலில் விழுந்தோமென்று வைத்துக்கெள்ளுங்கள். நான்தான் காதலில் விழுந்தேனென்று வைத்துக் கொள்ளுங்கள். வயது 80 என்று வைத்துக்கொள்ளுங்கள். காதல் கடிதம் எழுதவேண்டுமென்ருல் நான் நல்ல இங்கிலீஷ் தெரிந்த ஒரு ஆளிடம் போய் நீ இங்கிலீஷ் லவ்-லெட்டர் (love letter) ஒன்று எழுதிக்கொடு. நான் என் காதலிக்கு அனுப்பவேண்டும். என்னுல் எழுத முடியாது. நீ எழுதித்தா. அதை நான் அனுப்பி காதலை வளர்த்து ஜயிக்க வேண்டும் என்ருல், அது முடியாது. இங்லீஷ் லவ்-லெட்டர் வாங்கி நான் அனுப்பினுல் எவ்வளவு சிரிப்பாயிருக்கும். இராமனுக்கு அல்லது கிருஷ்ணனுக்கு நான் லவ்-லெட்டர் அனுப்பவேண்டுமானுல் என் தாய்பாஷையில் எனக்குத் தோன்றிய முறையில் எழுதி, என் அன்புக்குத் தோன்றியபடி நான் பாடவேண்டுமே தவிர இதற்காக மிக நல்ல சங்கீதம் என்று எடுத்து அதை நான் பாடினுல் என்ன உணர்ச்சி எனக்கு உண்டாகும்? எனக்கு உண்டாகாவிட்டால், கடவுளுக்கும் உண்

டாகாது. நிச்சயம், (கைதட்டல்). இதுதான் இந்த இயக்கத்தின் தத்துவம். 10 பேர் மட்டும் கேட்டால் போதாது. கோடிக் கணக்கான ஜனங்கள் கேட்டு சந்தோஷிக்க வேண்டிய விஷயம். எல்லோருக்கும் தெரிந்த பாஷையில் பாடலாம். மேலும், தமிழிசைக்கு இது முதல் மகாநாடு. நம்மில் விட்டுப்போன தெய்வத்திற்கு முதல் தேங்காய் உடைத்தால்தான் அது வரும் என்பது நம்பிக்கை. அந்தமாதிரி விட்டுப்போன தமிழிசைக்கு முதல் தேங்காய் உடைப்பதற்கு ஆட்சேபிக்காமல் எல்லோரும் ஆதரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். (கைதட்டல்)

'குமரன்' ஆசிரியர் திரு சொ. முருகப்பா

தலைவரவர்களே, அன்பர்களே !

தமிழ் நாட்டிலே தமிழிசை இயக்கம் தழைத்து வளரவேண்டும். சங்கீத வித்வான்களிடம் என்ன கேட்கிறோம்? நீங்களும் நாங்களும் தமிழர்கள். தமிழர்கள் முன், தமிழ்ப்பாட்டு தயவுசெய்து பாடவேண்டும்' என்கிறோம். அதற்குப் பிச்சையா கேட்க வேண்டுமென்று நான் கேட்கிறேன். பாடவேண்டுமென்று சொல்ல நமக்கு உரிமையிருக்கிறது. பாடவும் கடமை அவர்களுக்கு இருக்கிறது. அதுதான் இப்பொழுது சொல்லும் விஷயம். இதைக் கொஞ்சம் மெதுவாகச் சொல்லலாம். பல விஷயங்களில் கலந்து சொல்லலாம். மிக நயமாகச் சொல்லலாம். ஆவேசமாகச் சொல்லலாம். எப்படிச் சொன்னாலும் விஷயம் என்ன? தமிழ்ப் பாட்டுத்தான் தமிழ்நாட்டு ஜனங்களுக்கு அர்த்தமாகும். தமிழ்ப் பாட்டுத்தான் கேட்க விரும்புகிறார்கள். அதற்கு இப்பொழுது பஞ்சம் வந்திருக்கிறது. அந்தப் பஞ்சம் நீங்கவேண்டும். தெலுங்கில் நமக்கு துவேஷமில்லை. தெலுங்கு மட்டுமில்லை. ஹிந்தியில் துவேஷமில்லை. குஜராத்தி பாஷையில் துவேஷமில்லை. வங்காளி பாஷையில் துவேஷமில்லை. தமிழை வங்காள தேசத்தில் போய்ப் பாடு என்று சொன்னோமா ? குஜராத்தியில் போய்ப் பாடு என்று சொன்னோமா? தெலுங்கு நாட்டில் போய்ப் பாடச் சொல்லுகிறோமா? எங்கள் தமிழ் நாட்டில் தமிழ் மக்களிடத்தில் தமிழ்ப்பாட்டைப்பாடு என்று சொல்லுகிறோம். வங்காளத்திலிருந்து வருபவரை தமிழில் பாடச் சொல்லவுமில்லை. தமிழருக்கு முன், தமிழ் நாட்டில், தமிழில் பாடச் சொல்லுகிறோம். எவ்வளவு சுற்றிச் சுற்றி வந்தாலும் விஷயம் ''தமிழ் வேண்டும்.'' அவ்வளவுதான். இதை நமக்கு எவ்வளவு தூரம் சொல்ல முடிகிறதோ,

சொல்லச் சந்தர்ப்பம் எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவு சொல்ல லாம். வெகுகாலம் விட்டுப்போனதை இழுத்துப் பிடிப்பதாய் இருப்பதால் பல்லைக் காட்டிப் பேசுகிறோம். தமிழிசை வரத் தான் போகிறது. அதற்குக் கொஞ்சமும் சந்தேகமில்லை.

தமிழிலேயேதான் சங்கீதம் பாடவேண்டும் என்பதை அனுப வத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்பதுதான் இப்பொழுது கேட்கிறது. இதற்கு அநேக குறுக்குச் சொல். இதைச் சேர்ந்தது, அதைச் சேர்ந்தது அந்தக் கட்சி, இந்தக் கட்சி என்று கலக மூட்டி விடுகிறார்கள். ஒரு வித்தியாசமும் இல்லை என்பது மிகத் தெளிவுபட நமக்குத் தெரிந்திருக்கிறது. அரசியல் வித்தி யாசமோ அல்லது சமூக வித்தியாசமோ ஒன்றும் கிடையாது. தமிழ் நாட்டுக்குத் தமிழ். மற்ற நாட்டுக்கு மற்ற பாஷை என்ற அளவில்தான் இந்த இயக்கம்போய்க் கொண்டிருக்கிறது. எத்தனையோ முறை சொல்லி, எழுதியாகிவிட்டது. அப்படியிருந் தும் இந்தப் பேச்சுக்கு இன்னும் இடமிருக்க வேண்டிய அவசியம் ஒன்றுமில்லை. இன்னொன்று, கர்னாடக சங்கீதத்திற்கு மூலகர்த்தர் களாக தியாகையர், தீக்ஷிதர், சாமா சாஸ்திரிகள் இவர்களைச் சொன்னார்கள். அவர்கள் பக்தி பரவசத்தினால் பாடியதாகச் சொன்னார்கள். பக்தியில்லாமல் சங்கீதக்கச்சேரி பண்ண முடியா தென்றும் சொன்னார்கள். பக்தியிருந்தால் ஆட்சேபணையில்லை. தற்காலத்தில் சங்கீதம் பல வழிகளிலும் அதிகமாகப் பரவி வருகிறதே. அவர்களைப் போன்ற பக்திக்காகப் பரவுகிறதா? என்று கேட்க ஆசைப் படுகிறேன். ரேடியோவைத் திறந்தால் பாட்டு வருகிறது. அது தியாகையர் பக்திக்காகவோ, மற்ற எவர் பக்திக்காகவோ, சொல்லும் – அந்த பக்தி பரவசத்தில் வரவில்லையென்று ஞாபகப்படுத்துகிறேன்.

தியாகையரின் மேன்மையான பதவிக்கு மற்ற தமிழ் நாட்டிலிருந்த புலவர்கள், முத்துத்தாண்டவர் போன்றவர்கள், சம்பந்தமூர்த்தி சுவாமிகள் போன்றவர்கள் குறைந்தவர்களா? மேம்பட்டவர்களா? என்ற ஆராய்ச்சிக்கு வரவில்லை. ஆனால் தேவாரம், திருவாய்மொழி, திருவாசகம் இவைகள் எல்லாம் துக்கடா என்று நாட்டில் பாடப்பட்டு வந்தன. சில்லறை என்று சொல்லப்பட்டன என்பதை ஞாபகப் படுத்துகிறேன். வேறு பாஷைக் கீர்த்தனங்கள் முழு ரூபாய்கள் போலும்! தமிழிலும் சில முழு ரூபாய்கள் — நல்ல கீர்த்தனங்கள் — இருக்கின்றன. கச்சேரி செய்யவேண்டுமென்றால் கொஞ்சம் இந்த முழுரூபாய்களை

முதலில் வெளியில் எடுங்கள். ஒன்றும் முழுகிப்போகாது என்று சொல்லுகிறோம். இந்த தேசத்தில் இந்த இயக்கமே இருப்பதற்கு இடமில்லையென்று சொல்லுகிறேன். இந்த இயக்கத்தின் நோக்கம் தமிழ் நாட்டில், தமிழ்ப்பாட்டு பாடவேண்டும் என்பதுதான். இதில் வேறு ஒன்றுமில்லை, யார் என்ன நினைத்தாலும். இதை எல்லா இடங்களிலும் நாம்பார்த்து வருகிறோம்.

புரொபசர் பி. சாம்பமூர்த்தி அய்யர்

பெரியார்கள் பலர் பேசிவிட்டார்கள். இனி இந்த விஷயமாக விவாதம் இராதென்று நம்புகிறேன். தமிழ் நாட்டில் தமிழில் பாடுவதே சிலாக்யமானது. தமிழிசை இயக்கத்தை யாவரும் ஆதரிக்கவேண்டும்.

நகைச்சுவை அரசு என். எஸ். கிருஷ்ணன்

தமிழிசையை ஆதரித்து ஒரு கதையும் பாட்டும் கூறி மேலும் பேசுகையில் கூறியதாவது :— இந்தப் பாட்டைக் கேட்டு நீங்கள் எவ்வளவு சந்தோஷமடைந்தீர்கள். பாடிய நானும் எவ்வளவு சந்தோஷமடைந்தேன். அதற்குக் காரணம் என்ன? நான் சொன்ன ஒவ்வொரு எழுத்தும் உங்களுக்குத் தெரிந்ததினுலேதான். (கைதட்டல்) அதே பாட்டை உங்களுக்குத் தெரியாத ஒரு பாஷையில் நான் இங்கு சொல்லியிருந்தால் நீங்கள் இவ்வளவு சிறந்த ஆனந்தம் அடைந்திருக்க முடியுமா? முடியவே முடியாது. ஆகையினுலேதான் இந்தப் பாட்டைப் பாடினேன். நமக்குத் தெரிந்த பாஷையிலே பாட்டுகளைப் பாடினுல் நல்லது என்பதை நீங்கள் இப்பொழுது உணர்ந்து கொண்டீர்கள். தமிழ்ப் பாட்டு சங்கீதக் கச்சேரிகளில் அவசியம் வேண்டும் என்பதற்கு இது ஒரு அத்தாட்சி. பத்துப் பாட்டு பாடுவதில் ஒரு பாட்டாவது நகைச்சுவையோடும், நமக்குத் தெரிந்த பாஷையில் நல்ல அனுபவிக்கும் வகையிலும் இருந்தால் அதைக்கேட்டு சந்தோஷம் அடைவோமா? இல்லையா? அதற்காகத்தான் நமது தமிழ்க்கச்சேரிகளில் தமிழ் சங்கீதம் வேண்டுமென்று நானும் வற்புறுத்தி சொல்லிக்கொண்டு என் பிரசங்கத்தை முடித்துக் கொள்ளுகிறேன்.

திருமதி மீனும்பாள் சிவராஜ்

சகோதர, சகோதரிகளே,

இந்த இசை தென்னுட்டில் மிகவும் முதன்மை பெற்றிருந்தது. அக்காலத்தில் தென்னுட்டு மன்னர்கள் இசையை தெய்வமாகக் கொண்டு இருந்தார்கள் என்பதை நிருபிக்க அநேக அத்தாட்சிகள் இருக்கின்றன. ஆனுல் தற்காலம் தமிழர்களாகிய நாம் தமிழின் பெருமையை அறியாமலிருக்கிருேம். அப்பெருமையை விளக்க வேண்டியே இந்த மகாநாட்டைக் கூட்டியிருக்கிருர்கள். நாம் படிப்படியாக இசைக் கலையை மிகவும் கவுரவமாக வாழச்செய்ய இது ஒரு படியாக இருக்கிறது. இந்த ''ழ'' என்று சொல்லும் எழுத்தானது நம் தமிழ் மொழியைத் தவிர வேறு மொழியில் இல்லே. ஆகையினுல் யாழ், குழல் என்பவை வேறு அத்தாட்சி யில்லாமல் நம்மவர் வாத்தியங்கள் என்பது சுலபமாக விளங்கும். நம் தமிழ் இயல், இசை நாடகம் என்று அமைந்திருக்கும் முறையைக் கொண்டு, நம் தமிழின் பெருமை ஒரு காலத்தில் எவ்வளவு உன்னத நிலேமையிலிருந்தது என்பதையும், தமிழர் களாகிய நாம் இப்பொழுது எவ்வளவு கீழ்த்தர நிலேமையில் இருக்கிருேம் என்பதையும் கவனிக்கக் கோருகிறேன். 2000, 3000 வருஷங்களுக்கு முன் தமிழிசை அதி உன்னதமாக இருந்தது. தமிழ் என்ருலே, அதன் அர்த்தம், ''இனிமை'' என்பதாகும் உலகம் முழுதும் பரவியிருந்த தமிழ்மொழியை நசித்துப்போகாமல் செய்ய, வேண்டிய அளவுக்கு நம்மாலான கடமையைச் செய்ய வேண்டுமென்று தமிழ் மக்களாகிய ஆண், பெண் இருபாலாரையும் வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி

பெரியோர்களே,

நாளேயதினத்திலிருந்து இங்கு, தமிழிசை பொழியப் போகிறது. இன்று வெறும் பேச்சுத்தான். இந்தப் பேச்சுக் கச்சேரியையே இவ்வளவு தூரம் நீங்கள் கேட்டு கைதட்டல் செய்து எங்களே உற்சாகப் படுத்துகையில், நாளே முதல் சங்கீத வித்வான்களுக்கும் கைதட்டல் செய்து, உற்சாகப்படுத்தித் தமிழிசை அபிமானத்தைக் காட்டுவீர்கள் என்று நம்புகிறேன். நீங்கள் இவ்வளவு உற்சாகத் தைக் காட்டுவதைப் பார்க்கும்போது நம் தமிழ்த்தாய் அடைந் திருக்கும் புதிய வெற்றியை நினேத்து எனக்குப் பெருமை

உண்டாகிறது. (கைதட்டல்). சென்ற இருபது வருஷ காலத்தில் மூன்று யுத்தகாண்டங்களில் தமிழ்த்தாய் வெற்றிபெற்று வெற்றி மாலை சூடியிருக்கிருள். நான் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தபோது பெரிய பெரிய தமிழர் பொதுக்கூட்டங்களில் அரசியல் விஷயங்களையெல்லாம் இங்கிலீஷில்தான் தலைவர்கள் பேசுவார்கள். நம்மைப்போல் குறும்புக்காரர்கள் சிலர் அங்கிருந்தால் ' தமிழ், தமிழ் '' என்று கத்துவார்கள். அப்பொழுது பிரசங்கி '' எனக்குத் தமிழ் அவ்வளவு பேசவராது. தெரிந்ததைப் பேசுகிறேன் '' என்று ஆரம்பிப்பார். பிறகு நன்ருய்த்தான் பேசுவார் இப்பொழுது அரசியல் விஷயத்தைப் பற்றித் தமிழ் நாட்டில் பேசுவதற்குத் தமிழ்தான் சரியான பாஷை என்று ஏற்பட்டுவிட்டது. அரசியலைப்பற்றித் தமிழில் சொல்ல முடியாத விஷயங்கள் இல்லையென்று ஏற்பட்டுவிட்டது. தமிழ் என்ருலே அரசியல், அரசியல் என்ருலே தமிழ் என்று நேற்று ஏற்பட்டுவிட்டது. போனவருஷமெல்லாம் சங்கீதத்தில் தமிழைச் சேர்க்கக் கூடாதென்று சொன்னுர்கள். இந்த வருஷம் சங்கீதத்தில் அரசியலைச் சேர்க்கக் கூடாதென்று சொல்லுகிருர்கள். அதாவது தமிழுக்குப் பதில் அரசியலைச் சொல்லுகிருர்கள். அதாவது தமிழ் அரசியலாகப் போய்விட்டது.

சகோதரர்களே ! அரசியல் விஷயம் இப்படியிருக்க, இரண்டாவது, பள்ளிக்கூடங்களில் அப்பொழுது விஞ்ஞானம் முதலிய விஷயங்களையெல்லாம் இங்கிலீஷில்தான் சொல்லிக் கொடுப்பார்கள். ஆனுல் இப்பொழுது சொல்லுகிருர்கள், தமிழில் சொல்லிக் கொடுக்கவேண்டுமென்று. உபாத்தியாயர்களே மகா நாடுகள் கூட்டி விஞ்ஞானம் முதலியவைகளைத் தமிழில் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று தீர்மானம் செய்கிருர்கள். இந்த இரண்டாவது யுத்தத்தில்–சாஸ்திரங்களை. சயன்ஸ் முதலியவைகளையெல்லாம் தமிழில் சொல்லிக் கொடுக்கலாம் என்ற யுத்தத்தில்—வெற்றியடைந்தோம்.

தத்துவ சாஸ்திரங்களைப் பற்றிக்கூட இங்கிலீஷில்தான் சொல்லமுடியும் என்று சொன்னுர்கள். நமது தத்துவ சாஸ்திர ஆசிரியர் சர். எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள், தத்துவ சாஸ்திரத்தைப்பற்றி பெரிய புஸ்தகங்கள் இங்கிலீஷில் எழுதினர் கணக்கின்றி எழுதினர். பிரமாதமாக வாயைத் திறந்துகொண்டு சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஒரு இங்கிலீஷ் பத்திரிகைக்காரர் கிளம்பினர்: இராதாகிருஷ்ணன் என்னவோ

எழுதியிருக்கிறார். இங்கிலீஷ் ஒரே அபத்தம் என்று சொன்னார். அதைக்கேட்டவுடன் நமக்கு வியப்பாய்ப் போய்விட்டது. இராதாகிருஷ்ணனைப் போன்ற வைஸ்சான்சலருடைய இங்கிலீஷ் அபத்தமென்றால், நாம் இங்கிலீஷ் படித்துத்தான் என்ன பிரயோஜனம்? ஏதேது, சொந்த பாஷைக்குப் போக வேண்டியதுதானே? என்று ஒரு உணர்ச்சி உண்டாகிவிட்டது. உபாத்தியாயர்களெல்லாம் தமிழிலேயே எல்லாவற்றையும் சொல்லிக் கொடுக்கிறோமென்று ஆரம்பித்துவிட்டார்கள்.

இப்பொழுது மூன்றாவது வெற்றிக்கு யுத்த அரங்கத்தில் வந்து நிற்கிறாள் தமிழ்த்தாய். இங்குக் கூடியிருக்கும் கூட்டத்திலிருந்தே அது நன்றாகத் தெரிகிறது. அதிலும், என் எஸ். கிருஷ்ணன் பேசிவிட்டு உட்கார்ந்த பிறகுகூட, நின்று கொண்டிருக்கிறதைப் பார்க்க தமிழிசையைப் பற்றி எவ்வளவு ஊக்கமிருக்கிறது என்பதைப்பற்றி அதைரியப்படவேண்டாம். இதே மண்டபத்தில் மூன்று மாதத்திற்கு முன் ஒரு கூட்டம் நடந்தது. அப்பொழுது என் சகபாடியான ஒரு பெரிய பத்திராதிபர், தமிழில் பாடி சங்கீதத்தின் தரத்தைக் குறைத்து விடாதீர்கள் என்று சொன்னார். இதே இடத்தில் ஒரு கச்சேரியில் ஒரு பாகவதர் தெலுங்கில் மள மளவென்று பாடிக்கொண்டே வந்தார். ஆயிற்று, தமிழ்ப் பாட்டைப் பாடினார். பாடியவுடன் கைதட்டல் செய்து ஆரவாரித்தார்கள் ஜனங்கள். நானே, இங்கேயே பார்த்தேன். அதாவது "ஆடும் தெய்வம்" என்னும் தமிழ்ப் பாட்டுக்கும் 'இனி ஒருகணம்" என்னும் தமிழ்ப் பாட்டுக்கும்தான் கைதட்டல் கிடைத்தது. ஆகையினால் நான் நிச்சயமாகத் தெரிந்து கொண்டேன், தமிழில் பாடினால் தரம் குறையாது என்று. சென்ற 35 வருஷங்களில் எத்தனையோ நூற்றுக்கணக்கான கச்சேரிகள் கேட்டேன். தமிழில் பாடியதால் கெட்டுவிட்டது, தெலுங்கில் பாடியதால் கெடவில்லையென்று கேள்விப்பட்டதில்லை. பாடுகிறவர் சரியாகப் பாடினார் நன்றாக இருந்தது, நன்றாகப் பாடவில்லை கெட்டுவிட்டது என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறோம். இந்த இரண்டு வருஷத்தில் பெரும்பாலும் தமிழில் பாடும் கச்சேரிகள் மிக நன்றாயிருந்து வருவதைப் பார்க்கிறோம்.

இப்பொழுது இரண்டு வருஷமாக, சுவாதித்திருநாள் என்ற புதிய ராஜகுலத்தைச்சேர்ந்தவர் பாடியதை மெட்டுகள் போட்டுப் பாடுகிறார்கள். அவர்களெல்லாம் வந்ததனால், மற்றவர்கள் வந்ததனால், சங்கீதத்தின் தரம் கெட்டுப் போகவில்லை. முத்துத்

தாண்டவர் பாட்டைக் கேட்டால் மட்டம், கோபாலகிருஷ்ண பாரதி பாடல்களைக் கேட்டால் கெட்டுவிடும், அருணாசலக் கவிராயர் பாட்டைப் பாடினால் கெட்டுவிடும் என்று சொல்லுவ தெல்லாம் அபத்தம் என்பதை எல்லாப் பாட்டுகளையும் கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கிறேன்.

ராஜாஜி, 'எதிர்க்காமல் மட்டும் இருந்தால் போதாது, இயக் கத்தை ஆதரிக்கவேண்டு'மென்று சொன்னார்கள். இந்த இயக் கத்தை எதிர்ப்பவர்கள், எதிர்க்காமலிருந்தாலே போதுமென்று எனக்குத் தோன்றுகிறது. அதாவது அனாவசியமான, இல்லாத காரணங்களைச் சொல்லி, எதிர்க்காமலிருந்தாலே போதும். பூராவும் ஹிந்துஸ்தானியாயிருந்தாலும் பரவாயில்லை, தமிழா யிருந்தால் கெட்டுவிடும் என்று சொல்லுவது, கோதண்டராமன் பசு நீங்கலாக மற்ற பசுக்கள் வாழட்டும் என்று கூறிய கிரகஸ்தர் கதைபோலத்தானிருக்கிறது.

தமிழை கோதண்டராமன் பசுவாகச் செய்யக்கூடாது. நம் நெல்லைத்தான் மற்ற பசுக்கள் தின்கிறதே தவிர, தமிழ்ப்பசு தமிழ் நெல்லைத்தான் தின்பேன் என்று சொல்லுகிறது. அதைக் கோதண்டராமன் பசுவாக எண்ணி அடிப்பது பாதகமென்றுதான் நினைக்கிறேன். இன்று போலவே நாளைமுதல் இங்கு வந்திருந்து பாடகர்களை உற்சாகமூட்டி, தமிழிசையை நிலைநாட்ட வேண்டு மென்று உங்களைப் பெரிதும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. டி. செங்கல்வராயன்

தலைவர்களே, அன்பர்களே!

நம் நாட்டில் அநேக மிதமான துர்பாக்கியங்களால் நாம் சங்கடப்படுகிறோம் ஏதோ ஒரு நல்ல காரியம் செய்ய வேண்டு மென்று சொன்னால் அதற்கு ஒரு சந்தேகம், அந்த சந்தேகத்திற்குப் பிறகு ஒரு ஆட்சேபணை, அந்த ஆட்சேபணைக்குப் பிறகு ஒரு எதிர்ப்பு என்று நம் நாட்டில் மிகவும் கஷ்டமாக ஏற்பட்டிருக் கிறது ஏதோ அரசியல் விஷயத்தில்தான் அம்மாதிரியிருக்கிறது என்று பார்த்தால் தமிழ் பாஷையின் அபிவிருத்திக்கு நாம் பாடு படவேண்டிய சமயம், சங்கீதம் – இசை தமிழ் பாஷையில் இருக்க வேண்டுமென்று ஒரு நல்ல புனிதமான இயக்கம் தோன்றினால் அதற்கும் ஒரு சந்தேகம், அதற்கும் ஒரு ஆக்ஷேபணை, அதற்கும் ஒரு எதிர்ப்பு என்று சொன்னால் நாம் எங்குதான் போவது என்று எனக்குத் தெரியவில்லை.

அன்பர்களே, தமிழிசை இயக்கத்திற்குக் காரணம், அதன் தத்துவம், அதன் நோக்கங்கள் எல்லாம் நன்ருக உங்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டன. முதல் முதலாக அன்பர்களே, தமிழிசை வேண்டாமென்று சொல்பவர்கள் 'சங்கீதம் பாஷைக்கு அப்பாற்பட்டது. சங்கீதம் பாஷையைக் கடந்தது. சங்கீதம் பாஷையைவிட உயர்ந்தது. சங்கீதம் பாஷையினல் கட்டுப்படாதது' என்று ஆக்ஷேபணே சொல்லுகிருர்கள். அதை நான் மனப்பூர்வமாக ஒத்துக்கொள்ளுகிறேன். அப்படி சங்கீதம் பாஷையினல் கட்டுப்படவில்லே என்ருல், சங்கீதம் பாஷைக்கு அப்பால் பட்டதென்ருல், சங்கீதம் பாஷைக்கு உயர்ந்ததென்ருல், அது எந்த பாஷையாயிருந்தா லென்ன? எப்படிக் கெட்டுவிடும் தமிழாயிருந்தால் என்பது தெரியவில்லே.

நான் கேட்ட சங்கீதங்களிலும் தமிழ் பாஷை சங்கீதம்தான் எனக்கு சங்கீதமாகத் தெரிகிறதே ஒழிய வேறு எந்த சங்கீதமும் எனக்கு அம்மாதிரி தோன்றவில்லே. தமிழரெல்லாம் ஒன்ருய்ச் சேர்ந்து தமிழ் பாஷையை வளர்க்கவும், தமிழ்க்கலே ஓங்கவும், தமிழ் நாகரிகத்தைக் காப்பாற்றவும் இந்தத் தமிழிசை இயக்கம் ஏற்பட்டிருக்கிறது. தமிழிசை வித்வான்களே வரவழைத்து அவர்கள் மரியாதை செய்யும் காலம் சீக்கிரம் வரவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனேப் பிராத்திக்கிறேன்.

திருமதி. இந்திராணி பாலசுப்பிரமணியம்

சகோதரர்களே, சகோதரிகளே!

இப்பொழுது ஒரு விவாதம். என்னவென்ருல், தமிழில் பாட்டுக்கள் உண்டா? இல்லேயா? என்று ஒரு விவாதம் - கிளர்ச்சி உண்டாகியிருக்கிறது. இசைக்குத் தமிழ் மொழிதான் உயிர் மொழியாக இருந்தது. அப்படியிருந்தும் இசைக்குத் தமிழ்மொழி ஏற்றதுதான என்கிற விவாதம் கிளம்பியது வருந்தத்தக்கது. கண்டிக்கத்தக்க விஷயமே ஆகும். ஏனென்ருல் பண்டைக் காலத்தில் இசை தமிழ் மொழியில் வெகு உயர்ந்த நிலேமையி-லிருந்தது. தமிழர் மற்றவர்களே எப்பொழுதும் போற்றிப் பெருமை கொடுத்து நம்மவரை இகழ்ந்து ஒதுக்கும் வழக்க முள்ளவர்கள்.

இசைக்கு மொழி அவசியமில்லையென்று கூறினால் எந்த நாட்டிலும் எந்த மொழியிலும் எந்தப் பாட்டுகளும் பாட மாட்டார்கள். கல்கத்தா, டெல்லி, லாகூர் போன்ற இடங்களில் ஏன் தமிழ் பாட்டுகளோ, தெலுங்குப் பாட்டுகளோ, பாடுவதில்லை? இசைக்கு மொழி அவசியமில்லையென்றால் விசாகப்பட்டணம், காகினாடா முதலிய ஆந்திர நாடுகளில் ஏன் தமிழ்ப் பாட்டுகள் பாடுவதில்லை என்று கேட்கிறேன். அந்தந்த நாடுகளில் அவரவர் தாய்மொழியில்தான் பாடல்களை இயற்றிப் பாடுகிறார்கள். தமிழிசைக்கு ஆதரவு அளிப்பதன் மூலம் தென்னாட்டு ராஜா, ராஜா சர். அண்ணாமலை செட்டியாரவர்களுக்கு, வேண்டிய உதவிகளை அளிக்கவேண்டும் அவரைப்போல் ஒவ்வொருவரும் தமிழ் முன்னேற்றத்திற்கு உழைக்கவேண்டும். நம் தமிழிசை ஓங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

'திராவிட நாடு' ஆசிரியர் சி. என். அண்ணாதுரை

தலைவரவர்களே, சகோதரர்களே,

தமிழிசைச் சங்கத்தின் சார்பில் விமரிசையாக நடத்தப்படும் இந்த மகாநாட்டில் தமிழ்ச்சுவை வாய்ந்தவர்களும், இசை நோக்கம் தெரிந்தவர்களும் தமிழிசை இயக்கத்தின் அவசியத்தைப் பற்றி மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தமிழிசை இயக்கம் எந்த அளவுக்கு ஓங்கி வளர்ந்திருக்கிறது என்பதை நீங்கள் இங்கு இந்த மகாநாட்டு மண்டபத்திலிருந்து பார்த்துத் தெரிந்துகொள்வதைவிட, வெளியிலிருந்து பார்ப்பீர்களேயானால் ஆயிரக்கணக்கான மக்கள் வெளியிலிருந்து மிக ஆனந்தமாக அனுபவித்துக்கொண்டிருப்பது நன்றாகத் தெரியும். தமிழ் நாட்டில் இந்த இயக்கம் தோன்றியிருப்பது ஒரு புதிய உணர்ச்சியின் பலனாக, தமிழிசை இயக்கத்திற்கு இருந்துவந்த சிற்சில எதிர்ப்புகள்கூட, முறிந்துபோகும் நிலையில் தமிழிசை இயக்கம் மிகவும் பண்படுத்தப்பட்டு வந்திருக்கிறது இந்த இயக்கத்திற்கு யாரோ சிலர் விரோதமாக இருப்பதாகவும் அவர்கள் சில வாதங்களை எடுத்துச் செல்லுவதாகவும் நம் அரும் பெரும் தலைவர்கள் இன்று எடுத்துரைத்து, அவைகளுக்குத்தக்க பதிலையும் சொன்னார்கள். மனித சமுதாயத்தில ஆரம்பிக்கும் எந்த முயற்சிக்கும் ஓரளவு எதிர்ப்பு இல்லாவிட்டால், அப்படிப் பட்ட முயற்சிக்கு -சங்கீதத்திற்கு சொல்லுவதுபோல்—மேளம் கட்டுவதில்லை. எதிர்ப்பு இருப்பது ஒருவிதத்தில் நம் காரியங்களைச்

செவ்வனே நடத்தி, நமது கொள்கைகளை எடுத்துச் சொல்ல நல்ல சந்தர்ப்பமளிக்கும். இந்த இயக்கம் தமிழ் நாட்டில் மிக்க வேகமாக வேலை செய்து ஒரு வருஷம் அல்லது இரண்டு வருஷத்திற்குள் தமிழ்நாடு முழுவதையுமே தன் வயப்படுத்திக் கொண்டது. ஒருவர் பேசும்போது குறிப்பிட்டார்: 'இந்த இசை இயக்கத்திற்கு விரோதமாகயிருக்கிற தமிழர்களை யெல்லாம் கூட்டி நம் கருத்துக்களைத் தெளிவாக எடுத்துரைத்து நம் பக்கத்தில் திருப்பமுடியும்' என்று. இன்று நம் தலைவர்கள் பேசியிருக்கிற அரிய உரைகளைக் கேட்ட பிறகு யாராவது தமிழிசை இயக்கத்திற்கு எதிர்ப்பாகக் காரணங்களை மீண்டும் மீண்டும் எடுத்துச் சொன்னால் அவர்கள் உண்மையிலேயே தமிழிசை இயக்கத்தை வெறுத்தவர்களல்லர். வெறுப்புக்குக் காரணம், வேறு இருக்கிறதென்ற முடிவுக்கு நாம் வரமுடியும்.

நம் தலைவர் சர் ஆர். கே. சண்முகம் செட்டியாரவர்கள் எடுத்துச் சொன்னார்கள், 'தமிழில் இசை இருக்கிறதோ இல்லையோ, அது மற்ற இசைகளுக்கு மேற்பட்டதோ, இல்லையோ கவலையில்லை. என் தமிழில் எனக்கு இசை தேவை' என்று. தமிழர் இதயத்திலிருந்து கிளம்பும் இந்த வாசகம் நிச்சயமாக சீக்கிரத்திலேயே கைகூடுமென்று நம்புகிறேன். (கைதட்டல்) மற்ற எந்த நாட்டிலும் தங்கள் மொழியில் கலைதேவை, தங்கள் மொழியில் இலக்கியம் தேவை என்று எடுத்துச் சொல்லுவதற்கு மகாநாடுகள் கூட்டப்பட வேண்டியது மிகவும் வெட்ககரமான—துக்கத்தைக் கொடுக்கும்—நிலைமை இருந்ததில்லை என்பதை எண்ணிப் பார்க்கும்போது, இத்தகைய மகாநாடுகள் கூட்டப்படுவதைப் பார்த்து மனமகிழ்ச்சி அடைவதைவிட, தமிழ் நாட்டில் தமிழ்ப் பாட்டு பாடுவதைக் கைவிட்டு, தமிழுணர்ச்சி மங்கியிருப்பதைப் பார்த்து, மிக்க கஷ்டப்படும் நிலைமையிலிருக்கிறோம். இசை மக்களுக்கு இன்பமூட்டுகிறது. இது இலக்கணமில்லை, இலக்கியமில்லை, மன அனுபவமே. வாத்திய இசை மனிதனுக்கு இன்பமூட்டுவதைவிட, ஒரு தலைவர் எடுத்துக் கூறியபடி மனிதக் குரலுடன் கலந்த கானம் நிச்சயமாக மக்களைத் தன் வயப்படுத்தும். அதிலும், நமக்குப் புரியும் பாஷையாக இருந்தால் மிகவும் நல்லது. அதற்காகத்தான் தமிழ் நாட்டில் தமிழ்கானம்—தமிழிசை, தேவை என்று எடுத்துச் சொல்லுகிறோமே தவிர வேறு அரசியல் விவகாரங்களுக்கோ அல்லது மத விவகாரங்களுக்கோ இல்லை என்பதை எடுத்துச் சொல்லுவதோடு, வேறு

மதங்களிலோ, அரசியல் கட்சிகளிலோ அவசியமில்லாமல் தலை யிடுவதற்காக ஒரு தனி இயக்கம் வேண்டியதில்லை; இத்தனை பேச்சுக்கும் அவசியமில்லை என்றும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இசை இயக்கத்தார் இந்த இயக்கத்தை வேறுகாரணங்களுக்குப் பயன்படுத்திக்கொள்ள மாட்டார்கள் என்பதை, அந்த மாதிரி சந்தேகமுள்ள தமிழர்களுக்கு வற்புறுத்த விரும்புகிறேன். இந்த இயக்கத்தைப்பற்றித் தவருக எண்ணிக்கொண்டிருப்பவர்களுக்கு, மெள்ள மெள்ள விஷயத்தைச் சொல்ல வேண்டுமென்று தான் இந்த இயக்கம் ஏற்பட்டது. இன்னும் எதிர்ப்பிருந்தால், அப்படிப்பட்ட எதிர்ப்பாளர்களுக்கு இன்றைய தினம் இந்த இசை மகாநாட்டில் நம் தலைவர்கள் சொல்லிய அரிய காரணங்கள், அருமையான ஆதாரங்கள், ஆராய்ச்சி முறைகள், அன்பு மொழிகள் இவைகள் அவர்கள் செவியில் ஏறவில்லையா என்று கேட்பது தமிழர்கள் கடமை. தமிழிசை, யாரும் எதிர்க்காமல் மறுமலர்ச்சியுடன் நறுமணத்துடன் விளங்கும் என்பதற்கு நல்ல சான்றும், தமிழருள்ளத்தில் தமிழிசை தேவை என்ற முக்கியமான உணர்ச்சி ஏற்படுவதும், அதில் பலதரப்பட்ட மக்கள் தங்கள் சொந்த அபிப்பிராயங்களைவிட்டு ஒரு நிமிஷமாவது ஒரு மணியாவது கவலையற்று ஒரே மேடையில் கூடி ஒரே விஷயத்தைப்பற்றி ஒருமித்த கருத்தைத் தெரிவிக்க வேண்டுமென்பதும் தான் என்போன்ற தமிழர்களுடைய உள்ளக்கிடக்கையாகும். இதற்குப் போஷகராகவும், இரட்சகராகவும் இருக்கிற நம் செட்டி நாட்டு அரசர் அவர்களின் பெருங்குணங்களும், இந்த மகா நாட்டுக்குத் தலைமை வகித்திருக்கும் தலைவரவர்களுடைய அருமையான கலைநுணுக்க அனுபவங்களும் தமிழரின் எதிர்காலத்திற்குப் பயன்படும் என்ற என் நம்பிக்கை உங்களில் பலருக்குத் தெரியும். ஒவ்வொரு தலைவர்களுக்குள்ளும் சிற்சில அபிப்பிராய பேதங்கள் உண்டு. இசை ஒன்றுலேயே-இசையவைப்பது-உள்ள பேதங்களையெல்லாம் போக்கி ஒன்றுக்குவது-முடியுமென்று எண்ணுகிறேன். இந்த இசை என்ற தமிழ்ச்சொல் உண்மையிலேயே இன்றைய தினம்போல் தலைவர்கள், வேறு காரியங்களில் இசையாவிட்டாலும், இந்தக் காரியத்திலாவது இசையும் வழியில் ஏற்பட்டதற்கு சந்தோஷப்படுகிறேன். தமிழிசை இயக்கம் தமிழருக்கு மிக்க பயன்பட வேண்டுமென்பதை எடுத்துச் சொல்வதுடன் நானும் என்னைச் சேர்ந்தவர்களும் வேறு விஷயங்களில், அரசியல் விவகாரங்களில் வித்தியாசமிருந்தாலும், இந்த இசை விஷயத்தில், தமிழிசை விஷயத்தில், மற்ற தலைவர்

களுடன் ஒத்துழைக்கச் சித்தமாயிருக்கிறோமென்பதை எடுத்துரைத்து முடித்துக் கொள்ளுகிறேன்.

தீர்மானங்கள்

பிறகு தலைவர் கொண்டுவந்த கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒரே மனதாக நிறைவேறின :

1. (அ) சென்னை ரேடியோ நிலையத்தில் 100-க்கு 40 விகிதம் தமிழ்ப்பாட்டும், 40 விகிதம் தெலுங்குப்பாட்டும், 20 விகிதம் இதர மொழிப் பாட்டும், பாட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று ரேடியோ அதிகாரிகளை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

(ஆ) தமிழ்நாட்டில் தமிழ் மக்களுக்கென ஏற்படுத்தப் பெற்றிருக்கும் திருச்சி ரேடியோ நிலையத்தில் பாட, எல்லா வகுப்பினருக்கும் சமமான பங்கு கொடுக்க வேண்டுமென்றும், பாடல்களில் 100-க்கு 80 விகிதம் தமிழ்ப்பாட்டுக்களையும், 20 விகிதம் இதரமொழிப் பாட்டுக்களையும் பாடும்படி ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் ரேடியோ அதிகாரிகளை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

2. (அ) தமிழ் நாட்டிலுள்ள இசைப்புலவர்கள் அனைவரும் கச்சேரிகளில் பெரும்பாலும் தமிழ்ப்பாட்டுக்களே பாடவேண்டும் ; அதனோடு, ஆரம்பத்திலும் கடைசியிலும் அவசியம் தமிழ்ப் பாட்டுக்களையே பாடவேண்டும் என இசைவாணர்களை இம்மாநாடு வேண்டிக் கொள்கிறது.

(ஆ) தமிழ் இசை இயக்கத்தை ஆதரிக்கும் இசைவாணர்களை மிகுதியும் போற்றி ஆதரிக்க வேண்டுமென்று தமிழ் நாட்டிலுள்ள தமிழ் மக்கள் அனைவரையும் இம்மாநாடு வேண்டிக் கொள்ளுகிறது.

3. தமிழ் நாட்டில் தமிழருக்காக நடைபெறுகிற கச்சேரிகளில் எல்லாம் பெரும்பாலும் தமிழ்ப் பாடல்களையே பாடச் செய்ய வேண்டுமென்று தமிழ் நாட்டிலுள்ள எல்லா சங்கித சபைகளையும் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

4. சென்னைப் பல்கலைக்கழக இசை இலாகாவில் 100-க்கு 40 பங்கு தமிழுக்கும், 60 பங்கு இதரமொழிகளுக்கும் இடமளிக்க வேண்டுமென ஷ்டி பல்கலைக் கழகத்தினரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

தலைவர் முடிவுரை :

தமிழிசை விஷயமாக இதுவரை பலர் பேசியதைக் கேட்டீர்கள். அதிலிருந்து தமிழின் பெருமையை அறிந்திருக்கலாம். ஒருவருடைய அன்பும், ஆனந்தமும் எல்லாம் தமிழ்மூலமாக, தாய் மொழிமூலமாக, இசையைக் கேட்கும்போது தான் ஏற்படுகிறது. சங்கீதமானது அப்பொழுதுதான் நம்முடைய இதயத்தைத் தொடுகிறது. இதரபாஷைகளின் மூலமாக சங்கீதத்தைக் கேட்கும்போது அதைநாம் உணரமுடிவதில்லை. அனுபவிக்க முடிவதில்லை என்பதாக எல்லோரும் சொல்லிவிட்டார்கள். அது மாத்திரமில்லை. எவ்வளவோ பத்திரிகைகளில் நாம் இந்த உண்மையைப் பலபேர்கள் எடுத்து எழுதுவதைப் பார்த்திருக் கிறோம் இப்படிப்பட்ட ஒரு நல்ல நாளைக்கொண்டாடுவதற்காக நம்பெரியார்கள் எடுத்துக்கொண்ட முயற்சியை இன்னதென்று சொல்ல முடியாது. ராஜா சர் அண்ணாமலை செட்டியாரவர்கள், சர். ஆர். கே. சண்முகம் செட்டியாரவர்கள், இன்னமும் எத்தனையோ பேர் அதனிடத்தில் ஈடுபட்டு உற்சாகமாக வேலை செய்வதைப் பார்த்தால், அது ஏதோ தெய்வத்திற்கு செய்கிற ஒரு தொண்டாக இருக்கிறதேயொழிய, ஒரு சாமான்யமான, மொழிக் குச் செய்யும் தொண்டென்று சொல்லமுடியாது. இப்படிப்பட்ட ஒரு பெரிய சபையில், இப்படிப்பட்ட ஒரு பெரிய கூட்டத்தில் என்னைக் கலந்துகொள்ளும்படி அன்பர்களெல்லாம் கேட்டுக் கொண்டதுதான் விசித்திரம். இப்படிப்பட்ட பதவியை ராஜாக்கள் இருந்து நடத்த வேண்டியது. இந்தப் பதவிக்கு என்னை இவர்கள் அன்பு காரணமாக வைத்தார்கள். அதற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் செலுத்திக்கொள்ளுகிறேன். மேலும், இந்த புஷ்பஹாரம், நான் தலை தூக்காதபடிக்கு இவர்கள் போட்டுவிட்டார்கள். இப்படியெல்லாம் என்னை கவுரவப்படுத்திய பெரியார்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வித்வான் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை

தலைவரவர்களே, பெரியோர்களே !

வரவேற்புக் கழகத்தார் மகாநாட்டை 8½ மணிக்கு முன் பாகவே முடிக்கவேண்டுமென்று எண்ணினார்கள். அந்த முயற்சி யிலும் வென்றுவிட்டதற்காக நாங்கள் மிகவும் மகிழ்கிறோம். எங்கு பார்த்தாலும் தெருவிலே பழுப்படிப்பும், இருட்டடிப்பும்

தான் இருக்கிறது. பல மூலைகளிலிருந்து வரும் நீங்களெல்லாம் இரவில் சீக்கிரம் வீடு சேரவேண்டுமென்பது இந்த இசைச் சங்கத் தாருடைய பெரிய விருப்பம். அதுபற்றியே விரைந்து முடிக்க வேண்டுமென்று எல்லா நிகழ்ச்சியையும் நெருக்கி முடித்து விட்டார்கள். இந்த இருட்டடிப்பு நமக்கு ஒரு எண்ணத்தை நினைப்பூட்டுகிறது. சென்னைமாநகரம் இருண்ட நகரம் என்று நாம் சொல்லுவதுண்டு. இல்லாமல் போனால் நம் இராவ்பகதூர் அவர்கள் சொல்லியதுபோல் தமிழ் நாட்டிலேயே தமிழில் பாட வேண்டுமென்னும் ஒரு வெட்ககரமான முயற்சி இருக்கவேண்டுமா? நமக்கு இல்லை. எதிர்க்கிறவர்களுக்கு ஒன்று நான் சொல்லவேண்டி யிருக்கிறது. இந்த முயற்சியை பலரும் எதிர்த்து வருகிறார்கள். ஆனால் நம் இயக்கம் வேரூன்றி வளர்ந்துள்ளது என்பதையே அது காட்டுகிறது. இந்த இயக்கத்திற்கு வலிவு இல்லையானால் ஏளனம் செய்துவிட்டு அப்படியே போவார்கள். எப்பொழுது ஒரு இயக்கத்திற்கு எதிர்ப்பு வரும்? அது வேரூன்றி வளர்ந்து ஆக்கமுற்று பரந்துவரும் சமயம்தான். ஒவ்வொரு எதிர்ப்புக் கூட்டத்திலும் பல பட்டங்கள் பெற்றவர்கள், பல கலைகள் வாய்ந்தவர்கள் வந்து பேசுகிறார்கள். ஆனால் நம் இயக்கத்தில் இங்கு பேசிய பலர் சொல்லியபடி, பட்டம் ஏற ஏற. அவர்கள் பதவி ஏற ஏற, அவர்கள் எதிர்ப்புக்கு சொல்லும் காரணங்கள் குறைந்துதான் வருகின்றன. அதைப்பற்றி அலசிப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை இன்று கூடிய இந்த மகாநாட்டை அவர்கள்—எதிர்ப்பாளர்கள்– பார்த்தால் உண்மை அவர்களுக்குத் தெரியவரும். இனி இதை எதிர்ப்பதால் பலனில்லை என்பதை அவர்கள் உணருவார்கள். ஆகவே இப்படிப்பட்ட ஒரு பெரிய வெற்றியை இன்று திரளாகக் கூடி தமிழிசைக்கும், தமிழிசைச் சங்கத்திற்கும் தேடிக்கொடுத்த உங்களுக்கு முதலில் நன்றி உரியதாகுக!

இந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து நடத்திக்கொடுத்த திருவாளர் சிதம்பரநாத முதலியாரவர்களுக்கு நாம் என்ன கைம்மாறு செய்யப்போகிறோம்? அவருக்கு உடல் நலமில்லாத போதும் தமிழிசையிலிருக்கும் ஒரு ஈடுபாட்டால் இங்கு வந்து நம்மோடு சேர்ந்து இதனை இவ்வளவு இன்பகரமாகவும், வெற்றிகர மாகவும், நடத்திக்கொடுத்திருக்கிறார்கள். அவருக்கு இந்த இசை-தமிழிசை இயக்கமானது வெற்றியடைகிற காட்சியைக் காண, ஆண்டவன் நீண்ட ஆயுளை அளிக்கவேண்டும். அந்தநாள் வரையில் நம்மோடு இருந்து, எதிர்ப்பாளர் ஒருவருமில்லாமல் எல்லோரும்

தமிழிசையில் ஈடுபடும் காட்சியை, அவரோடு நாமுமிருந்து காண்போமாக !

இன்று இந்த மாநாட்டைத் திறந்துகொடுப்பதற்கு இசைந்த செட்டிநாட்டு அரசருக்கு என்ன கைம்மாறு இந்தத் தமிழ்நாடு செய்யப்போகிறது ? தமிழிசை மங்கிப் போய்க்கிடந்த நாளில் தமிழ் பாடல்கள் எல்லாம் செல்லரித்து மழுங்கியிருந்த காலத்தில் அவற்றை உயிர்ப்பித்து, எப்படிப் பாடவேண்டுமென்று பழைய முறைகளையும் அரிய பெரிய அறிஞர்களைக்கொண்டு உணர்த்திய இந்தப் பெருந்தகையாருக்கு என்ன கைம்மாறு இந்தத் தமிழ்நாடு செய்யக்கூடும் ? அவர்களைப் போன்றவர்கள் இந்தத் தமிழிசை இயக்கத்தில் ஈடுபட்டிருப்பதால்தான் இந்த இயக்கமானது இயவ்வளவு வெற்றியை அடைந்துள்ளதென்னலாம். அவர்களுக்கு இதனுல் பெரிய பெருமை ஒன்றும் வரப்போவதில்லை. தமிழ் மொழி பண்டைய நிலைமையை அடையவேண்டுமென்ற ஊக்கமே அவரை ஊக்குவித்தது. அவருடன் பேசியபோதெல்லாம் மனம் ஆழ்ந்து, மனம் உருகி, இந்த இசை இயக்கமானது எப்பொழுது வெற்றிபெறும்? பிறர் இந்த உண்மையை உள்ளவாறு அறிவது எந்நாள் ? வீணுகப் பல பல ஐயத்தை எல்லாம் எழுப்புகிறுர் களே என்று வாடியதுண்டு. எங்களுக்கு எல்லாம் எதிர்ப்பு என்ருல் ஒரு நல்ல சர்க்கரைப் பொங்கல் மாதிரி. அதற்குக் காரணம் தமிழிசை இயக்கத்தை எதிர்க்கிறவர்களும் தமிழர்கள் தானே? என்ற ஒரு அன்புதான். இப்படிப்பட்ட ஒரு பெருந்-தகையார் இன்று இந்த சங்கத்தைத்திறந்து கொடுத்திருக்கிருர். இந்தச் சங்கம் மேன்மேலும் வளர்ந்து, தமிழிசை பண்டைய பெருமையையும் கீர்த்தியையும் அடையுமென்பதில் எள்ளளவும் ஐயமில்லை இந்தப் பெரியாருக்கும் நம் நன்றி உரியதாகுக!

நம் வரவேற்புக் கழகத்தின் தலைவராயிருந்து, தம்முடைய முதிய நாளிலும் தம் நீண்ட அனுபவத்தை நமக்கு உதவி, இந்த மகாநாட்டைப் பெரிய முறையில் நடத்திவைத்த முதலியாருக்கும் நம் வந்தனம் உரியதாகுக!

மற்றைய பெரியவர்களுக்கும் எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இன்றோடு தமிழிசை இயக்கமானது தீர்ந்துபோவதில்லை. இன்றுதான் ஆரம்பவிழா செய்திருக்கிறது. நாளை முதல் இங்கு பல இசை அரங்குகள் நிகழும். அவற்றிற்கெல்லாம் நீங்கள் திரளாக வந்து இன்று உங்களின் பேரன்பைக் காட்டியதுபோல் காட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம். தமிழ்நாடு முழுவதும் இந்தத் தமிழிசை முழங்கும்படி இங்கு வந்திருப்பவர்கள் செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு என் மனமார்ந்த வந்தனத்தை எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இறுதியில், இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் தமிழ் மொழி வாழ்த்துப் பாட இரவு 8-30 மணிக்கு மகாநாடு வாழ்த்தொலியுடன் இனிது நிறைவெய்தியது.

———

மகாநாட்டிற் கலந்து கொண்டோர்

சென்னைத் தமிழிசை மகாநாட்டில் கலந்துகொண்ட பெருமக்களில் சிலர் :

இராஜா சர். அண்ணாமலைச் செட்டியார், சர் ஆர். கே. சண்முகம் செட்டியார், திவான்பகதூர் சி. எஸ் இரத்தினசபாபதி முதலியார், பி. எஸ். சாத்தப்ப செட்டியார், இராவ்பகதூர் வி. எஸ். தியாகராஜ முதலியார், எ. எம். எ. முருகப்ப செட்டியார், இராவ்சாகிப் டி. எஸ். கச்சாபிசேக முதலியார், இராவ்பகதூர் ப. சம்பந்த முதலியார், சி. இராஜகோபாலாச்சாரியார், திரு. வி. கல்யாணசுந்தர முதலியார், சர் பி. டி. ராஜன், டாக்டர் பி. சுப்பராயன், இராமநாதபுரம் ராஜா, சேத்தூர் ஜமீன்தார், இராவ்பகதூர் சி. வி. சி. டி. வெங்கடாசலம் செட்டியார், குமாரராஜா சர். முத்தையா செட்டியார், ஆர். இராமநாதன் செட்டியார், எம். எ. சிதம்பரம் செட்டியார்.

எ. தாமோதர முதலியார், டாக்டர் இ. எம். துரைசாமி, டி. எஸ். மாணிக்கம், தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், சி. செங்கல்வராயன், டாக்டர் எஸ். தருமாம்மாள் அம்மையார், டி. பி மீனாட்சிசுந்தரம் பிள்ளை, இராவ்சாகிப் எம். பாலசுப்பிரமணியம், டி.பி. மாணிக்கவாசகம் பிள்ளை, இராவ்சாகிப் டி, எஸ். நடராஜப் பிள்ளை, கே. எம். பாலசுப்பிரமணியம், பி. சுப்பையா செட்டியார், எம். எஸ். இராமசாமிச் செட்டியார், இந்திராணி பாலசுப்பிரமணியம்.

சென்னை மேயர் டாக்டர் நியமதுல்லா, கமிஷனர் ஓ. புல்லா ரெட்டி, சர். எம். வெங்கடசுப்பராவ், லேடி வெங்கடசுப்பராவ், சர். அல்லாடி. கிருஷ்ணசாமி ஐயர், எஸ். முத்தையா முதலியார், கோவை வி. சி. வெள்ளியங்கிரிக் கௌண்டர், வி. எல். எத்திராஜ், திவான்பகதூர் வி. சண்முக முதலியார், விருதுநகர் வி. வி. இராமசாமி, இராவ்பகதூர் என். சிவராஜ், இராவ்பகதூர் சி. தாதுலிங்க முதலியார், சாமி வெங்கடாசலம் செட்டியார், எம். தாமோதர நாயுடு, டபிள்யூ, எஸ். கிருஷ்ணசாமி நாயுடு,

வி. பி. நாராயண நம்பியார், டி. சண்முகம் பிள்ளை, கே. வி. கிருஷ்ணசாமி ஐயர், வி. பழநிசாமி நாயுடு, ஜலால் டி. என். கிருஷ்ணசாமி, டாகடர் எ. இலட்சுமணசாமி முதலியார், டாக்டர் பி. வி. நாராயணசாமி நாயுடு, டாக்டர் எ. கிருஷ்ணசாமி.

இலங்கை உணவு கமிஷனர் கனகரத்தினம், முசிரி சுப்பிரமணிய ஐயர், எ. வி. மெய்யப்ப செட்டியார், குமரன் சொ. முருகப்பா, கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி, திராவிடநாடு சி. என். அண்ணாதுரை, ரேடியோ டைரக்டர் எஸ். கோபாலன், இசையரசு எம். எம். தண்டாபணி தேசிகர், எம். எஸ் தேவசேனா, இசைவாணர் எம். கே. தியாகராஜ பாகவதர், இசைவாணி எம். எஸ் சுப்புலக்ஷ்மி, தி. சதாசிவம், நகைச்சுவையரசு என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், என். சி. வசந்தகோகிலம், எஸ். பி. எல். தனலக்ஷ்மி, பிருந்தா, முக்தா, பாலசரஸ்வதி, டி பி. இராமசாமி பிள்ளை, மீனாம்பாள் சிவராஜ், புரொபசர் சாம்பமூர்த்தி ஐயர், பேராசிரியர் க. பொன்னையாப் பிள்ளை, எ. ஷண்முகம், கல்வியதிகாரி என். சங்கரன், காஞ்சிபுரம் ஏ. கே. தங்கவேலு முதலியார், சாமி சண்முகானந்தர், சாமி அருணகிரிநாதர், டி. எம். பார்த்தசாரதி முதலியார், தஞ்சை இராவ்சாகிப் ஐ. குமாரசாமிப் பிள்ளை, காரைக்குடி எம். எஸ். இராமையாச் செட்டியார், க. வெ. ராம. அழகப்பா, இராஜபாளையம் பி. எஸ். குமாரசாமி ராஜா, டி. செங்கல்வராயன்.

பத்திரிகைக் கருத்துகள்

மகாநாட்டிற்கு முன்பு

தமிழிசை தழைக்க

நாட்டிற்கு ஒரு நல்ல செய்தி. சென்னையில் தொடங்கப் பெற்ற தமிழ் இசைச் சங்கம் அழுத்தமாக வேர்கொண்டு உரம் பெற்று வளரத் தொடங்கிவிட்டது. வருகின்ற டிசம்பர்த் திங்கள் கடைசிவாரத்தில் தமிழிசைச் சங்க மகாநாட்டைச் சென்னையில் சிறப்பாக நடத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என அறிந்து மகிழ்கின்ருேம்.

வேறு எந்த மொழிக்கும் இல்லாத தனிச்சிறப்பு நம் தமிழ் மொழிக்கு உண்டு. இயல் இசை நாடகம் எனப்பிரிந்து முத்தமிழ் என்னும் பெயரால் தமிழ் இயங்குகின்றது. இசையை நடு நாயகமாக வைத்துப் போற்றினர் பண்டைத் தமிழ் மக்கள். இத்தகைய நம் அருமைத் தமிழ்மொழி, இசைக்கு ஒத்து வராது; தமிழில் இசையில்லை; இசை, மொழி கடந்தது; இந்த மொழி யில்தான் பாடவேண்டும் என இசைவாணர்களை வற்புறுத்துவது கூடாது என்றெல்லாம் சிலர் கூறுகின்றனர். இது குறும்புத்தன மானது. ஏன், போக்கிரித்தனமானது என்றே கூறலாம். அவ்வாறு கூறுபவர்களை நோக்கி ஒன்று கேட்கின்ருேம். ''ஐயன்மீர்! இசைதான் மொழி கடந்ததாயிற்றே அதாவது சங்கீதத்திற்குச் சாகித்தியம் அவசிமில்லை என்று கூறுகின்றீர்ளே—நீங்கள் கூறுவதுபோல சாகித்தியம் எல்லோருக்கும் புரியும் தமிழில்தான் இருந்துவிட்டுப் போகட்டுமே. அதனல் உங்களுக்கு வந்த நட்டம் என்ன?'' இதற்கு அவர்கள் என்ன பதில் கூறுவார்கள்? தமிழிசைக் கிளர்ச்சியில், அந்த வாதம் புகுந்துவிட்டது, இந்த வாதம் புகுந்திருக்கின்றது என்றெல்லாம் அவர்கள் கூறுவது ஊரை ஏமாற்றவே தவிர வேறில்லை. எனவே தமிழ் மக்கள் இத்தகைய போலிகளின் வார்த்தைக்குச் செவி சாய்க்கலாகாது.

நாம் பலமுறை படித்துப் படித்துக் கூறி வருகின்றோம். தமிழிசைக் கிளர்ச்சி வேறு எந்த மொழியின்மீதும் இசையின் மீதும் பொறாமை கொண்டு தொடங்கப்பட்டதல்ல என்பதை வாழ்க்கையில் படும் தொல்லைகளால் தளர்வுற்ற தமிழன், சற்று நேரம் இசைகேட்டு இன்பமடைய விரும்புகின்றான். அவனுடைய ஓய்ந்த உள்ளத்திற்கு உற்சாகம் தருவது எது? அவனுக்குப் புரியாத பிறமொழி இசையில் அவன் இன்பம் அடைவானா? காதிற்கு மட்டும் அவன் இனிமையை விரும்பவில்லை. அவன் வேண்டுவது மனத்தளர்ச்சிக்கு மருந்து. அம்மருந்து எது ? அவனுக்குப் புரியக் கூடிய தாய்மொழிப் பாடல்கள் அன்றோ ! காதிற்கும் கருத்திற்கும் சேர்ந்து ஒன்றாக இன்பம் தருவது அவன் தாய்மொழியாம் தமிழ் மொழிப் பாடல்களைத் தவிர வேறு எதுவாக இருக்க முடியும் ? தமிழன் தன்மொழியில் இசை கேட்க விரும்பினால் சழக்கர்கள் வீணே சண்டித்தனம் செய்வது ஏன் ?

பல சொல்லி என் ? தமிழிசை எதிரிகள் தங்கள் தவறு உணர்ந்து தாங்களே ஒன்று திருந்த வேண்டும் ; அல்லது தமிழ் மக்கள் அவர்களை எவ்வழியிலும் திருத்த முற்படவேண்டும். இரண்டும் முடியவில்லையானால் அவர்கள் எக்கேடு கெடட்டும். அவர்களைப்பற்றிக் கவலைப்படாது தமிழர்கள் தங்கள் கடமையில் கருத்து ஊன்றுவார்களாக !

நாம் தொடக்கத்தில் குறித்தவாறு டிசம்பரில் நடக்க விருக்கும் தமிழிசை மகாநாட்டைப் போற்றி ஆதரிக்க வேண்டுவது தமிழர்களுடைய தலைசிறந்த கடமையாகும். நல்ல சமயத்தில் இக் கிளர்ச்சியைத் தொடங்கி தமிழிசைக்கு ஆக்கமளித்த பெருமை, வள்ளல் இராஜா சர் அண்ணாமலை அரசர் அவர்களுக்கு உரியதாகும் அவரால் தொடங்கப்பெற்ற தமிழ் இசைச் சங்கம் தமிழ் நாட்டிற்கும் தமிழர்கட்கும் பெரும் தொண்டுகள் செய்யப் போகின்றது. அச்சங்கம் செய்யும் தொண்டு, தமிழர்களின் ஊக்கத்தையும் உணர்ச்சியையும் பொறுத்துத்தான் இருக்கின்றது. தமிழர்கள் மனம் வைத்தால் ஆகாதது ஒன்று உண்டோ ?

இந்தச் சமயத்தில் தமிழிசைச் சங்கத்தாருக்குச் சில யோசனைகளை கூற விரும்புகின்றோம். இசை மாநாடுகள் ஒன்றிரண்டு கூட்டுதல் மட்டும் போதாது. முறையாகத் தொடர்ந்து இசை வளர்ச்சிக்கெனப் பல காரியங்களைச் செய்யவேண்டும். நாட்டின் பல பாகங்களிலும் தமிழிசைச் சங்கத்திற்குக் கிளைச் சங்கங்கள் காணவேண்டும், பெரிய மனிதர் நாலு பேர் மட்டும்

இசைச் சங்கத்திற்கு வேலை செய்தல் நல்ல பலனைத் தாராது. பெரிய மனிதர்களின் தொடர்பு அவசியமானதுதான். ஆயினும் ஆசிரியர் தொழிலாளர், உழவர் முதலிய எல்லா மக்களின் தொடர்பும் இசைச் சங்கத்திற்கு இருக்கவேண்டுவது மிக மிக இன்றியமையாததாகும் இத்தொடர்பினை, நாடெங்கும் சென்று தமிழிசையின் சிறப்பையும் அவசியத்தையும் மக்களிடை பிரசாரம் செய்வதாலேயே அடைய முடியும். இசையறிவோடு நல்ல தமிழறிவும் உடைய பலரைப் பிரசாரத்திற்கென நியமித்து நாடெங்கும் பிரசாரம் செய்யவேண்டும். தமிழிலேயே முழுமையும் பாடி இசையரங்கு நடத்தும் இசைவாணர்களை ஊக்கி உயர்த்த வேண்டும் இதுவரை அச்சில் வாராத-நாடெங்கும் சிதறிக் கிடக்கும்-தமிழிசைப் பாடல்களைத் தேடி எடுத்து விரைந்து அச்சேற்றவேண்டும். பாடல் இயற்றவல்ல பாவலர் பலர், ஆதரிப்பார் இல்லாமையாலே 'மண்ணில் மறைந்த மணி' என ஒளி குன்றிக்கிடக்கின்றனர். அவர்களுக்கெல்லாம் உற்சாக மளித்து, அவர்களை வெளியே கொண்டுவரவேண்டும். இவை போல இன்னும் செய்யவேண்டிய காரியங்கள் பல உள. இவற்றை எல்லாம் உடனுக்குடன் கால தாமதம் செய்யாது செய்துவர வேண்டும். பிறவற்றை மற்றோர் முறை குறிப்போம். இவைகளை உளங்கொண்டு உழைக்குமானால் தமிழிசைச் சங்கம் உயரும்; தமிழிசை தழைக்கும்; தமிழர் தலை நிமிர்ந்து வாழ்வர்.

—"தமிழ் உலகம்" 20-11-43.

சென்னையில் இசை முழக்கம்

'எண்சாண் உடம்புக்குத் தலைதான் முக்கியம்' என்றபடி மாகாணம் முழுமைக்கும் தலைநகரமே முக்கியமானதென்று கருதப்படுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. தமிழகம் முழுமையும் உண்டாகிற ஒலியைத் தலைநகரத்தில் பார்க்க, மற்றவர் ஆசைப் படுகின்றனர் போலும். சென்னை நகரில் ஆண்டுதோறும் டிசம்பரின் கடைசிப் பகுதி மகாநாட்டு வாரமாக இருக்கும். கண்காட்சி நகரமாகவும் கருதப்படும். இப்பொழுது அந்தப் பகுதியில் முதன்மை பெற்று விளங்குவது இசைநிகழ்ச்சி யென்று கூறும்படிக் காரியங்கள் நடந்தேறி வருகின்றன. இந்த டிசம்பரில் இசை மகாநாடுகள் மூன்று நடைபெற இருக்கின்றன. அவற்றை யொட்டி மூன்று வரிசைக் கச்சேரிகளும் நடக்கும். சென்ற ஆண்டு இரண்டு மகாநாடுகள் நடைபெற்றன.

'மியூசிக் அகாடமி' என்ற சபை தொடங்கிப் பல வருஷ காலமாக நடைபெற்று வருகிறது. சென்னையிலுள்ள முக்கியஸ்தர்கள் பலர் இதில் சேர்ந்திருக்கின்றனர். இந்தச் சபை தெலுங்குக்கு ஆதரவு காட்டும் சபையாகும்; தமிழிசைக்குச் சர்வ சக்தி கொண்டு எதிர்த்து வருகிறதென்று கூறினாலும் அதில் பிசகில்லை. இந்தச் சபையின் சென்ற ஆண்டுக் கூட்டத்தில்தான் மாஜி ஜட்ஜ் வெங்கடசுப்ப ராவ் அவர்கள் தமிழ், இசைக்கு உகந்ததல்ல என்று பேசினார்கள். சங்கீத வழிக்கு இந்தச் சபை எதிரும் ஈடுமில்லாதிருப்பது தான்தானென்று கருதிக்கொண்டிருந்தது. அதன் சாரியங்களும் அப்படியேதானிருந்து வருகின்றன. 'பைன் ஆர்ட் சொசைட்டி' என்பது மற்றொரு சங்கீத சபை. இதன் மகாநாடும் கச்சேரி வரிசையும் சிறப்புடையனவேயாகும். சென்ற ஆண்டு இதன் மகாநாட்டை செட்டிநாட்டு ராஜா திறந்து வைத்துத் தமிழிசையை ஆதரித்துப் பேசினது நண்பர்கட்கு நினைவிலிருக்கும். இந்தச் சபையும் தமிழிசையைத் தாங்கி நிற்பதன்று. ஆனால் அகாடமிக்காரரர் தெலுங்குதான் சங்கீத பாஷை. தமிழ் சங்கீதத்துக்கு லாயக்கற்றது என்று சொல்வதைப்போல சொல்லக் கூடியவர்களல்லர். என்றாலும் அந்தப் போக்குத்தான். கச்சேரிகளில் தமிழுக்கும் அதிகமாக இடங்கொடுத்து வருகிறார்கள்.

இனி, இந்த ஆண்டில் தமிழிசைச் சங்கத்தின் மகாநாடும் வரிசைக் கச்சேரிகளும் நடைபெறப் போகின்றன. இது தாய் மொழியும் இசை மொழியுமான தமிழில் நடக்கப் போகிறது. இந்தச் சங்கம் தோன்றிய பிறகு மற்ற இரு சபைகளும் என்ன செய்யப்போகின்றன, எந்த வழியைப் பின்பற்றப் போகின்றன வென்பது தெரியவேண்டும். இவற்றின் மாறுதல்களைப் பொது ஜனங்கள் வெகுவாகக் கவனித்து வருகின்றனர். அகாடமி தெலுங்கு மயமாகலாம். தமிழிசைச் சங்கம் தமிழ் மயமாகி விளங்கும். இரண்டையும் விட்டு நடுவே இருக்கிற 'பைன் ஆர்ட்ஸ் சொசைட்டி' என்ன செய்கிறதென்று பார்ப்போம். முதலிலும் கடைசியிலும் இடையே பாடப்படுவதில் அதிக பாகமும் தமிழாக இருக்கவேண்டுமென்பது தமிழிசைச் சங்கத்தின் கொள்கை. இதற்கு மாறாக முதலிலும் கடைசியிலும் இடையே அதிகமாகவும் தமிழல்லாத பாடல்கள் இருக்கவேண்டுமென்பது 'மியூசிக் அக்காடமி'யின் நோக்கம். இந்த இரண்டுக்கும் இடையில் பைன் ஆர்ட்ஸ் சொஸைட்டி என்ன வைத்துக்கொண்டிருக்கிற தென்பதும், அதன் சொந்த அபிப்பிராயம் யாதென்பதும் இந்த ஆண்டு வரிசைக் கச்சேரிகளில் வெளியாகிவிடும்.

இதுவரை தமிழிசை வேண்டும் என்று பலர் சொன்னார்கள். சென்ற ஆண்டு மியூசிக் அகாடமியில் தமிழ்ப்பாட்டை அதிகமாகப் பாடவேண்டுமென்று அங்கே கச்சேரி செய்யப்போன வித்வான்களே கேட்டார்கள். ஆனால் அகாடமியில் தெலுங்கு தான் அதிகமாகப் பாடவேண்டுமென்று வித்வான்கள் வற்புறுத்தப் பட்டார்களென்றும் கேள்விப்பட்டோம் தமிழ் பாடும் வித்வான் கட்கு இந்த ஆண்டு வழிதிறந்து விடப்பட்டிருக்கிறது. தமிழிசை மகாநாடு டிசம்பர் 23உ நடக்கிறது மியூசிக் அகாடமி, பைன் ஆர்ட்ஸ் சொஸைட்டி, இன்னுமுள்ள சங்கீத சபை அன்பர்கள், மற்றைய சங்கீத ரசிகர்கள் யாவரும் தமிழிசை இயக்கத்தின் கருத்தென்னவென்பதை அன்று வந்து கேட்டு அறிய வேண்டு கிறோம். என்ன சொல்லுகிறார்கள், ஏன் இந்த இயக்கம் தோன்றியதென்பதைப்பற்றி யறிய வேண்டியது ஒவ்வொரு வருக்கும் இன்றியமையாத கடமையாகும். உண்மையிலே விஷயத்தை யறியாமல்தான் பலர் தெலுங்கைப்பற்றி நிற்கிறார் களென்று கருதவேண்டியிருக்கிறது.

தமிழ் இசையில் ஈடுபடுமா? தமிழ்ப்பாட்டுக்கு முன்னால் ராகம் பாடவருமா? பாட்டுக்குப் பின்னால் சுரம் பாட வருமா? பல்லவி தானம் பாடவருமா? தமிழ்ப் பாட்டுப் பாடும்போது தந்தி வாத்தியங்களிலுள்ள கம்பி, நரம்புகளில் ஓசை உண்டாகுமா? அந்த சமயத்தில் தோல் வாத்தியங்களில் நாதம் வருமா? என்ற சந்தேகங்கள், மியூசிக் அகாடமிக்காரர் கிளப்பிய மகாநாட்டு உரைகளிலிருந்து ஜனங்களில் சிலருக்கு ஏற்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் வருமென்ற அற்புதத்தை சென்னைத் தமிழிசைச் சங்கம் டிசம்பர் கடைசிப் பகுதியில் நேருக்கு நேரே காட்டப் போகிறது. அடுத்த வருஷம் டிசம்பர் கச்சேரிகள் எல்லாம் தமிழிலேயே நடக்கும்படி தமிழிசை மகாநாடு இந்த ஆண்டில் அரிய சேவையைச் செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம்.

'குமரன்' 2-12-43

அகாடமிக் கச்சேரிகள்

சென்னையில் டிசம்பர் பிற்பகுதியில் மூன்று இசை மாநாடுகள் நடக்கும் செய்தியை நேயர்கள் அறிவார்கள். தமிழிசைச் சங்கத்தின் ஆதரவில் 16 கச்சேரிகள் நடைபெறுகின்றன. இந்தியன் பைன் ஆர்ஸ்ட் சொசைட்டியில் 9 கச்சோரிகள் நடைபெறுகின்றன. தமிழிசைச் சங்கத்தில் எல்லாம் தமிழ்க் கச்சேரிகள் என்று கூறவேண்டியதில்லை. பைன் ஆர்ட்ஸில் கச்சேரி செய்பவரில் அரியக்குடியைத் தவிர எல்லாரும் தமிழ்க் கட்சியையச்

சேர்ந்தவர்கள்தாம். கோபிநாத் தங்கமணி நடனமும் சேர்ந் திருக்கிறது.

மியூஸிக் அகாடமியார் இந்த வருஷம் நிலைமையில் வெகுவாக மாற்ற மடைந்திருக்கிறார்களென்று கச்சேரி அமைப்பிலிருந்து தெரிய வருகிறது. தமிழ்மொழி கர்னாடக சங்கீதத்துக்கு வராது; தெலுங்குதான் வருமென்று கொண்ட கருத்து பிழை யென்பதை நிகழ்ச்சி முறை நன்கு எடுத்துக் காட்டுகிறது. மொத்தம் 22 கச்சேரிகளில் 18 கச்சேரிகளுக்குத் தமிழ்வித்வான்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். பாக்கியுள்ள நாலில், ஒருவர் சித்தூர் சுப்பிரமணிய பிள்ளையாவர். இவர் தமிழரென்று கூறிக் கொள்வதில் அதிக ஆட்சேபனை இராதென்று கருதுகிறோம். தெலுங்குக்குத்தான் சங்கீதபாத்யதை யென்றால் தெலுங்கு நாட்டிலுள்ள ஒரு தெலுங்கு வித்வானுக்குக்கூடக் கச்சேரி இல்லாமல்போன காரணமென்ன? தமிழனுக்குத்தான் – தமிழ் மொழி பேசும் 'வாயுள்ள' வனுக்குத்தான் கர்னாடக சங்கீதம் சொந்தமென்பது இப்பொழுதுதான் அக்காடமிக்காரருக்கு விளங்கி யிருக்கிறது சென்ற ஆண்டு வேண்டாமென்று ஒதுக்கப்பட்ட வித்வான்களுக்கெல்லாம் கச்சேரி கொடுத்து இழுத்துப் பிடிக் வேண்டிய அவசியம் அகாடமிக்கு ஏற்பட்டிருப்பதும் அவர்களின் நிலைமையை விளக்குகிறது. தவிர கர்னாடக சங்கீதத்தையே காப்பாற்றத் தாங்கள் ஏற்பட்டிருப்பதாகச் சென்ற வருஷம் வரை பெருமை பேசிய அவர்கள் இந்த ஆண்டில் கலங்கி யிருக்கிறார் களென்பதும் வெளியாகிறது. மிஸ் ரோஷநாராபீகம் பாட்டையும் மிஸ்டர் பிஸ்மில்லா சங்கீதத்தையும் கர்னாடக சங்கித ஏகபோக டிரஸ்டிகளென்று பெருமையடிக்கும் மியூஸிக் அகாடமி மகாநாட்டில் வைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது பரிதபிக்கத் தக்கது. தமிழில்லாமல் கர்னாடக சங்கீதத்துக்குப் பீடமில்லை. இந்த உண்மை ஒருவாறு அவர்கட்கு விளங்கவே, வடக்கேயிருந்து படை பலம் தேட முற்பட்டிருக்கிறார்கள்போலும்! கர்னாடக சங்கீதத்தைக் காப்பாற்றுகிறார்களா? தெலுங்கை சங்கீதத்தில் கோத்து இசைக்கிறார்களா? அல்லது தமிழிசை இயக்கத்தின் மேல் பாய்வதற்குப் பலவகைப் படை சேர்க் கிறார்களா? என்பது இவ்வாண்டு நிகழ்ச்சியைப் பார்த்தாலே வெட்ட வெளிச்சமாகிறது.

இனி, செந்தமிழ் இசைச் செல்விகளான ஸ்ரீமதி சுந்தராம் பாள், ஸ்ரீமதி சுப்புலட்சுமி, ஸ்ரீமதி வசந்தகோகிலம் ஆகிய மூவர்

கச்சேரிகள் மற்ற இரு சபைகளில் உண்டு, ஆனால் அகாடமியில் இல்லை. இவர்களின் கச்சேரிகளை வைத்தால் கர்னாடக சங்கீதம் தமிழுக்குத்தான் ஏற்பட்டதென்பது தெளிவாகிவிடுமல்லவா ?

ஐயரவாள் கீர்த்தனங்கள் ஒப்பற்றவை; அவைகளைப் பாடாத வித்வான்கள் பாபிகள் என்றெல்லாம் அளந்தார்கள். இவ்வாண்டு அகாடமி விளம்பரத்தில் ஸ்வாதித் திருநாள் சாகித் யங்கள், தமிழ்ப் பாட்டுக்கள், புரந்தரதாஸகிருதிகள், க்ஷேத்ரக்கு பதங்கள் இவைகளில் வாய்ப்பாட்டும்'' என்று குறிப்பிடப்பட் டிருப்பது கவனிக்கத்தக்கது. தியாகையரவாள் பெயரே அகாட மிக்காரருக்கு மறந்துபோய்விட்டதென்று தெரிகிறது. பாவம்! தமிழ்நாடு கொண்டிருக்கும் விழிப்பில் திணறிப்போய் தியாகையரவாளை விட்டுவிட்டார்களா? சுவாதித் திருநாள் மகா ராஜா தரிசனத்தில் பிரமை தட்டிப்போச்சா? பணம் வராத ஐயரவாளை விட்டுவிட்டுப் பணவரும்படிக்கு முதலிடமாக இன்றிருக்கின்ற சுவாதித் திருநாளை எதிரே நிறுத்துகிறார்களா? என்று கேட்கிறோம். ஐயரவர்கள் கீர்த்தனத்தை அகாடமிக் கச்சேரி வித்வான்கள் பாடுவதில்லை என்று பேசிக்கொண்டு கச்சேரிக்குப் பாக்கு வாங்கியிருக்கிறார்களா என்பது தெரியவில்லை. தெலுங்கு சகோதரர்கள், சமீபத்தில் தெலுங்கு நாட்டுக்குத் தனிபட்ஜட் வேண்டுமென்றும், தனி ரேடியோ வேண்டுமென்றும் வம்பு செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். அதனாலேயேதான் அகாடமியர் மெதுவாகத் தெலுங்கைக் கைவிடுகிறார்களோ என்ற ஐயமும் ஏற்படுகிறது.

எல்லாப் படியாலும் அக்காடமியார் தங்கள் நிலையிலிருந்து கலங்கிக் குலுங்கியிருக்கிறார்களென்பது நன்கு விளங்குகிறது. அடுத்த வருஷம் மகாநாடு சுத்தத் தமிழாகி விடுமென்பதில் நமக்குச் சந்தேகமே கிடையாது, அதைத் தாங்கி ஏதாவது சபைகள் தோன்றியிருந்தாலும் அவை உருவாகட்டும்; எங்கே போகப் போகின்றன. சர் இராதாகிருஷ்ணன் திறப்பு விழாப் பிரசங்கம் புரியப்போகிறார். சென்ற ஆண்டு சர். வேங்கட சுப்பராவ் தமிழுக்கு இசை வராதென்றார். அவர் தெலுங்கர். இவர் தமிழர். என்ன சொல்லப் போகிறாரென்று பார்க்கலாம். பல்லடம் சஞ்சீவி ராவ் இனி ஒரு 'கலாநிதி' ஆவார். அகாடமி ஆண்டு விழா நாற்காலியில் உட்காருபவர், கலாநிதியாகி விடுவார்களல்லவா? ஸ்தானத்தின் பெருமை நிரந்தரம்!

'குமரன்' 16-12-43

நமது லட்சியம்

சென்னையில் இன்று நடைபெறும் தமிழிசை மகாநாடானது தமிழ் நாட்டின் சங்கீத சரித்திரத்தில் ஓர் முக்கிய நிகழ்ச்சியாகும். தமிழிசை இயக்கம் தோன்றி 3 வருஷ காலமாகிறது. இம்மூன்று வருஷங்களிலும் அதற்கு எத்தனையோ எதிர்ப்புக்கள்! ஆனால், பொதுமக்களும் நல்லறிஞர்களும் அதற்கு அபரிமிதமான ஆதரவளித்ததனால், அவ்வெதிர்ப்புகள் அனைத்தும் தோன்றிய சுவடு தெரியாமல் மறைந்து போயின. இந்த ஆதரவின் அறிகுறியாக, இதுவரை பல நகரங்களிலும் தமிழிசை மகாநாடுகள் நடைபெற்றன. தமிழிசை இயக்கத்தை எதிர்த்தவர்களுக்கெல்லாம் இம்மகாநாடுகளில் தக்க பதில்கள் கூறப்பட்டன. இதன் பயனாக எதிர்ப்புகள் மறைந்தொழிந்தன. அவற்றிற்கு மறுப்புக்கூறும் அத்தியாயமும் இத்துடன் முடிவடைந்தது என்றே கருதுகிறோம்.

இன்று சென்னையில் கூடியிருக்கும் மகாநாடு, சிறந்த ஆக்க வேலைகளை மேற்கொள்ளும் நோக்கத்துடன், தமிழிசைச் சரித்திரத்தில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்திருக்கிறதென்பது, அதன் தலைவர் திரு. டி. கே. சிதம்பரநாத முதலியாரவர்கள் தலைமையுரையிலிருந்து நன்கு காணலாம். அவர் கூறுகிறார்:

> "தமிழிசை வேண்டுமென்று சொல்லும்போது, ஏதோ பாஷை மட்டும் தமிழில் இருந்தால் போதுமென்பதல்ல. பூர்வமான தமிழ் நாட்டு இசைப் பண்போடு கூடி, உயர்ந்த உணர்ச்சி பாவங்களோடு கலந்ததாகச் சங்கீதம் இருக்கவேண்டும் என்பதே நமது கொள்கை. பொதுவாக, தற்போதைய சங்கீதத்தில் மேலே சொன்ன லக்ஷணம் அபூர்வமாகத்தான் இருக்கிறது............இந்தக் குறையெல்லாம் நிவர்த்தியாகும் பொருட்டு, சங்கீதத்தின் உயர்ந்த சாகித்தியத்தின் உயர்ந்த லக்ஷியத்தையும் கண்முன்னால் வைத்துக் கொண்டே மாணவர்களுக்குச் சங்கீதம் கற்பிக்க வேண்டும்."

ஆகவே, இப்போது நமக்கு முக்கியமாக வேண்டுவது சங்கீத வித்வான்களின் உதவி. தமிழில் பாண்டித்யமுடைய பெரியோர்கள், சங்க நூற்களிலிருந்து மேற்கோள்கள் கொடுத்துத் தமிழிசையின் தொன்மைச் சிறப்புகளை நமக்கு எடுத்துக் கூறுகிறார்கள். சிறப்போ, சிறப்பில்லையோ, நமக்குத் தமிழிசைதான் வேண்டும் என்று தீர்மானித்துவிட்டோம். இவ்வாறு நாம் தீர்மானித்ததற்கு, நாம் தமிழராய்ப் பிறந்தமை ஒன்றே போதிய காரணமாகும். தற்போது தமிழிசையில் ஏதேனும் குறைகளிருப்பதாகக் கூறப்படுமானால், அதனாலென்ன? இதோ அவற்றைப் போக்கி விடுகிறோம். தமிழிசையை உலகிலேயே தனிப் பெருஞ் சிறப்பு வாய்ந்த இசையாகச் செய்துவிடுகிறோம். இவ்வாறு செய்வதற்கு நம்மிடையே ஏராளமான சங்கீத வித்வான்கள் இருக்கிறார்கள். வேண்டுமானால் வடநாட்டு மேனாட்டு இசை வல்லுநர்களையும் வரவழைத்து, அவர்களுடைய ஒத்துழைப்பையும் பெற்று நம் தமிழ்நாட்டு இசைக் கலையைச் சிறந்த முறையில் வளர்ப்போம். இது மட்டுமல்ல, எந்தெந்தக் காலத்தில் எந்தெந்தநாட்டு இசை முறைகளில் என்னென்ன உயர்ந்த அம்சங்கள் தோன்றுகின்றனவோ, அவற்றை யெல்லாம் நம் இசையில் தழுவிக்கொண்டே வருவோம். அத்துடன் ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் பிருந்த தனித்தமிழ் இசை முறையையும் புதுப்பித்து, அதையே அஸ்திவாரமாகக்கொண்டு மேல் கட்டிடத்தை எழுப்புவோம். இதுவே நமது லட்சியம். இந்த லட்சியத்தைப் பூர்த்தி செய்வதற்குத் தமிழறிவு படைத்த சங்கீத வித்வான்களின் சேவையே தேவை.

அத்தகைய வித்வான்கள்தான் வருங்கால சாகித்திய கர்த்தாக்களாகவும் இருக்க வேண்டும். ஏனெனில் சங்கீத முறையின் சிறப்பு, சாகித்ய அமைப்பிலேதான் பிரதிபலிக்க வேண்டும். தியாகையர்வாள் கீர்த்தனைகளில் பெரும்பாலானவை, அந்தந்த ராகத்திற்கு உருவம் கொடுத்தது போலிருக்கின்றன. அதனாலேயே அவை சிறப்பாகக் கருதப்படுகின்றன. இக் காலத்தில் சங்கீத ஞானமே இல்லாத பலர் சாகித்யம் இயற்ற முன் வந்து விடுகிறார்கள். இது தமிழிசை இயக்கத்தினால் மக்களிடையே

ஏற்பட்ட ஆர்வம் காரணமாக நிகழ்வது. இந்த ஆர்வத்தை வளர்க்க வேண்டியதே தவிர, நசுக்குவது நம் கடமையல்ல. ஆனால் அதைச் சரியான பாதையில் திருப்பினுல்தான் பிரயோசன முண்டு. சாகித்யம் இயற்ற ஆர்வமுள்ள தமிழ்ப் புலவர்கள் சங்கீதம் கற்றுக்கொள்ள வேண்டும். சங்கீத வித்வான்கள் தமிழ் கற்றுக்கொள்ள வேண்டும். சிலர் விஷயத்தில், இரண்டுமே கற்றுக்கொள்ள வேண்டிய நிலைமையிலிருக்கலாம். எப்படியிருப் பினும் ஒவ்வொருவரும் தத்தம் குறைகளை உணர்ந்து அவற்றைப் போக்கிக்கொண்டு, பின்னர் சாகித்யம் இயற்ற முன்வர வேண்டும். அப்போது, தமிழிசை உலகிலேயே உயர்ந்த அந்தஸ்தைப் பெற்று விடும்.

சென்னைத் தமிழிசை மகாநாடு வெற்றிகரமாக நிகழ்வுற்று எதிர்காலத்துக்கு வழிகாட்டியாக விளங்குமாக!

'செட்டி நாடு' 23—12—43

— —

தமிழிசை அரங்கு

முதல் நாள் (24—12—43)

[இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர்—பாட்டு,

சென்னை கோவிந்தசாமி நாயக்கர்—பிடில்,

இராமநாதபுரம் முருகபூபதி—மிருதங்கம்,

புதுக்கோட்டை எம். வி. தக்ஷிணாமூர்த்தி ஆச்சாரி—கஞ்சிரா.]

முதலில் விநாயகர் பேரில் கீர்த்தனை பாடி முடித்ததும், சுத்தானந்த பாரதியவர்களுடைய கோபிகாதிலக ராகமும், ரூபக தாளமும் அமைந்த 'ஆனந்தநடனம் ஆடினாள்' என்னும் பாட்டை பாடினார். மேற்கண்ட ராகம் இதுவரையில் கச்சேரிகளில் அதிகமாகப் பாடப்படாத ராகமாகும். ஏன்? இல்லையென்றே சொல்லிவிடலாம். அப்படியிருந்தும் இப் புது ராகத்தின் சாயலை எடுத்தவுடன் நன்றாக விளக்கக்கூடியதாய் வர்ணமெட்டு அமைந்திருக்கிறது. 'ஆனந்த நடனம் ஆடினாள்' என்று பாடும்போது கேட்போருக்குப் பாரசத்தியே எதிரில் வந்து ஆடுவதுபோன்ற உணர்சி ஏற்பட்டது. மேற்படி பாட்டின் சரணத்தில் 'பஞ்ச பூதங்கள் முழங்க' என்ற இடம் நன்றாக அமைந்திருக்கிறது. அதாவது வர்ணமெட்டுக்குப் பொருத்தமான சாகித்யமும், சாகித்யத்திற்குப் பொருத்தமான வர்ணமெட்டும் சேர்ந்து அழகுற அமைந்திருந்தது

'இல்லை யென்பான் யாரடா' என்ற மோகனராகப் பாட்டு சுத்தானந்த பாரதியின் உத்வேக உணர்ச்சியை வெளிப்படுத்தும் படியாக இருந்தது. அதற்குத் தகுந்தாற்போல் அப்பாட்டின் 'இல்லை யென்பான் யாரடா, என்னப்பனைத் தில்லையிலே வந்து பாரடா' என்ற பல்லவி வர்ணமெட்டும் மிகவும் உயர்தரமாக இருந்தது.

லதாங்கி ராகத்தில் பாடிய 'பிறவா வரந்தாரும்' என்ற பாபநாசம் சிவனின் பாட்டுத் தேசிகருக்கே பிறப்புரிமையுடையது

என்று சொல்லிவிடலாம்; வேறு ஒன்றும் கூறவேண்டியதில்லை. பூக்கடைக்கு விளம்பரம் வேண்டுமா ?

'தூதுநீ சொல்லி வாராய்' என்ற குற்றாலக் குறவஞ்சிப் பாட்டை 'மணிரங்கு' ராகத்தில் பாடினார். இது தேசிகருடைய சொந்த வர்ணமெட்டு. இதுவும் நாம் அவரிடத்தில் பலதடவை கேட்டதேயாகும். ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு புது மெருகுடன் பாடுகிறார். இன்று 'மணிரங்கு' ராகம் மிக நன்றா யிருந்தது இவ்வாறே பல பாடல்கள் சுவை தோன்றப் பாடினார் பின் 'யாமறிந்த மொழிகளிலே' என்னும் பாட்டை மிக உணர்ச்சித் ததும்ப ராகமாலிகையில் பாடினார். இதில் 'கரஹரப்பிரியா' மிகப் பிரமாதமாகப் பாடினர். 'யாமறிந்த மொழிகளிலே............உலகனைத்தும்' என்பது வரையில் பாடித் திரும்பவும் 'யாமறிந்த மொழிகளிலே' என்றெடுத்தது மிகப் பொருத்தமானதாக இருந்தது. பிறகு, 'பாமரராய் விலங்கு களாய் இகழ்ச்சி சொல்ல' என்ற இடம் உணர்ச்சி மிக்கதாய் இருந்தது. 'நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ ? என்ற இடத்தைத் தமிழிசை எதிர்ப்பு இயக்கத்தார்கள் கேட்டிருந்தால் உடனே அந்த இயக்கத்தின் கதவைச் சாத்திப் பூட்டிவிட்டுத் தமிழிசையை ஆதரிக்க ஆரம்பித்திருப்பார்கள். 'சண்முகப் பிரியா' ராகத்தில் "தமிழோசை, மதுரத்தமிழோசை, தேமதுரத் தமிழோசை" என்று அடுக்கடுக்காகவும், திருப்பித் திருப்பியும் பாடினது சாக்ஷாத் ஸ்ரீ தமிழ்க் கடவுளாகிய ஷண்முக னுக்குப் பிரியமாயுள்ள தமிழோசை என்று எடுத்துக்காட்டினாற் போலிருந்தது. 'சஹானா' ராகத்தில் பாடிய 'ஊமையருய்ச் செவிடர்களாய்' என்ற பகுதியும் உணர்ச்சி மிக்கதாயிருந்தது.

கடைசியில் இவ்வளவுக்கும் சிகரம் வைத்தாற்போல் 'பியாக்' ராகத்தில் "சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்" என்று பாட ஆரம்பித்த வுடன் எதிர்பாராத விதமாக இரண்டு மூன்றுதரம் மணியோசை கேட்டது இது "தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்தால்தான் க்ஷேமம்" என்று கடவுளே ஆமோதிப்பது போல் தோன்றிற்று. இத்தனை உணர்ச்சியும் உண்டானது நமக்கு தெரிந்த பாஷையில் பாடினதால் அல்லவா ? மேலும் நாயக்கரின் பிடில் வாசிப்பும், பூபதியின் மிருதங்கமும், தட்சிணாமூர்த்தி அவர்களின் கஞ்சிராவும் உயர்தரமாகவே அமைந்திருந்தன.

இரண்டாம் நாள் (25-12-43)

[இசைவாணர் எம். கே. தியாகராஜ பாகவதர்—பாட்டு,

டி. குருராஜப்பா—பிடில்,

சிவவடிவேலுப் பிள்ளை—மிருதங்கம்,

நடேசப்பிள்ளை—முகர்சிங்,

இராமச்சந்திரன்—கடம்.]

முதலில் பாடிய 'ஞான விநாயகனே சரணம்' என்னும் பாட்டு நாட்டை ராகம். இதில் "ஓம் எனும் முப்பிரணவ" என்னும் இடம், சரணத்தின் ஆரம்பமாகும். இந்த இடம், அழகான வர்ணமெட்டுடன் கூடி அமைந்திருக்கிறது.

கல்யாணி ராகம் பாடியது மிக நன்றாக இருந்தது. இந்த ராகத்தில் பாடிய 'சுந்தரேஸ்வரனே' என்னும் பாட்டு மிக அழகாக அமைந்திருக்கிறது இதில் 'பண்சுமந்த' என்னும் இடத்தில் நிரவல்செய்து பாடியது மெச்சத் தக்கதாயிருந்தது. இதற்கு மனோதர்மசுரம் பாடியதில் பலவித விந்யாசங்கள் அமைந்திருந்ததால் சபையோர் கரகோஷம் செய்து தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

வலசிராகத்தில் 'கைவிடமாட்டான்' என்று பாடிய பாட்டு சுமாராக இருந்தது. இத்தனைநாள் என்னும் பாட்டுப் பிலஹரி ராகம் இந்த சாகித்தியம் 'இத்தனைநாள் ஏன் தமிழ்ப் பாடவில்லை' என்ற அர்த்தத்துடன் கூடியது. இதைப் பாடும்போது ஜனங்கள் பெருங் கரகோஷம் செய்தனர்.

அசாவேரி ராகத்தில் 'அண்ணாமலைக்கரசே' என்னும் பாடலைப் பாடிவந்து 'நான் மறந்தால் அது என் செயலோ, நீ மறந்தால் என்செய்வேன்' என்னும் பகுதியைப் பாடும்போது மக்கள் சுவைத்து அனுபவித்ததைக் கண்டபோது பொருள் தெரிந்த பாடலால் எவ்வளவு உணர்ச்சி உண்டாகிறது என்பது பிரத்தியக்ஷமாயிற்று. கரஹரப்பிரியா ராகத்தில் பாடிய பாட்டில் 'ஆட்டமென்ன சொல்லுவேன் தோழி' என்ற அநுபல்லவியைப் பாடியபோது நடனமாடுவதுபோலவே பண்ணை அசைத்துப் பாடிய முறை, கேட்போர் யாவரையும் தம்மையறியாமலே ஆடச் செய்தது. பேகடாவில் 'அவசரப்படாதே' என்னும் பாடலை மிகச் சவுக்கமாக ஒவ்வொரு எழுத்திற்கும் ஜீவன்

கொடுத்துப் பாடியது என்றும் அநுபவிக்காத ஓர் புதிய வெள்ளத்தை ஈந்தது. காம்போதி ராகத்தைப் பாடியபோது மக்களடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. மைசூர் டி. குருராஜப்பாவும் மிக மிக அருமையாக ஒவ்வொரு ராகத்தையும் சுரங்களையும் வாசித்த போது என்றுமில்லாப் பேரின்பம் எய்திற்று. 'சரவணபவ குகனே' என்னும் பல்லவியை இன்பத்தேன் ஒழுகுமாறு தம் இசைத்திறமை முற்றும் காட்டிப் பாடினர்.

'காயெல்லாம் கனிவிக்கும்' என்னும் விருத்தத்தை ஆனந்தபைரவி, கானடா, ஹிந்தோளம், மோகனம், காபி, அடாணு முதலிய ராகங்களில் ராகமாலிகையாகப் பாடிக்கொண்டுவந்து, அதே மூச்சில் 'நீ இரங்காயெனில் புகலேது அம்ப' என்ற பாட்டை அடாணுவில் பாடியபோது சபையோர் அடைந்த மகிழ்ச்சியை எழுத்தால் எழுதிக் காட்ட முடியாது என்றுதான் கூறவேண்டுமன்றி வேறென்ன சொல்வது? மற்றும் கேட்போர் மனத்தைக் கவரத் தக்க பலவித வர்ண மெட்டுக்களில் பாடிய ஒவ்வொரு பாட்டையும் கேட்டு அனுபவித்தவர்களுக்குத் தான் அதன் பெருமையை உணரமுடியுமன்றி மற்றெவ்வகையாலும் முடியாத காரியமாகும் மொத்தத்தில் இன்றைய கச்சேரி ஆரம்பமுதல் முடிவுவரை தெவிட்டாத தெள்ளமுதாய் இருந்தது என்று கூறினல் அது மிகையாகாது. உண்மையிலும் உண்மையே யாகும்.

மூன்றும் நாள் (26—12—43)

[கான சரஸ்வதி டி. கே. பட்டம்மாள்—பாட்டு,
மாஸ்டர் கோபாலகிருஷ்ணன் - பிடில்,
கல்பாத்தி இராமநாதன்— மிருதங்கம்.]

இன்றைய கச்சேரியில் 'வாரணமுகவா' என்னும் ஹம்சத்வனி ராகத்தில் பாடிய தமிழ்க்கிர்த்தனை ஆரம்பமே மிகசோபிதமாக இருந்தது அடுத்தபடியாக 'இனி நமக்கொரு' என்னும் கிருதியைப் பாடிவிட்டுப் பின் அருணசலக் கவிராயருடைய 'சரணம் சரணம்' என்ற ராமாயணக்ருதியைப் பாடும் பொழுது மிக பக்தி பரவசமாகவும், பாவத்துடனும் இருந்தது. ஸ்ரீமதி பட்டம்மாளவர்கள் அசாவேரியில் பாடிய மேற்கண்ட கிருதியில் அடங்கியிருக்கும் பொருளையும் அதற்கு அமைத்த மெட்டுக்களையும் முக்கியமாய் இந்தக் கச்சேரியில் குறிப்பிடவேண்டும்.

முத்துத்தாண்டவர் கிருதியில் 'ஆடினதெப்படியோ' என்ற பாட்டும், வேதநாயகம் பிள்ளை சாகித்தியத்தில் 'சித்தம் எப்படியோ' என்ற பாட்டும், வேறு அநேக பாடல்களும் மிக உயர்ந்த ரகத்தில் சேர்க்கப்பட வேண்டியனவாகவே இருந்தன. இவர்கள் இன்று கச்சேரியில் பாடிய உருப்படிகள் பத்தொன்பதில் பதினேழு தமிழ் உருப்படிகள் என்பதை எழுதாமல் இருக்க முடியுமா? இந்தக் கச்சேரியில் பக்கவாத்தியங்களின் அமைப்பும் போற்றத்தக்கதாய் இருந்தது.

நான்காம் நாள் (27-12-43)

[நாதசுரச் சக்கரவர்த்தி டி. என். ராஜரெத்தினம் பிள்ளை
நாதசுர வித்வசிரோன்மணி. பி. எஸ். வீருசாமி பிள்ளை,
நாதசுரம், தவுல் அரசு என். டி. மீனுக்ஷிசுந்தரம் பிள்ளை,
முத்துவீரப் பிள்ளை — தவுல்]

திருவாவடுதுறை இராஜரத்தினம் பிள்ளையையும், பெரம்பூர் விருசாமிப் பிள்ளையையும் பற்றிச் சங்கீத உலகத்திற்குக் கூற வேண்டியதில்லை. கச்சேரியின் முதல் கிருதி, வலசி ராகத்திலமைந்த தமிழ் சாகித்தியமான 'கைவிட மாட்டேன்' என்றதாகும். இச் சாகித்தியத்தை மிக விசேஷப் பொருத்தத்துடனும், 'தமிழிசையைக் கைவிட மாட்டேன்' என்று சொல்லுவது போன்றும் ராஜரத்தினம் பிள்ளையவர்களும், வீருசாமியவர்களும் வாசித்தார்கள். அவர்கள் கச்சேரிக்காகப் பிரத்தியேக ஏற்பாடு செய்திருந்த, தவுல் அரசு. மீனுக்ஷிசுந்தரம் பிள்ளையும் நாதசுரம் வாசிப்பவர்போலவே அவர்களுடன் சேர்ந்து கிருதியை வாசித்ததானது மறக்கமுடியாத விஷயங்களில் ஒன்றுகும்.

ஆபோகியில் 'மறந்தறியேன்' என்ற கிருதியையும், கல்யாணி ராகத்தையும், கிருதியையும், வாசஸ்பதியில் 'ஸ்ரீ அண்ணுமலையை நம்பினேன்' என்ற பல்லவியையும் அபார மனோதர்மத்துடன், இருவரும் சுரம் வாசித்து ஜனங்களைப் பிரமிக்கச் செய்தனர். தவுல் மீனுக்ஷிசுந்தரம் பிள்ளையும், திருமுல்லை வாயில் தவுல், முத்து வீரப்பிள்ளையும் தனி ஆவர்த்தனம் வாசித்தது ஒரு புதிய அம்சமாகவே இருந்தது. இவர்களுடைய தனி ஆவர்த்தனம் அநேக தடவைகளில் கேட்டிருந்தாலும் இன்றைய வாசிப்பு, ஒரு தனி மதிப்புடன் இருந்ததென்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

[பானுமதி கோஷ்டியார் பரத நாட்டியம்]

இரவு 7. மணிக்கு மேல் நடைபெற்ற ஸ்ரீமதி பானுமதியின் பரதநாட்டியம் சென்னை நகர்க்குப் புதிதன்று. தற்போது ஸ்ரீமதி. பானுமதி தனிமையாக நடத்திவரும் நாட்டியக் கச்சேரியும் மிகவும் நன்ருகவே இருந்தது. முதல் பாகமான அலாரிப்பு முதலானவைகள் வழக்கம்போலவே நன்ருயிருந்தன. அபிநயமென்பது இன்றைய நடனக் கச்சேரியில் முதல்தரமாகவே இருந்ததுடன் பதங்களுக்கேற்றபடி பாவத்தை வெளிப்படுத்துவதும் ஓர் அபூர்வ கற்பனையுடன் விளங்கிற்று

'வந்த காரியம் ஏதையா' என்பதும் 'எத்தைக்கண்டு நீ இச்சை கொண்டாய் மகளே' என்பதும் போன்ற தமிழ் சாகித்தியங்களுள், சாகித்தியம் பாடாமலே ஜனங்கள் அவற்றின் பொருளை அறிந்துகொள்ளும்படி பாவங்களை விளக்கினுர்கள். இவருடைய நடனத்தின் சிறப்பில் இதுவுமோர் அரியவிஷயமாகும். இவருடைய சாரீரம் மிகவும் இனிமையாக இருப்பதும், தமிழ்ப்பாட்டுக்களை நன்கு உச்சரித்துப் பாடுவதும் இவர் அபிநயம் பிடித்துக் கொண்டே பாடியபொழுது நன்கு விளங்கிற்று. பரத நாட்டியக் கலையில் இவரை ஒரு பெருஞ் சிறப்புடையராகவே குறிப்பிட வேண்டும் என்பதை நாம் எடுத்துக் கூறவேண்டியதில்லை

ஐந்தாம் நாள் (28-12-43)

[கானகலாதர மதுரை மணி அய்யர்—பாட்டு, மாயவரம் கோவிந்தராஜ பிள்ளை—பிடில், பழனி சுப்பிரமணிய பிள்ளை—மிருதங்கம், மன்னுர்குடி நடேசம் பிள்ளை—முகர்சிங்.]

இன்று நடந்த கச்சேரி மிகவும் உயர்தரமாக அமைந்திருந்ததென்று சொல்லத் தேவையில்லை. ஏனென்ருல் இன்றைய கச்சேரியில் மணி ஐயரவர்கள் 'கானகலாதரர்' என்ற பட்டத்தைப் பெற்ற பிறகு, தான் அப்பட்டத்திற்கு உரியவர்தான் என்பதை நிர்த்தாரணம் செய்தார்போலும். ஆரம்பத்திலிருந்து முடிவு வரையில் கச்சேரி பெருஞ்சோபிதமாகவே விளங்கியது மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். முதலில் 'கருணை செய்வாய்' என்று ஆரம்பித்துப் பாடினுர். அது தமிழ்த்தாயும் தமிழிசைக்குக் 'கருணை செய்து விட்டே' னென்று சொல்லியதுபோல் இருந்தது.

சங்கராபரணத்தில் சுவாமி சுத்தானந்த பாரதியாரின் பாடலில் 'தூக்கியதிருவடி.' என்ற பாட்டின் சரணமான, 'எத்தனையோ பிறவி எடுத்தெடுத்தேயிளைத்தேன்' என்ற பகுதியை நிரவல் செய்த பொழுது அன்பர்களுடைய மனம் ஒருமைப் பாட்டை அடைந்திருக்கவேண்டும் என்று தோன்றியது. காம்போதியில் 'காணக் கண்கோடி.' என்ற பாடலும் மற்ற தமிழ்ப்பாடல்களும் இன்றைய கச்சேரியில், எப்பொழுதும் உள்ளதைவிட மிகச் சோபிதமாக இருந்தன. பக்க வாத்தியர்களாக அமைந்த திரு. கோவிந்தராஜ பிள்ளையையும், பழனி சுப்பிரமணிய பிள்ளையையும், முகர்சிங் நடேச பிள்ளையையும் குறிப்பிட வேண்டியது மிக அவசியமாகும்.

ஆரும் நாள் (29-12-43)

[கோகிலகான இசைவாணி. எம் எஸ். சுப்புலக்ஷ்மி—பாட்டு டி. டி. சங்கரய்யர்—பிடில், மாஸ்டர் மூர்த்தி—மிருதங்கம், சென்னை வேணுநாயக்கர்—கஞ்சிரா.]

இன்று நடந்த கச்சேரியின் ஆரம்பத்தில் தன்யாசி ராகத்தில் ஒரு தமிழ்வர்ணம் பாடினார்கள். வர்ணத்தை ஆரம்பித்தவுடனேயே இன்று கச்சேரி பிரமாதமாகத் தானிருக்கும் என்ற எண்ணம் உதித்தது. இன்று நடந்த கச்சேரியில் எந்தப்பாட்டு நன்றாயிருந்தது என்று பார்க்கும்போது, நமக்கு உடனேயே எந்தப் பாட்டு நன்றாயில்லை என்றுதான் தோன்றிவிடுகிறது. ஒரு தட்டு நிறைய உயர்ந்த தித்திப்புப் பக்ஷணத்தை வைத்து இதில் எந்தப் பாகம் ருசியாக இருக்கிறது என்றால் என்ன பதில் சொல்லுவது? சங்கராபரண ராகம் இன்று மிகவும் விச்ராந்தியாகவும் அழகாகவும் இருந்தது. முகாரியில் "தந்தைதாய்" என்னும் பொன்னையா பிள்ளை சாஹித்யமும், "காலைத்தூக்கி" என்னும் யதுகுலகாம்போதி ராகத்தில் அமைத்த மாரிமுத்தாப் பிள்ளை ஸாஹித்தியமும், விசேஷ ஸாஹித்ய அழகும், உணர்ச்சியும் பொருந்தியவையாயிருந்தன. "கண்டதுண்டோ" என்ற பாட்டு இவருக்காகவே இயற்றப்பட்டது போலிருந்தது. எத்தனை தடவை கேட்டாலும் ஒவ்வொரு தடவையும் ஒரு புது மெருகுடன் விளங்குகிறது கடைசியில் "செந்தமிழ்நாடு" என்னும் பாட்டை ஆரம்பித்தவுடன் சபையோர் மகிழ்ச்சி, எல்லை மீறிப்போய் விட்டது என்பது அவர்களின் கரகோஷத்தால் வெளிப்பட்டது. பொதுவாக இன்று நடந்த

கச்சேரி மிகவும் அழகாக அமைந்திருந்தது என்று எழுதவேண்டியது அநாவசியமாகும். இன்று கச்சேரியில் பக்கவாத்தியம் வாசித்த ஏனையோர்களும் மிகவும் அழகாக வாசித்தார்கள்.

ஏழாம் நாள் (30-12-43)

[ஸ்ரீமதி. என். சி. வசந்தகோகிலம்—பாட்டு, திருவாளப் புத்தூர் கிருஷ்ணமூர்த்தி பிள்ளை—பிடில், கும்பகோணம் ரங்கய்யர் — மிருதங்கம், உமையாள்புரம் விஸ்வநாத ஐயர்—கடம்.]

இன்றைய கச்சேரியையும் சங்கீத உலகத்திற்கு அறிமுகப் படுத்தவேண்டியது அவசியமல்ல வென்பது உண்மையாயினும், தமிழிசை மகாநாட்டில் பாடும்போது ஒரு தனி சோபிதத்தையே கொடுத்தது. ஸ்ரீமதி வசந்தகோகிலம் ஆரம்பத்தில் தமிழ் வர்ணம், ஸ்ரீரஞ்சனி பாடும்போது மிக உயர்தரமாக இருந்தது. மற்ற உருப்படிகளும் அவ்வாறே சிறந்து விளங்கின. காம்போதி ராகம் ஆலாபனை செய்யும்போது, இவர் கச்சேரியை அநேக தடவைகள் கேட்டுள்ள சில முக்கியஸ்தர்களும், இன்று பாடிய காம்போதி தனிக்காம்போதி யென்றே கூறிக் கரகோஷத்தின் மூலம் தம் மகிழ்ச்சியைப் பன்முறை அறிவித்தனர். 'ஆனந்த நடனம்' என்ற பாட்டைப் பாடும்பொழுது நேரில் ஆனந்த நடனம் ஆடுவது போலவே இருந்தது. மற்ற பாட்டுக்களும், பல்லவி ஸ்வரக் கோவைகளும் கேட்கக் கேட்கத் திகட்டாதன வாகவே அமைந்திருந்தன. இவருக்கு அமைந்திருந்த பக்க வாத்தியங்களும் மிக சோபிதமாகவே இருந்தன என்பதைத் திரும்பக் கூறவும் வேண்டுமோ ?

எட்டாம் நாள் (31-12-43)

[சிவஞூர் எஸ். மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை - பாட்டு, சேலம் பி. கே. விஸ்வநாத சர்மா—பிடில், தஞ்சாவூர் ராமதாஸ் ராவ்—மிருதங்கம், சென்னை. எஸ். வி. எஸ். நாராயணன்—கடம்]

இன்றைய கச்சேரியில், திரு மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை பாடிய --அவர் சொந்த சாகித்தியங்கள், நல்ல அர்த்த புஷ்டியுடனும், பாவத்துடனும் இருந்தன. தமிழிசையில் நல்ல ஆர்வமுடையவர்

என்பதை அவர் செய்திருக்கும் சாகித்தியங்களிலிருந்தே அறியக் கூடும். ஆரம்பத்தில் பாடிய 'மலரடி பணிமனமே' என்ற பாடலும், 'நீ மகிமை யுணர' — 'ஆதிமுதலே' — 'நமக்கினி' என்ற பாடல்களும் கேட்க பக்தி ரசமுடன் இருந்தன. அதிக அவகாசம் இருந்திருந்தால் ராகங்களை இன்னும் அதிகமாக விஸ்தரித்துப் பாடியிருப்பார். அவருக்குக் கிடைத்த நேரத்தில் இவ்வளவு சாகித்திய உணர்ச்சியுடன் பாடியது மிக மிக மெச்சத்தக்கதாகும். இவருடைய கச்சேரிக்கு அமைந்த பக்க வாத்தியங்களும் மிக சோபிதமாகவே இருந்தது போற்றத்தக்கதாகும்.

[ஸ்ரீமதி. பிருந்தாவும், முக்தாவும்—பாட்டு,
அபிராமசுந்தரி—பிடில்,
திருக்கோகர்ணம் ரங்கநாயகி—மிருதங்கம்.]

இரவு 7 மணிக்கு மேல் கச்சேரி செய்த பிருந்தாவும், முக்தாவும், பிடில் வாசித்த அபிராம சுந்தரியும் புகழ்பெற்ற ஓர் சங்கீத பரம்பரையைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் இன்று பாடியது பழைய காலத்து அபூர்வ உண்மையான சங்கீத உணர்ச்சிகளுடன் இருந்தது. 'சுந்தர குஞ்சித' என்ற முத்துத்தாண்டவர் சாகித்திய வர்ணமெட்டு சம்பிரதாயமாகவும், மிக அழகாகவும் இருந்ததுடன், 'மாதரை நினையாதே' என்ற பாட்டையும், மற்ற பாடல்களையும் பாடும் பொழுது ஜனங்களின் உள்ளத்தில் ஒருவித உணர்ச்சி உண்டான தாகவே தோன்றிற்று. சங்கீத பரம்பரை என்றதன் பயன் வீண் போகுமோ? இரண்டு பேருடைய குரலும், பிடில் வாசிப்பும் வேறுபாடின்றி ஓரேவித அபிப்பிராயத்துடனும், ஒரே ஜெண்டையாகவும் இருந்தன. மிருதங்கம் வாசித்த ஸ்ரீமதி. ரங்கநாயகி அம்மாள் தனக்குக் கிடைத்த சொற்ப நேரத்தில் தனி ஆவர்த்தனம் ரொம்பக் கச்சிதமாகவும், லயசுத்தத்துடனும், சொற்சுத்தத்துடனும் தெளிவாய் வாசித்தார்கள். பெண்களில் மிருதங்கம் அநேகர் வாசித்தாலும் இம்மிருதங்கத்தில் ஓர் அரிய சுகமிருப்பதை நாம் மறந்துவிட முடியுமா?

ஒன்பதாம் நாள் (1—1—1944)

[திருவாங்கூர் ஆஸ்தானவித்வான்கள் : ஜி. என். பால சுப்பிர மணியம் — பாட்டு, கும்பகோணம்—இராஜமாணிக்கம் பிள்ளை பிடில், பாலக்காடு. டி.எஸ். மணி ஐயர் - மிருதங்கம், பழனி சுப்பிரமணிய பிள்ளை — கஞ்சிரா.]

இன்று கச்சேரி செய்த ஜி. என். பாலசுப்பிரமணியம் அவர்கள் சங்கீத உலகில் நல்ல வியாபகமுள்ளவரென்று கூற வேண்டியதில்லை. சினிமா உலகிலும் அதிக புகழுடையவர். இவர் ஆரம்பத்தில் இராமலிங்க சுவாமிகளுடைய சாகித்தியமான 'தெண்டனிட்டேன்' என்னும் பாடலைத் தோடிராகத்தில் வெகு அழகாகப் பாடினர். பைரவியிலுள்ள 'யாரோ இவர்' போன்ற தமிழ் உருப்படிகளையும், இன்னும் சில உருப்படிகளையும், நன்ருய்ப் பாடினர். காம்போதிராகத்தையும், கல்யாணியையும் தன்னை மறந்து, சுருதியில் கலந்து சங்கீதத் தேன்மாரியாகப் பொழிந்து, இரசிகர்களை ஆனந்திக்கச் செய்து, கடைசியில் எந்த மேடையில் பாடுகிறேம் என்பதையும் மறந்து, தமிழ் நாட்டில்—தமிழருடைய முன்னிலையில் இருக்கிறேமென்பதையும் மறந்து, தெலுங்கு மங்களமாகிய 'பலமான' என்றதைப் பாடித் தமிழ் மக்களை ஒரு கலக்குக் கலக்கிவிட்டு — உடனே அவரே திடுக்கிட்டது போல் விழித்துத் தமிழ் மங்களம் பாடினர் ! இடையில் பக்க மேளங்களுக்குத் தாராளமாக இடங்கொடுத்தார். ஒரு தெலுங்கு கீர்த்தனையை ஒன்றேகால்மணி நேரம் பாடிய அவர், நிகழ்ச்சியில் குறிப்பிட்டிருந்த எல்லாத் தமிழ் உருப்படிகளையும் கடகட என்று அவ்வளவு வேகமாகப் பாடிமுடித்ததின் பொருள் நமக்கு விளங்கவில்லை. இராஜமாணிக்கம் பிள்ளையும் மணியும் பிரமாதமாக வாசித்து மக்களை மகிழ்ச்சியுறச் செய்தனர்.

வானெலியில் தமிழிசை

தமிழிசை மகாநாட்டிற்குப் பிறகு தொடர்ந்து நடைபெற்ற இசையரங்குகளில் நாள்தோறும் இசைவாணர்கள் பாடிய பாடல்களில் சிலவற்றை அவ்வப்போது எடுத்து சென்னை ரேடியோ நிலையத்தார் தங்கள் நிலையத்தின் மூலம் 'அஞ்சல்' செய்தார்கள்.

— காழி சிவம்

———

பத்திரிகைக் கருத்துக்கள்

மகாநாட்டிற்குப் பிறகு

அன்றும் இன்றும்

அன்றொரு நாள் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் செட்டிநாட்டு அரசர் தமிழ் இசை வளர்ச்சிக்குப் பதினாயிரம் ரூபாய் பரிசளித்தார். வாழ்க தமிழ் இசை என்று வரவேற்றோம். இன்று சென்னையில் என்றும் கண்டிராத காட்சியைத் தமிழ் இசை மாநாட்டில் கண்டு தமிழ் மக்களின் மகிழ்ச்சிக்குப் பாத்திரமான நமது செட்டிநாட்டு அரசர் அவர்களை மனமார வாழ்த்தி வாயாரப் போற்றி வரவேற்கின்றோம்.

'அன்று தமிழிசைக்கு எதிர்ப்பு இருந்தது இன்று எதிர்ப்பு குறைந்து வருகிறது' என்று அரசர் கூறி வாயை மூடுமுன், எதிரிகளின் எண்ணமே திரண்டு உருவான 'இந்து'வும், 'பாரததேவி'யும் தங்களின் நாற்றமடைந்த வாயைத் திறந்து ஊளையிட ஆரம்பித்து விட்டன. அதை அரசரோ, தமிழர்களோ கண்டு அஞ்ச வேண்டுவதில்லை. நீண்ட நாட்களாகத் தமிழர்களை அடக்கி ஆண்டு வந்த ஆணவமே அவர்களை அகங்காரத்தோடு எழுதச் செய்கின்றது. ஆனால் தமிழர்கள் விழிப்புக் கொண்டுவிட்டனர். தங்களின் உரிமைகளைப்பெற எவ்விதத் தியாகமும் செய்யத் தயாராக இருக்கின்றனர். இதை இந்தி எதிர்ப்பின்போது நிரூபித்துக்காட்டி விட்டார்கள். எனவே எதிர்ப்பை ஒரு சிறிதும் கவனியாது தமிழர்களை ஆக்கவேலையில் ஈடுபடும்படி கேட்டுக்கொள்கிறோம்

மாநாட்டைத் திறந்துவைத்த செட்டிநாட்டரசர் நிகழ்த்திய சொற்பொழிவு பொன்னேபோல் போற்றுதற்குரியது "தமிழிசை இயக்கம் தூயகலை இயக்கமே. அதில் அரசியல் கலப்பே இல்லை. ஜாதிப் பித்தமும் இல்லை. சமஸ்கிருதத்தையோ தெலுங்கையோ நாம் வெறுக்கவில்லை. தமிழிசை இயக்கம் அரசியல் சூழ்ச்சியல்ல வென்பதை அழுத்தமாய்ச் சொல்லுகிறேன். இசை எவர் மிராசு

மல்ல. தமிழிசை தமிழரின் பொதுச் செல்வம்'' என்று கூறிய பொன்மொழிகள் தமிழர்களின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு விட்டன எதிரிகளையும் ஒப்புக்கொள்ளும்படி செய்துவிட்டன.

தலைவர் டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் தம் தலைமையுரையை நிகழ்த்தும் பொழுது 'தமிழ் நாட்டிலுள்ள பண்களின் தெளிவையும் வேறுபாடுகளையும் கண்டு அதிசயிக்காத வர்கள் கிடையாது. வட இந்தியாவிலிருந்த பூர்வ மக்களும் அதிசயித்தவர்களாய்த் தங்கள் நாட்டிற்கே அவைகளைக்கொண்டு போயிருக்கிறார்கள். பெயர்களை எப்படி எப்படியோ கொடுத்துக் கொண்டார்கள்'' என்று கூறினமை ஆராய்ச்சியுடையதாகவு மிருந்தது. பின்னரும், பாட்டுக்கள் தமிழில் இருந்தால் மட்டும் போதாது. தமிழிசைப் பண்போடு கூடியதாக இருக்கவேண்டும் என்று கூறியதை நாம் மனமார வரவேற்கின்றோம்.

பிறகு சர் ஆர். கே. சண்முகஞ் செட்டியார் அவர்கள் தமிழ் இசையை ஆதரித்துப் பேசுகையில் ''எந்நாட்டிலும் கேட்கப் படாத புதிய எதிர்ப்புகளெல்லாம் இந்தத் தமிழ்நாட்டில் தான் கேட்கப்படுகின்றன. உத்தியோகம் வேண்டுமானால் இங்கிலீஷ் படிக்கவேண்டும். கலியாணமோ கருமாதியோ செய்ய வேண்டுமானால் சமஸ்கிருதம் படிக்கவேண்டும். அரசியல் வாதி யாக ஆகவேண்டுமானால் இந்திமொழி படிக்கவேண்டும். சங்கீதம் தெரிந்து கொள்ளவேண்டுமானால் தெலுங்கு படித்தாகவேண்டும். இத்தகைய நிலையில் தமிழ் எங்ஙனம் வளரும்?'' என்று மனம் வருந்திக் கூறிய வார்த்தைகள் தமிழ் மக்களைத் தட்டி எழுப்புவ தாக இருந்தன. குளம், குட்டைகளுக்குள்ளே கிடந்து பிறநாட்டு வளப்பம் இன்னதென்றறியாது, அறிந்தார் போன்று காட்டிக் கொண்டு நாட்டையாள விரும்பும் கிணற்றுத் தவளையல்ல சர். சண்முகம். உலக வளப்பமனைத்தையும் நன்கு அறிந்து தன்னாட்டின் நலனையும் நன்கு ஆராய்ந்து, தாய்மொழிப் பற்றினால்தான் தாய்நாட்டுப் பற்று வளரும்; தாய்மொழிப் பற்றின்றி தாய் நாட்டைக் காப்போம் என்பது முட்டாள்தனமேயன்றி வேறல்ல; ஆதலின், தமிழை — தமிழிசையை – தமிழ்க் கலையை — வளர்க்க வேண்டுமென்று அரும்பாடுபட்டு வருபவர் சர். சண்முகம் அவர்களேயாகும்.

சி. இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் தமிழிசையை ஆதரித்துப் பேசுகையில் தமிழ்நாட்டில் உள்ளவர்கள் தமிழில்

பாட்டுக்களைக் கேட்க விரும்புவது இயல்புதான் என்றும், கர்நாடக இசையை வைத்துக்கொண்டு தமிழில் பாடவேண்டுமென்பதுதான் இச்சங்கத்தின் நோக்கமென்றும், இசைவாணர்களை தமிழில்தான் பாடவேண்டுமென்று கட்டாயப்படுத்துவது சரியல்லவென்றும், நாளடைவில் இந்நிலை மாறியாக வேண்டுமென்றும் தனக்கே புரியாத இரண்டொரு குட்டிக் கதைகளைக்கொண்டு தமிழ்ப்பாட்டு களை ஆதரிக்கவேண்டும் என்றும் கூறி முடித்தார். அவர் கூறிய கருத்தின் தெளிவு அவர் அணிந்திருந்த கண்ணுடி போன்றிருந்தது. சுருக்கமாகக் கூறவேண்டுமானுல் அவர் தமிழ்ப்பாடல்களை ஆதரித்தார். தமிழ்ப்பண்களை, தமிழிசையை ஆதரிக்கவில்லை யென்றே கூறலாம்!

ஆச்சாரியார் பேசுவதற்கு முன்பு மாநாட்டுத்தலைவர் தமது பேச்சில் தமிழிசை வேண்டுமென்று சொல்லும்போது, "ஏதோ பாஷைமட்டும் தமிழில் இருந்தால் போதும் என்பதல்ல. பூர்வ மான தமிழ் நாட்டு இசைப் பண்போடு கூடி உயர்ந்த உணர்ச்சி பாவங்களோடு கலந்ததாக சங்கீதம் இருக்கவேண்டும் என்பதே நமது கொள்கை" என்று கூறியவை இவர் செவியில் ஏறவில்லையா? என்று கேட்கின்ருேம். இது வேண்டுமென்றே கருத்தை மாற்று கின்ற குறும்புத்தனமேயன்றி வேறல்ல வென்றே நினைக்கிருேம். தமிழிசை இயக்கத்தில் அரசியல் இல்லை என்பது உண்மை. ஆனுல் சி. ஆர். தமிழிசையை ஆதரிப்பதிலேதான் அரசியல் இருக்கின்றது. தமிழர்களைத் தனியாகவும் விடமாட்டார்கள்; ஒன்று சேர்ந்து வாழவும் விடமாட்டார்கள் சி. ஆர். போன்றவர்கள். இவற்றை யெல்லாம் நன்கு ஆராய்ந்து அதற்கேற்றவாறு இசைச்சங்கத்தார் நடப்பார்களென எதிர்பார்கின்ருேம்.

இன்று சென்னையில் நடைபெறும் தமிழிசை மாநாடு இசைச் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும்படியான சிறப்பைப் பெற்றுவிட்டது. இம்மாநாட்டு ஏற்பாடுகள் எல்லாம் இளைய ராஜா சிதம்பரம் செட்டியார் அவர்கள் நேர்ப் பார்வையில் இருந்து வருவதைக் கண்டு சந்தோஷமடைகிருேம். ஏன்? மகாநாட்டின் வெற்றிக்குரிய பெருமைகள் யாவும் இளைய ராஜா சிதம்பரம் செட்டியார் அவர்களுக்கே உரியனவாகும்.

வாழ்க தமிழிசை!

—'தமிழ் உலகம்' 26–12–43

சங்கீதமும் பாஷையும்

தமிழிசைச் சங்க ஆரம்ப விழாவிலே ராஜா சர். அண்ணுமலை செட்டியார் அவர்கள், தமிழ் இசை இயக்கம் சம்பந்தமாகத் தம்முடைய கருத்தை வற்புறுத்திச் சொல்லி, அரசியலுக்கும் இந்த இயக்கத்திற்கும் கொஞ்சங்கூடச் சம்பந்தம் இல்லையென்று, மற்ற சமஸ்கிருதம், தெலுங்கு பாஷைகளிடம் வெறுப்போ துவேஷமோ கிடையாதென்றும் கூறினுர். இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கமே பெருவாரியான தமிழ்மக்கள் தங்கள் தாய்மொழியில் சங்கீதத்தை அனுபவிக்கச் செய்வதென்பதுதான் என்று சொன்னுர். ஆனுல், அங்கு நடந்த பிரசங்கங்களும், தீர்மானங்களும் அதற்கு மாருயிருக்கின்றன. திருச்சி ரேடியோ நிலையத்திலே தமிழ்ப் பாட்டுக்களுக்கு நூற்றுக்கு எண்பது வீதம் கொடுக்க வேண்டுமென்றும், பாடகர்கள் ஆரம்பத்திலும் முடிவிலும் தமிழிலேதான் பாடவேண்டும் என்றும், பொதுமக்கள், தமிழிலே பாடவேண்டும் என்ற இயக்கத்திற்கு ஆதரவுதர வேண்டுமென்றும், சங்கீத சபைகள் தமிழிலேதான் அதிகமாகப் பாடவேண்டுமென வற்புறுத்த வேண்டுமென்றும் தீர்மானத்தில் கோரப்படுகிறது.

இராஜா சர் அண்ணுமலை செட்டியார் அவர்கள் 'அரசியல்' என்று குறிப்பிடுவதன் அர்த்தம், இந்த சந்தர்ப்பத்தில் என்ன என்பது நமக்கு விளங்கவில்லை. அந்தத் திருத்தமான தீர்மானங்கள் சங்கீதத்தை ஒரு கலையாகப் போற்றுவதற்கு அநுகூலமாக இல்லாதது மட்டுமல்ல, கலைவளர்க்கும் பொதுச் சபைகளை நிர்ப்பந்தப்படுத்தும் காரியமாகவும், சங்கீதத்தைக் கேட்பவர்களின் பொறுமையை இழக்கச் செய்வதாகவும் இருக்கின்றன. (ஏற்கனவே சில ஆதாரங்களையும் பார்த்தோம்.) இது, சந்தேகத்திற்கு இடமான ஒரு நல்ல பிரசாரமாயிருந்தாலும், இந்தக் கட்டாயத்தினுல் எத்தனையோ வீண்வம்பும், சண்டை சச்சரவும் உண்டாக இடமேற்படுகிறது. வேற்றுமைக்கு இடமில்லை, ஒற்றுமையை வளர்ப்பதே நோக்கம் என ராஜா சர் அண்ணுமலை செட்டியார் நம்பினுலும் உண்மை அப்படியில்லை.

தமிழிசை விழாவிலே கலந்துகொண்ட பிரசங்கிகள், தங்களுக்கு மற்றவர்களைவிட சங்கீதத்தின் புனிதத்திலும் உயர்விலும் உள்ள ஆர்வத்தைக் காட்டிக்கொள்வதற்காக, சங்கீதத்தை அக்கு அக்காகப் பிய்த்து ஆராயத் தொடங்கிவிட்டார்கள். கானல்நீர் போன்ற ஆராய்ச்சிதான்! சர். ஆர். கே. சண்முகம் செட்டியாரைப்போல் அதி தீவிரப்போக்கை யாரும் பின்பற்றுவதற்குத்

தயாராக இல்லை. மியூசிக் அகாடமியிலே சர். இராதாகிருஷ்ணன் சங்கீதத்தின் அடிப்படையான நோக்கத்தைப்பற்றிச் சொன்னதை, தாமும் அப்படியே ஒப்புக்கொள்ளும் விசித்திரமான தம் அபிப் ராயத்தைக் குறிப்பிட்டார். சங்கீதமானது ஆத்ம திருப்தியின் அற்புதமான புற வெளியீடு என்பதே சர். இராதாகிருஷ்ண னுடைய பிரசங்கத்தின் சாரம். "தன்னை மறந்த லயத்தில் பிறப்பதே சங்கீதம். நம்மை யறியாது உள்ளத்திலே கனிந்து பொங்கும் உணர்ச்சியே சங்கீதம். பரம்பொருளின் அருளோடு கலக்க மனிதன் கண்ட ஒரு சாதனையே சங்கீதம்." அந்தராத்மாவின் உத்வேகமே கலைஞன் கற்பனைக்கு மூலாதாரவித்து; மற்றவர்கள் கேட்கட்டும் என்பதோ மகிழட்டும் என்பதோ அவன் நோக்கம் அல்ல. ஆனாலும், எந்த ரசிகனாவது உண்மையான மகிழ்ச்சி கலைஞனுடைய செய்கையால் அடைந்தான் என்றால், அந்த ரசிகனுடைய மனமும் கலைஞனுடைய உள்ளத்தைப் போலவே பக்குவம் பெற்றிருக்கிறது. ரசிகனுக்கும் அந்த ஆனந்தத்தில் பங்கு உண்டு.

சர். ஆர். கே. சண்முகம் செட்டியாருக்கு இந்த விஷயங்க ளெல்லாம் புரியாமல் இருப்பதோடு, மேலான சங்கீதம் இன்னது என்பதிலும் அவருக்கு சிரத்தையே இல்லைபோல் இருக்கிறது. "தமிழிலே மேலான சங்கீதம் இருக்கிறதோ இல்லையோ எனக்குத் தெரியாது. இப்போது இருப்பதே போதும். எனக்கு வேண்டியது தமிழ் சங்கீதம் தான்" என்று கவலைப்படாமல் குறிப்பிட்டார். இதற்காக வேறு எந்தக் காரணமும் சமாதானமும் சொல்ல அவர் தயாராக இல்லையாம். மனத்தைத் திறந்து இப்படிச் சொல்வது ஒரு முறைதான். ஆனாலும் இந்தக் காட்டுமிராண்டித் தனத்தைக் கண்டு வருந்தாமல் இருக்க முடியவில்லை. இராதா கிருஷ்ணன் சொல்வதற்கும் இதற்கும் நேர் எதிர்தான். இந்த மாதிரியே அபிப்ராயமுடைய ஆங்கிலேயர்களும் இருக்கலாம். அவர்களுக்கு, பாக், (Bach) பிதோவன் (Beethoven) முதலான வர்கள் உயர்வாக ஜெர்மனியிலே பாடியிருந்தாலும், அந்த ஜெர்மன் பாடல்களைப் பாடப்பிடிக்காமல் மொழிப்பற்று காரண மாகத் தாய்மொழியிலுள்ள சுத்த அபத்தமான, கோமாளித் தனமான பாட்டுகளைப் பாராட்டத் தோன்றலாம். ஆனாலும், இங்கிலாந்திலுள்ள ஒருவர்கூட இந்த மாதிரி ஒரு "சங்கீத நிர்ப்பந்தம்" உண்டுபண்ண அவர்களை விடமாட்டார்கள்.

தமிழ் சங்கீதம் என்பது என்ன என்பதைப்பற்றி இந்தத் தலைவர்களுக்குள்ளேயே ஓரே தரமான அபிப்பிராயம் இருப்

பதாகத் தெரியவில்லை. தலைமை வகித்த திரு. சிதம்பரநாத முதலியார் அவர்கள் சங்ககாலப் பண்களே தற்கால ராகங்கள் எனச் சொல்வதோடல்லாமல், எப்போதோ ஒரு காலத்தில் வடக்கேயிருந்து வந்த சிலர் தமிழிலும் இசையிலும் ஈடுபட்டு, அப்படியே நம் சங்கீதத்தைத் தங்களோடு கொண்டுபோய், பிறகு தங்களுக்கு உரியதாக்கி, தம்முடைய பண்களுக்கு புதுப்புதுப் பெயர்களைக் கொடுத்து, மறுபடி நம் தலையில் அவைகளைச் சுமத்த ஆரம்பித்து விட்டார்கள் என்பதை, நாமெல்லோரும் நம்ப வேண்டுமென்று சொல்கிறார். ராஜா சர். அண்ணாமலை செட்டியார், விஷயத்தை இப்படி அலசி ஆராயாவிட்டாலும், சங்க காலத்திலிருந்து இது வரையில் எத்தனையோ அரிய பாடல்களுடன் இசையுலகம் வளம் பெற்றிருக்கிறது என்பதனால் மிகவும் திருப்திப்பட்டுக் கொள்கிறார். ஆனால், தமிழ் இலக்கியத்திற்குப் புதிதாகச் சூடும் புதுப்பாடல்களைப்பற்றிக் குறிப்பிடுகையில் ராஜா சர். ''நம்மிடையே வாழும் சிலர் சுலபமாகப் புதுப் பாடல்களை இயற்றும் சக்தி யுடையவர்களாக இருக்கிறார்கள்'' என்று சொல்லும்போது தேவார, பிரபந்தங்களைப் பாடிய மகான்களின் உயர்வைச் சற்றும் சிந்தித்துப் பார்க்கவில்லை என்பது வெட்ட வெளிச்சமாகிறது அந்த மகான்கள் சங்கீத வித்வான்கள் அல்ல. சங்கீதத்துக்காகவோ அல்லது சங்கீதத்தை அனுபவிக்கட்டும் என்றோ தங்கள் பாடல்களைப் பாடவுமில்லை. பொது மக்களின் உள்ளத்தை அப்பாடல்கள் கொள்ளை கொண்டபடியால் சில சங்கீத வித்வான்கள், எல்லாரும் ஆனந்தப்படட்டும் என்பதற்காக அவைகளைப் பாடி வரலானார்கள். மற்றவர்களைப் போல் சொல்லாமல், இராஜகோபாலாச்சாரியார் ''சங்கீதம், கவிதையிலிருந்து வேறுபட்டது. தவிர, கர்நாடக சங்கீதம் தனியாகப் போற்றப்பட வேண்டியது என்பதை உணர்ந்து மிகவும் தெளிவாகக் குறிப்பிட்டார். மேலும் அவர் தமிழிசை இயக்கம் கர்நாடக சங்கீதத்தைப் பலப்படுத்தவே ஏற்பட்டதென்றும், பாடும்போது தமிழுக்கு முக்கியத்வம் அளிக்க வேண்டுமென்ற நோக்கத்தையும் சொன்னார். ஆனால் இந்த இயக்க ரசிகசிகாமணிகள் சிலர், வாத்தியங்களின் மூலமாகக்கூட தமிழ்ப் பாடல்களையே வாசிக்கவேண்டும் என்று வற்புறுத்தும் எல்லை வரைத் தங்கள் ஆர்வத்தைச் செலுத்தியிருக்கிறார்கள் என்பது இவருக்குத் தெரியாமல் இருக்கலாம். 'புது முயற்சிக்கு இடமளித்தால்தான் பழங்கலைகள் நிற்கும், இல்லையானால் மறைந்து போகும்' என்று சொல்லும் அவர், ''இந்த மாதிரி காரியம் தமிழிலும், தமிழ் நாட்டிலுமே தான் நடக்கும்'' என்று விவாதிப்பது முன்னுக்குப்

பின் மிகவும் முரணுக இருக்கிறது. தமிழ்நாடு இதற்குமுன் இப்படிப்பட்ட ''தனியுடைமையை''க் கண்டதே இல்லை! வருங்-காலத்திலும் தமிழ் நாட்டின் அனுதாபம் இந்த மாதிரி குறுகிய முறையில் போகப் போவதுமில்லை. இந்த வழிகளினுல்தான் மனக்கசப்பு உண்டாகிறது. இப்படி, கவிஞருடைய கற்பனுசக்திக்கு அணை கோலுவது நடக்காத காரியமாகும். கேட்பவர்களை மனத்தில் வைத்துக்கொண்டே கீதம் இசைக்கப்பட வேண்டுமென்பது திரு சிதம்பரநாத முதலியாருடைய இன்பகரமான கனவுகளில் ஒன்று. உதாரணமாகத் தெலுங்கில் பாடிய மேதாவிகள் எல்லாம் அந்த பாஷையில் கேட்பவர்களை ஞாபகத்தில் வைத்துக்கொண்டே அவர்களை மகிழ்விக்கப் பாடல்கள் இசைத்தார்களாம். நல்லது, இரண்டொரு உதாரணங்களை இங்கு சொல்வது குற்றமாகாது என எண்ணுகிறேம். சமஸ்கிருதம் வழக்கொழிந்த பல வருஷங்களுக்குப் பிறகுகூட அந்தப் பாஷையிலே ஜெயதேவரும் தீர்த்த நாராயணரும் பாடல்களை இயற்றினர். தமிழ்நாட்டில் பிறந்த தெலுங்கு தியாகராஜர் தம்முடைய சிஷ்யர்களும், அன்பர்களும் பெருவாரியாகத் தமிழராயிருந்தபோதிலும், தெலுங்கிலேதான் பாடல்களை இயற்றினர். புரந்தரதாஸ் பிறப்பிலே மகராஷ்டிரராக இருந்தும் கன்னடத்திலே பாடல்களை இயற்றி, நாட்டின் பல பாகத்திலிருந்து பண்டரிபுரம் வரும் பக்தர்களுடைய உள்ளங்களைக் கனியச் செய்தார். மீராபாயும், கபீரும் பாடிய பாடல்கள் அப்பாஷை தெரியாத எத்தனையோ மக்களை நூற்றுக் கணக்கான வருஷங்களாகப் பரவசப்படுத்தி வந்திருக்கின்றன. முன் காலத்தைப்போல் அல்லாமல் இப்போது எல்லோரும் சங்கீதத்தை அனுபவிக்க வேண்டி இருப்பதனுல், பாஷைப் பிரச்னை பிராபல்ய மடைந்து விட்டது என்று சொல்வது இன்னெரு தவறுன காரணமாகும்.

கூட்டமாக ஈடுபட்டு ஆனந்திக்கும் பஜனை எவ்வளவோ காலமாக நம்மிடையே இருந்து வருகிறது. இப்படிப் பெருவாரியாக எல்லோரும் ஈடுபட்டு ஆனந்திக்கும் பஜனையிலே பாஷைப் பிரச்னைக்கு இடமே இருந்ததில்லை. மற்றெரு தவறுன அபிப்பிராயம் என்னவென்முல், இப்போதிருக்கும் சில சங்கீத வித்வான்கள் தமிழ் இசையை ஆதரிக்காத காரணம், அவர்களுக்கெல்லாம் தெலுங்குப் பாட்டைத் தவிர வேறு தெரியாதென்பதும், இனிமேல் தமிழைக் கற்றுப் பாடுவதென்பதைப்பற்றிய சிந்தனையே அவர்களுக்கு உதிக்காத சோம்பலும்தான் என்று சொல்வதாகும். ஒரு வார்த்தையில் சொல்லப்போனுல் இது பெருத்த அபாண்டம்.

தமிழ் இசை இயக்கத்தைப்பற்றிய சிந்தனையே தோன்றுவதற்கு முன்பிருந்தே, தமிழ்ப் பாட்டுகள் (கோபால கிருஷ்ண பாரதி, கவிகுஞ்சர பாரதி, ஆனந்த பாரதி, அருணாசலக் கவி, முத்தாண்டவர், தம்மிடையே வாழும் தற்காலக் கவிஞர் ஒருவருடைய ஆரம்பகாலப் பாட்டுகள் முதலியன) கச்சேரிகளில் தவறாமல் தகுந்தபடி பாடப்பட்டு வருகின்றன. ஆனால், அவைகள் எல்லாம் கச்சேரியின் முடிவிலே பாடப்பட்டு வந்தன என்ற குற்றம் சாட்டுகிறவர்கள், அந்தப் பாட்டுகளிலே சங்கித வித்வான் தம் ஞானத்தைக்காட்ட, ராக விஸ்தாரத்திற்கு இடமில்லை என்பதையும், அவைகள் இனிமையாயிருந்த போதிலும், அந்த முறையில் பாடுவதுதான் சரியானது என்பதையும் உணரத் தவறி விடுகிறார்கள். கர்நாடக சங்கீதத்திலே மனோதர்மம் முக்கிய அம்சம். பாடகரும், வாசிப்பவரும், முக்கிய ராகங்களின் அழகிய அம்சங்களை வெளிப்படுத்த விரும்புவதால், அதற்கிசைந்த பாடல் களே அவர்களைக் கவர்கின்றன. அம்மாதிரி பாடல்களில்தான் தங்கள் மனோதர்மத்தையும், கற்பனையையும் செலுத்தி சஞ்சாரம் செய்ய இயலும். தமிழைத் தவிர மற்ற பாஷைகளில்தான் அப்படிப்பட்ட பாட்டுகள் இருக்கின்றன. பாடல்கள் தங்கள் முழு நேரத்தையும் தமிழுக்கே தந்து விடாமல் இருப்பதற்கு இதுதான் காரணம். மற்றபடி சோம்பல் என்று சொல்வதும், உற்சாகம் இல்லை என்று சொல்வதும் கொஞ்சங்கூடப் பொருந்தா. வருங் காலத்திலே சிறந்த சாகித்ய கர்த்தாக்கள் தமிழரிடையே தோன்றி இக்குறையைப் பூர்த்தி செய்வார்களாக! தமிழ் இசைத் தலைவர்கள் சிலர், நம்மிடையே பல மேதைகள் தற்போது தோன்றி யிருக்கிறார்கள் என்றும் போதுமான அளவு திருப்தி தரும் பாடல்கள் இயற்றியாகிவிட்டதென்றும் சொல்லிக்கொண்டு தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்கிறார்கள். ஆனால், தமிழிலும் அரிய சாகித்ய கர்த்தாக்கள் தோன்ற வேண்டுமானால், அந்த மகான்கள் பாடிய வழியிலே சென்று, அவைகளை மனங்குளிர பாடி, பொதுமக்கள் அவைகளைக் கேட்டு மனப்பக்குவம் அடையும்படி செய்வதேதான் உண்மையான சங்கீதப் பயிற்சிக்கு உகந்தவழி. அதைவிட்டு, கலையின் சிகரத்தை அடையக் குறுக்குப் பாதை ஒன்றும் கிடையாது. அதோடு மகாணப்பித்திற்கும் இதில் இடமில்லை.

— 'ஹிந்து' 25-12-43

" ஒரு வக்கிர விமர்சகரின் குறுக்குப் பாய்ச்சல்

கிறிஸ்துமஸ் தினத்தன்று, நமது '' காலைத் தினசரி '' ஹிந்து சோகந்ததும்ப ஒரு தலையங்கம் எழுதியிருக்கிறது. அம்மாதிரி யான தலையங்கம் இக்காலத்தில் ஒருவரும் எழுதுவது கிடையாது. பழைய காலத்தில் தர்க்க ரீதியற்ற டாம்பீக நீதித் தீர்ப்புகள் அனேக விஷயங்களைப்பற்றி முடிவு கட்டப்பட்டிருந்தன. அவை களுடன் இத்தலையங்கத்தின் அபிப்பிராயத்தையும் சேர்த்து விடலாம். ஏனெனில் டாம்பீகத்தை டாம்பீகத்துடன்தானே சேர்க்க முடியும்! நமது தாய்நாட்டைப்பற்றி ஹிந்து பத்திரிகையின் நோக்கம் என்ன என்பது நமக்குத்தெரிந்த விஷயமே. ஒரு சமுதாயத்தை அழுத்துவதும், ஒரு 'உரிமை'க் கூட்டமே முன்னேற்றமடைய முயற்சிகள் பல செய்வதும் இந்த ஹிந்துவின் வெகுநாளைய கொள்கை என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். ஹிந்து இம்மாதிரியான தலையங்கம் எழுதியிருப்பது கண்டு நாம் சந்தோஷம் அடைகின்றோம். ஏனெனில் இம் மாதிரியான தலையங்கம் குருடனுக்குப் பார்வையையும், செவிடனுக்குச் சரியான செவியையும், ஊமைக்கு நாவன்மையை யும் கொடுப்பதுபோல், தூங்கிக்கொண்டிருக்கும் பலரைத் தட்டி எழுப்பும் இந்தத் '' தமிழிசை இயக்கம் '' ஒரு பெரிய மறுமலர்ச்சி இயக்கத்தின் ஒரு சிறு நிலையேயாகும். தமிழர்களைத் தட்டி யெழுப்பும் இத் 'தமிழிசை இயக்கத்'தை, 'உரிமை' கொண்டாடும் கூட்டத்தினர் பகிஷ்கரிப்பது சகஜந்தானே! முன்னேற்ற வேகம், தங்களைப் பாதாளத்தில் தள்ளிவிடுமோ என்று இவர்கள் பயப்படுவதும் நியாயந்தானே. தமிழ் மொழியையே தாய்மொழியாகக் கொண்ட ரசிகர்கள் பெரும் பாலோர் நிறைந்த கச்சேரிக் கூட்டங்களில், கச்சேரிகள் ஆரம் பிக்கும்போதும், முடிக்கப்போகும்போதும் தமிழ்ப் பாட்டுகளையே வித்வான்கள் பாடவேண்டும் என்று தமிழிசை மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானமும், திருச்சி அகில இந்திய வானொலியில் நிறைய தமிழ்ப்பாட்டு நிகழ்ச்சிகளையே நிரப்ப முயலவேண்டும் என்று அதே மகாநாட்டில் நிறைவேறிய மற்றொரு தீர்மானமும் அரசியல் சூழ்ச்சிகளே தவிர வேறொன்றுமில்லையென்று கூறப்படு கிறது. இதன் மூலம், நமது '' காலைப் பத்திரிகை '' தன் அறிவின் உச்சத்தை நன்கு வெளிக் காட்டுகின்றதல்லவா! நமது '' கர்நாடக கால காகிதப் பத்திரிகை '' எழுதுவதையெல்லாம் இதுவரை நாம் பொறுத்தே வந்திருக்கின்றோம். ஏனெனில், காலதேவன் எவ்வளவு தூரம் அநேக மனிதர்களின் மூளையையும்

அறிவையும் குழப்பி விட்டிருக்கின்றான் என்பதை நாம் நன்றாக அறிவோம்.

இந்தப் பத்திரிகையின் கண்ணுக்குத் 'தமிழிசை இயக்க'மே மறுமலர்ச்சி சிருஷ்டியின் அச்சமாகத் தோன்றாது, ஓர் அரசியல் சூழ்ச்சியாகத் தோன்றுகிறதோ என்னவோ! மறுமலர்ச்சியின் வேகம் தமிழ் நாடெங்கும் காட்டுத் தீப்போல் பரவி வருவது இப்பத்திரிகைக்குத் தெரியவில்லைபோலும். இதைப் பற்றிய தாரதம்மியங்கள் வெகுவாக இருக்கின்றன வென்று அறிவாளி யான ஒரு விமர்சகர் கூறலாம். ஏனெனில், அசாதாரண எதிர்ப்புகள் சகஜமாகி விட்டபடியால், கேட்க வேண்டியவற்றை அதிகமாகவே கேட்க வேண்டும் என்ற மறைபொருளையும், விமர்சகர் அறிந்தே கூறியிருக்கலாம். இசையைக் கலையாகக் கருதி அதற்குரிய சேவைகளைப் புரியும் பொது ஸ்தாபனங்களில், வானொலி நிலையமும் ஒன்றாக இருக்கிறதா இல்லையா வென்பது நமக்குத் தெரியாது. ஆனால் நமது சகோதரப் பத்திரிகைக்கு இத்தகைய ஸ்தாபனங்கள், தமிழில் பாடும் இசைவாணர்களைக் கசக்கிப் பிழிய முயற்சிகள் பல செய்து வருவது நன்கு தெரியும். இசைவாணருக்குச் சுதந்திரம் வேண்டும் என்று இப்பத்திரிகை கூறுகிறது. ஒருசில சங்கீத ரசிகர்களைக் காட்டிலும், வானொலி, இசையரங்கு முதலிய ஸ்தாபனங்களை நிர்வகித்து வருபவர் களுக்குத்தான், இது கண்டு சகிக்க இயலாததாயிருக்கின்ற தென்று இப்பத்திரிகை நன்கு உணர்ந்திருக்க வேண்டும். வெறும் வார்த்தை வேட்டுச் சித்தார்த்தியார் சர் இராதா கிருஷ்ணன், "இசை மேதையானது; ஆனந்தலயத்தில் இதய பாவத்தோடு நித்ய வஸ்துவுடன் உறவு கொண்டாடுகிறது" என்று சொல்லுகிறாரே, அந்த விவகாரமெல்லாம், இசை விற்பன்னர் களுக்கு இன்று சற்றும் கிடையாது என்பது ஹிந்து பத்திரிகைக்குத் தெரியாதா? சங்கீத அகடாமிகள், சபைகள், இவற்றின் நிர்வாகிகளும், அகில இந்திய ரேடியோ நிர்வாகஸ்தர்களும்தான் தாங்கள் வகுக்கும் இசைத் திட்டங்களில், தமிழிசையைப் புழைக்கடையில் தள்ளிவைத்திருக்கிறார்கள்

தமிழிசை மகாநாடு நிறைவேற்றியுள்ள தீர்மானம் நமது அகாடமி நிர்வாகிகளிடம் காணப்படும் சமூக விரோத மனப் பான்மைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கம் கொண்டது. இந்த நிர்வாகிகள்தான் இந்த மண்ணில் பிறந்த மக்களை நசுக்குவதற் காகச் சென்ற 10 ஆண்டுகளாக, இந்த ஸ்தாபனங்களை

உபயோகித்து வந்தனர் ஹிந்து பத்திரிகைக்கு இவர்கள்தான் இசையில் அரசியலை நுழைக்கிறுர்களென்ற ஞானேதயம் பிறந்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட அயோக்கிய சிகாமணிகளை ஒடுக்கி, தமிழிலேயே பாடவேண்டுமென்ற ஒரு சீர்திருத்த இயக்கத்தை ஸ்தாபித்திருக்கிறேம். நமது 'காலைப் பத்திரிகை' எப்பொழுதுமே முறையான சித்தார்த்தங்களைத் தாங்கிப் பிடிப்பது போல, வேஷம் போட்டு வந்திருக்கிறது. ஆனுல் உண்மையில் பார்க்கப்போனுல், அதன் வாதமும் போலி! வேஷமும் போலி!

இசை அகாடமியில், சர். இராதாகிருஷ்ணனுடைய பஞ்சப் பாட்டு, இதற்கு ஏதோ சில சமாச்சாரங்களை எடுத்துப் பேச சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறது. ஆனுல், சர். இராதகிருஷ்ண னுக்கே, தான் என்ன பேசிக்கொண்டிருந்தோமெனத் தெரியுமோ என்னவோ? இசை என்பது தனிப்பட்ட ஜீவனின் குரல் என்று அவர் சொல்லிக்கொண்டிருந்தது, அவருக்கும் சிருஷ்டிக் கலைக்கும் வெகு தூரம் என்பதையே காட்டுகிறது.

இசைவாணன் தனித்துப் போனவனல்ல—அவனது இசை தனித்துப்போன ஜீவனுடைய குரலும் அல்ல. இசை விற்பன்ன ரான பெர்லியோஸ் என்பவர் கூறுவதுபோல், பெரிய இசையை எழுப்புவதற்கு சித்தத்தின் புறவாசல்களான, சகல புலன் அறிவு களின் மூலம், வாழ்வின் பிரக்ஞை சற்றும் பிறழாமல் இருக்க வேண்டும். உள் எழுந்த எக்களிப்பு நாடகபாணியிலே அவன் மனப்படுதாவில் விழுந்த காட்சிகளை, அநுபவங்களை, அப்படியே சொல்லிக் குவிக்கிறுன். இதுவே வண்ணமும் வடிவமும் பெற்று கண்ணைப் பகட்டுகிறது. உள்மன விசாரத்திலேயே தன்னை அமுக்கிக்கொண்ட இசை விற்பன்னன் புறஉலகைக் கவனிக்கிறு னில்லை. மறைமுகமாகவே வாழ்வு அவன் மனதைக் கெடுக்கிறது. மேலோட்டமாக வெளியுலக விவகாரத்திலேயே தொட்டுக் கொண்டு போகிறவன், புதுப்புது வசதிகளைப் பெறுகிறுன். அவன் பேரிசைச் சிகரத்தை எட்டாவிட்டாலும் நயமான துறை களிலே, நளினமான பாணியிலே இசை விருந்தான ஒரு கலவையை வடித்துத் தருகிறுன். அதிலே வாழ்வின் நாதமும், பின்னிப் பிணைந்த சிக்கல் அற்புதங்களும் தெளிவாகத் தென்படுகின்றன.

இங்கே தனிமை எது? வார்த்தை எது? அலையும் ஜீவன் எது? பெர்லியோ கூறுவதுபோல இந்தத் தனிக்காட்டு ஜீவன், மாதா கோயிலின் ஆதிக்கம் ஜாஸ்தியாக இருந்த சகாப்தத்தி

லேயேதான் தன்னை உணர்விக்க முயன்றது. அதில் அழகின் ஆழமோ, உணர்ச்சியான திண்மையோ கிடையாது. சீர்திருத்த இயக்கம், இறுகிப்போன பழைய வார்த்தைகளை உடைத்து எறியும் நோக்கத்தையே பிரதான நோக்கமாகக் கொண்டிருக்கிறது. தவறுகள் நிகழத்தான் செய்யும். இன்று ஆதிக்கம் செலுத்தும் கோஷ்டி இவர்களை நாசகாலிகள் என்று பெயரிட்டு அழைக்கும். இசையில் புதுமை வேட்கையும் நூதன ஆர்வமும் இருப்பது பழைமையைப் புறக்கணிப்பதாகவோ, முந்தியவர்களின் மேதையை உதாசீனம் செய்வதாகவோ கொள்ளக்கூடாது. சீர்திருத்த இயக்கங்களின் சரித்திரங்களைப்பற்றி, இப்போது ஆராய்ந்து கொண்டிருக்க நமக்கு அவகாசமில்லை. நமது சகா பத்திரிகை எடுத்ததற்கெல்லாம் மோஸார்ட் பீதொவன், பாக் முதலிய மேல்நாட்டு இசை சாம்ராட்டுகளைப்பற்றி, அடிக்கடி ஜபித்துக் கொண்டிருப்பதுதான் நமக்கு வேடிக்கையாக இருக்கிறது. இசை உலகின் பெரும் சீர்திருத்தங்களைப்பற்றி நாமும் சற்று அறிவோம். 'ஹிந்து' பத்திரிகையானது இசை நுணுக்கங்களைப்பற்றி சற்று தெரிந்துகொள்ள தன் புத்தியை உபயோகித்திருந்தால், இசையிலே வார்த்தைக்கு இது முக்கியம் கிடையாது என்று பிதற்றிக் கொண்டிருக்காது. மகானுன முஸார்ட், இத்தாலிய அப்பரா இசைவள முறையைப் பின்பற்றினவர். ஆனுல் அவர் ஜெர்மானிய மொழியில்தான் பாடினுர்.

'டை என்புரன்' என்ற ஸ்தாபனம் ஜெர்மன் நாடக இசையை வளர்த்து, இத்தாலிய ஆதிக்கத்தை அகற்ற, ஆரம்பிக் கப்பட்டது. அந்தக் காலத்தில் நல்ல காலமாக அங்கு ஒரு 'ஹிந்து' பத்திரிகை தோன்றவில்லை. இந்தப் பெரிய இசை வாணனையோ, அல்லது ஆஸ்ட்ரிய தர்பாரையோ, எதிர்த்துப் பேசிக்கொண்டிருக்க நற்காலமாக இந்தமாதிரி ஒரு வக்கரித்த மனப்பான்மைகொண்ட ஸ்தாபனம் இல்லை. இந்த விற்பன்னரின் மிக உயர்ந்த இசைகள் யாவும் அவரது தாய்மொழியில்தான் உரு வாயின. ஜனங்களும் அவரோடு கலந்து ஊக்கம் காட்டினுர்கள். சமீப காலத்திலே வெர்டி, ஸ்மெட்டான், ஒராக் முதலிய மகா வாணர்கள்கூட இதற்கு உதாரணமாவர்.

தம்மால் இயற்றப்பெற்ற பாடல்கள் வீணுகிவிடாவென்று திண்ணமாக இசைவாணர்கள் நினைத்திருந்தால்தான், அவர் களுக்குச் சுதந்திரம் உண்டாகும். "பூ மற்றவர் கண்டு களிக்காம லேயே மலர்கிறது." இதையறிந்த ஒருவர் பச்சாதாபப்படலாம்,

ஆனால் பாடல்கள் இயற்றிய பாவலர்க்கோ – அவரால் இயற்றப் பட்ட பாடல்களை ரசிகர்கள் கேட்க முடியாமல் பகிஷ்காரங்கள் பல நடந்தால் – அது அப்பாவலரின் வாழ்க்கையையே பாழ்படுத்தி விடுமல்லவா ? தமிழரின் சிறந்த சிருஷ்டி உணர்ச்சியையே நசுக்கிப் பாழ்படுத்த இந்த ஹிந்துவும், இதைப்போன்ற சில விஷம ஸ்தாபனங்களும் முயற்சித்து வருகின்றன. ஆந்திரர்கள் புத்துயிர் பெற்றெழ விரும்பினால், இவைகள் அவர்களையும் ஒரு கை பார்த்து விட எண்ணாது விட்டுவிடாது. இத்தகைய கொடிய பிரசாரத்தைத் தடுப்பதற்கேதான் - இசைவாணர்கள் தமிழில் பாட ஊக்கமளிப்ப தற்காகவும், ரசிகர்கள் தங்கள் தாய்மொழியிலேயே பாடல்களைக் கேட்டு ரசிப்பதற்காகவும் - இத் ' தமிழிசை இயக்கம் தோன்றி யிருக்கிறது ‘முன்னேற்றம்’ ‘முன்னேற்றம்’ என்று சொல்லிக் கொண்டு, இந்த ‘உரிமை’க் கூட்டங்கள் பல குற்றங்களைப் புரிந்து, பாவபண்டாரத்தை நிரப்பி வருகின்றன.

‘இசைக்கு மொழி முக்கியமல்ல. தோத்திரப் பாடல்கள் மொழி வேற்றுமை என்பதையே அறியாதவைகள்’ என்று கூறுவ தெல்லாம் சுத்தப் பிசகு. தோத்திரப் பாடல்கள் என்றால், பாடகன் எந்த பிராந்தியத்தில் வாழ்ந்து வருகிறானோ, அப் பிராந்திய மொழியிலேயே பாடல்களை அவன் இயற்றிப் பாடி வருவதும் தெரிந்த விஷயமே. பாடல்களைக் கேட்கும் ரசிகர் களுக்கு நன்கு விளங்க, அவர்கள்முன் கூறப்படும் மொழிகளில் பொருள் நிறைந்திருக்கவேண்டும். இசையின் அடிப்படை தெரிந்தது போல் போலிப் பாசாங்கு செய்வதினால் என்ன பிரயோஜனம்? உண்மையாகவே பொருளைத் தெரிந்துதான் அனுபவிக்க வேண்டும். கச்சேரி கூட்டங்களில் இசை. மரக்காலா? படியா? என்று கேட்கும் பல போலி ரசிகர்கள். தாங்கள் ஞான சூனியர்கள் என்பதை வெளிக்காட்டாமலிருக்க, கச்சேரி நடக்கும் போது தங்கள் தலைகளையும், கைகளையும் மனம் போனவாறு ஆட்டு கிறார்கள். இவர்கள் அக் கச்சேரிகளில் வீற்றிருப்பதே அலங்கோலக் காட்சியாக இருக்கிறது. இவர்கள்தான் இத்தூய தமிழிசை இயக்கத்தை எதிர்க்கப் பாடுபடும் ‘சேனை’யின் வீரர்கள் ! சர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்களுக்கு, தன் சமூகக் கூட்டத் தாரிடம் அவர்கள் தங்களைச் சீர்திருத்திக் கொள்ளவேண்டுமென்று புத்திமதிக்கூறப் போதிய தைரியமில்லைபோலும்! " வார்த்தைகள் மிக முக்கியம். அவைகள் இசைக்கர்த்தாவுக்கு இசை இயற்ற மூலாதாரமானவைகள். இசை உணர்ச்சிக்கும் பொதுமக்கள் உணர்ச்சிக்கும் ஒருவித சம்பந்தத்தை உண்டாக்குவன இவ்

வார்த்தைகள். வாழ்விற்கும் அத்தியாவசிய இணைப்புகள் வார்த்தைகளே இசை இலக்கணத்தை முக்யத்துவமாகக் கொண்டுள்ள பாடல்கள், வார்த்தைகளின் இணைப்புப்பற்றி நன்கு சோபிக்காது'' இம்மாதிரி ஒரு இசைக்கர்த்தா முன்பொருதரம் கூறியுள்ளார். இம் மண்ணில் பிறந்த மாந்தர், மிகப் பணிவுடன் தங்கள் இனத்தாரை தங்களுக்குத் தெரிந்த மொழியிலேயே பாட வேண்டுமென்று கேட்டுக்கொள்வது ஒரு குற்றமா ?

தியாகய்யரின் பாடல்கள் மிகவும் உயர்வானவையே சாகா வரம் பெற்றவையே. அதனால் அவைதான் இசை உலகின் கடைசி வார்த்தை என்று சொல்லிவிட முடியாது. நாளைக்கு ஆந்திர தேசத்தில் புதிய பெரிய இசைவாணர்கள் நூதனமான துறைகளில் புதிதான வகையில் தம் மேதை கண்ட அநுபவத்தை ஜீவ துடி துடிப்புடன் சொல்லக்கூடும். பழைய பாட்டுகளின் வளர்ப்பிலேயே இசையை இறுகவைக்கும் நோக்கத்தை நாம் கொண்டிருந்தால், நமது இசையானது வெறும் ஏட்டுச்சுரைக்காய் ஆகிவிடும். 'இந்த இயக்கத்தை ஆரம்பித்து வைத்தவர்கள் தற்காலத்தில் நம்மிடையே இசைப் பெருந்தகைகள் இருப்பதாக மனப்பால் குடிக்கிறார்களென்று நமது சகாப்பத்திரிகை சொல்லுகிறது. மனப்பால் குடிக்கும் விவகாரத்தில் நமது சகா வாக்கு. வசிஷ்டர் வாக்கு என்பதை நாமறிவோம். தமிழர்களிடையே அது மேதையைக் காண வேண்டுமானால் அந்தத் தமிழன் செத்து, சாம்பலாகி இருக்கவேண்டும் போலும்!

இந்த இயக்கத்தை ஒரு அரசியல் விவகாரமாக்கும் நோக்கம் கொண்ட சில கங்காணிகளும் உண்டு என்பதைத் தமிழிசை ஸ்தாபகர்கள் உணர வேண்டும். இசை இயக்கத்தை ஒரு அரசியல் விவகாரமாக்கும் நோக்கம் நமக்குக் கிடையாது. 'ஹிந்து'ப் பத்திரிகை அவ்வாறு கருதுமேயானால் விதைத்த வினையை அறுவடை செய்யவேண்டியிருக்கும். அதாவது கசப்பு, கண்ணீர், கஷ்டம் இம்மூன்றும் கலந்தது அது. எந்த இயக்கமும் ஆரம்பத்தில் சங்கடங்களை மேற்கொள்ளவேண்டியிருக்கும். தமிழிசையில் புதுப்பாணிகளை வகுக்க முயலுகிறவர்கள், உள்ள உதாரணங்களை புது மாதிரியான வார்ப்பில் கொடுக்க முயல வேண்டும். இயக்கம் தனது உயரிய நோக்கத்தை மறக்கக்கூடாது. ஜாக்கிரதையுடன் தவறாமல் அது நாலைந்து வருஷங்கள் வேலை செய்யுமானால், திறமைசாலிகள் பலர் புது வேலைகள் செய்வதைக் காணும். சுயநலமிகள், விஷமக்கார கங்காணிகள் இதுவரை நமது கலை,

வாழ்வைப் பாழ்படுத்தி வந்திருக்கிறார்கள். 'ஹிந்து'ப் பத்திரிகை தனது பழைய வேஷங்களை எல்லாம் களைந்து, தேசத்தின் உண்மை ஊழியனாக நமது நிழலிலே வேலை செய்யும் காலத்தை அவர்கள் காணுவார்கள்.

— 'லிபரேடர்' 25-12-43

வெள்ளத்திற்கு எதிரே துரும்பு!

தமிழர்களுக்கு, இசைக் கிளர்ச்சியில் எப்படிப்பட்ட பிரமாதமான ஆர்வம் இருக்கிறதென்பது சென்னையில் நடந்த தமிழ் இசை மகாநாட்டில் தெளிவாகிவிட்டது.

இம்மாதிரி கட்டுக்கடங்காத வேகத்தில் தமிழர்களின் மொழிப்பற்று பாய்ந்தோடும் இந்த நேரத்திலே, மைலாப்பூரில் ஒரு மூலையிலே இருந்துகொண்டு, ஒரு சங்கீத சபை சல சலப்புக் காட்டுகிறது.

என்னவென்றால், மைலாப்பூர் ரசிக ரஞ்சனி சபை என்ற ஸ்தாபனத்தின் வருஷாந்திர சங்கீத மகாநாடு சர். இராதா கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. அப்பொழுது, அந்த சங்கீத சபையும், சர். இராதாகிருஷ்ணனும் கூடி, தமிழ் இசைக் கிளர்ச்சி தவறானது என்று முடிவு கட்டினார்களாம்!

தமிழ் இசைக்கிளர்ச்சி தப்பா, சரியா, என்ற விபரத்தை தத்துவஞானி சர். இராதாகிருஷ்ணனோ, ஒரு சங்கீத சபையோ, சொல்லித் தெரிந்துகொள்ளவேண்டிய நிலையில், தமிழர்கள் இருக்கவில்லை.

இன்று தமிழருக்கு, தாய் மொழியில்தான் இசை வேண்டும் என்ற உணர்ச்சி அளவுகடந்து ஏற்பட்டிருக்கிறது. இந்த உணர்ச்சி, (இந்தியைப் பொது மொழி ஆக்குவதில் அபார அக்கறை கொண்ட) ராஜாஜி முதல், சாதாரணப் பாடகர் வரையில் பரவி இருக்கிறதென்றால், தமிழிசைக் கிளர்ச்சியின் செல்வாக்குக்கு வேறு ஆதாரம் கூறத் தேவை இல்லை.

இப்படிப்பட்ட சமயத்தில், தமிழுக்கோ, தமிழருக்கோ, தமிழ் நாட்டிற்கோ, எந்த விதத்திலும், எவ்வித சேவையையும் செய்யாத சில "துரும்பு"கள் இசைக்கிளர்ச்சியைத் தாக்குவதால், என்ன சாதித்து விட முடியும் என்று கேட்கிறோம்.

தமிழருக்கு, தமிழ்ப் பாட்டுத்தான் தேவை என்பதற்கு ஆதாரம் கூறவேண்டிய அவசியமே இல்லை. "தாய் மொழியிலே புரியும்படி பாடு" என்று பாடகர்களை நாம் கட்டாயப்படுத்த நமக்கு உரிமை இருக்கிறது.

இந்தக் கிளர்ச்சியை எதிர்ப்பவர்கள் தான், தங்கள் கட்சிக்கு ஆதாரந்தேடி அலைந்து, என்னென்னவோ உளறுகிறார்கள். ஆனால் அவர்கள் பேச்சை, ஒரு முட்டாள்கூட லட்சியம் செய்ய மாட்டான்.

—'தந்தி' 24-12-43

பெருச்சாளி பேசுகிறது!

தமிழ் நாட்டிலே, பத்திரிகை உலகில் பழம் பெருச்சாளியாகத் திகழ்வது ஹிந்து பத்திரிகை. அந்தப் பத்திரிகை, நீண்ட நாட்களாக நடத்தப்பட்டு வருகின்றது என்பதற்காக மட்டுமல்லாமல், அதன் நேர்மையான போக்குக்காகவும் தமிழர்கள் அதை ஆதரித்து வருகிறார்கள்.

அப்படிப்பட்ட ஹிந்து, தமிழரின் உணர்ச்சியைச் சித்திர வதை செய்யும் முறையிலே, நேற்றைய தினம், ஒரு தலையங்கம் எழுதி இருக்கிறது. அந்தத் தலையங்கத்திலே, (ஹிந்து, வழக்கமாகக் கைக்கொள்ளும்) நேர்மை இல்லை. அத்துடன் அறிவிற்குப் பொருத்தமான வாதங்கள் இல்லை. ஆனால், ஆத்திரத்தோடும் உணர்ச்சிக்கு அடிமையாகியும் எழுதப்பட்டதைப்போல இருக்கிறது.

அந்தத் தலையங்கத்தில், தமிழ் இசைக் கிளர்ச்சி மகா தப்பிதமானது என்று நிலைநாட்ட கஜகர்ணம் போடுகிறது ஹிந்து!

அதற்கு ஆதாரங்களாகக் கீழ்க்கண்ட வாதங்களைக் கூறுகிறது.

(1) பாடகர்கள் பாடுவது சபையோருக்காக அல்ல; ஆண்டவனுக்காகத்தான் பாடுகிறார்கள். ஆகவே எந்த மொழியில் பாடினாலும் கவலை இல்லை.

(2) பாஷாபிமானம், முதலிய குறுகிய நோக்கங்களைக் கலையில் புகுத்தக்கூடாது.

(3) பொது மக்களுக்குப் பல ரகமான பாட்டுக்களைக் கேட்கத் தான் விருப்பம். பாடகர்கள் தமிழிலேயே பாட வேண்டு மென்று அவர்கள் ஆசைப்படவில்லை.

(4) தமிழில் பாடகர்கள் கிடையாது.

ஆகிய இந்தக் காரணங்களைச் சொல்லிவிட்டு, "தமிழ் இசை இயக்கத்தினால் கலவரம் விளையும்" என்று பூச்சாண்டி காட்டு கிறது ஹிந்து!

ஹிந்து முதன் முதலாகக் காட்டும் காரணம், "சங்கீதம் மக்களுக்காக அல்ல; ஆண்டவனுக்காகத் தான் பாடப்படுகிறது" என்பது! அப்படி ஆண்டவனுக்காகப் பாட விரும்பும் சங்கீத கேசரிகள், சாதாரண மக்கள் கூடி இருக்கும் சபைக்கு வரக் கூடாது என்பதுதான், தமிழ் இசை இயக்கத்தாரின் கட்சி. ஏனென்றால், உயர்ந்த தத்துவார்த்தங்களைக் கொண்டதும், பகவானால் மட்டுமே புரிந்து கொள்ளக் கூடியதுமான சங்கீதத்தை பொது ஜனங்கள் கேட்க விரும்பவில்லை. தங்களுக்கு நன்றாகப் புரியும்படி பாடுவது தான் சங்கீதம் என்று தமிழர்கள் கருது கிறார்கள். ஆகவே "தமிழிலேயே பாடு" என்று கட்டளை இடுகிறார்கள்.

அப்படி இருக்க, அவர்களை மோட்சலோக சங்கிதத்தைக் கேட்கும்படி வற்புறுத்த, பாடகருக்கு என்ன உரிமை இருக்கிறது? மேலும் ஆண்டவனுக்காகப் பாடும் 'வித்வான்'களுக்கு, பாமர ஜனங்கள் நிறைந்த சபைகளில் என்ன வேலை? 'ஞான' சித்தி பெறாத சாதாரண மக்களுக்காக அமைக்கப்பட்டிருக்கும் ரேடியோவில், அவர்களுக்கு என்ன ஜோலி?

அவர்கள் வேண்டுமானால், மடத்தில் உட்கார்ந்து பஜனை பாடட்டுமே! காட்டிலே போய்த் தவம் செய்து சங்கீதமாரி பொழியட்டுமே!

இதைவிட்டு, மக்கள் நிறைந்த சபைகளில் உட்கார்ந்து கொண்டு, "உங்களுக்காகப் பாட மாட்டேன்; ஆண்டவனுக்காகப் பாடப் போகிறேன்" என்று சொல்வது எந்த விதத்தில் புத்திசாலித்தனம்?

இப்படி முக்தி அடைவதற்காகப் பாடும் சங்கித வித்வான்கள், பொது மக்கள் மத்தியில் கச்சேரி செய்ய வந்து உட்கார்ந்து கொண்டு, காசைப் பறித்துக்கொண்டு போவது எந்த விதத்தில் யோக்கியப் பொறுப்புள்ள செய்கை? ஆகவே பொது மக்களுக்காகப் பாடும் வித்வான்கள் பொது மக்களுக்குப் 'புரியும்படிதான் பாடவேண்டும். 'பகவானுக்கு அற்புதம்' என்று பாடிவிட்டுப் போகக்கூடாது என்றுதான் தமிழர்கள் சொல்லுகிறார்கள். இந்த நேர்மையான கொள்கையை அடிப்படையாகக் கொண்டதுதான் தமிழ் இசைக் கிளர்ச்சி.

இரண்டாவதாக ஹிந்து, ''கலையில் பாஷை அபிமானம் முதலியவற்றைக் கொண்டுவரக் கூடாது'' என்று சொல்லுகிறது.

கலையில், பாஷாபிமானம் முதலியவற்றைக் கொண்டு வருவதாகச் சொல்லுவது மிகவும் தப்பிதமானது. கலை என்பது பாஷா வாரியாக இருக்கிறது. தமிழருக்குக் கலை, தனியாக இருக்கிறது. வங்காளிகளுக்குத் தனிக்கலை இருக்கிறது. மராத்தியருக்குப் பிரத்தியேகமான கலாச்சாரம் இருக்கிறது. இம்மாதிரி, தனியாக இயங்கும் சக்திபடைத்த ஒவ்வொரு மொழிக்கும், தனித்தனிக்கலை இருக்கிறது. அப்படி இருக்க, கலையில் பாஷாபிமானத்தைக் கொண்டு வருவது தப்பு என்று சொல்வது அறிவிற்குப் பொருத்தமானதா? கலையேதான், பாஷையை அஸ்திவாரமாகக் கொண்டதாக இருக்கிறதே!

இதைத் தவிர, கலை என்பதற்காக, ஒரு மாபெரும் சமுதாயம் தனது ஜீவாதாரமான உரிமையை விட்டுக் கொடுக்க முடியுமா? உதாரணமாக ஆளுவதும் ஒரு கலைதான்! இதற்காக வெள்ளைக்காரன் நம்மிடம் வந்து, ஆளுவது என்பது ஒரு கலை! இது உலகத்திற்குப் பொதுவானது! குறுகிய தேசியத்தைப் புகுத்தி, 'நான்தான் ஆளவேண்டும்' என்று சண்டைக்கு வராதே! நான் எப்படித் திறமையாக ஆளுகிறேன் என்பதைப் பார்த்து ரசித்துக்கொண்டு இரு!'' என்று சொல்லவந்தால், நாம் ஏற்றுக் கொள்ளுவோமா? கலைக்காகப் பிறரிடம் அடிமைப்பட்டுக் கிடக்க ஒப்புவோமா?

மூன்றாவதாக 'ஹிந்து' சொல்லும் காரணம் மிகவும் அபத்தமானது. (பொது மக்கள் பாஷையில் சொல்ல வேண்டுமானால், விஷமத்தனமான பொய்!)

என்னவென்றால், "தமிழிலேயே பாட வேண்டுமென்று பொதுமக்கள் கேட்கவில்லை" யாம்! அப்படிப் பொதுமக்கள் கேட்கவில்லை என்றால் பிரமாண்டமாக நடந்த தமிழ் இசை மகா நாட்டின் தாத்பரியம் என்ன? சென்ற மூன்று வருடங்களுக்கு மேலாக, நகரங்கள் தோறும், கிராமங்கள் தோறும், வீடுகள் தோறும் "தமிழில் இசை வேண்டும்" என்று பொதுமக்கள் முழங்குவதன் அர்த்தமென்ன? என்று கேட்கிறோம்.

கடைசியாக 'ஹிந்து' காட்டி இருக்கும் "பாடகரில்லை" என்ற காரணம் உண்மையென்றே ஒத்துக்கொண்டாலும், அதற்காகத் தமிழ் இசைக்கிளர்ச்சி கூடாதென்பது தர்க்க ரீதியானதல்ல. தமிழ்ப்பாடகரில்லை என்பதற்காக, தமிழ் இசையைக் கைவிட்டு விட முடியுமா? தமிழ்ப்பாடகர்களை உற்பத்தி செய்து, அந்தக் குறையை நீக்குவதற்கு முயற்சி செய்யவேண்டும். இதைவிட்டு, இசை இயக்கமே கூடாதென்று சொல்வது அறிவுடைமை ஆகாது.

இம்மாதிரி காரணங்களையெல்லாம் காட்டிவிட்டு, தமிழ் இசைக் கிளர்ச்சியால், கலவரம் விளையும் என்று பயமுறுத்துகிறது 'ஹிந்து.'

தமிழர்கள் தமிழில் பாடச் சொல்லிக் கேட்டால், கலவரம் விளையுமா?' அப்படிக் கலகம் செய்ய யாருக்கு ஆண்மை இருக்கிறது? என்று கேட்கிறோம்.

அப்படி அக்கிரமமாகக் கலகம் செய்பவர்கள் தான் கலகம் செய்து பார்க்கட்டுமே! இதற்கெல்லாம் அஞ்சி தமிழர்கள் விட்டுக் கொடுக்க முடியுமா? தமிழர்கள் அவ்வளவு தொடை நடுங்கிகளென்று 'ஹிந்து' நினைக்கிறதா? ஒரு தமிழரின் பத்திரிகையான 'ஹிந்து' இம்மாதிரி எழுதுவது தமிழ்நாட்டுக்கே கேவலமல்லவா?

—'தந்தி' 24-12-44

நல்ல அறிகுறி

கோபுரத்தின்மீது உட்கார்ந்துகொண்டு பிறர்மீது கல்லெறிவதை நிறுத்திவிட்டு, தமிழிசை நண்பர்கள் அனுபவ சாத்தியமான பாதைகளுக்கு வருவதைக்கண்டு சந்தோஷப்படுகிறோம். "தமிழ்ப்

பாட்டுக்களைத் தவிர வேறு பாடுவதாயிருந்தால் எங்களுக்கு வேண்டாம்'' என்று சொல்லிக்கொண்டிருந்தவர்கள், ''சாத்திய மானவரையில் பெரும்பாலும் தமிழ்ப்பாட்டுகள் பாடவேண்டும்'' என்று நேற்று நடந்த தமிழிசை மகாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றி யிருப்பதையும் வரவேற்கிறோம். நேற்று தமிழிசை மகாநாட்டில் பேசியவர்கள் யாவரும் நல்ல நிதானத்துடன் பேசி யிருக்கிறார்கள். இந்த நிதானத்தை அவர்கள் ஆரம்பத்திலேயே காட்டியிருந்தால் இந்த இயக்கத்தைப்பற்றி யாரும் குறை சொல்லி யிருக்கமாட்டார்கள். ''நல்ல ரகமான தமிழ்ப் பாட்டுகளை நாடெங்கும் பரப்புவதற்கு ஒரு மத்ய சங்கம் வேண்டும்'' என்று ராஜா சர். அண்ணாமலை செட்டியார் தன் பிரசங்கத்தில் குறிப்பிட் டிருக்கிறார். சென்ற வருஷம் இந்த சர்ச்சை ஆரம்பமானபோது இந்த யோசனையைத்தான் நாம் சொன்னோம். ''பிரசங்கங் களினாலும், மகாநாடுகளினாலும் தமிழ்ப் பாட்டுகளை வளர்த்துவிட முடியாது. ஏற்கனவே உள்ள கீர்த்தனை வர்ண மெட்டுகளில் வார்த்தைகளை அடைத்துப் புதுப்பாட்டுகள் இயற்றுவதும் தமிழிசையை வளர்ப்பதாகாது. வெறும் பாட்டுகள் மட்டும் இயற்றி விடுவது போதாது. சங்கீத சாஸ்திரத்தில் பரிச்சய முள்ளவர்கள் பாட்டுகள் எழுதினால் நன்றாயிருக்கும். ஆகவே தமிழ்ப்பாட்டுப் பாடவேண்டுமென்று பிரசங்கங்கள் செய்து கொண்டிருப்பதைவிட, நல்ல பாட்டுக்களை இயற்றுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். இப்போது இவர்கள் போகும் பாதை தவறானது'' என்று நாம் கூறினோம். இதற்குத் தான் ''தாய்மொழி துரோகிகள், தமிழிசை துரோகிகள்'' என்று நமக்குப் பட்டம் கட்டினார்கள். அதைப்பற்றி நாம் கவலைப்பட வில்லை. இவ்வளவுநாள் கழித்தாவது அவர்களாகவே தம் தவற்றை உணர்ந்திருப்பதை வரவேற்கிறோம். மகாநாட்டுக்குத் தலைமை வகித்த ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியாரும் தன் பிரசங்கத்தில் இதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

''நமது பாட்டுகள் தமிழ் என்ற ஆடை அணிந்துகொண் டிருந்தால் மட்டும் போதாது'' என்று ஸ்ரீ முதலியார் கூறி யிருக் கிறார். தமிழிசை நண்பர்கள் கொஞ்ச காலத்திற்கு இந்தத் துறையில் கவனம் செலுத்தினால் தமிழ்ப்பாட்டுக்கள் தாமாகவே வளர்ந்துவிடும். அப்படியில்லாமல் இன்று முதலே தமிழ்ப்பாட்டு தான் பாடவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருந்தால், மூன்றாவது, நாலாவது ரகத்தைச் சேர்ந்த பாட்டுக்கள் மலிந்து விடும். அவர்கள் உருவான வேலைகளைச் செய்ய ஆரம்பிக்கட்டும்.

சங்கீத வித்வான்களை மிரட்டுவதைப் பிறகு பார்த்துக்கொள் ளலாம். லட்சக் கணக்கில் டிரஸ்ட் நிதி வைத்துவிட்டால் மட்டும் போதாது. இந்த இயக்கத்தில் பாஷை துவேஷம் கிடையாதென்று ராஜா சர். அண்ணாமலை செட்டியார் நேற்று தெரிவித்தார். தியாகராஜ ஸ்வாமிகளின் கீர்த்தனங்கள் தமிழ் பாஷையில் இல்லா ததால் அழிந்து போய்விடப் போவதில்லை. சில அபூர்வ ராகங்களின் வச்ரமான ஸ்வரப் பிரயோகங்களை அவர் கீர்த்தனங்களாக உரு வாக்கி யிருக்கிறார். மிகவும் சிறிய ராகங்களின் ஜீவஸ்வரங்களை அவர் தன் கீர்த்தனங்களில் மடக்கிப் போட்டிருப்பதால், அந்த ராகங்களில் வேறு வர்ணமெட்டுகள் கிடைப்பதுகூடக் கஷ்டமா யிருக்கிறது என்று சொல்லுவார்கள். தியாகராஜஸ்வாமிகளின் கீர்த்தனங்கள் நிலைத்திருப்பதற்கும், பாஷைக்கும் சம்பந்தமே இல்லை. அவற்றின் சங்கீத மேன்மையே அவைகளுக்குப் பலம். பாஷை துவேஷம் காட்டினாலும்கூடச் சிலவற்றை அழிக்க முடி யாது. நம்முடைய பழைய கீர்த்தனங்கள் அந்த ரகத்தைச் சேர்ந்தவை. அது போகட்டும். தமிழ் நாட்டில் தமிழ்ப்பாட்டு வேண்டும் என்பதற்குச் சிபார்சே அவசியமில்லை. சர். சண்முகம் சொன்னதுபோல் அது தமிழ் நாட்டினரின் உரிமை. ஆனால், இதற்குச் சிலர் அனுஷ்டிக்கும் முறையைத்தான் நாம் ஆட்சேபிக் கிறோம். பணத்தைக்காட்டி வித்வான்களைப் பயமுறுத்தாமல், நல்ல தமிழ்ப்பாட்டுக்கள் வளர வேண்டுமென்றே நல்ல லட்சியத் திற்குச் சரியான பாதையில் வேலை செய்யவேண்டுமென்றே தமிழிசை நண்பர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

—''பாரததேவி'' 25-12-43

'' இமிடேஷன் ''

இன்னொரு ''இமிடேஷன்'' பெருச்சாளி! அதற்குக் கொஞ்சம் அதிகப் பிரசங்கித்தனமும் உண்டு! எல்லாம் அறிந்ததாக நினைத்துக்கொண்டு சாக்கடையைக் கிளறும்! அதுதான் அதற்கு ரொம்பப் பிரியம்! அது சாக்கடையோடு நின்றிருந்தால் அதை யாரும் சட்டைபண்ணப் போவதில்லை. அது சாக்கடையைவிட்டு வெளியில் வந்து, தமிழ் இசையைப் பற்றிய சர்ச்சையில் இறங்கி யிருப்பதுதான் பெரிய வேடிக்கை. தமிழ் இசை இயக்கம் ஆரம்பித்ததிலிருந்து, இதுவரையில் அந்த இயக்கத்தில் ஈடுபட்ட எவரும் கச்சேரிகளில் முழுவதும் தமிழ்ப்பாட்டுக்களையே பாட வேண்டுமென்று எப்பொழுதுமே வற்புறுத்தியதில்லை. பெரும் பாலும் தமிழ்ப்பாட்டுக்களைப் பாடவேண்டுமென்றுதான் கேட்டு

வந்தார்கள். அதற்காகவே கிளர்ச்சி செய்துவந்தனர். இதைத் தவிர, "தமிழ்ப் பாட்டுக்களைத் தவிர, வேறு பாட்டுக்களைப் பாடுவதாக இருந்தால் எங்களுக்கு வேண்டாம்" என்று அவர்கள் எக்காலத்திலும் சொன்னதில்லை. அதுமட்டுமல்ல; பிற பாஷைகள் மீதோ அல்லது, பிற பாஷை சங்கீதத்தின் மீதோ அவர்கள் எப்பொழுதும் துவேஷம் காட்டியதும் கிடையாது. அதற்கு மாறாக அந்தப் பாட்டுக்களை வரவேற்றார்கள். பாடக்கேட்டு ஆனந்தித்தார்கள். அவர்கள் நிதானந்தவறி எதுவுமே செய்யவில்லை. ஆனால், நிதானந்தவறிய சில ஜாதித் திமிர் பிடித்தவர்கள்தான் தமிழிசையே கூடாதென்று அந்த இயக்கத்தைப் பகிரங்கமாகவும், மறைமுகமாகவும் எதிர்க்கத் துணிந்தனர். அவர்களில் இந்தப் பெருச்சாளியும் ஒன்று! பழைய கதையையோ, நிலைமையையோ அந்தப் பெருச்சாளி மறந்திருக்கலாம்! இப்பொழுது சென்னையில் நடந்த தமிழிசை மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களை ஆதரித்திருக்கிறது! அந்தத் தீர்மானங்களில் புதிதாக ஒன்றுமில்லை; பழைய தீர்மானங்களையே இப்பொழுது விரிவாகவும் விளக்கமாகவும் தெளிவுபடுத்தி நிறைவேற்றி யிருக்கிறார்கள். இந்த நிலைமையில் தமிழிசை இயக்கத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் மீது குறைகூறி, அவர்கள் தவறை இப்பொழுது உணர்ந்திருப்பதாகச் சொல்லி திருப்தியடைவது சுத்த "ஹம்பக்"!

யார் உடமை?

தமிழிசையை ஆதரிக்கவேண்டியது தமிழர் கடமை. தமிழ் நாட்டில் தமிழ்ப் பாடல்களையே பெரும்பாலும் பாடவேண்டுமென்று கேட்பதற்கு யாருடைய சிபார்சும் அவசியமே இல்லை; அது தமிழர் உரிமை; அந்த உரிமையில் யாரும் தலையிடமுடியாது. தமிழிசை தனிப்பட்டவர்களின் உரிமை அல்ல. அது தமிழர் உடமை; அதைப் பக்குவமாக வளர்க்கவேண்டியது தமிழர் கடமை. ஒரு சிலர், அல்லது ஒரு சில கட்சியினர் அதைச் சொந்தக் கடமையைப்போலப் பாவித்து, தமிழிசை இயக்கத்தில் சர்வாதிகாரஞ்செய்து வருவது கூடாது; அது தமிழிசை இயக்கத்துக்கே கெடுதியை உண்டுபண்ணக்கூடும். தமிழ் இசை இயக்கத்தைத் தமிழ் மக்கள் தமிழிசைக்காக ஆதரிக்கிறார்களேயொழிய, அதை ஒரு செட்டியாருக்காகவோ. ஒரு பிள்ளைக்காகவோ, அல்லது ஒரு அய்யர் அய்யங்காருக்காகவோ ஆதரிக்கவில்லையென்பதை மறந்துவிடவேண்டாம். ஆகவே, தமிழிசை தமிழர்

இயக்கமாக இருக்கவேண்டும்; அந்த இயக்கத்தை வேறு சுயநல வழியில் திருப்பக்கூடாது ; அப்படிச் செய்வது அந்த இயக்கத்துக்கே குழிதோண்டுவது போலாகும் ! தமிழிசை இயக்கத் தலைவர்கள் இதைக் கவனிப்பார்களாக !

—" தமிழ்மணி " 26-12-43

தமிழ் இசையாளர் கவனிக்க

தமிழ் நாட்டில் தமிழில் இசை இருக்கவேண்டும் என்பதற்காக ஓர் இயக்கமும், அதற்காக ஒரு கிளர்ச்சியும் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறதென்பது ஒன்றே தமிழர்கள் எவ்வளவு தூரம் தங்கள் உரிமைகளை இழந்தவர்களாக இருக்கின்றனர் என்பதையும் பிறர் ஆதிக்கத்துக்கு உட்பட்டவர்களாக ஆக்கப் பட்டிருக்கின்றனர் என்பதையும் நன்கு எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது இந்த நிலையில் மிகுந்த முயற்சியின் மீது தமிழ் நாட்டில் தமிழ் இசைக்கு ஆதரவு தேடப்பட்டு வருகிறது.

தமிழ் நாட்டில் தமிழர்களிடையே தமிழில் பாட்டுப்பாட முடியாது என்று கூறும் அளவுக்குத் துணிவு கொண்டவர்களும் இத்தமிழ்நாட்டில் இருந்து வருகின்றனர். தமிழில் பாட்டுப்பாட வேண்டும் என்று கேட்கும் தமிழர்களை எதிர்த்து அடக்கத்துணிவு கொண்டவர்களுக்கும் தமிழ்நாடு இடங்கொடுத்துக் கொண்டிருக் கிறது. தமிழ் நாட்டில் தமிழ்ப் பாட்டுக்கள் பாடப்படவேண்டும். தமிழில் இசை இருக்கவேண்டும் என்று கூறுபவர்களை நையாண்டி செய்து, அவ்வாறு கூறுவதும் கோருவதும் முட்டாள்தனம் என்று மேடைகள் மீதேறிப் பேசிடத் துணிவுகொண்ட கூட்டத்தின ருக்கும் இத்தமிழ்நாடு இடங்கொடுத்துக் கொண்டிருக்கிறது. இவ்வளவு எதிர்ப்பையும்மீறித் தமிழர்கள் வாழும் நாட்டில் தமிழில் பாட்டுப் பாடுவதற்குப் பெருஞ் செல்வர்களின், ராஜாக் களின் முயற்சியும் ஆதரவும் கூட்டுறவும் வேண்டப்படுகின்றன. அந்தோ ! தமிழர்கள் அடைந்துள்ள கேவலநிலைமைதான் என்னே !

தமிழர்களிடையில், தமிழ்நாட்டில் தமிழ் இசைக்கு எதிராக இருப்பவர்கள், எதிராக வேலை செய்பவர்கள் தமிழில் பாடமறுப்ப வர்கள், தமிழர்களின் இத்தகைய கோரிக்கையை நையாண்டி செய்பவர்கள் யார் ? ஆரிய வர்க்கத்தாரே. இவர்களைத் தவிர, இத்துணைத் துணிவுடன், தமிழர்களின் உப்பைத் தின்றுவிட்டு

தமிழ் நாட்டில் வாழ இடம் பெற்று, தமிழர்களின் உழைப்பால் உடலை வளர்த்துக்கொண்டு, தமிழர்களையும் அடிமைப்படுத்தி, தாழ்ந்தவர்களாக்கி, தமிழ்க் கலைகளுக்கு ஆரிய மேற்பூச்சிட்டு, தமிழ் மொழியை வடமொழிக் கலப்பால் மணிப்பிரவாளமாக்கி, தமிழர்களின் வாழ்வைச் சீர்குலைத்துத் தமிழ்நாட்டைத் தங்களுடைய அடிமை நாடாக ஆக்கி வைத்துக்கொள்வதற்குப் பெருந்துணிவுடன் பன்னூற்றுக்கணக்கான ஆண்டுகளாகவே, பல விதமான சூழ்ச்சிகளையும் தந்திரங்களையும் அவ்வக்காலத்திற்கு ஏற்ற முறையில் கையாண்டு வரும் வர்க்கத்தார் ஆரியர்களைத் தவிர்த்து வேறெவராகத்தான் இருக்கமுடியும் ?

இந்த ஆரிய வர்க்கத்தார் தமிழரிடையே தங்கள் சதிச்செயல்களை நிறைவேற்றி, தமிழர்களையும் தமிழ்நாட்டையும் அடிமைப் படுகுழியில் ஆழ்த்திக் கொண்டுவருவதற்கு இவ்வளவு துணிகரமாக முனைந்திருப்பதற்குத் தமிழர்களின் தைரியமின்மையே காரணமாகும். அப்பண்டைக் கால முதல் இன்று வரையில் ஆரிய வர்க்கத்தாரின் சூழ்ச்சிக்கும், தந்திர மந்திரங்களுக்கும் தமிழ் நாட்டில் பலத்த எதிர்ப்பும் கண்டனமும் இருந்து கொண்டுதான் வந்திருக்கின்றன. ஆனால் தமிழர்களின் எதிர்ப்பும் கண்டனமும் போதிய அளவு பலமுடையவைகளாக இல்லை.

தமிழர்களுள் படித்திருக்கும் ஒரு சாரார் எந்த வகை ஆசை கொண்டோ ஆரிய வர்க்கத்தின் அடிவருடிகளாகவே இருந்து வருகின்றனர். இவர்கள் நம் நாட்டின் 5-ஆம் படையினரைப் போன்று தமிழ் நாட்டுக்கும், தமிழர்களுக்கும் துரோகிகளாகவே இருக்கின்றனர். படித்த தமிழர்களுள் மற்றொரு வகையினர் பட்டங்களையும், பதவிகளையும் நாடி, சுகபோக வாழ்க்கையின் எல்லா மூலாதாரங்களும் பார்ப்பனர் கையிலேயே இருப்பதால், அவர்களைப் பகைத்துக் கொண்டால் தங்கள் சுகவாழ்வும் பட்டம் பதவிகளும் பறிபோகுமே என்று எண்ணி அவர்களின் அடிவருடிகளாகத் திரிந்து கொண்டிருக்கின்றனர். கல்வி வாசனையே இல்லாத தமிழர் கூட்டமோ ஆரியர் விரித்துள்ள மத மாய வலையில் சிக்கி, அதினின்று மீளமுடியாமல் அச்சூழ்ச்சியில் அமிழ்ந்து அறியாமைச் சேற்றில் கிடந்துழலச் செய்யப்பட்டிருக்கின்றது.

இவர்கள் அனைவரும் தவிர்த்த, ஓரளவுத் தைரியம் வாய்க்கப் பெற்ற தமிழர்கள் கூட்டமோ பாம்புக்கு வாலும் மீனுக்குத் தலையும் காட்டிக் கொண்டிருக்கும் வகையில்தான் இருக்கின்றனர். பார்ப்பனர்களுக்கும் நல்ல பிள்ளைகளாக, தமிழர்களுக்கும் நல்ல

பிள்ளைகளாக நடந்துகொள்ள வேண்டும் என்னும் ஆசைகொண்டு நடந்து வந்த ஒரு கூட்டத்தார், மேற்கண்ட தமிழர் கூட்டத்தாரைவிடத் தமிழ் நாட்டிற்கு அதிகப்படியான நன்மைகள் ஒன்றும் செய்து விட்டதாகத் தெரியவில்லை. ஆனால் அதேபோன்று இன்றும் இருசாரார்க்கும் நல்ல பிள்ளைகளாக நடந்துகொள்ள முயன்று வரும் தமிழர் கூட்டம் இந்நாட்டில் இருந்து வருகிறது. இவர்கள் இவ்வண்ணம் எல்லாருக்கும் நல்ல பிள்ளைகளாக நடக்க முயன்று, யாருக்கும் நல்ல பிள்ளைகளாக முடியாமல் எவருடைய நம்பிக்கையையும் பெறமுடியாமல் பாழாகிப் போவதைவிடத் தாங்கள் பிறந்த இத்தமிழ் நன்னாட்டிற்கும், தங்கள் தாய் மொழிக்கும் நேர்மையான முறையில் தொண்டாற்ற முன் வருதல் வேண்டும். தங்கள் தாய்நாட்டிற்கும், தாய்மொழிக்கும் எதிராக உள்ளவர்கள் எவரேயாயினும் அவர்களை வீழ்த்த, விரட்டியடிக்க, முன் வருதல்வேண்டும். இந்த உறுதியுடன், எவர் புகழ் மொழிக்கும், பாராட்டுதலுக்கும் இச்சை வைக்காமல் உழைக்க முன்வந்தால்தான் தமிழ்நாடும், தமிழ்மக்களும் உள்ள அளவு போற்றுதற்குரியவர்களாவார்களே தவிர, பாம்புக்கு வாலும், மீனுக்குத் தலையும் காட்டிக்கொண்டிருப்பதால் எத்தகைய நன்மையுமில்லை.

இவ்வண்ணம் நம் நாட்டில் இருசாரார்க்கும் நல்ல பிள்ளைகளாக நடந்துகொள்ள முயன்றவர்கள் எப்போதும் வெற்றி பெற்றதும் கிடையாது. அவர்களால் நாட்டுக்கோ மக்களுக்கோ நன்மை ஏற்பட்டதும் கிடையாது. எனவே,

இன்று தமிழ்நாட்டில் தமிழில் இசை இருக்கவேண்டும் என்று கிளர்ச்சி செய்பவர்கள் தமிழ் இசையென்று கூறித் தமிழ் வாசனைத் தைலம் மட்டும் பூசப்பட்ட எந்த இசையையாவது தமிழின் பேரால் தமிழ் நாட்டில் பாடவைப்பது என்னும் முறையை—எண்ணத்தை—அடியோடு கைவிடவேண்டும்.

1. தமிழ்ப்பாட்டுக்கள் என்றால் அவை முழுக்க முழுக்கத் தமிழ் மொழியில் அமைந்தவைகளாகவே இருக்கவேண்டுமேயொழிய 100-க்கு 99 வடமொழி வார்த்தைகளைக்கொண்ட தமிழ்ப்பாட்டாயிருத்தல் கூடாது.

2. தமிழில் இசை என்று கூறிக்கொண்டு வடவர் நாட்டுப் புராணக் கருத்துக்களையும் மூடப்பழக்க வழக்கங்களையும் புகுத்தும் எண்ணங்களையும் கொண்ட பாட்டுக்களாயிருத்தல் கூடாது

3. நல்ல தமிழில், இயற்கை எழில்களையும், தமிழரின் வீரத்தையும், அன்பையும், மானமிக்க சமத்துவ வாழ்வினையும், வரலாற்றினையும், நேர்மையையும், நீதி நெறிகளையும், தமிழ் நாட்டுப் பற்றையும், மொழியில் ஆர்வத்தையும், ஒற்றுமையையும், கட்டுப்பாட்டையும் எடுத்துக்காட்டும் பாட்டுக்களையே பாடுமாறு செய்தல் வேண்டும்.

4. தமிழர்களை அடிமைப்படுத்தும் சதிச் செயல்களையும், சூழ்ச்சிகளையும், சமயவெறிகளையும், மூடப்பழக்க வழக்கங்களையும், ஆரியரால் புகுத்தப்பட்ட இன்னும் பல அநாசாரங்களையும், வாழ்க்கை முறையில் இருக்கும் கேடுகளையும் அகற்றுமாறு அறிவூட்டும் பாட்டுக்களையே பாடுமாறு செய்தல் வேண்டும்.

இவ்வாறு செய்வதற்குத் தமிழர்கள் துணிவு கொள்ளாத வரையில், தமிழ் நாட்டுச் செல்வர்கள் இவ்வாறான முறையில் தொண்டாற்றத் துணிந்து முன்வராதவரையில் அவர்களுடைய எத்தகைய கிளர்ச்சியும் முயற்சியும் பயன்படாதொழியுமாறு செய்யப் பார்ப்பனர்களுக்குத் தெரியும்.

தமிழர்களுடைய நிலைமை இவ்வாறு தாழ்ந்துகொண்டே செல்கிறதென்பதையும் தமிழ் இசையின் பெயராலும் தமிழ் மக்கள் அடிமைத்தனத்திற்குள் ஆழ்த்தப்பட்டு விடுகின்றார்கள் என்பதையும் முன்கூட்டி அறிந்துதான் தமிழ் நாட்டின் தனிப் பெருந் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் அடிக்கடி எச்சரிக்கை செய்து கொண்டே வருகின்றார்கள். இம்மாதத் தொடக்கத்தில் கூட, பெரியாரவர்கள் இயல், இசை, நாடகம் என்பவற்றின் பேரால் ஆரியர்களும், அவர்களைச் சார்ந்து நிற்கும் தமிழர்களும் செய்து வரும் அட்டூழியங்களையும் சதிகளையும் நன்கு விளக்கியுள்ளார்கள். அவர்களுடைய சூழ்ச்சிகளை உடைத்தெறிய, சினிமா பார்ப்போர் சங்கம், இசை நுகர்வோர் சங்கம், பத்திரிகை படிப்போர் சங்கம் என்பவைகளை ஏற்படுத்தி இவற்றிற்கான பெரும் மாநாடுகளையும் நடத்தி, இயல், இசை, நாடகம் ஆகிய 3 துறைகளிலும் ஆரியர் செய்துவரும் சூழ்ச்சியை அடியோடு அகற்றுவதற்கு மும்மரமாக வேலை செய்ய முன்வரவேண்டும் என்று தமிழர்களை விண்ணப்பித்துக் கொண்டிருந்தார்கள். தமிழர்கள் இனியேனும் உணர்வு பெற்று, உற்சாகமடைந்து, துணிவு கொண்டு, தங்கள் மொழியையும் நாட்டையும் நயவஞ்சகர்களிடமிருந்து பிரித்துக்கொள்ளும் துறையில் பணியாற்ற

முன்வருவார்களா? தமிழறிஞர்கள், தமிழ்த் தொண்டர்கள் மகாநாடுகள் கூட்டித் தமிழ் இசையின் பெயராலும் பிறவகைகளிலும் தமிழர்களையும் தமிழ் மொழியையும் குலைப்பதற்காகச் செய்யப்படும் முயற்சிகளை வேருடன் களைந்து, தமிழர் உயர்வு பெறும் துறையில் பணியாற்ற வழி கோலுவார்களா? முன் வாருங்கள் தமிழர்களே! அதற்குத் தருணம் இதுதான்.

'குடியரசு' 25—12—43.

என்ன திருவிழா?

"எது எப்படிப் போனாலும் போகட்டும், பாட்டுக்களையாவது தமிழில்—தாய்பாஷையில் பாடக்கூடாதா? தயவு செய்து பாடுங்கள், வேண்டிக்கொள்ளுகிறோம். கேட்டுக்கொள்ளுகிறோம்" என்று ராஜா சர். அண்ணாமலை செட்டியார் அவர்களும், சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியார் அவர்களும் கடைசியாகப் பிச்சை கேட்கின்றனர். ஆம்! சந்தேகமில்லாமல் பிச்சையேதான். சென்னையில் சென்ற 23-ம் உ நடைபெற்ற தமிழிசை மாநாட்டை 'இந்து' பத்திரிகையிடத்தும், அதன் வர்க்கத்தாரிடத்தும் தமிழர் சமுதாயம் பிச்சை கேட்கும் சந்தர்ப்பம்—அல்லது திருவிழா, கொண்டாட்டம் என்றால் யாரும் கோபித்துக்கொள்ள மாட்டார்களென்றும், மறுக்க மாட்டார்களென்றும் நம்புகிறோம், ஏனென்றால், தமிழில்—தாய் பாஷையில், தாய்நாட்டில் பாட ஒரு மாநாடு, ஒரு திருவிழா, ஏராளமானோர் கூட்டம், எண்ணற்ற பொருள் செலவு, இதைவிட இதை ஆட்சேபிக்கவும் பத்திரிகை—தேசியம் - வர்க்கம் என்கிறவைகளுக்கும் இந்நாட்டில் இடமும், சந்தர்ப்பங்களுமிருக்கிற தென்கிறபோது ராஜா அவர்களையும், சர். சண்முகம் அவர்களையும், பிட்சாண்டிகளென்று நாம் ஏன் கூறக்கூடாது? அவர்கள் பிரசங்கங்கள் எவ்வளவுதான் திறமைமிக்கதாயும், வீரமுடையதாயும், நேர்மை கொண்டதாயுமிருந்தாலும் இந்த நிலைமைக்கு அர்த்தமென்ன? ராஜாவும் சண்முகமும் இப்படிப் பேசியிருக்கிறார்களே என்று, யார் நடுநடுங்கிப்போய் பேசாதிருந்து விட்டார்கள்? கைமேல் பலனாக எழுத்திலும், காரியத்திலும், இசை இயக்கத்தை விட உண்மையிலேயே பலமடங்கு செல்வாக்கும், புகழுமுள்ளதான எதிர்ப்புகள் புற்றீசல்கள் மாதிரி சென்னையிலும் மற்றும் தமிழ் நாட்டிலும் இன்று காணப்படவில்லையா?

'நூற்றுக்கு 40-வது பாடுங்கள் 20-பாடுங்கள்' என்று தீர்மானம் நிறைவேற்ற முன்வந்த இசை இயக்கத்தார்

மனோபாவம் மிகவும் பிற்போக்கான தென்றும் மண்டியிட்டு சரணடைந்து பிச்சைக் கேட்பதைவிட மோசமாயிருக்கிறதென்றும் கருதுகிறோம்.

தமிழர் சமுதாயத்தின் பெயரால் எல்லாவற்றிலும் அதிகாரங்கள் பேச முடிசூடா வேந்தர்களாய், பெரும்பாலும் செல்வாக்காலும், அறிவாலும் வீறுகொண்ட இரண்டு பெரிய தலைவர்களின் இந்நிலைக்காக நாம் மிகவும் இரங்குகின்றோம். உண்மையிலேயே இப்படி மானக்கேடான அதாவது சர். சண்முகம் அவர்கள், தம் சொற்பொழிவில் குறிப்பிட்டதே போன்று அமெரிக்காவில் உள்ள அவர் நண்பர் ஒருவர் 'தாய் பாஷையில் பாட கேட்டுக்கொள்ளுகிறீர்களா? இதற்கு ஆட்சேபமா?' என்று ஆச்சரியப்பட்டுக் கேட்கும் மாதிரியான இந்த இயக்கம் தேவையா? என்றும் கூட சந்தேகித்து வருகிறோம். 'தமிழில் தான் தமிழ் நாட்டில் பாடவேண்டும், அப்படிக்கில்லாவிட்டால் இடமில்லை' என்று தீர்மானிக்கவும், பிரகடனப்படுத்தி முழக்கவும் சக்தியில்லாத நிலைமையில் எந்த மாதிரியான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளத் துணிய வில்லையானால், தயைசெய்து தமிழர் சமுதாயத்தை (மேலும் உலகறிய அவமானப்படுத்தும்படியான) இம்முயற்சியை அடியோடு விட்டுவிடக் கேட்டுக்கொள்ளுகிறோம். அல்லது இப்போதைய அரசியல் நிலைமையில் கொஞ்சகாலத்திற்கு ஒத்திப்போடவாவது மன்றாடி வேண்டிக்கொள்ளுகிறோம்.

—'திராவிடமணி' 26—12—43

கரும்புச் சோலை

தமிழிசை மகாநாடு ஏக உத்சாகத்தோடுதான் ஆரம்பமா யிற்று. ஸ்ரீ தண்டபாணி தேசிகர் அழுத்தமாகவும் உருக்கமாகவும் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டார் பாட்டாகவே. அப்பால் ஸ்ரீமதி எம். எஸ். தேவசேனாவும், அவரது சகோதரியும் புதிதாக எழுதப்பெற்ற ஒரு கிளிக்கண்ணியை கிளிகளெனக் கொஞ்சிப் பாடினார்கள். பிறகு, திருவனந்தபுரம் சயன்ஸ் காலேஜ் பிரின்ஸிபால் ஸ்ரீ சுப்ரமண்யத்தின் இளைய குமாரி ஓரிரண்டு சிவன் பாட்டுக்களைப் பாடினார். பிரமாத ஏற்பாடுகள்தான். எக்காலத் திலும் சங்கீதம் நடக்கும் பிரதேசங்களில்கூடத் தென்பட்டிராத ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகர்களில் பெரும்பாலோர் திடீரென சங்கீதப் பித்தர்களாகி, இம்மகாநாட்டில் பிரசன்னமா யிருந்தனர்.

திடீரெனச் சங்கீதப் பித்தர்களாகி என்று சொல்வது தவறு என்று அபிப்பிராயப் படுவோர் 'அகத்திலேயே சங்கீத ரஸிகர்களாக இருந்தவர்கள்' என்ற பதங்களைப் போட்டுக்கொள்ளலாம். இத்தனை காலமாக சங்கீதம் என்ருல் பெரும்பாலும் தெலுங்குப் பாட்டுக்களாகவே இருந்து தொலைந்திருக்கின்றன. அவைதான் மேற்கண்டவர்களிடை சங்கீத உணர்ச்சியை எழுப்பிவிட்டிருக்க வேண்டும். அதற்கப்புறம்தான் அவர்களுக்கு, எல்லாம் தமிழிசையாக இருந்தால் என்ன என்ற நினைப்பு ஏற்பட்டிருக்கவேண்டும். இதை இல்லை என்று மறுத்தால். தமிழிலேயே பாட்டுக்கள் வேண்டுமென்று கேட்பது, அளவு மீறிய சங்கீத விருப்பத்தால் அல்ல என்ற முடிவு தானுகவே ஏற்பட்டுவிடும்.

தமிழிசை மகாநாட்டார் செய்த தீர்மானங்கள் எல்லாம் நன்ருகவே இருக்கின்றன. தமிழ் நாட்டில் நடக்கும் கச்சேரிகளில் எல்லாம், முதல் பாட்டும், கடைசிப் பாட்டும் தமிழிலேயே இருக்கப்பட வேண்டும் என்று விரும்புகிருர்கள். பெரும்பாலும் தமிழ்ப் பாட்டுக்களே இருக்கவேண்டு மென்கிருர்கள். அவ்வாறு இருக்கும் கச்சேரிகளையே தமிழர்கள் ஆதரிக்கவேண்டு மென்கிருர்கள். திருச்சி ரேடியோவிலே இன்னும் நிறையத் தமிழ் இருக்க வேண்டுமென்பது இம் மகாநாட்டின் தீர்மானங்களில் ஒன்று.

இந்தத் தீர்மானங்கள் எதிலும் தவறேதுமில்லாததுபோலவே தோன்றுகிறது. 'தமிழர் தமிழ்ப்பாட்டுக்களைக் கேட்பது நியாயந்தாவே ? இதற்கெதற்கு இவ்வளவு எதிர்ப்பு ?' என்று கேட்பார்கள் எல்லோரும். தமிழ் இசை, அதற்கு எதிர்ப்பு என்பதையெல்லாம் சென்னைப் பத்திரிக்கையில் வந்ததை அமெரிக்காவில் ஒரு துரை சர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அறைக்கு வந்த போது பார்த்துவிட்டு, சிரித்தாராம். 'எதற்காக தமிழில் பாடுவது ? தாய் பாஷையில் பாடப்படுவதை ஏன் மாற்றச் சொல்லுசிறீர்கள் ?' என்று கேட்டாராம் அவர். தமிழருக்குத் தாய் பாஷை தெலுங்கு என்று அவர் நினைத்துக்கொண்டு இவ்வாறு கேட்டாராம். ஸர் செட்டியாருக்கு இது தமாஷாகவே இருந்திருக்கும். அன்றைய முதல் தமிழிசை மகாநாட்டில், அதே செட்டியார், அழகான தமிழில், தடுமாற்றமின்றி நகைச்சுவை ததும்ப, இதை எடுத்துச் சொன்னதும் தமாஷாகவே இருந்தது.

தமிழ், தெலுங்கு இசைச் சண்டை இதோடு நின்றால் தேவலையே! இன்னும் மோசமாகாதிருக்க வேண்டுமே! மூன்று வருஷங்களுக்கு முன் ராஜா ஸர் ஒரு பத்தாயிரம் ரூபாய் எருப் போட்டு, விதைத்த முளை இப்பொழுது நாலு இலை விட்டு, செழிப்பாக வளருவதுபோலவே தோன்றுகிறது.

தமிழிசை இயக்கத்திற்காக லக்ஷக்கணக்கில் பணம் சேர்த்தார்கள். வெகு தடபுடலாகவே மகாநாட்டை நடத்துகிறார்கள். ஏற்பாடுகள் எல்லாம் ஏ. 1, ஆட்களை உள்ளே அனுப்ப, வேண்டிய இக்கட்டுகளை உண்டாக்கி யிருக்கிறார்கள். ஆனால், கச்சேரி முடிந்து வெளியே வரும்பொழுதுதான் திணறுகிறோம்.

செய்வன திருந்தச் செய் என்று செய்திருக்கிறார்கள். மேடையை ஒருகோவில் மண்டபமென ஜோடித்திருக்கிறார் சித்திரக்காரர் ஸ்ரீமாதவன். சென்னைக்காரர் ஒருவர், திருச்சி ரேடியோ டெலிவிஷன்காரர்கள் வேறே ஆக இருவர் நன்றாகவே ஒலி பெருக்குகிறார்கள். ரஸ்தாவிலே பாட்டுக் கேட்க, கூடும் கூட்டத்திற்கு அளவே இல்லை.

திண்ணைப் பள்ளிகளிலே 'அறஞ்செய விரும்பு. ஆறுவது சினம்' என்று வரிசையாக சுவர்களிலும், உத்திரங்களிலும் எழுதியிருப்பார்களே, அம்மாதிரி செயின்ட் மேரீஸ் ஹாலினுள்ளே தமிழிசையைப் போற்றும் மொழிகள் பல, வெள்ளி ஜிகினுப் பொடி மூலம் பளபளக்கச் செய்யப்பட்டிருக்கின்றன. கல்யாண் பல்பொடி விளம்பரங்கள் தடபுடலாகச் செய்யப்பட்டிருக்கின்றன. தேசிகர், தியாகராஜ பாகவதர், டி. கே. பி ஆகியோரெல்லாம் நிறையத் தமிழாகப் பொழிந்தனர். முன்வரிசையில் அமர்ந்திருந்த ராஜா சர், அவரது பூரண உபசாரத்திற்குக் குறியான ராஜாஜி, தலைவர் ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார் ஆகியோரின் தலைகள் எல்லாம், வலி எடுக்கும் அளவிற்கு ஆடி, பாட்டை ரஸித்துக் கொண்டிருந்தன. பாகவதர் பாடிய எல்லாப் பாட்டுக்களிலும், கிருஷ்ணா முராரே என்ற தமிழா தெலுங்கா என்று குறிப்பிட முடியாத பாட்டும், முருகா பாட்டும் பகுசுகமாக இருந்ததாக நான் நினைத்தேன். பூராக் கச்சேரி கேட்டவர்களும், 'எஸ்! அப்படித்தான்!' என்றார்கள். பத்திரிகைக்காரர்களுக்கு, பெண்களுக்கு எல்லாம் தனி இடங்கள் செய்திருந்தார்கள்.

எல்லாம் சரிதான்! ஆனால் அவர்கள் செய்த தீர்மானங்களில் பொதிந்து கிடக்கும் 'புலாத்காரம்' எனும் ஒரு கொடிய விஷம்

எல்லாவற்றையும் கெடுத்துவிடக்கூடும். நாங்கள் அடித்தோமா? உதைத்தோமா? என்று இவர்கள் கேட்கலாம்.

அவ்வளவுதூரம் போகவேண்டுமா என்ன? இப்பொழுது சொல்லுகிற காரியங்களைச் செய்தே ஆகவேண்டும், இல்லா விட்டால் 'பாய்காட்' என்ருல் அதைவிட பலாத்காரம் வேறுண்டா என்ன?

அன்று மகாநாட்டில் ராஜா சர் அண்ணுமலை செட்டியார் வெகு அழகாகவே பேசினுர். அவரது திறப்பு விழா உரையிலே இனிய தமிழ் மொழிகளை நிறையக் கலக்கிவிட்டிருந்தார்கள். 'இசை எவர் மிராசுமல்ல. தமிழிசை இயக்கம் படையெடுப்பு மல்ல. அபசாரமு மாகாது. தமிழிசை இயக்கம் தூய கலை இயக்கமே! அதில் அரசியல் கலப்பே இல்லை. ஜாதிப் பித்தமு மில்லை. இது ஜாதி மத கட்சி பேதமில்லாமல் யாரையும் பண்புடன் பழகச் செய்யும் ஒற்றுமை இயக்கமே யாகும்' என்று சொன்னுர் அவர்! 'இதைக் கேட்டு ஏமாந்துவிட வேண்டாம். இதனுல் எல்லாம் ஒற்றுமை ஏற்பட்டுவிடாது. சங்கீதத்தால் ஒற்றுமை ஏற்படுவது என்ருல், பிரிட்டிஷ்காரன் இன்னும் நல்ல பாட்டுக்கள் எல்லாம் பாடிக்கொண்டிருக்கிருனே, அதிலேயே ஒற்றுமை ஒன்றும் ஏற்படக் காணுேமே! காலத்திலேயே அரசியல் கலந் திருக்கிறது. அதனுல் இதிலே அரசியல் இல்லை என்று சொல்லிவிட முடியாது' என்று ஆரம்பித்து, எந்தக் கட்சிக்குச் சாதகமாகப் பேசுகிருர் அவர் என்பதை சபையோர் தீர்மானிக்க முடியாதபடி வெகு சாதுர்யமாக இரு கட்சிகளுக்கும் இசைவாகப் பேசி, முடிவிலே தென்காசி வழக்காக, 'இந்த இயக்கத்தாரும் பெரிய பாகவதர்களை கட்டாயப்படுத்தக் கூடாது. பாடகர்களும் பிடிவாதம் பிடிக்கக்கூடாது. ஏதோ அவர்களாகவே பார்த்து சௌகரியமாக நடந்துகொண்டால் நன்ருக இருக்கும். இப்பொழுதுள்ள பெரிய வித்வான்கள் ஆதரவின்றி இந்த இயக்கம் வெற்றி பெருது' என்று சொல்லி முடித்தார் ராஜாஜி. அவர் முடிவில் சொன்னது நல்ல யோசனைதான். பாகவதர்களும், தங்களுக்கு முன்னுல் கூடியிருக்கும் சபையோரில் பெரும்பான்மை யோரின் மனுேபாவத்தை முன்கூட்டியே தெரிந்துகொண்டு, அதற்குத் தக்கபடி பாடிக்கொள்ளலாம். இந்த இயக்கத்தாரும், இரு கைகளும் சேர்ந்து தட்டினுல்தான் சப்தம் வருமென்பதை மனதில் கொண்டு, பதட்டத்தோடு எதையும் செய்யாதிருக்க வேண்டுமென்பதே நமது அவா.

—'நாரதர்' 29-12-43

இசை மகாநாடு —வெற்றியும் தோல்வியும்

தமிழிசை மகாநாடு ஒரு விதத்தில் ஒரு பெரும் வெற்றியை அடைந்தது. மற்ெருரு விதத்தில் ஒரு வருந்தத்தக்க தோல்வியை அடைந்தது. கட்டாய ஹிந்தியை மும்முரமாகப் பரப்பிய திரு. சி. இராஜகோபாலாச்சாரியை, ஒரு குறிப்பிட்ட பாஷை யில்தான் பாடவேண்டுமென்ற கட்டாய நிர்ணயம் வேண்டா மென்றும் மக்கள் மிக நன்ருக அறிந்தும் கேட்டும் ஆனந்த மடையும்படியான பாஷையில் பாடுவதின் தத்துவத்தை ஒத்துக் கொண்டும் பேசவைத்ததுதான் அதன் வெற்றியாகும். இராஜ கோபாலாச்சாரி மட்டுமல்லாது மற்றும் அந்த இசை மகாநாட்டில் பேசின காங்கிரஸ்காரர்கள் இந்தத் தமிழிசை இயக்கம் தங்க ளுடைய நோக்கத்தை மாற்றிவிட்டதாகத் தோற்றமளித்தார்கள். இதுவே ஒரு பெரும் லாபம். சில உட்கொள்கைகளும் பேச்சில் மாறுதல்களும் இருந்தாலும், அவர்கள் இந்த இசை இயக்கத்தின் கொள்கையின் சார்பாகப் பேசி இருக்கிருர்கள். அவர்கள் ''ஹிந்து'' பத்திரிகையின் யுக்தியான கொள்கைகளைக் கைக்கொள்ளமாட்டார்கள்.

''ஹிந்து'' பத்திரிகையைப்போன்ற எதிர்ப்புக் கட்சிக் காரர்களை மாற்ற முடியாததுதான் இந்த மகாநாட்டின் வருந்தத் தக்க தோல்வியாகும். இந்த இசை இயக்கத்தின் நிர்வாகிகள் காப்பாளர்கள் எது செய்திடினும் சரி. கொடியைத் தோல்வியின் அறிகுறியாக இறக்கிவிட்டாலும் சரி, அல்லது கொள்கைகளை அவ்வளவு மும்முரமாகக் கையாளாவிட்டாலும் சரி, அல்லது செய்கை நிகழ்ச்சியை மாற்றினுலும் சரி, ஜாதிவாதிகளின் எதிர்ப்பை ஒன்றும் மாற்றமுடியா தென்பதற்கு நேற்றைய ஹிந்து பத்திரிகையின் தலையங்கமே போதிய சான்ருகும்.

அவர்கள் தாங்கள் கலைப்பிரியர்கள் அல்லது பொதுஜன கொள்கையை ஆதரிப்பவர்கள் என்பதினுல் ஆக்ஷேபம் செய்ய வில்லை. தமிழ்நாட்டில் நடக்கும் எல்லாக் கச்சேரிகளிலும் தமிழ்ப் பாட்டுகள் மிக்க ஆதரவுடன் பாடப்பட்டால், தியாகராஜர், தீக்ஷிதர், சாமாசாஸ்திரி போன்ற பிராமணர்களின் பாட்டுகள் உபயோகமின்றி மறைந்துபோகுமே என்ற காரணத்தில்தான் அவர்கள் எதிர்க்கிருர்கள். கலைக்குப் புத்துயிர் தரும் தமிழிசை இயக்கத்தின் எதிர்ப்புக்கு அடிப்படையான மூலகாரணம் வகுப்பு வாதமேயாகும். தமிழிசை இயக்கமாவது, வேறெவ்வித

சுயமரியாதையுடைய இயக்கமாவது வெற்றியுற வேண்டுமானல் மூலகாரணமாகிய வகுப்பு துவேஷத்தையும், வாதத்தையும் வேருடன் களைய வேண்டும். மற்ற காரணங்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டுவதில்லை. எதிர்த்து நிற்கும் முட்கள் நிறைந்த வகுப்பு வாத மரத்தின் வேரைக் களைந்து அதன் நச்சுக்கனியை அழிப்பதற்கு நீதிக்கட்சியால்தான் ஆகும். தமிழர்களுடைய கொள்கை நிறைவேற வேண்டுமானல் அக்கட்சியை வலுப்படச் செய்தல் வேண்டும். மக்களுக்குரிய சாதாரண உரிமைகளையே மறுக்கின்ற வகுப்புவாதத்தை எதிர்த்துப் பெரும்போர் புரிய வேண்டியிருக்க, இசையியக்கம் போன்ற ஒரு தனித்துறையிலேயே நங்கருத்தைச் செலுத்திக் கொண்டிருப்போமானல் வகுப்பு வாதத்தை ஒழிக்க முடியாது. தமிழிசை இயக்கத்தை எதிர்க்கின்ற வகுப்புவாதக்காரர்களை, பிரசாரத்தின் மூலமாக நேர்மையான வழியைப் பின்பற்றச் செய்வது இயலாத காரியம்.

'' சண்டே அப்சர்வர் '' 26-12-43

நாடோடியின் சிந்தனைகள்

'' இசை ! இசை !! எங்கும் இசை !!! என்றூர் நமது அரசியல் நிபுணர், அப்பொழுது நடந்துகொண்டிருந்த நேர்மைப் பேச்சு சங்கத்தின் கூட்டத்தில். ''ஆனல், ஆடம்பரத்துடன் தங்களது வெறுப்பையும் கோபத்தையும் ஒருங்கு சேர்த்து மிகவும் பலமாக வேரூன்றித் தழைத்துவரும் 'தமிழிசை இயக்க'த்தின்மேல், கச்கும் ஆசாமிகளின் மனதில்தான் இசையில்லை. சென்னை சங்கீத அகாடமியின் ஆதரவில் நடந்த சங்கீத மகாநாட்டைத் திறந்து வைக்கும் போதுதான்: சர். எஸ். இராதாகிருஷ்ணன் சற்றும் நியாயமில்லாதவாறு, கேட்பவர் மனதில் கோபத்தைக் கிளப்பும் வகையில், தமது பிரசங்கத்தில் 'தமிழிசை'யை எதிர்த்து துவஜாரோகணம் செய்தார். மற்றவர்கள் இதைக்கேட்டு ஆச்சரியப்படலாம். ஆனல் அவரை நன்ருக அறிந்து கொண்ட நானே ஆச்சரியப்படுவதற்கில்லை. மைலாப்பூர் 'உத்தமர்கள்' அவரை மரியாதையுடன் வரவேற்று, மகாநாட்டைத் திறக்கச் சொல்லி, அவரை கண்யப்படுத்தியிருக்கிருர்கள். ஆதலால், சர். இராதாகிருஷ்ணன், அந்த 'உத்தமர்'களின் அபிலாஷைகளையும் எண்ணங்களையும் கவனித்துத்தானே நடக்க முடியும்! ஆகவே, அவர் 'உத்தமர்கள்' நிறைந்த கூட்டத்தில் பேசினர். அவர் அந்த சமயத்தில் பேசிய பேச்சை, கொஞ்சம் சிந்தித்துப் பேசியிருந்தால், அவ்வளவாக இறுமாப்படைய மாட்டார்,

ஜெர்மனியின் இசையைப் பற்றியும், இத்தாலியின் சிற்ப சித்திரக் கலைகளைப் பற்றியும், ஜப்பானின் காரைச் சுவர்க்கோலங்களைப் பற்றியும் சர். இராதாகிருஷ்ணன் வானளாவப் புகழ்ந்து பேசி விட்டு, ஆத்திரத்துடன், இசைக்கும் அரசியலுக்கும் தொடர் பில்லை யென்றும். இசையை அற்பாயுளாக்கி அழிப்பதற்காகவே பல முயற்சிகள் செய்யப்படுகின்றன வென்றும் கூறினர். ஒரு வேளை சர். இராதகிருஷ்ணனுக்கு கற்பனையையும் சிந்தனையையும் விலைக்கு விற்கும் தந்திரம் தெரியுமோ என்னவோ! அவைகளைப் பற்றி வேண்டுமானல் அவர் தர்க்க ரீதியாகப் பேசலாம், ஆனல், சந்தர்ப்பத்தையாவது ஆலோசித்து, அவர் அம்மாதிரி கீழ்த்தரமான சொற்றொடர்களை அள்ளி வீசியிருந்திருக்கக்கூடாது. இம்மாதிரியான தத்வ ஞானிகளை இந்தியாவில்தான் காணலாம். புராதன இந்தியாவின் தவயோகிகளின் நேர் சந்ததியார்கள் இவர்கள்!''

கபடமற்ற கண்ணன்: (சங்கத்தின் அங்கத்தினர்களில் ஒருவர்) —''ஆம்! ஆம்!! சர். இராதாகிருஷ்ணன் அவ்வாறு பேசியது கிளர்ச்சியை யுண்டாக்குவதற்குத்தான் என்று நினைக்கின்றேன் இந்த மாதிரியான எதிர்ப்புப் பேச்சின் பயன் என்ன தெரியுமா? மறுநாள், மற்றொரு இசை மகாநாடு நடந்தது. அதில் அநேக பிரபலஸ்தர்கள் கலந்துகொண்டார்கள். அம் மகாநாட்டை நிர்வகிக்கும் பிரமுகர்களான ராஜா சர். டாக்டர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களும், 'தமிழிசையை வளர்ப்பதே அம்மகா நாட்டின் நோக்கமென்றும், தமிழ் மறுமலர்ச்சியின் ஒரு பிரிவே 'தமிழிசை இயக்கம்' என்றும், மறைந்துபோன பல புராதனத் தமிழ்ப் பாட்டுக்களுக்குப் புத்துயிர் அளிக்க முயல வேண்டு மென்றும், இந்த மறுமலர்ச்சி இயக்கத்தில் கூடார்த்தமாகவோ வெளிப்படையாகவோ அரசியல் கலக்கப்படவில்லை' யென்றும் மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அபிப்பிராய வேற்றுமையும், கொள்கை வேற்றுமையுமுள்ள பல பிரமுகர்கள் இவ்வியக்கத்தில் ஒன்ருகக் கலந்துகொண்டனர். புராதனத் தமிழர் நாகரிகத்தைப் புத்துயிரளித்து தழைக்கச் செய்ய விரும்பியேதான் இத் 'தமிழிசை' மகாநாடு நடத்தப்படுகிறது என்று இம் மகாநாட்டு நிர்வாகிகள் கூறியிருக்கிறார்கள். இதை இவ்வியக்கத்தைக் குறைகூறும் புண்ணியவான்கள் நன்கு தெரிந்து கொண்டால் போதும். அதற்காக, அப் புண்ணியவான்கள் மகாநாட்டு நிர்வாகிகளைப் பாராட்ட வேண்டிய அவசியமில்லை. நிர்வாகிகள் இவ்வாறு உள்ளங்கை நெல்லிக்கனி போல் தங்கள்

நோக்கங்களை எடுத்துக் கூறிதான் என்ன பயன்? இக்குறை கூறும் நோக்கமே கொண்ட கொடிய கூட்டத்தாரிடம், இவர்களது பேச்சுக்கள் செல்லுமா? ஆகவே, இவ்வியக்கத்தினரின் உயரிய நோக்கங்களெல்லாம் கீழ்த்தரமாக மதிக்கப்பட்டு அதற்குப் பலவித கிளர்ச்சிகளும், எதிர்ப்புகளும் கிளம்பியிருக்கின்றன. இக் குறைகூறும் கூட்டத்தார்கள், 'தமிழிசை நிர்வாகிகளின் வெறும் பணிவான வேண்டுகோள்தானே! ஆதலால் இந்த இயக்கத்தை மிகச் சுலபமாக நசுக்கிவிடலாம். அதற்கு கொடிய எதிர்ப்புக் கூச்சல்களும், நையாண்டிப் பேச்சுகளும் போதும்'' என்று நினைத்து, அவ்விதமே காரியாம்சத்திலும் காட்டி வருகிறுர்கள்.''

''சங்கீதமும் மொழியும்'' என்ற தலைப்பின் கீழ் நமது நவீன தேசிய பத்திரிகை 'ஹிந்து' இரண்டு பத்தி இவ்வியக்கத்தை எதிர்த்து சீறியிருக்கிறது. இதன் நோக்கமென்ன? 'வெட்கங் கெட்ட விமர்சனம்' என்று அத்தலையங்கத்திற்குப் பட்டஞ் சூட்டலாம்! இத்தலையங்கம் பகுத்தறிவின்றி எழுதப்பட்ட ஒரு பிதற்றல். கொடிய ஆத்திரங்கொண்ட சீற்றத்துடன் முன் பின் யோசனையின்றி எழுதப் பட்டதென்று அபிப்பிராயங் கொண்டால் அதில் என்ன தவறு இருக்கிறது? 'உச்சஸ்தானத்தில் வீற்றிருக்கும் உத்தமர்கள்' கூட்டத்தில் இத் தலையங்கம் நன்கு வரவேற்கப்படும் என்ற ஒரு எண்ணத்துடன் இத் தலையங்கம் எழுதப்பட்டது என்று கூறலாம். பச்சாத்தாபம், இரக்கம், கருணை, சிறிதுமின்றி, ஆழ்ந்த இசை ஞானத்துடன் (!) 'ஹிந்து' இத்தலையங்கத்தை யெழுதிப் பிதற்றியிருக்கிறது. இசையில் அரசியலைப் புகுத்தியிருப்பதாகச் செட்டிநாட்டு ராஜா அவர்கள் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறுர். ஏனெனில், பாவம் அவர் தமிழ்நாட்டின் இதயத்தில் நிறுவப்பெற்றிருக்கும் 'வானொலி' நிலயத்தின் மூலம் பெரும்பான்மையான தமிழ்ப்பாட்டுகளையே ஒலிபரப்ப வேண்டுமென்று கேட்டு விட்டாரே! அது மட்டுமா? 'தமிழிசை இயக்கத்திற்கு பூரண ஆதரவு கொடுக்கும்படிப் பொதுமக்களையும் கேட்டு விட்டாரே! இதுதான் போகட்டும்! எல்லாக் கச்சேரிகளிலும், ஆரம்பத்திலும் முடிவிலும் தமிழ்ப் பாட்டுக்களையே பாடும்படி சங்கித சபைகளையும், பாடல்களைப் பாடும்படி சங்கீத வித்வான்களையும் கேட்டுக்கொண்டாரே! இதுதான் 'ஹிந்து'வின் பிதற்றலுக்குக் காரணம். ஞானத்தின் சொரூபமான 'ஹிந்து' சர். சண்முகம் செட்டியாருக்கு இசையின் மேதையே தெரியாதென்றும், ஆதலால், அவர் இசையைப்பற்றிக்

கவலைப்படவில்லை யென்றும், அவர் இது விஷயத்தில் சுத்த அநாகரிய மனுஷ்யர் என்றும் சொல்லாமல் சொல்லுகிறது இந்த 'ஹிந்து' எழுதிய "அபத்த பிதற்றல்கள்" போன்ற வார்த்தைகளை எந்த கீழ்த்தரமான பத்திரிகையாவது உபயோகிக்குமா?

நீரே சொல்லும், மிஸ்டர் மோசநாசகாலியாரே"

இதுவரை மௌனமாக இருந்த மிஸ்டர் மோசநாசகாலியார் கோபத்துடன் எழுந்தார். மேஜையின்மீது ஓங்கி குத்துக் குத்தி விட்டு, இந்த மாதிரியான சில விஷமங்கள் நடக்கத்தான் செய்யும். ஏனெனில், தமிழருக்குள் ஒற்றுமையில்லை அநேக நூற்றுண்டுகளாக, இத்துரதிருஷ்ட நாட்டை அடிமைப்படுத்தி ஆண்டுவரும் ஒரு சிறு சமூகத்தினரின் சூழ்ச்சிகளுக்கும், மாய்மாலத்திற்கும் தமிழர்கள் இரையாகி விடுகிறுர்கள். நமது நண்பர்களையும் விமர்சகர்களையும், 'ஹிந்து' தூக்கத்தினின்று தட்டி யெழுப்புகிறது. இசையின் நுணுக்கங்களை யறியாத ஒரு பத்திரிகை இசையைப்பற்றித்தன் அபிப்பிராயத்தை வரைந்து தள்ளும் வேடிக்கையைக் கவனியுங்கள். மொழிக்கு இசையில் இடமில்லை யானுல், ஓசை, உணர்ச்சியின் கலப்பின்றிக் கேட்பவர்களின் இருதயத்தைக் கொள்ளை கொள்ளுமானுல், உலகத்தின் மாபெரும் இசைவாணர்கள் தங்கள் தங்களது இதய உணர்ச்சிகளைப் பெரும்பாலும் தங்கள் தங்களது தாய்மொழிகளின் மூலமாகவே எப்படி வெளியிட்டிருக்க முடியும்? இதுதான் போகட்டும், 'ஹிந்து' ஆத்திரங்கொள்வதெல்லாம், செட்டிநாட்டு ராஜா அவர்கள், திருச்சி வானெலியில், மற்றப் பாட்டுகளைவிட அதிகப்படியாகத் தமிழ்ப் பாட்டுகளே ஒலிபரப்பப்படவேண்டும் என்று கூறியதனுல் தான். இசைக்கும் மொழிக்கும் ஸ்தானப் பிராப்திகூட இல்லையென்றுல், ஏன் அகில இந்திய வானெலி நிலையங்கள் (திருச்சி, சென்னை தவிர) தமிழிலோ, தெலுங்கிலோ பாட்டுகளையும் நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்புவதில் சற்றும் சிரத்தைகொண்டது கிடையாது என்பதைப்பற்றி, இந்த 'ஹிந்து' சற்றுகினும் ஆற அமர யோசித்ததுண்டா? பம்பாய் கல்கத்தா, டக்கா, லக்ஷ்மணபுரி, லாகூர், டில்லி, பிஷாவர் முதலிய வானெலி நிலையங்கள் எப்பொழுதாவது கர்நாடக இசையை ஒலிபரப்பி யிருக்கின்றனவா? 'லிசனர்" பத்திரிகையைப் படித்துப் பாருங்கள். இதன் உண்மை விளங்கும். ஆகவே, தப்பித்தவறி யாராவது ஒருவர், தமிழ்நாட்டிலிருக்கும் வானெலி நிலையம், தான் இதுகாறும் புரிந்துவந்த அநியாயத்திற்குத் தக்க பரிகாரம் செய்யவேண்டுமென்றுல், அதற்கு, உடனே மைலாப்பூர் தெருக்களிலும், மாம்பலம், திருவல்லிக்கேணி சந்து

பொந்துகளிலும் ஏனோ அலங்கோலக் காட்சிகள்! எங்கும் கவலை நிறைந்த முகங்கள்! ஏக்கங்கொண்ட விழிகள்! அப்பாடா! என்ன அற்புதமான காட்சிகள் — சந்து பொந்துகளில்!''

'' உண்மை நிலையை உணர்ந்தறியாது, கன்னா பின்னாவென்று, இந்த 'ஹிந்து' பத்திரிகை, 'பீதோவன்,' 'மோசார்ட்' முதலிய மேனாட்டு 'சாம ராட்டு'களைப்பற்றி ரொம்பத் தெரிந்ததுபோல், பிதற்றித் தள்ளியிருக்கிறது. இசையில் மொழியினால் எல்லைகள் கட்டுவது மிகவும் பிசகு; அது நியாயமேயில்லை என்கிறது இந்த 'ஹிந்து'ப் பத்திரிகை. பிரிட்டிஷ் இசை மறு மலர்ச்சியைப்பற்றி, 'ஹிந்து'வின் சங்கீத ஆசிரியர், ஏதாவது கேள்விப்பட்டிருக்கிறாரா வென்று கேட்கிறேன். நியமம் தப்பிய அவ்வாசிரியருக்கு இதோ மேற்கோள்கள் :— '' ஒயில்ட்,'' ஒரு சீமாட்டியிடம், 'ஜெர்மன் மொழியின் ஒருவிதப் பேச்சே இசையாக மாறியிருக்கிறது' என்று மிஸ்டர் '' எட்வின் ஈவான்ஸ்,'' '' விமர்சகர்—ஒரு கலைஞர் '' என்ற புத்தகத்தில் எழுதியுள்ளார்.

மேலும், மிஸ்டர் 'ஈவான்ஸ்', ''பழைய காலத்தில் நடந்தவைகளை ஆராய்ந்தால், கிளர்ச்சிகள் பல கிளம்புவதைத் தவிர்ப்பதற்கில்லை. ஆனால், எழும் கிளர்ச்சிகள், கலைஞர்கள் சிருஷ்டித்த உயரிய இசைகளின் மேல் அல்ல. ஆனால், அனுஷ்டானத்தில் கொண்டு வரப்பட்டுத் தாழ்மையடைந்த ஒருவித கற்பனையின் சிருஷ்டிகளைப்பற்றியே கிளர்ச்சிகள் எழுந்திருக்கின்றன. 'இசைக்கு வரப்பெல்லையே கிடையாது' — என்ற பழமொழி மிகவும் முரண்பாடு உடையது. சென்ற யுத்தத்தின் போது, இங்கிலாந்தில் ஜெர்மன் இசையை ஆதரிப்பவர்கள் பலர் இருந்தனர். அவர்கள், தங்களுக்கு விசால புத்தியிருப்பதால், ஜெர்மன் இசையை ரசிப்பதாக மிகவும் பெருமையடித்துக் கொண்டார்கள். எல்லா நாட்டு இசைகளையும் ரசிக்கும் பல ரசிகர்கள் கூட்டத்திற்கும், முன்பு கூறிய கூட்டத்தினருக்கும் குறிப்பிடத் தகுந்த வேற்றுமைகள் பல இருந்தன. கலை, நாட்டெல்லைகளின்படியே வளர்ச்சி பெறுகிறது என்று சொன்னால் மிகையாகாது. தேசிய முரண்பாடுகள் கலையின் முன்னேற்ற வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படுகின்றன, 19-வது நூற்றாண்டில்,

ஐரோப்பிய நாடுகளில் சில இதன் உண்மையை உணர்ந்தன. ஆகவே அந்நாடுகளில், பல இசைவாணர்கள் தங்கள் தாய்மொழி களிலேயே பாட ஆரம்பித்தனர். ரஷ்யா, பொஹிமியா, ஸ்காண்டிநேவியா முதலிய நாடுகளில் இவ்வியக்கம் தோன்றித் தழைத்தது. போலந்தில்கூட இவ்வியக்கம் வெற்றி பெற்றிருக்கும். அந்தோ! அங்கு அரசியல் கட்சிகளில் உள்ள முரண்பாடுகளுக்குக் கலையின் மறுமலர்ச்சி பலியாக்கப்பட்டுவிட்டது.

— 'லிபரேடர்' 29-12-43

தமிழிசை முழக்கம்!

ஒரே கூட்டம். ஆண்களும், பெண்களும், பலபட்டதாரிகளும், பத்திரிகாசிரியர்களும், நடிக நட்சத்திரங்களும், அரசியல்வாதி களும், அறிஞர்களும், வித்துவான்களும் சென்ற 23-ம் தேதி ஒரே குதூகலமாகக் கூடியிருந்தனர். தேதியைக் குறிப்பிட்டவுடன் சென்னை, அரண்மனைக்காரத் தெரு, செயிண்ட் மேரீஸ் ஹாலில் தமிழிசை மகாநாட்டுக்குத்தான் என்பது நாம் சொல்லாமலே விளங்கும்.

அன்று, அவ்விடத்திலே 'தமிழ் – தமிழ், தமிழிசை – தமிழிசை' என்ற வீர முழக்கங்களையும், ஆவேசங்களையும் சொல்லி முடியாது. அவ்வளவு அபாரமாக இருந்தது.

தமிழிசைக்கே தொண்டு செய்து வரும் திரு. டி. கே. சிதம்பர நாத முதலியாரவர்கள் மகாநாட்டுத் தலைவராக வீற்றிருந்தார். நாடகம், சினிமா, சங்கீதம் முதலிய கலைகளின் முன்னேற்றத்திற் காக அல்லும் பகலும் உழைத்துவரும் ராவ்பகதூர் பி. சம்பந்த முதலியாரவர்கள் வரவேற்புக்கழகத் தலைவராயிருந்து எல்லோரை யும் உபசரித்தது குறிப்பிடத்தக்கது.

தென்னாட்டு வள்ளல் ராஜா சர். அண்ணாமலையார் மகா நாட்டைத் திறந்து வைத்து அதன் சேவையைப் பாராட்டிப் புகழ்ந்தார்.

பிறகு ஆங்கு வீற்றிருந்த சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் இராஜகோபாலாச்சாரியார், திரு வி. கலியாணசுந்தர முதலியார், கல்கி போன்ற பேரறிஞர்களும் அன்று செய்த வீர கர்ஜனையை என்றும் நாம் மறக்க முடியாது.

நிற்க, தமிழ்நாட்டில் உள்ள எல்லா சங்கீத வித்வான்களும் அங்குக் குடியேறியிருந்தது, தமிழிசைக்கு இனி ஒருவித பயமுமில்லை என்பதைத் திட்டமாகக் கூறுவதுபோல் இருந்தது.

அம்மகா நாட்டை ஒட்டி 24-உ முதல் தொடர்ச்சியாக 12 நாள் வரையிலும் சங்கீதக் கச்சேரிகள் தினசரி நடத்தும் ஏற்பாட்டையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

இனி, தமிழிசை முழக்கம் தமிழ் நாட்டில் மட்டுமல்ல, வட நாட்டில் மட்டுமல்ல, தரணியில் தமிழர்களிருக்கும் எந்த இடத்திலும் முழங்கும் என்பதில் சற்றும் ஐயமில்லை. தமிழர்களின் இரத்தத்திலும், தமிழ், இசைமயமாய் ஒன்று கலந்தது, நம் எதிர் கால வெற்றிக்கு ஓர் அறிகுறி என்றுதான் சொல்லவேண்டும். மேலும், நடக்க இருக்கும் தமிழர்களின் செயல்களால் தமிழ்த் தேவி சாந்தியடைந்து, மனம் குதூகலிப்பாள் என்பதைச் சந்தோஷத்துடன் கூறுகிறோம்.

தமிழிசை ஓங்கட்டும்! தமிழ் முழக்கம் எங்கும் பிரதிபலிக்கட்டும்! அன்னைத் தமிழ்த்தாய், தமிழர்களுக்குத் தனிப் பெருமையையும் ஊக்கத்தையும் அளிக்கட்டும்!

— 'சினிமா நிலையம்', 30-12-43.

சென்னையில் இசை முழக்கம்

டிசம்பர் கடைசியில் சென்னையில் ஏகக் கொண்டாட்டமாக இருப்பதியல்பு. யுத்தங்காரணமாகப் பலவித நிகழ்ச்சிகள் குறைவு பட்டுவிட்டன. பார்க் வேடிக்கை, பலவித கண்காட்சிகள் சமூக—அரசியல் மகாநாடுகள் எல்லாம் நடைபெறவில்லை ஆனால் எல்லா சக்திகளும் சேர்ந்து இசை முழக்கமாகிவிட்டன வென்னலாம். இந்த இசை முழக்கத்தில் இவ்வாண்டுத் தமிழிசை முழக்கமே தலைசிறந்து நின்றது. தமிழிசைச் சங்க மகாநாடும் கச்சேரிகளும் சென்னை நகரைக் குமுறச் செய்துவிட்டன. எங்கு பார்த்தாலும் தமிழிசைச் செய்தி, தமிழிசை விளம்பரம், தமிழிசை மகாநாட்டையும் கச்சேரிகளையும் பற்றிய புகழுரை, இந்த மகாநாட்டினுல் தமிழிசையை எதிர்த்தவர்களில் உண்மையை அறியாத பலர் உண்மையை அறிந்தார்கள். இதன் பயனுக முன் ஏற்பட்டிருந்த பல சிக்கல்கள் நிவர்த்தியாகி விட்டனவென்னலாம். உண்மையைத் தெரிந்து கொண்டே

விதண்டாவாதம் புரிபவர்களே எதிர்க்கட்சியில் பாக்கிப்பட்டிருக்கின்றனரென்னலாம். திறப்பாளர், உபசாரத்தலைவர், மகாநாட்டுத்தலைவர் உரைகளும் பிரசங்களின் உரைகளும் சங்கீத உலகத்துக்கே ஒரு புது உணர்ச்சியையும் ஒரு ஸ்திரமான தெளிவையும் தந்துவிட்டன. குழம்பவோ மயங்கவோ திரித்துக் கூறப்படும் பேச்சுக்களை ஏற்கவோ இனி இடமில்லை. தமிழிசை இயக்கம், பிரசார இயக்கம், அரசியல் சூழ்ச்சியுள்ளது, இசை தமிழில் வந்தால் தரம் குறையும், அதற்குத் தமிழ் எடுத்த பாஷையல்ல, தமிழில் பாட வராது, தமிழிசை பாடுகிற வித்வான்கள் மட்டரகம், இசைக்கு மொழி தேவையில்லை என்று என்னென்னவெல்லாமோ எதிரிகள் கூறி வந்தார்கள். எல்லாம் இந்த டிசம்பருடன் தவிடுபொடியாகிவிட்டன. அகாடமி, பைன் ஆர்ட்ஸ் கூட்டங்களுந்தான் நடைபெற்றன. தமிழிசைக் கூட்டத்தின் வெற்றியைப் பார்த்து மூக்கில் விரல் வைப்பதைத் தவிர மற்றவர்கட்கு வேறு வகையில்லாமல் போய்விட்டது.

அகாடமியில் புரொபசர் இராதகிருஷ்ணன் அவர்கள் பேசியிருக்கிற பேச்சு கவனிக்கத்தக்கதாகும்.

''உயரிய சமாதி நிலையில் நாதோபாசனையில் மனுஷ்யன் ஈடுபடாவிடில் உண்மையான சங்கீதம் வராது''

இதை எல்லோரும் கவனிக்க வேண்டும். இஃதொன்றே தமிழிசை எதிரிகட்குப் போதிய பதிலாக இருக்கிறது. இதன்படி பார்த்தால் இப்போதிருக்கிற எல்லா வித்வான்கட்கும் உண்மையான சங்கீதம் வராதென்பது விளங்கும். தியாகையர்வாளைப் போன்ற மகா பக்த சிரோமணிகட்குத்தான் இப்படிப்பட்ட சங்கீதம் வரும். இதனை உணர்ந்தால் சண்டைக்கு இடமேது? பேச்சுக்கு இடமேது? இப்படிப்பட்ட மகான்களின் சங்கீதத்திற்குக் குறுக்கே யார் நிற்க முடியும்? யார்தான் நிற்க விரும்புவார்கள்?

இனி நீதிபதி சந்திரசேகரய்யரவர்கள் திறப்புவிழா ஆற்றும் போது நீளமாகப் பேசியிருக்கிறார்கள். அதில்,

''காசு கொடுக்கிறவன் நான்: என் இஷ்டப்படி தான் பாடவேண்டும்'' என்பதெல்லாம் வியாபாரப் புத்திப் பேச்சு.

என்று குறிப்பிடுகிறார்கள். சரி, இது வியாபாரப் புத்திப் பேச்சுத்தான், 600 ரூபாய் தந்தால்தால் பாடுவேன் என்று வித்வான் கேட்கிற பேச்சு எந்தப் புத்திப் பேச்சு? கடவுள் நிலையில் சங்கீத சமாதியில் லயித்து அடிக்கிற தந்தியா இது என்று கேட்க விரும்புகிறோம். 20 ரூபாய் டிக்கெட்டுக்கு முன் பணம் வாங்கிக்கொண்டு வித்வானுக்கு ஏதோ கொஞ்சம் கொடுத்துவிட்டு லாபம் சம்பாதிப்பது எந்தப்புத்தியில் சேர்ந்த தென்பதை நோக்க வேண்டாமா? பக்தி பரவசப்பட்ட உத்தமோத்தம சங்கீத ஊற்று 27வ மாலை 5-மணிக்கு வா என்றால் வருமா என்று நீதிபதி அவர்களைக் கேட்க விரும்புகிறோம். அந்த மகாப்பிரவாகம் 8-30க்கு நில் என்றால் நிற்குமா என்பதும் தெரிய வேண்டும். ஒரு சங்கீத வித்வானின் பாடலைக் கேட்கத் தஞ்சாவூர் மகாராஜா (ஆண்டு கொண்டிருந்த காலத்தில்) விரும்பியபோது, "நீ கேட்கிறபோது சங்கீதம் வராது; அது வரும்போதுதான் வரும் அப்போதுதான் நான் பாடுவேன்" என்று வித்துவான் சொன்னாராம். பிறகு பல நாள் இரவு பகலாக அரசர் காத்திருந்தாராம். எண்ணெய் தேய்த்துக் கொண்டே இசையை வித்துவான் பாடக்கேட்டு அரசர் மகிழ்ந்தாராம். உண்மைச் சங்கீதம் அப்படி வருகிறது; அந்த வித்வான்கள் காசை விரும்புகிறதில்லை; டிக்கட் போடுகிறதில்லை. நாலு மணி நேரத்துக்கு 500, 600 ரூ என்று ஒப்பந்தம் செய்கிற போதுதான் வியாபாரமாக மாறுகிறதென்பதை வெகு அழுத்தமாகக் கூறுகிறோம். அகாடமிக் கட்சியார் சொல்கிறபடி பண வசூல் செய்து, சட்டப்படி வித்வான்களும் காண்ட்ராக்ட் எழுதிக் கொடுத்துத் தெலுங்கு, துலுக்கு பாடுவது சாஸ்திரீயமானது, அல்லது அது கடவுளோடு கலக்கும் சங்கீதமாகிறது! அப்படியே எல்லாம் செய்து தமிழ் பாடச் சொன்னால் அது வியாபாரப் புத்திப் பேச்சாகிறது! இந்த மாதிரி செய்யப்படும் விகடப் பிரசங்கங்களில் உள்ளே என்ன இருக்கிறதென்பது நமக்கும் தெரியும்; அவர்கட்கும் நன்றாகத் தெரியும் உண்மை. பொது ஜனங்கட்குத் தெரியாமலிருக்கவே அவர்கள் முயல்கின்றனர். அந்த எண்ணம் இந்த ஆண்டு நிகழ்ச்சிகளிலிருந்து பொதுஜனங்கட்கும் வெளிச்சமாகத் தொடங்கிவிட்டதென்பது நிச்சயம்.

நீதிபதி ஐயரவர்கள் பேசியுள்ள பேச்சைக் கண்டு நாம் வருந்தவில்லை. நீதிபதிகளையும் புரட்டுகிறதே நம் நாட்டுப் புரட்டு என்பதை நினைக்கும்போதுதான் நமக்கு வேடிக்கையாக இருக்கிறது. ஆனால் ஆண்டுக்கு ஒருவரிருவரைக் கொண்டுவந்து அவர்கள் வேறு துறைகளில் பெற்றிருக்கிற நல்ல பெயரை விற்று முதல் செய்யும்படி இந்த சங்கீத சபையார்கள் செய்துவருவதைக் கண்டு யார்தான் வருந்தாமலிருக்கமுடியும் ?

— 'குமரன்' 30–12–43

டிசம்பர்மீ 23உ சென்னை அரண்மனைக்காரத் தெருவில் எள் விழ இடமில்லை· ''ஜே ஜே'' என்ற ஜனக்கூட்டம். ''செயின்ட் மேரீஸ் ஹால் எங்கே ? எங்கே ?'' என்று ஜனத்திரளுக்கு நடுவே அந்த ஹாலைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. ஹாலின் மேலே நல்லவேளையாகக் கலைக்கடவுள் நடராஜரின் நடன உருவம் ஒன்று நாட்டியிருந்தார்கள். அது இல்லாவிட்டால் ஹாலைக் கண்டிருக்கவே முடியாது. கூட்டமாவது கூட்டம் !

தமிழன்பர் டி. கே சிதம்பரநாத முதலியார் அவர்கள் தலைமையில் (23-12-43) வியாழக்கிழமை மாலை 4-30 மணிக்குத் தமிழ் இசை மகாநாடு கோலாகலத்துடன், பொங்கிவரும் மகிழ்ச்சியுடன் கூடிற்று. அதைக் காணத்தான் அவ்வளவு கூட்டம். அதை அனுபவிக்கத்தான் அவ்வளவு பெருந்திரள். தமிழ் இசை என்றால் தமிழ் மக்களுக்கு இப்போது எவ்வளவு உணர்ச்சி வந்திருக்கிறது என்பதற்கு இந்த 'செயிட் மேரீஸ் முற்றுகை' ஒன்றே சரியான காக்ஷியாகும் ; சாக்ஷியாகும்

ஸ்ரீ எம். எம். தண்டபாணி தேசிகரின் ''குனித்த புருவம்'' என்ற இனிய கடவுள் வாழ்த்துடன் மகாநாடு ஆரம்பமாயிற்று. ராஜா சர். அண்ணாமலை செட்டியார் மகாநாட்டைத் திறந்துவைத்துத் தமிழிசை இயக்கம் தோன்றியதற்குக் காரணம் என்ன, இயக்கத்தின் உண்மை நோக்கம் என்ன என்று மனம் விட்டுச் சொன்னார்.

''தமிழிசை புதிதல்ல. தமிழிசை இயக்கம் படையெடுப்புமல்ல. அபசாரமும் ஆகாது. தமிழிசை அந் நாட்டிற்குரிய செல்வம். தமிழிசை இயக்கம் தூய கலை இயக்கமே. அதில் அரசியல் கலப்பே இல்லை. ஜாதிப் பித்துமில்லை. பிற மொழிகளை வெறுக்கவில்லை'' என்று 'ராஜா. சர்' வெகு அழுத்தந்திருத்தமாகக் கூறினார்.

தலைவர் 'டி. கே. சி.' யின் பிரசங்கம் அவ்வளவும் 'கலைக் கோயில்.' "இந்த சங்கீதம் நம் நாட்டிற்குக் கிடைத்த பூர்வ ஜன்ம சுகிர்தமாயிற்றே. அதை மேன்மையுடன் வைத்துக்கொள்ள வேண்டாமா? பாடகரும், கேட்பவர்களும் இரண்டறக் கலந்து அனுபவிக்க வேண்டாமா? அதற்குப் பாஷை அவசியமில்லையா!' என்று உள்ளம் உருகினர். இந்தத் தள்ளாத வயதில், சுமக்க முடியாத பெரிய ரோஜாப்பூ மாலையைச் சுமந்துகொண்டு, 'மைக்கின்' முன்னல் அவர் பெருங்குரல் போட்டுப் பேசியதைப் பார்த்தபோது 'பாவம், இவருக்குத்தான் எவ்வளவு ஆசை' என்று தோன்றிற்று. தமிழிசை வேண்டுமென்று சொல்லும்போது ஏதோ பாஷை மட்டும் தமிழில் இருந்தால் போதும் என்பதல்ல. பூர்வமான தமிழ்நாட்டு இசைப்பண்போடுகூடி உயர்ந்த உணர்ச்சி பாவங்களோடு கலந்த சங்கீதம் வேண்டும் – என்று அவர் குறிப்பிட்டதை நாம் ஒவ்வொருவரும் நன்கு கவனிக்கவேண்டும்.

சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் முதற்சொற்பொழிவாளராகப் பேசவாரம்பித்தார். இந்தியன் – தமிழன் என்று பிற நாட்டாரால் மதிக்கப்படும் இவர், மேனுடுகளிலேயே தமது வாழ் நாட்களைச் செலவிட்டவராயிற்றே, இவருக்குத் தமிழ் என்று ஒரு பாஷை யிருப்பது நினைவு இருக்குமோ என்று பலர் சந்தேகப்பட்டார்கள். ஆனல் அவர் தமிழில் பேசிய அழகையும், அவருக்கு தமிழுணர்ச்சி வந்த அனுபவ வேடிக்கையையும் சிரிக்கச் சிரிக்கச் சொன்னர். அமெரிக்காவிற்குப் போய் இவர் புரட்டி விட்டு வந்தது எப்படி இருந்தாலும், இவரை ஒரு அசல் தமிழராக அனுப்பியிருக்கிறது அமெரிக்கா. அதே ஒரு பெரிய வெற்றிதான்.

சர். ஆர். கே. செட்டியார், "இந்த இயக்கத்தில் அரசியல் சூழ்ச்சி ஒன்றுமில்லை என்று சொல்லுகிருர்கள். ஆனல் இருக்கிறது! அப்படி இல்லாமலிருக்குமானல் என்னையும், ராஜாஜியையும் ஒரே மேடையில் பக்கம் பக்கமாய்ப் பார்க்க முடியுமா?" என்ருர். ஹாலே அதிரும்படி சிரிப்பு.

அதற்குப்பின் ராஜாஜி வெகு அழகாகப் பேசினர். அவ்வளவும் தத்துவமும், உபமானமும், ஆணித்தரமான அபிப்பிராயங்களாகவு மிருந்தன. அவர் மணிமணியாகச் சொன்னர்: "இது சோதனை இயக்கம். நமது உணர்ச்சிகளைச் சோதிக்க வந்திருக்கிறது".

"இனிமையான சப்தமே சங்கீதம். அந்த இனிமைக்கு மொழி அவசியம். இதை, எதிர்ப்பவர்கள் உணர்ந்துவிட்டால் தப்பு அபிப்பிராயங்கள் நீங்கிவிடும்."

"கலை வளரப் புதுமை வேண்டும், வளர்ச்சி வேண்டும். எனவே, தமிழ் உலகில் அநேக தியாகராஜர்கள் தோன்றுங்கள்." இவ்வளவையும் சபை மெய்ம்மறந்து கேட்டுக்கொண்டிருந்தது.

பிறகு என். எஸ். கிருஷ்ணன் சிரிக்கச் சிரிக்கப் பேசினார். 'கல்கி' 'கோதண்டராமன் பசு'க்கதை ஒன்று சொல்லி, நமது சங்கீதக் கச்சேரிகளை மேய வரும் இந்தப் பசுக்களை அடித்து விரட்ட வேண்டும் என்றார்! இன்னும் பலர் பேசினார்கள்.

எங்குத் திரும்பினாலும் தில்லை நடராஜரின் நடனத் திரு உருவம், நம்மைப் பார்த்து, "கலையைக் காப்பாற்றுங்கள்" என்று சொல்லிக் காட்டுவதுபோல அமைக்கப்பட்டிருந்தது. ஹாலின் முன் வாசலில், ராஜா சர். அவர்களும், ஆர். கே. எஸ். அவர்களும் புன்னகை தழுவி நின்றுகொண்டு, வருகிறவர்களை "வாருங்கோ! வாருங்கோ!" என்று வரவேற்றார்கள். தலைவர் டி. கே. சி, காரிலிருந்து குதித்து இறங்கியவுடன் "குடுகுடு" வென்று பறந்தோடிப் போய் ஒரு பெரிய ரோஜாப்பூ மாலையைப் போட்டுவிட்டு மாலையும் கழுத்துமாக மேடைக்கு அழைத்து வந்தார்கள். 200 பேர்கள் நிற்கவேண்டிய காலரியில் 500 பேர்கள் நின்றுகொண்டு ஒருவர் மேல் ஒருவர் தொங்கிக்கொண்டு—வளைந்துகொண்டு—கழுத்தை நீட்டிக்கொண்டு $4\frac{1}{2}$ மணி நேரம் பட்ட சிரமம் கொஞ்ச நஞ்சமல்ல. இவ்வளவும் எதற்காக என்று பார்க்கும்போது நம்மையறியாமலேயே "தமிழிசை விழிப்பு" என்ற ஒரு குரல் உள்ளூரப் பேசுகிறது. வள்ளல் அழகப்பர் திருவாங்கூர் சர்வகலாசாலைக்குத் தமிழ் அபிவிருத்திக்கென லட்ச ரூபாய் அளித்தது வீண் போகவில்லை என்று பெருமைப்படும்படி மலையாள நாட்டிலிருந்து ஒரு சிறுமி புறப்பட்டு வந்து, தமிழில் இரண்டு பாட்டுகளை வெளுத்து வாங்கினது ரொம்பப் பேஷாக விருந்தது.

பொதுவாக இந்த இசை மகாநாடு பரிபூர்ண வெற்றி அடைந்து விட்டது. சர். எம். வெங்கடசுப்பராவ் சாக்ஷியாக இந்த மகாநாடு அமோகமக நடைபெற்று விட்டது. இதே செயின்ட் மேரிஸ் ஹால் திறப்பு விழா அன்றுதான் "மித்திரன்" சி. ஆர். சீனுவாசன், "சங்கீதத்துக்குப் பாஷையாமே!" என்று சீறினர். அதே ஹாலில் சங்கீதத்துக்குப் பாஷை அவசியம்; தமிழ் நாட்டுப் பாட்டுக்கச்சேரிகள் தமிழில் தான் நடைபெற வேண்டும் என்று தமிழ் நாட்டுத் தலைநகரான சென்னை தீர்ப்புச் சொல்லிவிட்டது.

—'நவயுவன்' 1—1—44'

தமிழிசையும் ஹிந்து பத்திரிகையும்

தமிழிசை இயக்கத்தின் ஆரம்பகால முதற்கொண்டே அதன் பால் ஹிந்து பத்திரிகைக்குள்ள துவேஷ மனப்பான்மையைக் காட்டிவருகிறது. அத்துவேஷத்தின் காரணமாகத் தமிழிசை இயக்கத்திற்கு ஹிந்து பத்திரிகை செய்த எதிர்ப்பிரசாரமெல்லாம் அது எதிர்பார்த்ததற்கு மாருகச் சிறிதும் பயனளிக்கவில்லை. தமிழ் இசை இயக்கத்திற்கு வரவர ஆதரவு ஏராளமாகப் பெருகி வலுவடைந்து வந்திருக்கிறது அதற்கு அறிகுறியே சமீபத்தில் நடைபெற்ற சென்னைத் தமிழிசை மகாநாடு. தம் நோக்கத்துக்கு மாருகத் தமிழிசை இயக்கம் இவ்வளவு பிராபல்யம் அடைந்து விட்டதைப் பார்க்க ஹிந்து பத்திரிகைக்கு ஆத்திரம் பொங்கிப் பொங்கி வழிகிறது அதன் காரணமாக அது தன் வழக்கமான விவேகம் நிறைந்த வாதமுறையைக் கைவிட்டு இயக்கத்தை குறை கூறுகிறது.

பார்க்கப்போனல் ஹிந்து பத்திரிகையின் டிஸம்பர் 25வ தலையங்கம் முழுவதும் ஒரே விபரீதப் போக்குதான். அத்தலையங்கத்தில் காணப்படுபவைகளை நாம் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். "திருஞான சம்பந்தப் பெருமான் தேவாரத்தை வசன காவியமாகச் செய்தார். பின்னல் வந்த, ஹிந்து பத்திரிகையின் நற்சாட்சிப்பத்திரம் பெற்ற 'உயர்தர' சங்கித வித்வான்கள் அதை இசைப் பாடலாக்கினர்கள்" என்பது, அறியாமை ஒரு பகுதி துவேஷப் பிரசாரம் மற்ருெரு பகுதி. இவ்விரண்டில் முன்னதைப்பற்றி நாம் இப்போது ஒன்றும் சொல்ல வரவில்லை, ஏனெனில் அது அவ்வளவு முக்கியமும் அன்று. ஆனல் பின்னது அப்படியன்று. ஒரு புனிதமான காரியத்திற்காகத் தம் தேக உழைப்பை நல்கியும் பெரும்பொருளைச் செலவிட்டும் ஆத்ம

சக்தியை ஈந்தும் அருந் தொண்டாற்றிவரும் நம் தலைவர்களை, அவர்களது நன்னோக்கத்திற்கு மாசு கற்பிக்கும் முறையில் ஒரு பொறுப்புவாய்ந்த பத்திரிகை பேசினால், அதை நாம் என்னென்று சொல்வது!

தமிழிசை இயக்கத்தில் அரசியல் சூழ்ச்சி என்பது கடுகளவும் கிடையாது என்பதாக, இதுவரையில் பன்முறை கூறிவந்ததோ டல்லாமல், இப்போது சென்னைத் தமிழிசை மகாநாட்டிலும் கனம் செட்டிநாட்டரசரவர்கள் நன்கு வலியுறுத்தி கூறியுள் ளார்கள். இதை ஹிந்து பத்திரிகை நம்பமாட்டேனென்கிறது. அது ஒருபுறம் இருக்க ஹிந்துவின் மற்றொரு விநோதமான விதண்டாவாதம் என்னவென்றால், தமிழிசை மகாநாட்டுத் தீர்மானங்கள் தமிழிசை இயக்கத்தின் நன்னோக்கங்கள் கூறப் படுபவைகளுக்கு மாறாக இருக்கின்றனவாம். அதாவது திருச்சி ரேடியோவில் தமிழ்ப்பாட்டுகளுக்கு அதிக இடம் கொடுக்க வேண்டுமென்று கேட்பதும், தமிழ்நாட்டுப் பொதுமக்கள் தமிழில் பாடும் வித்வான்களுக்கு அதிக ஆதரவு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதும், தெலுங்கு சம்ஸ்கிருத பாட்டுக்களின்மீது தங்களுக்கு யாதொரு துவேஷமுமில்லை என்று தமிழிசை இயக்கத் தலைவர்கள் கூறுவதற்கு முற்றிலும் முரணாக இருக்கிறதாம்! ஆகவே அவர்களது சொல்வேறு, செய்கை வேறு என்பதாக ஹிந்து பத்திரிகை மறைமுகமாகக் குறிப்பிடுகிறது.

தமிழ்நாட்டுச் சங்கீதம் தெலுங்கு வயப்பட்டிருப்பதால், அதை மாற்றித் தமிழ் மயமாக்க வேண்டும் என்பதே தமிழிசை இயக்கத்தின் நோக்கம். இதில் தெலுங்கின்பேரில் துவேஷம் எங்கே தொனிக்கிறது? அடிமைப்பட்டிருக்கும் நமது நாட்டிற்குச் சுதந்திரம் வேண்டுமென்று கேட்டால் அது வெள்ளைக்காரர்களைத் துவேஷிக்கிறதாக அர்த்தமாகுமா? இதெல்லாம் ஹிந்து பத்திரிகை அறியாததல்ல. ஆனால் தற்சமயம் தமிழர்க்குரிய திருச்சி ரேடியோவில் தமிழ்ப்பாட்டிற்கு அதிக இடங் கொடுங் களென்று கேட்பது பாவமா? 'தமிழ்நாட்டில் நடைபெறும் பாட்டுக் கச்சேரிகளில், தமிழ்ப் பாடல்கள் முதலிலும் கடைசி யிலும் பாடித் தமிழ் மொழியைக் கௌரவியுங்கள்' என்று தமிழ் நாட்டு வித்வான்களைக் கேட்டுக்கொள்ளுவதற்குக்கூட தமிழ் மக்களுக்கு உரிமையில்லையா? தமிழ் நாட்டுச் சங்கீத சபைகளில் தமிழிசையை அதிகமாக ஆதரியுங்கள் என்று தமிழ் மக்கள் வேண்டுகோள் விடுத்தால் அது யாரையேனும் பயமுறுத்து

வதாக அர்த்தமா ? இத்தகைய விநோதமான கற்பனைகள் உதயமாகி இருப்பது நமக்கு ஆச்சரியத்தை விளைவிக்கிறது.

தமிழ்நாட்டில் தமிழர்களால் நடத்தப்பட்டு, தனது சீரிய தொண்டினுல் தமிழ்நாட்டிட்கே பெருமை அளித்துவரும் பிரபல பத்திரிகையான 'ஹிந்து' தனது 25வ தலையங்கத்தின் மூலம் தமிழ் மக்களுக்கே தீங்கிழைத்துவிட்டது. அத்தலையங்கத்தைப் படிக்கும் எந்தத் தமிழனும் மனக்கொதிப்பு அடையாமலிருக்க முடியாது ஆகையால் தமிழ் மக்கள் சார்பாகச் சில துவேஷ மனப்பான்மை கொண்ட பத்திரிகைகளுக்கு நாம் சொல்ல விரும்புவது என்ன வென்ருல், அவைகள் ஹிந்துவின் மனோ பாவத்தைப் பின்பற்ற வேண்டாமென்பதே.

தமிழிசை இயக்கம் தமிழ்நாட்டிற்கே பொது. தமிழ் மக்கள் அனைவருக்கும் பொது. இதில் எவ்வித ஜாதிமத பேதமுமில்லை, அரசியல் கட்சிபேதமும் கிடையாது. இது தமிழிசை இயக்கத் தலைவர்களால் பன்முறையும் வற்புறுத்திச் சொல்லப்பட்டிருக் கிறது. தமிழிசை வளர்ச்சியடைவதற்காக, அவர்கள் தமிழ் நாட்டுப் பொதுமக்கள், தமிழ்நாட்டுச் சங்கீத வித்வான்கள், தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் ஆகிய அனைவரது ஒத்துழைப்பையும் ஆதரவையும் மனமார விரும்புகிருர்கள். அவற்றை மறுப்பவன் தமிழனுக மாட்டான்.

தமிழிசையை விரோதிப்பவர்கள் தமிழ் மக்களையும் அவர் களது தாய்மொழியாகிய தமிழையும் விரோதிப்பதாகத்தான் அர்த்தம். ஆகையால் தமிழ்நாட்டில் பிறந்த அனைவரும் தமிழிசை இயக்கத்திற்குத் தங்கள் முழு ஆதரவையும் நல்குமாறு வேண்டு கிருேம்.

—'செட்டிநாடு' 30—12—43

தாய்மொழியும் தமிழ் இசையும்

நம் நாட்டில் இடைக்காலத்தில் அன்னிய அரசாட்சி புகுந்து ஆதிக்கஞ் செலுத்தத் தொடங்கிய பின்னர், நம் மக்களிடையே பொதுவாகவே தாய்மொழி, கலை, நாகரிகம் முதலியவைகளிடத் திலிருந்த பற்றுக் குறைந்து போயிற்று. எதிலும் அன்னிய மோகம் ஓங்கி வந்தது. இந்நிலைமையை மாற்றித் தாய்நாட்டுப் பற்று, மொழி, கலை வளர்ச்சிகளில் ஆர்வம் இவைகளை அதிகப்படுத்த,

புத்துயிர் பெறச் செய்யப் பெரியோர்கள் பலர் தோன்றிப் பாடு பட்டு வருகின்றனர். இதன் பயனுக, நம் மக்களிடையே எல்லா வகையிலும் சுதந்திர உணர்ச்சியும் தன் மதிப்புணர்ச்சியும் வீறிட்டு எழுந்திருக்கிறது தேசபக்தி, மொழிப்பற்று ஏற்படுவதற்கு மகாத்மா காந்தி முதலிய பெரியார்கள் சேவை செய்து வருவது போலவே, தமிழ் இசை, நடனங்களின் ஆக்கத்துக்காகவும் ஒரு சில அறிஞர்கள் பாடுபட்டு வருகின்றனர். நம் நாட்டை அன்னிய ஆதிக்கத்தினின்றும் விடுவிக்க வேண்டுமென்பதை ஆதரிப்பவர்கள், மேனுட்டுக் கலாசாரம், நம் நாட்டுக் கலாசாரங்களை அழிக்கவிடக் கூடாது என்று கூக்குரலிடுவோர், தமிழ் இசையைப் புத்துயிர் பெறச் செய்யும் முயற்சியை மட்டும் எதிர்த்து விஷமப் பிரசாரஞ் செய்வதன் நோக்கம் என்ன ? இது நமக்குப் புரியாத புதிராகவும் மர்மமாகவும் இருக்கிறது.

இடைக் காலத்தில் எப்படியோ ஏற்பட்ட பழக்கத்தால் நம் சங்கீத வித்வான்கள் பிற மொழிப் பாடல்களையே பெரிதும் பாடி விடுகிருர்கள்; தாய்மொழிப் பாடல்களுக்கு மதிப்பளித்துப்பிரதான ஸ்தானங் கொடுத்து அதிகமாகப் பாடச்செய்ய வேண்டும் என்ற உணர்ச்சி சுமார் பத்தாண்டுகளுக்கு மேலாகவே, தமிழ் மக்கள் பலர் உள்ளத்தில் மேலோங்கி வந்தது. தமிழ்ப் பாட்டுகளைக் கேட்பதில் நம் மக்களுக்குள்ள ஆவலும் அவ்வப்போது பத்திரிகை களிலும் பிரதிபலித்து வந்தது. தமிழ் மக்களின் இவ்வுள்ள உணர்ச் சியே, சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன், ராஜா ஸர். அண்ணுமலை செட்டியார் மூலமாகத் தமிழிசை இயக்கமாக உருக்கொண்டது என்று சொல்ல வேண்டும்.

கர்நாடக சங்கீதத்தைக் காப்பாற்றி வருவதற்காகவே அவ தரித்திருப்பதாக எண்ணிக்கொண்டுள்ள சில பிரமுகர்கள், இத் தமிழிசை இயக்கத்தைத் தீவிரமாக எதிர்த்து விஷமப் பிரசாரமும் செய்யலாயினர். நீண்டகாலப் பழக்கத்தைத் திடீரென விடுவ தற்குச் சில வித்வான்களுக்கும் ரஸிக சிகாமணிகளுக்கும் கஷ்ட மாயிருக்கிறது போலும்; அதனுல்தான் முணுமுணுக்கிருர்கள். நாளடைவில் அவர்கள் தங்கள் தவற்றை உணர்ந்து திருந்திக் கொள்ளுவார்களென்று நாம் அப்போதெல்லாம் எண்ணலா னேம். ஆனுல், சுய நலத்தையே பெரிதாகக்கொண்ட அச்சிறு கூட்டத்தார் தங்கள் எதிர்ப்பையும் விஷமப் பிரசாரத்தையும் இன் னும் விடவில்லை. தமிழிசை இயக்கம் நாட்டில் வெகு வேகமாகப் பரவி வருவதைக் காண அவர்களுக்கு வயிற்றெரிச்சல் அதிக மாய்ப் போய்விட்டது.

இவ்வருஷத்திலும் சென்னைச் சங்கீத வித்வத் சபையார் தத்துவப்பேராசிரியரான ஸர் ராதாகிருஷ்ணன் என்னும் ஆந்திரப் பிரமுகரைக் கொண்டு, தமிழ் இசை இயக்கத்தைக் குறைகூறச் செய்திருக்கின்றனர். இவ்வளவு விஷமத்தனமானது என்று நாம் சொல்ல வேண்டியதில்லை. ''சங்கீதத்துக்கும் ஞானத்துக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு'' என்று கூறும் உலகப் பிரசித்தி பெற்ற தத்துவப் பேராசிரியர் ஒருவர் மூளையில்கூட "சங்கீதத்துக்கும் தாய்மொழிக்கும் மிகமிக நெருங்கிய தொடர்புண்டு" என்ற பேருண்மை புலப்படாதது ஆச்சரியமாயிருக்கிறது. ''எங்களுக்கு அரசியல் கிடையாது என்று தங்கள் வரவேற்புப் பத்திரத்தில் சங்கீத வித்வத் சபையார் விஷமத்தனமாகக் குறிப்பிட்டிருந்ததற்கு ஸர். ராதாகிருஷ்ணன் ''சங்கீதம் சம்பந்தப்பட்ட வரையில் அதற்கு அரசியல் கிடையாது'' என்று பதில் அளித்திருக்கிறார். அதையேதான் செட்டிநாட்டரசரும் டி. கே. சி. முதலிய பேரறிஞர்களும் இந்த மூன்று ஆண்டுகளாகப் படித்துப் படித்துச் சொல்லி வருகிறார்கள். கிறிஸ்துமஸ் வாரத்தில் சென்னையில் நடந்த தமிழ் இசை மகாநாட்டிலும், அவர்கள் அதை நன்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இதைத் தமிழிசை எதிரிகள் காதில் போட்டுக் கொள்ளாது மேன்மேலும் விஷமத்தனமாகப் பிரச்சாரஞ் செய்து வகுப்புணர்ச்சி வேரூன்றுவதற்கு விதை விதைப்பது மகா பாவமாகும். ''மற்ற எல்லாவற்றையும் காட்டிலும் சங்கீதம் மிக உயர்வானது. வாழ்க்கையில் சில நிரந்தர அம்சங்களுக்காக அது இருக்கிறது. சங்கீதம் என்ற அரிய கலையை ஒற்றுமைக்குக் கருவியாக்க வேண்டும்" என்று ஸர். ராதாகிருஷ்ணன் புத்தி கூறினார் அதையேதான் செட்டிநாட்டரசரும் "இசைக் கலையால் நமது நாடு முழுதும் ஒன்றுபட இடமுண்டு'' என்ற வார்த்தைகளால் கூறினார். ஆகவே, மக்களை மன ஒருமைப்படுத்துவதற்கு ஏதுவாகவுள்ள சங்கீதத்துக்குப் பாஷையைவிட ராகம்தான் பிரதானம் என்று கூறி வேற்றுமையை வளர்த்துவரும் புண்ணியத்தை மேற்கொள்ளாதிருக்கும்படிக் கேட்டுக் கொள்கிறோம்.

—'பிரசண்ட விகடன்' 1-1-44

ஆடல் பாடல்

ஆதி சிவன் பெற்று, ஆரிய மைந்தன் உவந்து பணிசெய்த தமிழ்த்தாயை வாழ்த்துகிறேன். மூன்று குலத் தமிழ்வேந்தர்கள் போற்றி வளர்த்த தமிழ்த்தாய்க்கு வாழ்த்துக் கூறுகிறேன். தமிழ் மக்களுக்கும் தமிழன்பர்களுக்கும் வாழ்த்துக் கூறுகிறேன்,

தமிழ் நாட்டிலே பிறந்து தமிழ் நாட்டிலே வளர்ந்து, தமிழ் நாட்டிலே சிறந்த கர்நாடக சங்கீதத்தின் அன்பர்கள் அனைவருக்கும் வாழ்த்துக் கூறுகிறேன்.

நேற்றுடன் முடிந்த 1943-ம் வருஷத்தில் தமிழ்த்தாய் மகத்தான யோகசாலியானுள். கர்நாடக சங்கீதம் புத்துயிர் பெற்றுத் தழைத்தது.

அன்றொருநாள் பராதியார் தமிழ்த்தாயின் வாயிலாகப் புலம்பினுர் :

" என்றந்தப் பேதை உரைத்தான்!
இந்த வசை எனக் கெய்திடலாமோ!"

எதைக் குறித்துப் பாரதியார் இவ்விதம் வருந்தினுர்? "மேல் நாட்டுப் புதுக் கலைகளைத் தமிழிலே சொல்ல முடியாது—சொல்லும் சக்தி தமிழுக்கில்லை" என்று யாரோ ஒரு பேதை உரைத்தது பாரதியார் காதிலே விழுந்தது. உடனே அவருக்குக் கோபம் மூண்டது. 'கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்'! என்று வெதும்பினுர்.

தமிழ்த்தாயின் மேல் ஏற்பட்ட வசைகளுக்குள்ளே மிகக் கொடியது, "தமிழ் மொழி சங்கீதக்கலைக்கு இசைந்த பாஷை இல்லை" என்பதாகும். கூறத் தகாதவர் கூறிய இந்தக் கொடிய வசையானது சென்ற 1943-ம் வருஷக் கடைசியில் சென்னையில் கூடிய தமிழிசை மகாநாட்டு இன்னிசை வெள்ளத்தில் முழுகியே போய்விட்டது.

தமிழிசை மகாநாட்டைக் குறித்துச் சொல்வதற்கு முன்னுல், இந்த மகாநாடு கூடுவதற்கு மூலகாரணமா யிருந்தவர்களுக்கு என் சார்பாகவும் மற்றத் தமிழன்பர்கள்—இசையன்பர்கள் சார்பாகவும் மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நமது நன்றிக்கும் வந்தனத்துக்கும் உரிய அந்தப் பெரியார்கள் யார்?—கேட்பானேன்? மியூஸிக் அகாடமியார் தான். மியூஸிக் அகாடமி நிர்வாகிகள் தமிழ்ப் பாஷையின்மேல் அவ்வளவு துவேஷம் பாராட்டாமலிருந்தால் — கொஞ்சம் மனதை விசாலப்படுத்திக்கொண்டு தமிழ்ப் பாட்டுக்களுக்கும் ஓரளவு நியாயமான இடம் கொடுத்திருந்தால்—இந்தத் தமிழிசை மகாநாடு கூடியிராது. முக்கியமாக, டிசம்பர் கடைசியில்,

சென்னையில், இன்னும் இரண்டு சங்கீத விழாக்கள் நடக்கும்போது, தமிழிசை விழாவைத் தனியாக நடத்தும் உத்தேசமே ஏற்பட்டிராது. அகாடமி நிர்வாகிகள் தமிழின்மேல் பகைமை பாராட்டி, "முழு ஹிந்துஸ்தானி கச்சேரி வைத்தாலும் வைப்போம்; தமிழுக்கு இடம் கொடுக்க மாட்டோம்" என்று பிடிவாதம் பிடித்ததினாலேதான் தமிழிசை மகாநாடு சென்னையில் இப்போது கூடிற்று. எனவே மியூசிக் அகாடமி நிர்வாகிகளுக்கும், அவர்களது தாய்பாஷை துவேஷத்திற்கும், பிடிவாதத்திற்கும் நமது அபார நன்றி.

"இதற்கு முன் நடந்த எந்த சங்கீத மகாநாட்டையும் விடத் தமிழிசை மகாநாடு சிறப்பாக நடைபெறுமென்று தோன்றுகிறது" என்று முன்னொரு இதழில் எழுதியிருந்தேன். இந்த ஜோசியம் 100-க்கு 100 பங்கு பலித்தது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறேன்.

ஜன்னல் வழியாக ஏறி உள்ளே குதித்து இட நெருக்கடியை அதிகப்படுத்தும் காரியத்தை இந்தக் காலத்தில் அடிக்கடி பார்க்கிறோம். இது ரயில்கள் கிளம்பும் சமயத்தில் சகஜமாக நடந்துவருகிறது. ஆனால் ஒரு மண்டபத்துக்குள்ளே நடக்கும் பேச்சைக் கேட்பதற்காக ஜனங்கள் ஜன்னல்கள் ஏறி உள்ளே குதித்து நெருக்கடி உண்டாக்குவதென்பது அடிக்கடி பார்க்கக் கூடியதல்ல.

இந்த அதிசயக் காட்சியை டிசம்பர் 23-உ செயிண்ட் மேரீஸ் ஹாலில் ஆரம்பமான தமிழிசை மகாநாட்டின்போது கண்டோம். ஏற்கனவே மண்டபத்தில் எள் போட்டால் விழாதபடி ஜனங்கள் கூடியிருந்தார்கள். ராஜாஜி பேசுவதற்காக எழுந்து நின்றதும், மண்டபத்திற்குப் பக்கத்தில் திறந்த வெளியில் நின்றிருந்தவர்கள் பலர் பெரிய பலகணிகள் வழியாக உள்ளே வரத் தொடங்கினார்கள். அவர்களை உள்ளே இருந்தவர்கள் "போங்கள், ஐயா, போங்கள்!" என்று வரவேற்றார்கள். முன்னால் நின்றவர்களைப் பின்னால் வந்தவர்கள் "உட்காருங்கள், உட்காருங்கள்" என்றார்கள். இந்த மரியாதையெல்லாம் ராஜாஜிக்குத்தானே என்ற விபரீதமான சந்தேகம் (ராஜாஜி உட்படச்) சிலருக்கு ஏற்பட்டுவிட்டது. இது எவ்வளவு தவறான சந்தேகம் என்பது, ராஜாஜி பேசிய முக்கால் மணி நேரமும் ஜனங்கள் எவ்வளவு ஆர்வத்துடனும் ஆரவார கோஷத்துடனும் கேட்டுக்கொண்டிருந்தார்கள் என்பதிலிருந்து நன்கு வெளியாயிற்று.

உண்மையில், சென்னை வாசிகள் இவ்வளவு தமிழிசைத் தாகம் கொண்டவர்கள் என்பது அன்றுதான் நன்கு தெரிந்தது. மண்டபத்துக்கு உள்ளேயும் வெளியேயும் சுமார் ஐயாயிரம் ஜனங்கள் நெருக்கியடித்து நின்று மொத்தம் நான்கு மணி நேரம் தமிழிசைப் பேச்சுக் கச்சேரிகளைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஒலிபெருக்கியை மண்டபத்திற்கு வெளியிலும் வைத்திருந்த படியால், தெருவில் நின்றே ஆயிரக்கணக்கான ஜனங்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அரண்மனைக்காரன் தெருவில் இவ்வளவு திரளாக ஜனங்கள் நின்ற காட்சியை இதற்குமுன் யாரும் பார்த்திருக்க முடியாது.

தமிழிசை மகாநாட்டுச் சொற்பொழிவுகளில் முக்கியமானவை நான்கு. ராஜா சர். அண்ணாமலைச் செட்டியாரின் திறப்புவிழாப் பிரசங்கம், ஸ்ரீ டி. கே. சிதம்பரநாதரின் அக்ராசனப் பிரசங்கம், சர். ஆர். கே. ஷண்முகம், ராஜாஜி இவர்களுடைய பேச்சுக்கள். ஒவ்வொரு பேச்சும் ஒவ்வொரு விதத்தில் ஆணித்தரமாக அமைந்தது.

தமிழிசை இயக்கத்தின் நோக்கங்களை ஐயந்திரிபுக்கு இடமில்லாமல் அழுத்தமாக ராஜா சர். எடுத்துச் சொன்னார்.

தமிழிசை இயக்கத்துக்கே ஆதிகாரண புருஷர் என்று சொல்லக்கூடிய ரஸிகமணி ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார் சென்னையில் நடந்த முதல் தமிழிசை விழாவுக்குத் தலைமை வகித்தது மிகவும் பொருத்தமாயிருந்தது.

''தாடியில்லாத டாகூரைப் போல் விளங்குகிறார்'' என்று டி. கே. சி. யின் முகத் தோற்றத்தைக் குறித்து ஒரு தடவை ''கல்கி''யில் குறிப்பிட்டிருந்தது.

இந்தத் தமிழிசை மகாநாட்டில் டி. கே. சி. நிகழ்த்திய அக்கிராசனப் பிரசங்கம், டாகூரின் வசன நடையைப்போலவே அற்புதமாய் அமைந்திருந்தது

டி. கே. சி. அவர்களின் அக்கிராசனப் பிரசங்கத்தை ஒரு சங்கீத இலக்கியம் என்றே சொல்லவேண்டும். தமிழர்கள் திரும்பத் திரும்ப பலமுறை படித்து அனுபவிக்கவேண்டிய இலக்கியம்.

தமிழிசை சம்பந்தமாகச் சாதாரணத் தமிழனுடைய கட்சி இன்னதென்பதை ஸர் ஆர். கே. ஷண்முகம் பட்டவர்த்தனமாய் எடுத்துச் சொன்னார். "தமிழ்ப் பாட்டு மட்டமாயிருந்தாலும் எனக்குத் தமிழ்ப் பாட்டுத்தான் வேண்டும்" என்றார். அவர் அமெரிக்காவில் இருந்தபோது நிகழ்ந்த ஒரு சம்பவத்தையும் கூறினார்.

இனிமேல் அதாவது 1943-ம் வருஷத்துக்குப் பிறகு இம் மாதிரியெல்லாம் அதிசயிப்பதற்கும், அயல்நாட்டார் நம்மைப் பார்த்துச் சிரிப்பதற்கும் இடமிராது. அதற்கெல்லாம் இட மில்லாமல் தமிழிசை மகாநாட்டின் வெற்றி செய்துவிட்டது.

எதிர்க்கட்சிக்காரர்களின் ஆட்சேபங்களை ராஜாஜி ஒவ்வொன்றாக எடுத்துத் தெளிவுபடுத்தியபோது, சபையில் சிலருக்கு "இது ஏது ஆபத்தாயிருக்கிறதே!" என்று தோன்றியது. ராஜாஜி எடுத்துச் சொல்லும்போது எதிர்க்கட்சி வாதங்கள் அவ்வளவு பலமானவை என்று காணப்பட்டன. அவற்றுக்கு ராஜாஜி பதில் சொன்னபோதோ, தமிழிசைக் கட்சியின் வெற்றிக்கொடி வானளாவி உயர்ந்து பறந்தது.

இந்த மகாநாட்டில் ராஜாஜியின் பேச்சு தமிழிசை இயக்கத்துக்கே ஒரு மகத்தான வெற்றி என்று சொல்லவேண்டும். அந்தப் பேச்சை மட்டும் வார்த்தைக்கு வார்த்தை எடுத்துப் பிரசுரித்திருந்தால், பிறகு தமிழிசையைப் பற்றி யாரும் எதுவுமே பேசுவதற்கு அவசியமிராது.

ராஜாஜி முதல்நாள் தமிழிசை மகாநாட்டில் பேசியதோடு நின்றுவிடவில்லை. பிறகு ஒவ்வொரு நாளும் நடக்கும் தமிழிசைக் கச்சேரிகளுக்கும் வந்து கடைசிவரையில் இருந்து கேட்டு வருகிறார் என்பது தமிழிசை அன்பர்களுக்கெல்லாம் மகத்தான மகிழ்ச்சியை அளிக்கும் விஷயமாகும்.

மறுநாள் 24உ முதல் ஸெண்ட் மேரீஸ் ஹாலில் தமிழிசைக் கச்சேரிகள் நடந்துவருகின்றன. மண்டபத்துக்குள்ளே ஆயிரக் கணக்கானவர்கள் அமர்ந்து ஆவலுடன் கேட்டு மகிழ்கிறார்கள். மண்டபத்துக்கு வெளியே தெருவில் ஆயிரக்கணக்கானவர்கள் நின்று கேட்டு ஆரவாரிக்கிறார்கள்,

இதற்கு முன்னால் பல இடங்களில் நடந்திருக்கும் தமிழிசை மகாநாடுகளுக்கும் சென்னையில் இப்போது நடக்கும் மகா நாட்டுக்கும் ஒரு முக்கிய வித்தியாசம் உண்டு. வெளியூர் மகா நாடுகள் எல்லா பிரசார நோக்கத்துடன் கூடியவை. அவற்றில் பேச்சுக் கச்சேரிகளும் இலவசம்; பாட்டுக் கச்சேரியும் இலவசம்.

இந்த மகாநாட்டில் நடக்கும் கச்சேரிகளுக்கு டிக்கட்டு உண்டு.

பண வருவாயைக் கொண்டு மதிப்பிடும்போது, தமிழிசை எந்தத் தரத்திலிருக்கிறது ? எதற்குப் பணம் அதிகம் வருகிறது?

சந்தேகம் என்ன ? தமிழிசைக்குத்தான். மற்ற இரண்டு மகாநாடுகளிலும் சேர்ந்து டிக்கட் விற்பனையில் வரும் பணத்தைக் காட்டிலும் தமிழிசைக்கு அதிகம் வந்திருக்கிறது என்று அறிகிறேன்

ஸீஸன் டிக்கட்டுகள் மட்டும் ரூ. 32,000 (முப்பத்திரண்டாயிரம் ரூபாய்க்கு) விற்பனையாகியிருக்கிறதென்று தெரிகிறது.

எனவே, தமிழ் மக்களின் உள்ளத்தில் தமிழிசை மட்ட ரகத்தைச் சேர்ந்ததாயில்லை என்பது நிச்சயமாகிறது. தமிழ்ப் பாட்டுக் கச்சேரிகளுக்கும் ஜனங்கள் பணம்கொடுத்து ஏராளமாக வருவார்கள் என்று ஏற்படுகிறது.

எனவே, எல்லா விதத்திலும் தமிழிசை இயக்கம் மகத்தான வெற்றியையடைந்திருக்கிறது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

தமிழிசை இயக்கத்துக்கு இன்னும் எதிர்ப்பு இல்லாமற் போக வில்லை. எந்த துரதிர்ஷ்டத்தினாலோ தமிழ்ப் பாஷைமேல் துவேஷம் கொண்டவர்கள் இன்னமும் ஏதாவது எதிர்த்துச் சொல்லிக்கொண்டுதானிருக்கிறார்கள்.

ஆனால், சென்ற வருஷத்து எதிர்ப்புக்கும் இந்த வருஷத்திய எதிர்ப்புக்கும் ரொம்ப வித்தியாசம் இருக்கிறது.

சென்ற வருஷத்தில் தமிழிசை இயக்கத்தை அலட்சியமாகத் தாக்கிப் பரிகசித்தார்கள்.

இந்த வருஷத்திலோ தங்களுடைய கட்சிக்குச் சப்பைக்கட்டுக் கட்டப் பெருமுயற்சிகள் செய்கிருர்கள் !

எதிர்ப்புக் கலகலத்துப் போய்விட்டது என்று அவர்களுக்கே தெரிந்துதானிருக்கிறது. எனவே, தாங்கள் விரித்த வலேயிலிருந்து தாங்களே வெளியில் வருவதற்கு அவர்கள் திணறுகிருர்கள்.

எதிர்ப்புக்காரர்களுக்கு இனிமேல் பதில் சொல்லிக்கொண்டிருப்பது வீண்வேலே. ஏனெனில் எல்லாவித எதிர்ப்புக்களுக்கும் தமிழிசை மகாநாட்டுக் கச்சேரிகளே தக்க பதில் சொல்கின்றன.

உதாரணமாக, சென்னேயில் பிரபல ஆங்கில தினசரியில், " தமிழ் பாடவேண்டாம் என்று யார் சொன்ஞர்கள் ? முத்துத் தாண்டவர் முதலானவர்களின் பாட்டுக்கள் இருக்கத்தான் இருக்கின்றன. ஆனல் அவற்றைக் கச்சேரியின் கடைசியில் பாடிஞல் தான் சோபிக்கின்றன " என்று எழுதியிருக்கிறது.

ஆனல், தமிழிசை மகாநாட்டுக் கச்சேரிகளில் முதலிலிருந்தே தமிழ்ப்பாட்டுக்கள்தான் பாடப்படுகின்றன, இதனல் கச்சேரிகள் சோபிக்காமற் போகவில்லே; அபாரமாய்ச் சோபிக்கின்றன. இதைக்காட்டிலும் எதிர்ப்புக்காரர்களுக்கு நாம் என்ன சொல்ல முடியும் ?

சென்னேயில் தமிழிசை விழா இந்த வருஷத்திலேதான் முதன் முதலில் நடக்கிறது. மற்ற இரண்டு சங்கீத விழாக்களும் பல வருஷங்களாக நடைபெறுகின்றன. ஆனல், தமிழிசை நிர்வாகிகள் வெகு காலமாக அநுபவம் உள்ளவர்கள்போல் அவ்வளவு சிறப்பாகவும் திறமையுடனும் விழாவை நடத்தி வருகிருர்கள்.

சில விஷயங்களில் அவர்களுடைய ஏற்பாடுகள் போற்றத் தக்கவையாயிருக்கின்றன ; மற்றவர்களுக்குப் பாடம் கற்பிக்கக் கூடியவையாயிருக்கின்றன.

1. சங்கீத மகாநாடுகளில் கச்சேரித் திட்டங்கள் அடங்கிய புத்தகம் ஒன்று வெளியிடுவது வழக்கம். அகாடமியார் வெளியிடும் புத்தகத்தில், அகாடமி அக்கிராசனர், திறப்பாளர், போஷகர் முதலிய பெரிய மனிதர்களின் படங்களேப் பெரிதாய்ப் பிரமாண்டமாய் அச்சிடுவார்கள். வருஷா வருஷம் இந்தப்பெரிய

மனிதர் படங்களையே போட்டு, கர்நாடக சங்கீதத்துக்குத் தொண்டு செய்வார்கள். சங்கீதக் கச்சேரிகளையும் வித்வான் களுடைய படங்களையும் அச்சிடுவது அநாவசியம் என்றோ, அகாடமியின் கௌரவத்துக்குக் குறைவென்றோ விட்டு விடுவார்கள்.

ஆனால் தமிழிசை மகாநாட்டுப் புத்தகத்திலோ மகாநாட்டில் கச்சேரி செய்யும் எல்லா வித்வான்கள் – பக்க வாத்தியக்காரர்கள் படங்களும் அழகாக வெளியிடப்பட்டிருக்கின்றன.

2. அகாடமி நிர்வாகிகள், மாலை போடுதல் முதலிய மரியாதைகளைத் தங்களுக்கே செய்து கொள்வார்கள்; வித்வான் களுக்கு நாமத்தைப் போடுவார்கள்.

தமிழிசைக் கச்சேரியில் ஒவ்வொரு நாளும் வித்வான்களுக்கு மாலை போட்டு மரியாதை செய்கிறார்கள்.

3. அகாடமிக் கச்சேரிகளுக்கு டிக்கட் வாங்கிக்கொண்டு போகிறவர்கள், அங்கே தங்களுக்கு என்ன மரியாதை கிடைக் கிறதோ என்று நடுங்கிக்கொண்டுதான் போகவேண்டும்!

தமிழிசை மகாநாட்டிலோ, கச்சேரிகளுக்கு வருகிறவர்களை மரியாதை செய்து அழைத்துப்போய் அவர்களுடைய இடத்தைக் காட்டி உட்காரவைக்கும் முறையை எவ்வளவு பாராட்டினாலும் போதாது. ஏதோ நெருங்கிய சிநேகிதர்கள் வீட்டுக் கல்யாணத் துக்குப் போகிறமாதிரி தமிழிசைக் கச்சேரிகளுக்கு ரஸிகர்கள் குஷியாக வருகிறார்கள். 'கல்கி' 1—1—44

தமிழ் சங்கீதத்திற்கு முட்டுக்கட்டை :

சென்ற மாதம் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் நடந்த சங்கீத மகாநாட்டில், "இனிமேல், சங்கீத சபைகளில் பெரும்பாலும் தமிழ் பாட்டுக்களையே பாடவேண்டும்" என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இப்பொழுது சர்ச்சை ஆரம்பிக்கப் பட்டுள்ளதன் மூலகாரணமாக நிற்பது இந்தத் தீர்மானம்தான். இந்தத் தீர்மானம் தமிழ் இசை வளர்ச்சி ஒன்றைமட்டும் கருதியே தான் செய்யப்பட்டதென்பதற்கு எத்தனையோ உதாரணங்கள் சொல்லலாம். நிற்க,

இந்தத் தீர்மானத்திற்கு மூலகாரணமாக ராஜா சர் அண்ணு மலைச் செட்டியாரவர்கள் ரூபாய் பதினுயிரம் வழங்கியபோதும் தமிழிசை வளர்ச்சியையேதான் நோக்கமாகக் கொண்டிருந் தார்கள் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. அவர்களை அறிந்தவர்கள் இதை நன்குணரலாம். அவர்களுக்கு எந்தவிதமான பாஷை துவேஷமும், மதத் துவேஷமும் எப்பொழுதுமே கிடையாது என்பதைத் தமிழ் நாட்டினர் அறிவர். ஆனுல் சிலர், குறுகிய நோக்கங்கொண்டு பேசுவது குறித்துத்தான் நாம் வருந்தவேண்டி யிருக்கிறது.

மேற்கண்ட தீர்மானத்தை யார் யார் கூடிச் செய்தார்கள் என்று பார்த்தோமானுல் இந்தத் தீர்மானத்திற்கு எவ்வித குறுகிய நோக்கமும் கற்பிக்க முடியாது. பல மதத்தினர்களும் அங்கே கூடியிருந்தனர். அவர்களும் எந்தவிதமான அரசியல் நோக்கத்தையோ பாஷை துவேஷத்தையோ கொண்டு இந்தத் தீர்மானத்தைச் செய்யவில்லையென்பது உண்மை.

நிலைமை இப்படியிருக்க, ஹிந்து பத்திரிகை ஒரு குட்டிக் கலகத்தை ஆரம்பித்திருக்கிறது. இப்பொழுது உண்டாகியுள்ள அனுவஸ்யமான சர்ச்சைக்கு ஹிந்து பத்திரிகை செப்டம்பர் 2உ எழுதிய உப தலையங்கத்தின் மூலம் விதை விதைத்திருக்கிறது. அதற்கு முன்னுல், இது குறித்துக் கனவில்கூட நினைத்திராத சிலர் ஹிந்துத் தலையங்கத்தைப் படித்துவிட்டுப் பிரசங்கம் செய்ய ஆரம் பித்துவிட்டார்கள். சங்கீதத் துறையில் சம்சந்தப்பட்டவர்கள் பேசுகின்ருர்களென்பது ஒருபுறமிருக்கட்டும். சம்பந்தமேயில்லாத சிலர் பிரசங்கமாரிபொழிய முன்வந்ததுதான் வேடிக்கை.

ஹிந்து பத்திரிகையும் அதைப் பின்பற்றி சிலரும் தமிழ் சங்கீத அபிவிருத்தி குறித்து என்ன ஆட்சேபனை சொல்கின்றனர் ?

(1) தமிழ்ப் பாட்டுக்களையே பாடினுல், சிறந்த தெலுங்கு சாகித்யங்கள் மறைந்துபோகும், கர்நாடக சங்கீதத்திற்கு அபாயம்.

(2) சங்கீதத்தில் நாதம்தான் முக்கியம். பொருள் அவஸ்ய மில்லை.

(3) தமிழில் நல்ல பாட்டுக்களில்லை.

தமிழ்ப் பாட்டுக்களைப் பாடவேண்டுமென்று கூறினார்களே தவிர தெலுங்குப் பாட்டுக்களைப் பாடக்கூடாது என்று யாரும் சொல்லவில்லை. இத்தனை காலமாக தெலுங்கிலேயே பாடி வந்தவர்கள் தெலுங்கை விட்டுவிடுவார்களா? தெலுங்கிலும்தான் பாடிக்கொண்டிருப்பார்கள். தெலுங்கு மறைவதற்கு வழியில்லை. இந்த விவாதம் அறிவுக்குப் பொருத்தமானதல்ல. கர்நாடக சங்கீதத்துக்கு ஆபத்து என்று சொல்வது வெறும் பேச்சு. கர்நாடக சங்கீதத்திற்கும் தமிழுக்கும் நெருங்கிய சம்பந்தமிருக்கிறது. கர்நாடக சங்கீதத்தில் பாடக்கூடியவை பல இருக்கின்றன.

தமிழர்கள், தமிழ்ப் பாட்டுக்களைக் கேட்கின்றனர். சங்கீதத்தை உண்மையிலேயே ரசிக்கவேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள். இதற்குக்கூடவா முட்டுக்கட்டை? இதையும் எதிர்த்துப் பேசலாமா? தமிழ் வேண்டுமென்றால் பிறமொழியை விரட்டுவதாகவா அர்த்தம்? இப்பொழுது தமிழ் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டை போடுபவர்கள் இத்தனைகாலம் தமிழை அமுக்கிப்பிடித்துக் கொண்டிருந்தார்கள் என்பது உண்மைதானா? இதற்கு முன் விரும்பினார்களோ என்னவோ தெரியாது. ஆனால், இப்பொழுது தமிழ் வளர்ச்சியை எதிர்ப்பதன் மூலம் அவர்கள் தமிழின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுகிறார்கள் என்பது மட்டும் உண்மை. இதேசமயம் தமிழபிவிருத்தியில் நோக்கமிருப்பதாகக் கூறுவதெல்லாம் ஊர்வாயை மூடுவதற்காகப் போடும் வேஷம்.

எந்த நாட்டிலுமில்லாத நிலைமை இந்த நாட்டில் இருக்கிறது. ஆங்கிலேயர்கள் இனிமேல் இங்கிலீஷில்தான் பாடவேண்டுமென்று தீர்மானம் போடுகிறார்களா? இத்தாலியன், இனி இத்தாலி பாஷையில்தான் பாடவேண்டுமென்று சொல்லுகிறானா? வங்காளிகள் இனி வங்க பாஷையிலேயே பாடவேண்டுமென்று தீர்மானம் போடுகிறார்களா? ஆனால் தமிழ் நாட்டில், தமிழனைப் பார்த்து இனிமேல் தமிழிலேயே பாடப்பா என்று கெஞ்சவேண்டி இருக்கிறது. தீர்மானம் செய்யவேண்டிய நிலைக்கு நம் நாடு வந்துவிட்டது. இந்த நிலையில்கூடவா இதற்கு எதிர்ப்பு?

அடுத்தபடியாக இந்த எதிர்ப்பாளர்கள் கூறுவது சங்கீதத்திற்கு நாதம்தான் முக்கியமானதென்பதாகும். தெலுங்கு கீர்த்தனங்களில் நாதமில்லையா? இருக்கிறது. சங்கீத வித்வான்களையும் பொதுமக்களில் சிலரையும் தவிர தெலுங்கு பாட்டுக்களைப் பாமர மக்கள் பாடுகின்றனரா? ஒரு சினிமா வந்தால் அதில்

பாடப்படும் பாட்டுக்களில் சில, பிச்சைக்காரர்கள் முதல் இளைஞர்கள், பெரியவர்கள்வரை பாடப்படுகிறதே. சங்கீத ஞானமே இல்லாதவர்கள்கூட அந்தப் பாட்டை பாடுகிறார்கள். அது வெறும் நாதத்தை மட்டும் உத்தேசித்தல்ல. பொருள் விளங்குவதால்தான் அவர்கள் பாடுகிறார்கள். அந்தப் பாட்டிலுள்ள ஹாஸ்ய ரசத்தைச் சொல்லிச்சொல்லி அனுபவிக்கிறார்கள். இன்னுமொன்று. பொருள் விளங்காவிட்டால், சந்தர்ப்பத்திற் கேற்றபடி சாரீரத்தை உயர்த்தியும் தாழ்த்தியும் பாவத்தைக் காட்டமுடியாது. பொருள் தேவையில்லையென்று கூறுவது பொருள் விளங்காமலேயே தலையசைத்துத் தங்களை ஏமாற்றிக் கொண்டுவந்த பழக்கத்தால்தான்.

மூன்றாவது பாணம் தமிழில் நல்ல பாட்டுக்கள் இல்லையென்பதாகும். தமிழிலுள்ள எல்லா புத்தகங்களையும் படித்துவிட்டுக் கூறுவதாகத்தானே இதற்கு அர்த்தம்? இவர்கள் மனப்பால் குடிக்கின்றனர். "நமக்கு எல்லாம் தெரியும்" என்று தங்களைப் பற்றிப் பெருமையாக எண்ணிக்கொண்டு கண்டதைக் கூறுவது முற்றிலும் பிசகு தமிழில் நிறைய பாட்டுக்கள் இருக்கின்றன. அதே சங்கீதமகாநாட்டில் இன்னொரு குறிப்பிடத்தக்க தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

"தமிழில் நல்ல சாகித்தியங்கள் இயற்றவேண்டும்"

இந்தத் தீர்மானம் தமிழில் நல்ல கீர்த்தனைகள் இல்லையென்ற குறை ஒருவேளை இருப்பதாக வைத்துக்கொண்டாலும் அதை நீக்கும் முறையில் இருக்கிறது.

இவை போன்ற இன்னும் பல அருமையான தீர்மானங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளைப் பார்த்த பிறகுமா எதிர்ப்பு? அர்த்தமற்ற வாதம் பிடிவாதம்தான்.

எப்படியோ தமிழ் சங்கீதம் வேண்டுமென்ற உணர்ச்சி தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுவிட்டது. இனி கடல்மடை திறந்தாற் போலத்தான். இந்தக் கடலை சாக்கடைகள் தடுத்து நிறுத்திவிட முடியாது. எதிர்ப்பாளர்கள் இதை உணர்ந்து தங்களை அலட்டிக் கொள்ளவேண்டாம்.

—'இந்திரா' 1—10—1941

என்ன சங்கதி?

தமிழிசை

நல்லதுக்கும் சரி, கெட்டதற்கும் சரி கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு 'இதோ தயார்' என்று முன்னுக்கு வருவதில் தமிழ் நாட்டார் எப்பொழுதும் முன்னணியில் நின்றிருக்கிறார்கள். அதே போல் இப்பொழுது தமிழ் இசையின்மீது போர் தொடுப்பதற்கும் சிலர் தம் தலைமீது அட்சதையைப் போட்டுக்கொண்ட விஷயம் எல்லோருக்கும் தெரிந்ததே.

'சங்கீதக் கச்சேரிகளில் தமிழிசை முழங்க வேண்டுமென்று எப்படிச் சொல்லலாம்? அது வகுப்புத் துவேஷத்தைக் கிளப்பி விடுவதல்லவா! சங்கீதத்திற்கு பாஷை எதற்காக? இசைதானே முக்கியம்?' என்று இந்த கோஷ்டியார் கூச்சலிட்டுக் கொண் டிருக்கும் விஷயமும் யாவரும் அறிந்ததே.

இத்தகைய கூக்குரல் பேர்வழிகளின் வாயை அடைப்பதற் கென்றே திருச்சியில் தமிழிசை மகாநாடு நடந்தது. அதில் மேற்படி குதர்க்கவாதிகளின் சந்தேகங்களுக்கெல்லாம் ஆணித்தரமான பதில் கொடுக்கப்பட்டது.

'இருநூறு வருஷங்களுக்கு முன்பு தமிழ் நாட்டில் தமிழிசையைத் தவிர வேறு இருந்ததே கிடையாது—உயர்ந்த கருத்துக்கள் அடங்கிய வார்த்தைகளும், இசையும் சேர்ந்தால்தான் பரமானந்தம் ஏற்படும் — சாகித்யம் அவசியமில்லையென்றால் கிருதிகள் எதற்காக? எனவே இசைக்கு சாகித்யம் அவசியந்தான் —தமிழிலும் புராதனமான உயர்ந்த பாடல்கள் இருக்கின்றன என்பதை மறக்கக்கூடாது — சாகித்யத்தை அலட்சியம் செய்ய முடியாது—புரிந்து கொள்ளக்கூடிய சாகித்யமாயிருந்தால்தான் சங்கீதத்தை நன்கு ரஸிக்க முடியும்—தமிழர் என்று பெயர் சொல்லிக்கொள்ளும் சிலர் வீம்புக்காகவேனும் தெலுங்குப் பாட்டுகளையே பாடிக் கொண்டிருப்பதைப் போன்ற வெட்கக் கேடான விஷயத்தை தமிழ் நாட்டைத் தவிர வேறெங்கும் காண முடியாது' என்று மகாநாட்டில் பல பிரமுகர்கள் தங்கள் அபிப்ராயங்களை வெளியிட்டனர்.

இம் மகா நாட்டின் நடவடிக்கையைக் கண்ட பின்பும் குதர்க்க வாதிகள் தம் வாதப்பிரதிவாதங்களை நிறுத்திக்கொண்டால் க்ஷேமமடையலாம்.

''சந்திரோதயம்'' 1—1—1942

தமிழ் இசை

[டி. கே. சி]

கோயில்களும் கோபுரங்களும்

உலகத்தில் எங்குமில்லாத காட்சி ஒன்றைத் தமிழ்நாட்டில் பார்க்கிறோம். போன போன இடங்களில் எல்லாம் கோயில்களும் கோபுரங்களும் எழுந்து நிற்கின்றன. மௌனமாகவா அவை நிற்கின்றன? அல்ல. காலை, நண்பகல், மாலை மூன்று காலங்களிலும் இதயத்தைத் தொடுவதான சங்கீதம் நாதஸ்வரத்தின் வழியாக வந்து கொண்டிருக்கிறது. ஆயிரக் கணக்கான வருஷங்களாகவே வந்து கொண்டிருக்கிறது.

நாதஸ்வரமும் தமிழும்

நாதஸ்வரத்தின் வாயிலாக வரும் இந்த தெய்வீக சங்கீதத்துக்கு மூலம் எங்கே? தமிழ்க் கவிஞரது இதயத்திலும் நாவிலும் தான். இதயத்தில் உண்டான உணர்ச்சிகளையும் பக்தி ஈடுபாடுகளையும் தமிழ்க் கவிகளாக இசையில் வைத்துப் பாடினார்கள். அந்தப் பாடல்கள் கோயில் சந்நிதியை நிறைத்தன; சேவித்து நின்ற பக்தர்களது இதயத்தையும் நிறைத்தன. வழிபாடு முடிந்து வீடு போன பிறகும் இதயத்தில் ஒலித்துக்கொண்டே யிருந்தன அந்தப் பாடல்கள். பாடல்களின் உருவம் மறைய நேரும்போது நாதசுரம் வந்து உருவங்களை நினைவூட்டித் துலாம்பரமாக்கின.

சங்கீதமும் சாகித்தியமும் ஒரு அருமையான முறையில் தெளிவுபட்டு வந்திருக்கின்றன. சங்கீதத்தை நாதசுரம் தெளிவு படுத்தியது. சாகித்யத்தைக் கோயில் சன்னிதியில் எழும் பாடல் தெளிவுபடுத்தியது. காவடியாட்டங்களில் வாய்ப்பாட்டும் நாதசுரமும் மாறிமாறி வந்து ஒன்றை ஒன்று தெளிவுபடுத்தி இன்பமூட்டுவதை இன்றைக்கும் பார்க்கிறோம்.

இந்தவிதமாக வாய்ப்பாட்டும் வாத்தியமும் சேர்ந்து நம்மவரது சங்கித ஞானத்தை அபூர்வமான முறையில் வளர்த்து வந்திருக்கின்றன.

*   *   *

இப்படி வளர்ந்துவந்த — நெடுநாளாக வளர்ந்துவந்த — இசைச் செல்வம் நம்முடைய பூர்வ புண்ணியத்தால் நம் கைக்கே வந்திருக்கிறது. இந்தச் செல்வத்தின் உயர்வும் பண்பாடும் எத்தன்மையது என்று அறிந்து கொள்வதற்குக் கொஞ்சம் கூர்ந்து யோசிக்க வேண்டும். பூர்வ சரித்திரத்தைக் கொஞ்சம் எட்டிப் பார்க்கவேண்டும். அப்போதுதான் நம்முடைய கடமை இன்னது என்று தெரியவரும். பூர்வமாக வந்த செல்வத்தை நாம் போற்றிப் பாதுகாக்க வேண்டாமா ?

இன்றைய சங்கீதம் பூர்வமானதே

சங்கித உலகில் புதிய காரியங்களை அவ்வளவாகச் செய்து விட முடியாது. பூர்வத்தை வைத்துத் தான் கலைவளம் எல்லாம். ஆர்டர் கொடுத்துச் செய்கிற மேஜை நாற்காலி அல்ல கலை. எவ்வளவுக் கெவ்வளவு நமக்குரித்தான பூர்வ கலையைப் பாதுகாக்கிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு செல்வம் படைத்தவர்கள் நாம். உண்மையான கலையை உணருவதற்கே நீண்ட காலம் ஆகிறது.

புதிய காரியம் முடியாது

அதைக் கற்றுப் பிறருக்கு ஓதுவதற்கோ அதைவிட நீண்ட காலம் வேண்டும். அப்படியானால் அந்தக் கலையைச் சிருஷ்டிப்பதற்கு எத்தனை நீண்ட காலம் வேண்டுமென்று எடுத்துச் சொல்லவா வேண்டும்? நூற்றுக்கணக்கான ஆண்டுகள் போதாது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளே வேண்டுமென்றால் மிகை அல்ல.

கலைவளர நீண்ட காலம்

நம்முடைய சங்கீதம் அதாவது தமிழ் நாட்டை இப்போதே வளஞ் செய்துவருகிற சங்கிதம் ஆயிரக்கணக்கான வருஷங்களாக வளர்ந்தேறி வந்த அரிய வஸ்து.

எத்தனையோ பண்கள் அதாவது ராகங்கள் நம்முடைய இசையை வளப்படுத்துகின்றன. தமிழ் நாட்டிலுள்ள பண்களின் தெளிவையும் வேறுபாடுகளையுங் கண்டு அதிசயிக்காதவர் கிடையாது. வடஇந்தியா விலிருந்துவந்த பூர்வ மக்களும் அதிசயித்த வர்களாய்த் தங்கள் நாட்டிற்கே அவை களைக் கொண்டு போயிருக்கிறார்கள். பெயர்களை எப்படி எப்படியோ கொடுத்துக் கொண்டார்கள்.

பண்கள் வடநாடு சென்றன

மேல்நாட்டார் ஏதோ இரண்டு பண்களைக் கண்டு பிடித்து, முப்பது வருஷமாக அனுபவித்து வருவது பற்றி எவ்வளவோ எக்களிப்புடன் பேசுகிறார்கள். அப்படி யானால் நம்முடைய பண்களின் தொகை யையும் பூர்வமாக ஏற்பட்டுள்ள நயங்களை யும் கண்டார்களானால் அவர்களுடைய அதிசயத்தை எப்படிச் சொல்லவேண்டியிருக்கும்!

மேல் நாட்டாரது இரண்டு பண்கள்

நமது இசைச் செல்வம், இவ்வளவு வளமாயும், பண்பட்டதா யும் இருப்பது வெளிப்படை. அதிசயிக்க வேண்டிய விஷயம். ஆனாலும் அதிசயத்திலும் அதிசயம் என்ன வென்றால் அந்தச் செல்வத்தை நம்முடைய முன்னோர்கள் பாதுகாத்து வந்த முறைதான்.

இசைக்குப் பாதுகாப்பு

சங்கீதமானது கண்ணுக்குத் தெரியாத பொருள் ஆயிற்றே, காற்றோடு காற்றாய்க் கரைந்துபோகிற பொருள் ஆயிற்றே என்று கருதிக் கருங்கல்ப்பணிக்குள் பொதிந்து வைத்தார்கள் போலும்! தமிழ் நாடெங்கும் சிறிய கோயில்களையும், பெரிய கோயில்களையும் எழுப்பி, அக்கோயில்களில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளின் திருவடி களில் வைத்தல்லவா சங்கீதக் கலையை பாதுகாத்து வந்திருக் கிறார்கள்!

நடன கலையும் கவிதையும் ஒன்றோடு ஒன்று இணங்கி தெய்வ வழிபாட்டுக்குரிய மார்க்கமாய் இருந்து வந்திருக்கின்றன. நமது சங்கீதத்தின் சராம்சமான ராகங்கள், நடனத்தோடும் கவிதையோடும் ஒன்றாய்க் கலந்து, அவைகளின் உணர்ச்சி பாவங் களைப் பிழிந்து தங்களிடம் நிறைத்து வைத்துக்கொண்டன. நமக்குத் தெரியாமலே உணர்ச்சி

நடனமும் கவிதையும் பாவத்தைத் தந்தன

பாவங்கள் ராகங்களில் ஊறிக் கிடக்கின்றன. அக்காரணத்தினாலேயே ராகங்கள் தனியாகவே நம்மை வசப்படுத்துகின்றன. ராகங்களை அதாவது தனி இசையைத் தமிழ் நாட்டில் நாம் அனுபவிப்பது போல உலகில் வேறு யாரும் அனுபவிப்பதில்லை. இதில் இருந்து பாஷை வேண்டாம், சாகித்தியம் வேண்டாமென்று சொல்லிவிடலாமா? ராகங்களின் விந்நியாச நயங்கள் எல்லாம் சாகித்தியத்திலுள்ள உணர்ச்சியின் விந்நியாசங்கள்தான் என்று அறிந்து கொண்டோமானால், சங்கீதத்தில் ராக விஸ்தாரத்துக்குள்ள இடம் இன்னதுதான் இவ்வளவுதான் என்ற தாரதம்மியம் தெரிந்துவிடும். தெரியாமல் போனால், தனி ராகமாக நாலு மணிக்கச்சேரி என்று விளம்பரம் பண்ணிப் பார்க்கவேண்டும், தெரிந்துவிடும்.

சபை ஒரே தத்துவம்

எல்லாக் கலைகளையும்போல சங்கீதக் கலையும் சமுதாய உணர்ச்சியிலிருந்தே எழுவது. சமுதாயத்தின் உணர்ச்சி, கலைஞனதுஇதயத்தில் உருவெடுக்கிறது. அந்த உருவமும் சமுதாயத்தின் இதயத்தை நோக்கியே நிற்கிறது.

மூர்த்தி வழி பாட்டில் நாம் ஈடுபட்டவர்கள். நடராஜர் என்றால், முருகப்பெருமான் என்றால் அந்த மூர்த்திகள் மனக்கண் முன் எழுந்து பக்திபரவசத்தை அளிக்கின்றன. பக்தி பரவசத்தைக் கலைஞர் ஒருவர் உணர்ந்து அனுபவிக்கும்போது வார்த்தையாகவும் தாளமாகவும் ராகமாகவும் சேர்ந்து உருவெடுக்கிறது அது. 'காலைத் தூக்கி நின்றாடும்' என்ற எதுகுல காம்போதிப் பதம் பக்தி பரவசம் எடுத்த உருவந்தான். அதைப் பாடியவர் நம்மவர் இதயத்தை நோக்கியே பாடினார். விஷயம் வார்த்தை, ராகம் எல்லாம் நமக்குப் பழக்கமானவை: அது காரணமாக நம்மை நோக்கிப் பாடுகிறார் என்று சொல்லுகிறோம்.

தெலுங்கு சாகித்தியம் செய்த பக்தர்கள், தெலுங்கோ பாடலின் விஷயமோ, அதிலுள்ள உணர்ச்சியோ, தெரிய முடியாத கூட்டத்தைப் பார்த்துப் பாடினார்கள் என்று சொல்ல முடியுமா? முடியாது. பாடியபோது தெலுங்கு பாஷையில் நன்றாய்த் தோய்ந்தவர்களாயும் விஷயத்தில் ஈடுபட்டவர்களாயும் உள்ள கூட்டத்தை நோக்கியே பாடினார்கள் அவர்கள்.

சபை என்றால் பாடுகிறவர் வேறு, கேட்பவர்கள் வேறு என்று அமைந்திருந்தால் அதை சபை என்று செல்லலாமா? பாடகரும்

கேட்பவரும் ஓரே இதயப் பாங்கு படைத்தவர்களாய், ஓரே உணர்ச்சியில் மிதக்கவேண்டும். அப்போதுதான் உண்மையான சபை ஏற்படுகிறது. நடராஜப் பெருமானது நடனம் என்றால் சகல ஜீவராசிகளும் பஞ்ச பூதங்களுமே ஒன்றாக உணர்ச்சியில் கலந்து ஆடுகின்றன என்றார்கள் நம்மவர்கள். கண்ணனது குழலோசையோடு அண்ட பிண்ட சராசரங்கள் எல்லாம் கரைந்து சுழலுகின்றன என்றார்கள்.

இவ்விதம் கலைஞரும் சபையோரும் உணர்ச்சியில் ஒன்று படுகிற தெய்வீக லக்ஷியத்தை ஒரு சங்கீத சபை எவ்வளவுக்கு அடைகிறதோ அவ்வளவுக்குத்தான் வெற்றியடைகிறது அது.

சங்கீதமும் இன்றியமையாதது

இந்த உண்மைகள் ஞாபகத்தில் இருந்தால் சங்கீதம் எவ்வளவு சக்தி வாய்ந்தது, சமுதாயத்துக்கு எவ்வளவு இன்றியமையாதது என்பது எளிதில் விளங்கும். ஞாபகத்தில் இல்லாத வரையில், வீட்டுக்கு வந்ததும் களைந்து எறியும் உத்தியோக உடைதான் சங்கீதம் என்று தோன்றிவிடும்.

*　　*　　*

நம்முடைய சாகித்தியத்தின் வளம்

நம்முடைய சமுதாயம் சங்கீதத்தின் ஒவ்வொரு அம்சத்தோடும் ஒட்டியனுபவித்துவந்த காரணமாக சங்கீதமும் சாகித்தியமும் விரிவாக வளர்ந்தன; சாகித்தியங்கள் பல்லாயிரக் கணக்காக நம்மிடை உலாவி வந்தன. இன்றைக்கும் அவைகள் இருக்கத்தான் செய்கின்றன. சாதாரணமான ஒரு தமிழ்ப் புஸ்தகக் கடைக்குப் போய்ப் பார்ப்போமானால் கீர்த்தனங்களாகவும் பதங்களாகவும், புஸ்தகங்கள் எத்தனை எத்தனையோ இருக்கின்றன. அந்தப் புஸ்தகங்களைக் கையால் தொடாததினாலும் பாடல்களைப் பாடாததினாலுமே அவைகள் நம் கண்ணுக்குத் தென்படாமல் போய்விட்டன. தமிழிலே சாகித்தியங்கள் இல்லை என்று நம்மவர்களே சொல்லத் தலைப்பட்டார்கள்.

இதைக் குறித்து மகா மகோபாத்யாய சாமிநாத ஐயரவர்கள், "தமிழில் கீர்த்தனங்களே இல்லை என்று கூறவும் அவர்கள் அஞ்சவில்லை" என்று மிக்க வருத்தத்துடன் சொல்லியிருக்கிறார்கள்.

இதெல்லாம் காரணமாக உணர்ச்சியுள்ள தமிழ்ப் பாடலைக் கேட்பதே அரிதாய்ப் போய்விட்டது. ஏன், உணர்ச்சியற்றுப் பாடுவதே கச்சேரி என்றும் ஏற்பட்டுவிட்டது. தமிழோடாவது உணர்ச்சியோடாவது பாடினால் 'மட்ட ரகம்' என்று பேசும் நிலைக்கே வந்துவிட்டது. இந்த விதமாக ஒருவர் சொல்லிப் பத்துப் பேர் சொல்லி, நூறு பேர் ஆயிரம் பேர் என்றெல்லாம் சொல்லி வந்ததால், நம்முடைய சங்கீதத்துக்கு விமோசனமே கிடையாதோ என்று கையை நெரிக்கும்படியான நிலைமை வந்துவிட்டது.

சரித்திரத்தில் அரிய சம்பவம்

இந்த நிலையில் சுமார் பத்து வருஷங்களுக்கு முன்பு நம்முடைய சங்கீதத்தில் ஆர்வங்கொண்ட சிலர், தமிழில்ப் பாடுவது என்று ஏற்பட்டாலொழிய, புராதனமான பண்பாடு கொண்ட சங்கீதம் உயிரற்று வறண்டு போய் விடும் என்பதாகக் கருதி, நமது கச்சேரிகளில் தமிழ்ப்பாட்டுப் பாடவேண்டுமென்று சொல்ல ஆரம்பித்தார்கள். இதனால் தமிழிசை உணர்ச்சி ஓரளவு பரவி வந்தது. ஆனாலும் பிரமாத வெற்றியடைந்ததாகச் சொல்வதற்கு இல்லை.

தமிழிசை இயக்கம் இப்படி நின்ற நிலையில் தமிழ்நாட்டுச் சரித்திரத்தில் ஒரு அரிய சம்பவம் நேர்ந்தது.

தமிழிசைக்கு ரூ. 10,000

மூன்று வருஷத்துக்கு முன்பு (16-11-40) கனம் செட்டிநாட்டரசர் ஸர். அண்ணாமலைச் செட்டியாரவர்கள் தமிழிசைக்கென்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்கு பதினாயிரம் ரூபாய் நன்கொடை அளித்தார்கள். இந்த நன்கொடையைப் பட்டம் அளிப்பு விழாவில் வெளியிட்டபோது மண்டபத்திலிருந்த சபையோர்கள் ஆரவாரித்த ஆரவாரிப்பை யாரும் மறக்க முடியாது. ஒரு புதிய யுகத்தையே அந்தத் திருநாள் ஆரம்பித்து விட்டது அன்றுமுதல் நாடெங்கும் தமிழிசையுணர்ச்சி நாளுக்கு நாள் அதிகமாகப் பரவி வந்திருக்கிறது. எங்கே பார்த்தாலும் தமிழ்ப் பாட்டே வேண்டுமென்று

சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். தமிழ் நாட்டில் நடக்கும் சங்கீதக் கச்சேரிகளில் இப்போது பெரும்பாலும் தமிழ்ப்பாட்டாகவே பாடிவருகிறார்கள். சங்கீதத்தை உணர்ச்சியுடன் கேட்க வேண்டும் அனுபவிக்க வேண்டும் என்ற மனப்பான்மை ஜனங்களுக்குள் ஏற்பட்டுவிட்டது.

தமிழிசை இயக்கம் இவ்விதம் ஒரு பக்கத்தில் பரவி வருகையில் அதைப்பலமாக எதிர்க்கவும் ஒருசிலர் தொடங்கினார்கள். அனாவசியமான எதிர்ப்புத்தான். தமிழ்ப் பாட்டு பாடவேண்டும் என்பது பாஷைத் துவேஷமென்று சொன்னார்கள். இதில் பாஷைத் துவேஷமென்பது எது? நம்மைப்போலத் தானே மற்றவர்களும்? தெலுங்கர்களுக்கு உவந்தது தெலுங்குப் பாடலே. தமிழ்ப் பாடலை அவர்கள் கேட்க விரும்பவில்லை என்றால் தமிழ்ப் பாஷையில் அவர்களுக்கு துவேஷம் உண்டென்றாகுமா? அப்படியே கன்னடர்களுக்கும் வங்காளிகளுக்கும் காசிப் பக்கத்திலுள்ளவர்களுக்கும் தமிழ்ப் பாஷையிலுள்ள சங்கீதம் விளங்காதுதான். அது காரணமாக தமிழிடத்தில் துவேஷம் உண்டென்று அவர்கள்மேல் புகார் சொல்லலாமா? கூடாது. உலகம் இந்த நிலையிலிருக்கத் தமிழர்கள் தமிழ்ப் பாடல்தான் தங்களுக்கு விளங்குவது, உவந்தது என்று சொல்லும்போது துவேஷத்தை ஏன் கற்பிக்க வேண்டும்? அவசியமே இல்லை.

இதர பாஷைகளில் துவேஷம் உண்டா?

தமிழ்நாட்டில் நமக்கிடையே தெலுங்கு தெரிந்தவர்கள் இருக்கிறார்கள், கன்னடம் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். ஹிந்துஸ்தானி பாஷையும் ஹிந்துஸ்தானி சங்கீதமுமே தெரிந்தவர்களும் இருக்கிறார்கள்: நூற்றுக்கு ஒருவர் இருவர் என்று இருக்கலாம். அவர்கள் அந்த அந்த பாஷையில் உள்ள சங்கீதத்தை அனுபவிப்பது இயல்புதான்; எவ்வளவு வேண்டுமானாலும் அனுபவிக்கலாம். ஆனால் தமிழ் பாஷை மாத்திரமே தெரிந்தவர்கள், "எங்களால் தமிழ் மூலமாகத்தான் சங்கீதத்தை அனுபவிக்க முடியும்: எங்களுக்குத் தமிழ்ப் பாட்டுத்தான் வேண்டும்" என்று சொன்னால் அதை மேலே கூறியவர்கள் ஏன்

ஆட்சேபிக்க வேண்டும்? ஆட்சேபிப்பதோடு, ''மற்ற பாஷைகளின் மேல் துவேஷம்'' என்பதாக ஏன் சொல்லவேண்டும்? இப்படியெல்லாம், இல்லாத துவேஷத்தைக் கற்பித்துத் தமிழிசை இயக்கத்தைக் குறை கூறவேண்டாம் என்று சங்கீத அபிமானிகளை ரொம்பவும் கேட்டுக் கொள்கிறேன்.

பாடகர்களுக்குத் தைரியம் ஏற்பட்டது

ஆரம்பத்தில்ச் சில பாடகர்களுக்கு உண்மையிலேயே அதைரியம் ஏற்பட்டது. எப்படி நாலுமணி நேரக் கச்சேரியைத் தமிழ்ப் பாடலைக் கொண்டே சமாளிப்பது என்று பயந்தார்கள். அனேகமாய் இதர பாஷையிலேயே பாடிவந்த காரணத்தால் தமிழ்ப் பாடல்களைக் கற்க அவசியமில்லாமல்ப் போய்விட்டது அவர்களுக்கு. வருந்தத்தக்க காரியந்தான் அது. ஆனாலும் கேட்பவர்களுக்குத் தமிழ்ப் பாடல்களே உவந்ததாய் இருக்கின்றன என்று தெரியவரவும் அவைகளைப் பாடகர்கள் கற்கவும் பாடவும் ஆரம்பித்து விட்டார்கள்.

இப்போது முதலணியிலுள்ள சில பாடகர்கள் தமிழிலேயே முக்கியமாகப் பாடுகிறார்கள். அவர்களைக் கேட்டு அனுபவிக்கும் சபையோரின் தொகையை நூறு ஐந்நூறு என்றல்ல, ஐயாயிரம் பதினாயிரம் என்று கணக்கிட வேண்டியிருக்கிறது. இது நாம் கண்கூடாகக் காண்கிற காரியம்.

சபையோரின் உணர்ச்சி சங்கீதத்தைப் பண்படுத்துகிறது

இன்னொரு விஷயம்; சபையோடு ஐக்கியப்பட்டுப் பாடுகிற காரணத்தால் பாடுகிறவர்களுக்கும் என்றுமில்லாத புதியதொரு மன எழுச்சி யுண்டாகி விடுகிறது. அந்த மன எழுச்சி காரணமாகப் பாடுகிற சங்கீதத்தில் மெருகு, உணர்ச்சி, பண்பாடு எல்லாம் தாமாக ஏறிவிடுகின்றன. அத்தகைய பாடல், கேட்பவரது உள்ளத்தை உருக்குகிறது. அப்படிப் பண்பட்ட சங்கீதத்தில் மேலும் மேலும் அவர்களுக்கு ஆசை அதிகரிக்கிறது. இதுவும் இன்றைக்குக் காண்கிற காரியம்.

* * *

இனி நாம் செய்ய வேண்டுவது என்ன?

தமிழிசை வேண்டுமென்று சொல்லும்போது ஏதோ பாஷை மட்டும் தமிழில் இருந்தால்ப் போதும் என்பதல்ல. பூர்வமான தமிழ்நாட்டு இசைப் பண்போடு கூடி, உயர்ந்த உணர்ச்சி பாவங்களோடு கலந்த தாக சங்கீதம் இருக்க வேண்டும் என்பதே நமதுகொள்கை. பொதுவாக தற்போதைய சங்கீதத்தில் மேலே சொன்ன லக்ஷணம் அபூர்வமாகத்தான் இருக்கிறது. வட இந்தியாவிலுள்ள சங்கீத நிபுணர்கள் நம்முடைய சங்கீதம் உயர்ந்த பண்பாடுடையது என்று சொல்லுவார்கள். ஆனால் பாடகர்கள் அநேகமாக பாவமில்லாமலே பாடுகிறார்கள் என்றும் குறை கூறுகிறார்கள். இந்தக் குறையெல்லாம் நிவர்த்தியாகும் பொருட்டு சங்கீதத்தின் உயர்ந்த லக்ஷியத்தையும் கண்முன்னால் வைத்துக்கொண்டே மாணவர்களுக்குச் சங்கீதம் கற்பிக்க வேண்டும். முதலில் ஏதோ கஷ்டமாகத் தோன்றும். கொஞ்சம் விடா முயற்சியோடு இந்தத் துறையில் வேலை செய்வோமானால் வெகு சீக்கிரத்தில் தமிழ்நாடு எங்கும் அதி அற்புதமான பாவ சங்கீதம் ஒலிக்கக் கேட்கலாம். அந்தச் சங்கீதம் தமிழ் மக்கள் எல்லோருடைய இதயத்தையுமே அள்ளும்படியாக இருக்கும்.

தமிழில் இருக்க வேண்டும்; உயர்ந்ததாவும் இருக்கவேண்டும்

கோயில்களிலும் சங்கீத சபைகளிலும் வீடுகள் தோறுமே உணர்ச்சி பாவம் நிறைந்து இதயத்தைப் பற்றும்படியான சங்கீதம் முழங்கப் பார்க்கலாம். நம்முடைய சங்கீதம் வெகு புராதனமான சங்கீதம்; ஆயிரக் கணக்கான வருஷங்களாகப் பழுத்த சங்கீதம்; தமிழ் மக்களுக்கு—ஆடவர் பெண்டிர் குழந்தைகள் எல்லோருக்குமே அமுதத்தை யூட்டிய சங்கீதம். கோயில்களில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளுக்கு அர்ப்பணமான சங்கீதம். இந்தச் சங்கீதத்துக்குப் புத்துயிர் உண்டாகப் போகிறது.

தமிழிசையும் எதிர்காலமும்

தமிழ் நாட்டுக் கோயில்களும் கோபுரங்களும் உலகப் பரப்பில் எப்படி ஒப்பற்ற விதமாய் தலை நிமிர்ந்து நிற்கின்றனவோ அப்படியே தமிழ்நாட்டுச் சங்கீதம் தலை நிமிர்ந்து நிற்கப் போகிறது. நாம் பார்க்கப்போகிறோம். உலகம் பாராட்டப் போகிறது.

''வசந்தம்''—1944, ஜனவரி

எந்த ஊர் வானம்பாடி ?

தமிழிசை மகாநாட்டிலும், இசை அரங்கிலும் கலந்துகொண்ட எல்லோருக்கும், அமெரிக்கா போய்விட்டு, தாய்மொழி அபிமானத்தால் தள்ளிக் கொண்டுவரப்பட்ட சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் 'கை கூப்பி'யிருக்கிறார்.

சென்ற (4–1–44) அன்று நடந்த தமிழிசை வந்தனோபசாரக் கூட்டத்தில் சர். ஷண்முகம் வெகு அழகாகப் பேசி யிருக்கிறார் ; ஆணித்தரமாகப் பதில் சொல்லியிருக்கிறார். 'ஆனந்த விகடனில்' வெளியான ஒரு கேலிச் சித்திரத்திற்கு சமயோஜிதமாக புது வியாக்கியானத்தை வெளிப்படுதியிருக்கிறார்.

விகடனில் வெளிவந்த சித்திரத்தை அநேகமாக நேயர்கள் பார்த்திருப்பார்கள். அதாவது வானத்தில் சுயேச்சையாக 'சங்கீதம்' என்ற வானம்பாடி பறந்துகொண்டிருப்பது போலவும், ராஜா சர். அண்ணாமலை செட்டியார் ஒரு கையில் பாஷைக் கட்டுப்பாடு என்ற ஒரு வலையையும், கூண்டையும் வைத்துக் கொண்டு அந்த வானம்பாடியைக் கூண்டுக்குள் வந்து பாடும்படி கட்டாயப்படுத்துவதாகவும் படம் போடப்பட்டிருந்தது.

உண்மையில் ராஜா சர். யாரையுமே கட்டாயப்படுத்தவில்லை. கடமையைத்தான் குறிப்பிட்டுக் காட்டுகிறார். அது எதிர்ப்பாளர் களுக்கு நியாயம் என்று பட்டுவிட்டால், தமிழிசை இயக்கம் தேவையேயில்லை.

ஆனால் எதிர்ப்பாளர்கள் எதையோ நினைத்துக்கொண்டு சண்டைக்குக் கிளம்புகிறார்கள். எடுத்த கட்சியை வாபஸ் வாங்கவாவது என்ற அசட்டுப் பிடிவாதம் அவர்களிடமிருக்கிறது.

ராஜாஜி இசை மகாநாட்டில் குறிப்பிட்டதுபோல, தமிழிசை இயக்கம் உண்மையில் என்ன சொல்கிறது என்று எதிர்ப்பாளர்கள் மூளையைச் செலவிட்டுப் பார்த்தால், சண்டை ஏற்படவே நியாயம் இல்லை. அப்படியெல்லாம் அந்த சில நபர்கள் புத்திசாலிகளாகிவிட 'விகடன்' போன்ற பத்திரிகைகள் விட்டுவிடாது போலிருக்கிறது.

சர். ஆர். கே. செட்டியார் அதற்குச் சொல்லியிருக்கும் வியாக்கியானத்தில், ''அது தமிழ் நாட்டு வானம்பாடி – எனவே, அது தமிழில்தான் பாடவேண்டும்'' என்று அந்தக் கடமையை எடுத்துச் சொல்லி, மேலும், ''அந்தப் பட்சிக்கு மியூசிக் அகாடமிக் காரர்கள் இழைத்த திங்கையும்'' குறிப்பிட்டிள்ளார். ''அந்தப் பட்சியை கர்நாடக சங்கீதம் என்ற கூண்டுக்குள் அடைத்து வைத்திருந்தார்கள். 'தெலுங்கு பாடு, கன்னடம் பாடு, என்று கட்டளையிட்டு வந்தார்கள். அதைத் திறந்துவிட்டார் ராஜா சர்.'' என்று விவரித்திருக்கிறுர்.

சரியான சவுக்கடி! பலே, சர். ஷண்முகம்!!

ராஜா சர். அண்ணுமலை செட்டியார்

'தமிழிசை' என்று சொன்னவுடனேயே 'ராஜா சர்' அவர்களின் நினைவு நம்முன் வந்து நிற்கிறது. அந்தக் கனத்த சரிகைக் கரைத் தலைப்பாகை, முழங்கால் வரை நீண்டு தொங்கும் சரிகை அங்கவஸ்திரம், தும்பைப் பூவும் தோற்றுப்போகும்படி மின்னும் தார் பாய்ச்சுக் கட்டு இந்த விதமான அலங்காரத்துடன் ஒரு ராஜ கம்பீர உருவம் நம் முன்னுல் தோன்றுகிறது.

ராஜா சர். அவர்களின் அரசியல் கொள்கை அநேகருக்குப் பிடிக்காமலிருக்கலாம். ஆனுல் தமது செல்வத்தை தமிழுக்கும் கலைக்கும், அதற்கும், இதற்கும் என்று வாரி வாரி விடும் அந்தத் தராளத் தன்மையைக் கண்டு யாரும் அவரை வாயார வாழ்த்தாமலிருக்க முடியாது. அவர் சிதம்பரத்தில் நிறுவியுள்ள அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தைக் கண்டு மெச்சாதவர்களே இருக்கமுடியாது.

அந்த சர்வ கலாசாலையில் 1940-ம் வருடம், நவம்பர் மாதம், 16-ம் தேதி பட்டமளிப்பு விழா நடந்தது. அப்போது ஏதோ ஒரு உணர்ச்சி ராஜா சர். அவர்களை உந்தித் தள்ளிவிட, அவர் அன்புடன் சர்வ கலாசாலை தமிழ் அபிவிருத்திக்கென ரூ. 10,000 அன்பளிப்பு அளித்தார். அன்று தான் தமிழுக்கும் தமிழ் இசைக்கும் வித்திட்ட புனித நாள் என்று நாம் நினைவில் வைக்க வேண்டும்.

அந்த வித்துத்தான் உற்சாகத்துடன் முளைத்து அதற்கடுத்த 1941-ல் தமிழ் இசைக்காக வளர வாரம்பித்தது. 1941 ஆகஸ்டில் நான்கு தினங்களில் அந்த சர்வ கலாசாலையில் 50 தமிழ்க் கச்சேரிகள் வரை இடம் பெற்று வெற்றிகரமாக நடந்தேறின. அதை முன்வந்து நடத்தி வைத்தவர் 'அரியக்குடி' என்று சொன்னால் "என்ன அரியக்குடியா?" என்று திருப்பிக் கேட்பீர்கள்!

அந்த அழியாத தமிழ்த்தாயின் ஆசையே இன்று தமிழிசை இயக்கமாக உருவெடுத்து, தமிழர்களைத் தட்டி எழுப்பி, ராஜா சர். அவர்களின் நினைவை நிச்சயப்படுத்திவிட்டது. பாரதியின் கனவை மெய்ப்பித்து விட்டது.

இன்று தெருவெல்லாம் தமிழ் முழக்கம் கேட்கிறது. புரியும் பாஷையில் பொதுஜனங்கள் சங்கீதத்தை அனுபவிக்கிறார்கள் ; ஆனந்தப்படுகிறார்கள். ராஜா சர். அவர்களின் இந்தப் பணியை தமிழகம் வாயார வாழ்த்துகிறது; மனமாரப் போற்றுகிறது.

சமீபத்தில் தமிழிசை மகாநாடு ஒன்றை வெற்றிகரமாக ஆரம்பித்து, அமோகமாக நடத்தி முடித்திருக்கிறார். இந்த இசை இயக்கத்தின் எதிரொலி தமிழ்நாடு முழுவதும் பரவி, மூலை, முடுக்குகளிளெல்லாம் சங்கீத சபைகளை சிருஷ்டித்துவிட்டன.

— 'நவயுவன்' 15–1–44

———

வாழிய தமிழ்த்தாய் வளர்க தமிழிசை